

ஜூலை
2005
ரூ.15

# புதிய கோடாங்கி


கோ-ஆப்டெக்ஸ் காலத்திற்கேற்ற புதுமையுடனும்
பாரம்பரியப் பெருமையுடனும்...
1935 முதல் மிகச் சிறந்த இரகங்களை
உங்களுக்காகவே வழங்குகிறது.
★ காஞ்சிபுரம் அசல் பட்டு சேலைகள்
★ சேலம் தரமிக்க பட்டு சேலைகள்
★ ஆரணி தரமிக்க பட்டு சேலைகள்
★ கோயமுத்தூர் உயர்ரக பருத்தி சேலைகள்
★ உறையூர் பருத்தி சேலைகள்
★ சேலம் உயர்ரக பருத்தி சேலைகள்
★ மதுரை சுங்கடி புடவைகள்
★ சென்னிமலை ஏற்றுமதி தரம் வாய்ந்த படுக்கை விரிப்புகள்
★ கோவை ஏற்றுமதி தரம் வாய்ந்த எரலை துண்டுகள் (டவல்கள்)
★ குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி தரம் வாய்ந்த லுங்கிகள்
★ தாத்தையங்கார்பேட்டை வேட்டிகள்
NATURAL SILK
இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.
வாருங்கள். பாருங்கள். வாங்குங்கள் - முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.
கோ-ஆப்டெக்ஸ்
Visit us at: www.tn.gov.in
www.cooptex.com
ஆண்டுதோறும் 1.00.000 பட்டு புடவைகள். 3.00.000 பருத்தி புடவைகள்
10.00.000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10.00.000 டவல்கள் விற்பனை செய்யப் படுகின்றன. டெல்லி. மும்பாய். கொல்கத்தா. பெங்களூர். அகமதாபாத். கோவை. திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.
தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

புதிய கோடாங்கி

மலர் 5 - இதழ் 1
ஜூன் 2005

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*முகப்பு ஓவியம்*
சரிதா

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம் - ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ்: **US $ 2**

ஆண்டுக் கட்டணம்
**US $ 20**



*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின்/உள் அட்டை ரூ. 20,000/-



*தொடர்பு முகவரி*
604, ஜெயம் பிரிவு
சித்ரா அடுக்ககம்
9 சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை - 600 094.
Mobile : 98404 - 49204
**puthiakodangi@yahoo.co.in**


நுழைவுத் தேர்வை ரத்து செய்து அரசு ஆணை வெளியிட்டது. கிராமப் புற மாணவர்கள் பயனடைவார்கள் என்ற ஆர்ப்பரிப்பும். ஆரவாரமும். அதைத் தடை செய்து வெளியிட்ட நீதிமன்ற ஆணையால் அடங்கியது. இப்பொழுது தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது. மொத்தமே 810 பள்ளிகள்தான் கிரமப்புறப் பள்ளிகள் என்கிறது நமது புள்ளி விவரம். இப்பள்ளிகளில் இரண்டு லட்சம் மாணவர்கள் படிக்க வாய்ப்பில்லை. கிராமம் என்பதன் வரையறை மாறிவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. கிராமப் புறப் பள்ளிகள் நகர்ப் பள்ளிகளுக்கு ஈடாக வாய்ப்பு வசதிகளைப் பெற பல காலமாகலாம். ஆகையால் அதுவரை கிராமப்புற பள்ளி மாணவர்களுக்கு உயர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி வாய்ப்புகள் கிடைக்கும் வண்ணம் மாற்று ஏற்பாடுகள் குறித்து விவாதிக்க வேண்டியுள்ளது. புதிய கோடாங்கி இவ்விவாதத்தை ஜூலை மாதம் 14-ஆம் தேதியில் சென்னையில் தொடங்கவிருக்கிறது. பேரா. கல்யாணி அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை யேற்கிறார். தலித் நிலவுரிமைப் பிரச்சாரத்தின் விளைவாக பஞ்சமி நில மீட்பு தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்படும் என *'குமுதம் ரிப்போர்ட்டர்'* அறிவிப்பு செய்துள்ளது.

அரசு ஏற்கனவே இருபது லட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களைக் கண்டறிந்துள்ளதாக செய்தித்தாள்களில் வெளிவந்துள்ளது. இது 50 லட்சம் ஏக்கராகும். இததரிசு நிலங்களை தலித்துகளுக்கு பகிர்ந்தளிக்கவும், அறக் கட்டளைகள் பெயரில் உச்சவரம்பு சட்டத்திற்கு உட்படாத பினாமி நிலங் களையும், கோவில் நிலங்களையும் நிலமற்ற ஏழை தலித்துகளுக்கு வழங்கு வதையும் தேர்தல் அறிக்கையில் தலித்துகள் எதிர்பார்க்கின்றனர்.

தலித் இயக்கங்கள் கடுமையாக உழைத்தாலன்றி. தலித் மக்கள் இது குறித்த விழிப்புணர்வு பெற்றாலன்றி இவை தேர்தல் அறிக்கையில் இடம் பெற வாய்ப்பில்லை. தேர்தல் கூட்டணிகளில் ஆர்வம் காட்டுவதைத் தவிர்த்து அடிப்படைப் பிரச்சினைகளில் தலித் இயக்கங்கள் மய்யம் கொள்ள வேண்டும்.

கண்டதேவி கோவில் தேர் இழுப்பில் தலித்துகள் மீண்டும் புறக்கணிக் கப்பட்டுள்து குறித்த விரிவான கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்.

# உள்ளே...


| | | |
|---|---|---|
| பெரியார் தலித்துகளுக்குச் செய்ததென்ன | மா. வேலுசாமி | 3 |
| அரிய மலர் - சிறுகதை | சிவகாமி | 9 |
| மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர் | குடியரசன் | 16 |
| சோளகர் தொட்டி - ஒரு வாசகனின் பார்வையில் | மு. ஹரிகிருஷ்ணன் | 18 |
| வரலாறு யாரை விடுதலை செய்யும் - தொடர் | அ. ராமசாமி | 22 |
| நாங்கள் பெண் என்பதால் மட்டுமல்ல - கவிதை | கு. உமாதேவி | 23 |
| ஏங்கும் நெஞ்சங்கள் - சிறுகதை | மு. அம்சா | 24 |
| இயற்கையை கையகப்படுத்தும் பெண்மொழி - நூல் விமர்சனம் | மகாராசன்:செல்வம் | 27 |
| மலரினும் மெல்லிது - ஒரு பார்வை | விழி.பா.இதயவேந்தன் | 28 |
| கணிதம் நம் உடைமை - தொடர் | குடியரசன் | 29 |
| கேள்வி பதில் | முனிமா | 32 |
| பெரியாண்டவன் - சிறுகதை | பவானி | 34 |
| பட்ஜெட் 2005 | ஜ.ஜா.ம. இன்பகுமார் | 36 |
| மௌனம் சம்மதமா - கவிதை | சத்யானந்தன் | 39 |
| மாறுவேசம் - சிறுகதை | குடியரசன் | 45 |
| ஓடாத தச்சூர் மாதா தேரும், ஓடி விளையாடும் சாதியும் | கௌதம சன்னா | 51 |
| காளி - சிறுகதை | தி.க. சதாசிவம் | 53 |
| பொன். குமாரின் ஹைக்கூ கவிதைகள் | விழி.பா.இதயவேந்தன் | 60 |
| தொலைத்து விட்டேனா நண்பனை - சிறுகதை | ராஜா | 61 |
| கற்பின் கசிவு - கவிதை | புதிய மாதவி | 63 |

# பெரியார் மற்றும் திராவிட அரசியலார் தலித்துகளுக்குச் செய்ததென்ன?

மா. வேலுசாமி

மத எதிர்ப்பையே மாற்றி மாற்றிப் பேசி சாதியத்தை மறைக்க முயலும்
"இந்த பெரியார் மற்றும் திராவிட இயக்கத்தினர்"
சாதி ஒழிப்பு அரசியலை கையிலெடுக்க தயங்குவது ஏன்?
சாதி ஒழிப்பை முன்னிறுத்தும் தலித் இயக்கங்களை ஆதரிக்காதது ஏன்?

### தேடலில் எழும் முரண்கள்

உலகில் தோன்றிய அனைத்து சமூக, அரசியல், விஞ்ஞானம் மற்றும் பலவித கருத்தியல்களில் வரலாற்றின் மாற்றங்களுக்கு ஏற்றவாறு மறைந்து போனவையும் உண்டு, மறுசீரமைக்கப்பட்டவைகளும் உண்டு. ஆனால் எவையும் நிலையாக மாறாமல் இருந்தது இல்லை. உதாரணமாக கம்யூனிச கருத்தியல் சிலவற்றினைக் கூறலாம். கம்யூனிச நாடுகளின் கருத்தியல் அனைத்தும் உழைக்கும் வர்க்கத்தினருக்கும் அவர்களின் முதலாளி வர்க்கத்திற்கும் மட்டுமானது எனில் எந்த உழைக்கும் வர்க்கத்தினர் என்பது கேள்விக்குறியே? ஏனெனில் நிறுவனமயமாக உள்ள உழைப்பாளர்கள் மத்தியில் கம்யூனிசம் வேகமாக பரவியது. ஆனால் அதே கம்யூனிச சிந்தனைகள் நிறுவனமயமாக்கப்படாத தினக்கூலிகள், விவசாயக் கூலிகளிடம் சென்றடையவில்லை. எனவே எண்பது ஆண்டுகளுக்குள்ளாக கம்யூனிச சித்தாந்தம் ரஷ்யா போன்ற நாடுகளில் கேள்விக்குட்படுத்தப்பட்டு இன்று சிறு மாற்றங்களும் செய்யப்பட்டது என்பது நிதர்சன உண்மை.

இவைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவையாக பெரியார் மற்றும் அவரது திராவிட கருத்தியலை பார்க்க இயலாது. ஏனெனில் கம்யூனிச சிந்தனைகளுக்குள் இருக்கின்ற சிறிதளவு நேர்மைகூட இல்லாத பெரியார் மற்றும் திராவிட கருத்தியல், அதனால் சிறிதும் பயனடையாத தலித்துகளுக்கு அவசியம் என்ற கட்டாயத் திணிப்பை செய்ய முயலுகின்றபோது வேறு எந்த சமூகத்தைவிட தலித்துகளுக்கு மட்டுமே பெரியார் மற்றும் திராவிட கருத்தியலை விமர்சனத்திற்குள்ளாக்கும் பொறுப்புள்ளது என்ற வகையில் பெரியார் மற்றும் திராவிட அரசியலாரும் தலித்துகளுக்குச் செய்ததென்ன? என்ற இக்கட்டுரை மேற்கண்ட விஷயங்களை விரிவாக அலசுகிறது.

### பெரியார் - பிராமணரல்லாத சாதி இந்துக்களின் தலைவர்

தமிழ்நாட்டில் பெரும் பரபரப்பு அரசியலை ஏற்படுத்தி மறைமுகமாகவும், நேர்முகமாகவும் தமிழ் அரசியல் சூழலை தன்னகத்தே வைத்து செயலாற்றிய பெரியார், மதங்களை எதிர்த்தார் என்றுகூற முடியாது. ஏனெனில் அவர் இஸ்லாம், புத்த மதங்களை ஆதரித்தார். சாதியை ஒழித்தார் என்றுகூட கூற முடியாது. ஏனெனில் சாதி இந்துக்களையும் அவரது சாதி உயர்வு கொள்கைகளையும் கண்டித்து ஒருபோதும் பெரிய அளவில் போராட்டங்கள் நடத்தவில்லை. மாறாக தலித்துகளை பயமுறுத்தினார். இந்த இழிநிலையை ஒழிக்க பௌத்தம் மற்றும் இஸ்லாம் தழுவ சிபாரிசு செய்தார்.

பிராமணர்களின் அதிகாரத்தையும், ஆளுமையையும் அரசியலில் குறைக்கப் பாடுபட்டதுடன், அதில் வெற்றி கண்ட பின் பிராமணரல்லாதார் அரியணையில் ஏறியது கண்டு மனம் நெகிழ்வுற்றார். அதன் மூலம் தனது அரசியல் செல்வாக்கை உயர்த்திக் கொண்டார். ஆனால் என்றாவது ஒரு நாள் இந்த பிராமணரல்லாதார் தலித்துகளுக்கு எதிராக செயலாற்றுவதைக் கண்டித்திருக்கின்றாரா எனில் இல்லை என்பதே பதில். மாறாக தலித்துகளுக்கு அறிவுரையையும், ஏச்சுக்களையும் வாரி வழங்கினார்.

பெரியாரே சொல்கிறார்: "பார்ப்பனரல்லாத ஜமீன்தார்கள், வியாபாரிகள் என்பவர்களாக இருந்த இவர்கள் ஏழைகளை (தலித்துகளை) பட்டிபோட்டு ஏமாற்றிக் கொள்ளையடித்து பல லட்சக்கணக்கான சொத்துக்களைச் சேர்த்து குட்டிச் சுவர்களாக விளங்கும் கோவில்களைக் கட்டுவதும், அங்கு பார்ப்பனர்களைக் கொண்டு திருவிழா செய்வதும், பார்ப்பன மதப் பிரச்சாரப் பள்ளிக் கூடங்கள், வேதப் பாடசாலைகள் கட்டுவதும் மற்றும் பார்ப்பனர்களுக்கு சத்திரங்களை கட்டுவதுமான கொடுமைகளைச் செய்வதற்காக தங்கள் செல்வங்களை பயன்படுத்துகின்றனர்." இவ்வாறு அவரது செயல்பாட்டிற்கு பிராமணரல்லாதாரை வழிக்கு கொண்டு வருகிறார்.

பிராமணர்களுக்கு பல்லக்கு தூக்கிகளாக பிராமணரல்லாதார் இருந்தார்கள் என்று அவர்களது தலைவரே ஒப்புக்கொள்வதுதான் பெரியாரியத்தின் விந்தை. ஏன் நடைமுறை சாத்தியம்கூடத்தான். ஆனால் இந்த பிராமணரல்லாதார் தங்களது செல்வாக்கை உயர்த்திக்கொள்ள பெரியாரின் பிராமணர்களுக்கு "எதிர்மறை" கருத்தியலை உபயோகப்படுத்தி பல்வேறு நிலைகளில் தங்களது வசதி, வாய்ப்புகளை பெருக்கிக் கொண்டதுடன், தனது பல்லக்கு தூக்கும் புத்தியைக் கூட மறக்காமல் தங்களுக்கு பல்லக்கு தூக்கிகளாக தலித்துகளை பயன்படுத்துவதைக் கூட கண்டு கொள்ளாமல் ரசித்தார். அவருடைய காலத்திலேயே ஏற்பட்ட திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் கூட அனைத்து உயர்மட்ட பதவிகளில் இருந்த அனைவரும் பிராமணர்களே என்பதில் இருந்து பிராமணர்களாலேயே உயர்மட்ட பதவிகளைச் சிறப்புறச் செய்ய முடியும் என்பதில்

அவர்களுக்கு இருந்த நம்பிக்கையே காரணம். ஆக பிராமணர்களின் - பிராமணரல்லாதாரின் அரசியலே திராவிட அரசியல் என்பதனையும், பிராமணரல்லா தாரின் தலைவரே பெரியார் என்பதனையும் காண் போம்.

நீதிக்கட்சியில் ஆரம்பித்து (1920) இன்றைய ஆளும் கட்சியாக இருக்கின்ற கட்சி வரை கடவுள் எதிர்ப்பு, மத ஒழிப்பு என்றெல்லாம் சொல்லித் துவக்கப் பட்ட ஒரு இயக்கமெனில் மற்ற எல்லா மாநிலங்களி லும், அம்மாநிலத்தின் சிறப்பே சின்னங்களாக இருக் கின்றபோது தமிழகத்தில் மட்டும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் சின்னமாக இருப்பதற்குக் காரணம் என்ன? வேறு சிறப்பு தமிழருக்கும், தமிழகத்திற்கும் இல் லையா? அல்லது ஆண்டாள் கோவில் சின்னத்தை அப் புறப்படுத்த பயமா? பகுத்தறிவு, சுயமரியாதை, கடவுள் எதிர்ப்பு, இந்து மத வேரறுப்பு போன்றவையெல்லாம் மேடையில் முழங்கும் மதமற்ற சடங்கு எனில், மதமற்ற தலித்துகளுக்கு ஏன் பெரியாரது கொள்கைகள்?

பெரியாரின் கொள்கை பக்தர்கள் இன்றுவரை சமூக சீர்கேட்டினை வெறும் அரசியலாக்கி கல்வெட் டுக்களில் நாங்கள் அதைச் செய்தோம் இதைச் செய்தோம் என்று செதுக்கி வைத்ததுடன் அவைகளையே கொள்கை புத்தகங்களாக மாற்றி கையாள்வதுதான் இவர்களது வியாபார தந்திரம். ஆனால் பெரியார் மற்றும் திராவிட கருத்தியல் புத்தகங்களை வாங்காமல் இருப்பதே தலித்துகளுக்கு நல்லது.

அரசியல் தளம், கருத்தியல் தளம், போலியான சாதி ஒழிப்பு நாடகங்கள் அனைத்திலும் ஓரளவு வெற்றி கண்டபின் பெரியாரின் மண்டை சுரப்பை முழுவதும் வியாபாரமாக்கி கொழுத்தவர்களுக்கு மட்டுமே பெரி யார் மீண்டும் வேண்டும். தங்கப் புதையலை வாரிக் கொண்டு, வெறும் காலிப்பானையினை தலித்துகளுக்கு வழங்கும் இந்த வேடதாரிகளை புரிந்தபின் யாருக்கு வேண்டும் பெரியார் எனும் வெறும் சொற்பெருமை.

திராவிடம் மறுத்த எந்த அரசியல் கட்சியினையும் சாதிக் கட்சியாகவே அடையாளப்படுத்தும் இந்த திரா விடக் கட்சிகள் பிறகு அவர்களிடம் வாக்கு வேட் டைக்கு அணிவகுப்பது ஒரு விந்தை. அதிலும் பெரியா ரின் வாழ்நாளிலேயே தென் பகுதியிலே தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் என்ற கூறி பார்வர்ட் பிளாக் கட்சியினை தலைமை தாங்கிய உ. முத்துராம லிங்கம் எனும் தேவர் சாதியை சேர்ந்தவரிடம் சென்று சொல்ல வேண்டியதுதானே பெரியாரின் இருப்பை, அவசியத்தை. அல்லது தீமிதி விழாவில் கலந்து கொண்ட திராவிட பாரம்பர்ய தி.மு.க., அ.தி.மு.க. அரசியலாரிடம் சொல்ல வேண்டியதுதானே பெரியாரின் அவசியத்தை? பிறகு கிராமந்தோறும் திராவிடக் கட்சிகளின் கடை நிலைத் தொண்டர்கள் கோவில் என்ற பெயரில் பொதுச் சொத்துக்களை சூறையாடி, தலித்துகளை கொடுமைப் படுத்துவதையும் கண்டு இன்பம் கொள்ளும் சாதி இந்துக் களுக்கு சொல்லுங்கள் பெரியார் அவசியம் பற்றி? ஆனால் ஒன்றும் அறியாத, பல ஆயிரம் ஆண்டுகளாக வாழ்வற்றவர்களாக, வசதியற்றவர்களாக அல்லலுற்றுக் கொண்டு இருக்கும் தலித்துகளின் அடிப்படை வசதி களைக்கூட சரி செய்யாத இந்த பெரியாரும், திராவிடக் கட்சிகளும் சாதித்தது என்ன என்ற தலித்துகளின் கேள்வியே இன்றைய தலையறுத்த கோழியாய் பெரி யாரிஸ்டுகளையும், திராவிட இயக்கத் தினரையும் துடி துடிக்க செய்கிறது. பெரியார் அவசியம் என்பதுகூட ஒரு அதிகார திணிப்புதான் என்பதை உணர வேண்டும்.

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையிலும், மற் றும் மாவட்ட தலைநகர்களிலும் சாதிய தலைவர்களை செருக்கோடு சிலைகளாய் நிற்க வைத்திருக்கும் அனை வரிடமும் சொல்லுங்கள் பெரியார் சிலை மட்டுமே அவசியமென்று. ஆனால் தலித் தலைவர்களின் சிலை களுக்கு அல்லது நினைவிடங்களுக்கு மட்டும் பெரியார் மற்றும் திராவிடக் கட்சிகள் எளிதாய் தடைகளை எழுப் புகின்றன. நாடார், வன்னியர், தேவர், செட்டியார், படை யாச்சி என சாதி இந்துக்களை மட்டும் ஆதரிக்கும் அவர் கள் தலித்துகளை மட்டும் எதிர்ப்பது ஏன்? ஆதரவற்ற நிலை ஏற்பட்டு விடும் என்ற தயக்கமா அல்லது தலித் துகளின் எழுச்சியைக் கண்ட வெறுப்பா?

வளர்ச்சியுற்று (யாருடைய ஆதரவில்லாமல்) விழிப்புணர்வு பெற்ற தலித்துகளை இனியும் "பெரி யார்" பெயர் சொல்லி ஏமாற்ற முடியாது என்பதை ஏனோ பெரியாரிஸ்டுகளும் திராவிட கட்சிகளும் உணர மறுக்கின்றார்கள். ஆக காங்கிரஸ் கட்சியினைப்போல திராவிட கட்சிகளுக்கும் தலித்துகள் சேவகர்களே என்ற நினைப்பே உள்ளது என்ற நிலையில் தலித்துகளுக்கு தலைவர்களாக யார் வேண்டுமென்றாலும் ஆகலாம். ஆனால் தலித்துகள் மட்டுமே முடிவு செய்ய வேண்டும் - யார் அவர்களின் உண்மையான தலைவர்களென்று. கட்டாயத் திணிப்பு எனும் "பெரியார்" என்ற கருத்தியல் முடிவுக்கு வந்து நிறைய நாட்கள் ஆகிவிட்டது சேரிக ளில். ஆனால் தங்களையே தலித்துகளின் நிரந்தரமான தலைவர்கள் என்ற நினைப்பில் இருக்கும் திராவிட இயக்கங்களை சுருக்கமாக காண்போம்.

## திராவிடர் கழகம் - பெரியார்

"தம்பீ.. இது தலித்துகளுக்கான பயிற்சி மையம் இல்லை. தலித்துகளுக்கான பயிற்சி மையம் அண்ணா நகரில் உள்ளது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட மாணவர்களுக்கு மட்டுமே இங்கு பயிற்சியளிக் கப்படும் என்ற மிகப்பெரிய விளக்கமளித்து பெரி யாரின் பெயரால் நடத்தப்படும் கல்வி மையங்களில், பயிற்சி நிலையங்களில் நேரிடையாகவே தலித்துகள் புறக்கணிப்பு செய்யப்படுகிறார்கள்."

திரு. விஸ்வநாதன், தலித் சமூக பணியாளர்.

"நான் ஏறத்தாழ 50 ஆண்டு காலமாக, பார்ப்பன மேல்சாதி மக்கள் என்பவர்கள் சட்டப்படி, சாஸ்திரப் படி, மதத்தின்படி என்று தாங்கள் அடைந்திருக்கும் வசதியையும், உயர்நிலையையும் பார்ப்பனரல்லாத 'கீழ்' மக்கள் நலனுக்குக் கேடாக பயன்படுத்தும் வாய்ப்பை ஒழிக்க வேண்டுமென்று பாடுபட்டு வருகின்றேன். என்னு டைய பிரதானத் தொண்டு இதுதான் இனியும். என் வாழ்நாள் வரையிலும் ஏற்படுத்திக்கொண்ட தொண்டும் இதுதான்" என்று பெரியார் கூறியதாக இப்படி ஒரு கல் வெட்டை வைத்துவிட்டு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற் படுத்தப்பட்ட மக்களை 'கீழ் மக்கள்' என்ற வரை யறைக்குள் கொண்டு வந்து தலித்துகளை புறக்கணிக்கும் ஒரு கழகமாகவும், தொண்டு நிறுவன மாகவும் செயல் படுவதுதான் திராவிடர் கழகம் என்பதே தலித்துகளின் புரிதல்.

பெரியாரின் கொள்கைகளை மலிவு விலையில், அதுவும் பாரபட்சமற்ற விலை நிர்ணயத்தில் கிடைக்கச் செய்யும் ஒரு ஸ்தாபனம். ஆக பெரியாரது கொள்கைகளை தலித்துகள் மத்தியில் மலிவாக பரப்புதல் (சாதி இந்துக்களின் அரசியலை காப்பாற்ற) செய்துகொண்டிருக்கின்ற மையமும் கூட.

இங்கு கடவுளை மட்டும்தான் செருப்பால் அடிப்பவர்கள் இருக்கிறார்கள். சாதியக் கொடுமை செய்பவர்களை ஏனோ இன்னும் உணர்ந்து கொள்ளாமால் இருக்கிறார்களே - ஓ... இதுதான் "சாதிப் பாசமா."

## திராவிட முன்னேற்றக் கழகம் - அண்ணா அறிவாலயம்

முதலில் அலசிய கழகம் பெரியாரின் வழி கழகமாக அறியப்பட்டாலும் பெரியாரின் சொத்துக்களை பாதுகாக்கும் ஸ்தாபனமாக மாறிவிட்டது. பெரியாருடன் இணைந்து செயல்பட்ட திரு. அண்ணாதுரை அவர்களின் தலைமையில் பெரியாரை விமர்சித்து வெளியேறியவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பே திராவிட முன்னேற்ற கழகம். (பெரியாரை விமர்சிக்கவே கூடாது என்று குரல் எழுப்பும் அத்தனை வாய்ச்சொல் வீரர்களும் இவர்களை என்ன செய்தார்கள் - என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது புரியாத புதிர்.) ஒரு காலத்தில் தலித் தலைவர் திரு. சத்தியவாணி முத்து உட்பட அனைவராலும் வரவேற்கப்பட்ட திரு. அண்ணாதுரையின் தலைமையில் ஆட்சியைப் பிடித்தது திராவிட முன்னேற்றக் கழகம். அவரது மறைவிற்குப் பிறகு மீண்டும் மிகவும் பிற்படுத்தப்பட்ட தலைவர் திரு. கருணாநிதியின் தலைமையின் கீழ் ஆட்சியினைப் பிடித்தது. அன்று முதல் இன்று வரை அவரது தலைமையிலே இயங்கிவரும் இந்த திராவிட முன்னேற்ற கழகம் தலித்துகளின் பிரதிநிதிகளை திட்டமிட்டு புறக்கணித்து வருவதுதான் சாபக்கேடு. அவற்றுள் சிலவற்றை காண்போம்.

1. காலம் சென்ற தலித் தலைவர்களான பண்டிதர் அயோத்திதாசர், தாத்தா இரட்டைமலை சீனிவாசன், எம்.சி. ராஜா, என். சிவராஜ், தியாகி இமானுவேல் போன்றவர்களையும் அவர்களது வரலாற்றையும் தமிழக வரலாற்றில் அவர்களது முக்கியத்துவத்தையும் மூடி மறைத்தது.

2. திரு. சத்தியவாணிமுத்து, திரு. வை. பாலசுந்தரம் போன்ற சிறந்த தலித் தலைவர்களை புறக்கணித்ததுடன் அவர்களை அலட்சியப்படுத்தியது.

3. தங்களுக்கு வேண்டிய ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியவுடன் பழைய கொள்கைகளை மறைத்து கோவில்களை கவனித்துக்கொள்ள ஒரு அமைச்சரவையினை உருவாக்கிய தி.மு.க. தங்களின் எதிரிகளாக சித்தரிக்கப்பட்ட பிராமணர்களையே முக்கிய அரசுயர் பதவிகளில் அமரச் செய்து மீண்டும் பிராமணர்களிடமே அதிகாரத்தை வழங்கியது. ஆக பிராமண + பிராமணரல்லாதாரின் நல்லுறவு ஆட்சியாகவே சித்தரித்துக்கொண்டு, அதையே தலித்துகளை ஒடுக்குவதிலும் பயன்படுத்தியதே இதன் வாழ்நாள் சாதனை.

4. தமிழகம் முழுவதும் கலைஞர் நகர் மற்றும் காலனியை உருவாக்கிய தி.மு.க., தலித்துகளை இம்மண்ணுக்கு சொந்தமானவர்கள் அல்ல என்றும், பிற்படுத்தப்பட்டவர்களின் நிலங்களிலும் வீடுகளிலும் வேலைசெய்யவும், அடிமைகளாக இருக்கவும் நிரந்தரமாக அமர்த்தப்பட்ட பண்ணை அடிமைகளாகவே சித்தரித்து சேரிகளை ஒழித்து காலனிகளை உருவாக்கியது தி.மு.க.-வின் சாதனையாக காட்டப்படுகிறது. ஆனால் பல முறை ஆட்சியில் இருந்தும் உயர்சாதி குடியிருப்புப் பகுதியில் தலித்துகளை குடியமர்த்த திராணி இல்லாத அரசாக, தலித்துகள் அடிமைகளாக இருக்கவே தகுதியானவர்கள் என்று செயல்பட்ட அரசு தி.மு.க.

5. தலித்துகளுக்கு மிக முக்கியமான வளர்ச்சிகளில் ஒன்று அரசு வேலை வாய்ப்பு. ஏறக்குறைய 40 ஆண்டு கால தமிழக திராவிட கட்சிகளின் வரலாற்றில் இதுவரை A மற்றும் B போன்ற உயர்நிலைப் பதவிகளிலும், அதிக சம்பளத்தொகை கொண்ட பதவிகளிலும் அவர்களது சதவிகிதமான 18% சதவிகித அதிகாரிளை நியமித்ததில்லை. ஆனால் C மற்றும் D போன்ற குறைந்த அதிகாரமுள்ள பதவிகளில் மட்டுமே அமர்த்தப்படுவது தலித்துகளின் நிலை.

6. "முழங்கால் தண்ணியிலேயே மூச்சு முட்டிச் சாகிறான்னா, அவன் ஆத்து தண்ணியிலே செத்தானா அல்லது வேற தண்ணியிலே செத்தானா" - தி.மு.க.வின் தலைமைக் கழக பேச்சாளரான ஒருவர் மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர் மரணத்தை மிகவும் கீழ்த்தரமாக விமர்சித்தார். இது மட்டுமல்லாமல் தி.மு.க.-வின் பார்வையில் தலித்துகளின் அரசியல் எழுச்சிகூட பிரிவினைவாத சக்தியாக சித்தரிக்கப்படுகிறது.

7. இறுதியாக சாதி ஒழிப்பு மற்றும் சமத்துவ கருத்துகளுக்கு தி.மு.க. தலைவர் காட்டும் ஒரே விளக்கம் அவரது மகன் தலித் பெண்ணை மணந்ததால் அவர் தலித்துகளின் சம்பந்தி என்று. அதையும் தலித்துகள் நம்பிக்கை வைத்து வாக்களித்து வருவது வேதனை. ஏனெனில் அவரது பேரன் ஒரு பிராமண பெண்ணை மணந்ததால் அவர் பிராமணர்களுக்குக்கூட சம்பந்தி தானே. இப்படிப்பட்ட விளக்கங்களால் சாதியும் அழியாது, சமத்துவமும் நிலவாது என்பதே நிதர்சன உண்மை.

பெரியார் திராவிட இயக்கமும் தங்களது பிராமண எதிர்ப்பு அரசியல் வியூகத்தைப் போன்றே தலித் எதிர்ப்பு வியூகத்தையும் கொண்டிருப்பது தலித்துகள் அறியாத உண்மை. மத எதிர்ப்பையே மாற்றி மாற்றிப் பேசி சாதியத்தை மறைக்க முயலும் "இந்த பெரியார் மற்றும் திராவிட இயக்கத்தினர்" சாதி ஒழிப்பு அரசியலை கையிலெடுக்க தயங்குவது ஏன்? சாதி ஒழிப்பை முன்னிறுத்தும் தலித் இயக்கங்களை ஆதரிக்காதது ஏன்? ஆக பெரியாரும், திராவிட இயக்கத்தினரும் தலித்துகளுக்குச் செய்தது நம்பிக்கை மோசடி, உணர்வு பூர்வ ஏமாற்றம், வஞ்சக அரசியல் மற்றும் வன்கொடுமைகளும்தான்.

நான் நீ என்றால் உதடுகள் ஒட்டாது

நாம் என்றால் மட்டும் ஒட்டும்

சொன்னார்கள்.

உதடுகள் ஒட்டித்தான் இருக்கின் றது - உடலில் உயிர் இல்லாமல்! ◆

# திறந்த மடல்

அனுப்புநர்

பூ. சந்திர போசு, பொதுச் செயலாளர்
தியாகி இமானுவேல் பேரவை மற்றும்
சாதி ஒழிப்பு முன்னணி, தமிழ்நாடு - புதுவை
2/448-பி வசந்தபுரம்
பரமக்குடி 623707

பெறுநர்

மதிப்புமிகு தோழர்கள்
தந்தை பெரியார் திராவிடர் கழகம்
29 பத்திரிக்கையாளர்கள் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர்,
சென்னை-600041

வழிமுறை : தலைவர், தோழர் குளத்தூர் மணி அவர்கள்
தோழமை மிகு வணக்கங்களோடு எழுதுவதாவது,

பொருள் : கடந்த 9-4-2005 அன்று மதுரையில் நடைபெற்ற ஒடுக்கப்பட்டோர் உரிமை முழக்க மாநாட்டின் உள்ளடக்கம் மற்றும் கழகத்தின் பார்வை/ அணுகுமுறைகள் குறித்து.

தோழர்களே! முதலில், காலந்தாழ்த்தி இம்மடலை எழுதுவதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன். சமூக, அரசியல் நிகழ்வுகளில் உரிய நேரத்தில் வினையும், எதிர்வினையும் ஆற்றுவதுதான் எந்த ஒரு இயக்கத்தின் இருப்புக்கும், நீட்டிப்புக்கும் உரிய மிகமிக அவசியமானவை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அந்த வகையில், இக்கடிதம் காலந் தாழ்ந்தது என்பதினாலேயே மேற்கண்ட எமது உணர்வின் வெளிப்பாடாகும்.

நிற்க. முதலில் எம்மைப் பற்றி:

1. என்னதான் நாங்கள், என் போன்றோர் பட்டியல் இனத்தில் பிறந்து விட்டதாலேயே நாங்கள் இன விடுதலைப் பாதையைப் பின்பற்றினாலும்; அல்லது மாந்த விடுதலையை ஏற்று ஒழுகினாலும் - 'தலித்' ஆகப் பார்க்கின்ற பார்ப் பனிய இந்துத்துவப் பார்வையை இன்னமும் பெரும்பாலோர் கைவிடவில்லை என்பதைத் தங்களின் உணர்தலுக்கும், புரிதலுக்கும் முன் வைக்க விரும்புகிறேன்.

2. அதுபோலவே புரட்சியாளர் அம்பேத்கரைப் பற்றிய கண்ணோட்டமும், மதிப்பீடும் உலக அளவில்கூட பெரிய மாறுதல் இல்லை. (பின்னர் நமது துணைக் கண்டச் சமுதாய மனிதர்களைப் பற்றிக் கூடுதலாக சொல்லியாகவா வேண்டும்? வேண்டியதில்லை). இதற்கொரு அண்மைக் காலத்தில் பெரிய உதாரணம்: மாண்புமிகு கே.ஆர். நாராயணன் என்கின்ற முந்நாளைய குடியரசுத் தலைவர் பிரான்சு சென்றபோது, அங்குள்ள பத்திரிகைகள்கூட அவரை 'தலித்' ஆகப் பார்த்து எழுதியவையாகும்.

3. உங்களின் மேலான பார்வைக்கும் புரிதலுக்குமாக கூடுதலாக ஒரு செய்தியையும் முன்வைக்க விரும்புகிறேன். வேறு ஒன்றும் அல்ல - மேல் சாதி/மேல்தட்டு வர்க்கங்களில் பிறந்து வளர்ந்தவர்கள் அல்ல என் போன்றோர். இந்தச் சாதியச் சனாதனச் சகதிப் பெருங்குழிச் சமுதாயத்தில், சமுதாய அடித்தட்டில், நிலத்தோடு கட்டுண்டிருந்து பண்ணை அடிமை முறைகளில் வாழ்ந்த குடும்பங்களிலிருந்துதான் மனித உரிமை, மனித சமத்துவம், மனித மாண்புகளுக்காகப் போராடி, பட்டறிவின் துணைகொண்டு, சமூக/அரசியல் இயக்கங்களுக்கு வந்தவர்கள் நாங்கள். ஆகவே, பெருமளவில் தத்துவ அறிவின் துணைகொண்டு பொது வாழ்க்கைக்கு வந்தவர்கள் அல்ல என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

4. பேராசான் மார்க்ஸ் ஒருமுறை கூறியதைப்போல, நாங்கள் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார் போன்றவர்களையும், ஏனைய முற்போக்கு - இடதுசாரிப் பெருந்தலைவர்களையும் வழிபாட்டுக்குரிய நாயகர்களாகப் பார்ப்பதில்லை; மாறாக, புதியதோர் 'சமத்துவப் பொன்னுலகு' என்னும் நீண்டகால இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு அவர்கள் எல்லாம் வழிகாட்டிகள் என்றும், மேலும் மேலும் ஆழ்ந்து கற்பதின் மூலமும், திறனாய்வுப் பார்வை மூலமும் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை, இலட்சியக் கனவுகளை நாமும் முன்னெடுக்க வேண்டும் என்று கருதிச் செயல்பட்டு வருகிறோம். அந்த வகையில் அவர்கள் எமக்கு வழிகாட்டிகள்; நாங்கள் அவர்களின் குறிக்கோள் நோக்கிய பணியாளர்கள் - அவ்வளவே.

5. அதனால்தான் புரட்சியாளர் அம்பேத்கரின் சில நிலைப் பாடுகளையும் (உதாரணமாக மொழிக்கொள்கை, தேசிய இனப்பிரச்சினை, சாதியவாத நாடாளுமன்ற தேர்தல் பாதை, பவுத்தம் ஏற்றல் முதலியவற்றை); இந்திய துணைக் கண்டத்து மார்க்சியவாதிகள் மற்றும் பொதுவுடைமையாளர்களையும் (வர்க்கப் பார்வை, வாக்குப் பெட்டிகள் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சிகளில்); தந்தை பெரியாரின் சமூக சீர்திருத்த வேலைமுறைகளையும் (இது விடுதலையை மறுக்கின்ற - நிராகரிக்கின்ற போக்கு) நாங்கள் திறனாய்வு முறையில் மாறுபடுகின்றோம். எனினும், பல்வேறு முற்போக்கு அம்சங்கள் அவர்களிடம் எடுப்பாக மேலோங்கி இருப்பதால், அவர்களை எங்களின் தலையாய வழிகாட்டிகளாக ஏற்றொழுகி வருகிறோம்.

இனி, உங்களைப் பற்றி

6. (அ) 9.4.2005 அன்று மதுரையில் நீங்கள் கட்டமைத்த 'ஒடுக்கப்பட்டோர் உரிமை முழக்க மாநாட்டில்' பெண் ஒடுக்குமுறைகளையும், தமிழின ஒடுக்குமுறைகளையும், மொழியுரிமை மறுப்புகளையும் மையப்படுத்தி, கருத்தரங்கம், வழக்காடு மன்றம், பொது மாநாடுகளை வடிவமைத்திருந்தீர்கள்.

நமது துணைக் கண்ட அளவில், 'ஒடுக்கப்பட்டோர்' என்பது, முதலில் அரசியல்/பொருளியல் அம்சங்களில் மட்டுமல்ல, கூடுதலாக சமுதாய அளவிலும், சாதிய வழிமுறைகளினாலும் ஒடுக்கப்பட்ட 'பட்டியல் வகுப்பாரை' மட்டுமே எடுப்பாகப் பொருள் படுத்தும் என்பது, பொதுவாக பெருவழக்காறாக அனைவராலும் ஏற்கப்பட்ட ஒன்றாகும். (இதை அன்றைய பொதுக்கூட்ட மேடையிலேயே நான் முன்வைத்தேன் என்பது, அனேகமாக உங்களுக்கு(ம்) நினைவிருக்கும்.)

ஆனால், அதிலிருந்து மாறுபட்டு / வேறுபட்டு நீங்கள் சிந்திப்பது, அணுகுவது, நிலைப்பாடு கொள்வது எமக்குப் புரியாததாகவும், வியப்பாகவும் இருக்கிறது! (நீங்கள்தான் எம் போன்றோருக்கு(ம்) புரிய வைக்க வேண்டும்.

(ஆ) அன்றைய (9-4-2005) வழக்காடு மன்றத்திற்குப் பிறகு பல தீர்மானங்கள் அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அவைகளில் மிகமிக அடிப்படையான, முக்கியத்துவம் பெற்ற, மனித விரோதச் செயல்களான பீ தின்ன வைத்தல், மூத்திரம் குடிக்க வைத்தல், அரசின் சுதந்திர தினத்தில் தாழ்த்தப் பட்ட வகுப்பில் பிறந்த ஊராட்சி மன்றத் தலைவர் கொடியேற்றி யதற்காகச் செருப்படி வாங்குதல் போன்ற கொடூரமும், குரூரமுமிக்க அருவருக்கத்தக்க இழி செயல்களைக் கண்டித்து ஒரு தீர்மானம் கூடப் போடவில்லையே - ஏன்?

(இ) இந்தியத் துணைக் கண்ட சமுதாய-அரசியல் சூழலில், உங்களைப் போன்றோருக்கு ஏனிந்தப் புதிய வகைப் பாட்டுப் பார்வை நேர்கிறது என்றால் - இங்கே நான்கில் ஒரு பங்கினரான தாழ்த்தப்பட்டோரின் நீண்ட நெடுங்காலத்திய மனித உரிமை மறுப்பு/மனித அங்கீகார மறுப்புப் பிரச்சினைகளை உங்களின் இடைச்சாதி (நடுச்சாதி/இடைத் தட்டு) வர்க்கப் பார்வையே காரணமாகும் என்று நாங்கள் கருதினால், அதுபற்றிய உங்களது பதில் என்னவாக இருக்கும் என்று அறிய விரும்புகிறோம்.

**தேடலும் - ஆய்வும்**
**வெளிப்படைத் தன்மையும்**
**இலட்சியப் பற்றுறுதியும்**
**செயல் முனைப்புமுள்ள**
**தந்தை பெரியாரின்**
**பாசறையைத்**
**தேடுகிறோம்.**

(ஈ) பார்ப்பனியம், பார்ப்பன ஆதிக்கம், மூடநம்பிக்கைகள், வருண-சாதிய பண்பாட்டு அம்சங்கள், இறை நம்பிக்கைகள் அனைத்தையுமே ஒப்பேரில்லாத வகையில் போர்க் குணத்தோடு எதிர்த்து, வாழ்நாளெல்லாம் போராடிய அந்த மகத்தான மாவீரன் தந்தை பெரியார் அவர்கள்கூட ஒரு சமயம், "தீண்டாதார் பிரச்சினையை அவர்களே போராடித் தான் தீர்க்க வேண்டும்" என்பதாகப் பேசியுள்ளார்கள். இத்தகைய இடர்பாட்டு/வழிவிலகல் பார்வைதான் ஒடுக்கப்பட்டோரில் தாழ்த்தப்பட்டோரை முன்னிலைப்படுத்தாததற்கும் காரணமாக இருந்திருக்குமோ என்று அய்யுருகிறோம்.

7. ஆரியப் பார்ப்பனியச் சாதி ஆதிக்கவாதிகளைக்கூட (உ-ம்: பொன்முத்துராமலிங்கம் - போடி, உத்தப்புரம் போன்ற மதுரை மாவட்டத்தின் சாதிக்கலவர நாயகன்) மதுரை 'ஒடுக்கப்பட்டோர் உரிமை முழக்க மாநாட்டு'க்கு ஏன் அழைத்தீர்கள் என்பதும், நீங்கள் பிறரை அழைப்பதில் ஏதாவது கோட்பாட்டு அணுகுமுறை / நிலைப்பாடு உங்களிடம் உண்டா, இல்லையா என்பதும் எங்களுக்குத் தெரியவில்லை.

(அண்ணன் 'மானமிகு' வீரமணியாருக்கும் உங்களுக்கும் பெரியார் பற்றிய கோட்பாட்டு ரீதியான பிரச்சினைகள் உண்டா, இல்லையா என்பதும் எங்களுக்குத் தெரியாது.)

8. (அ) பொதுவாக, நாங்களும் 'தமிழின விடுதலை' நிலைப்பாட்டில்தான் இயக்கம் நடத்துகிறோம். (தியாகி இமானுவேல் பேரவையை 'தமிழக மக்கள் இயக்க'மாக பெயர் மாற்றம் செய்து, அனைத்து உழைக்கும் வெகுமக்களையும் திரட்டுவது என இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே நிர்வாகிகள் மத்தியில் முடிவு செய்துவிட்டோம். கூடுதலாக, தமிழகம் - புதுவை தழுவிய 'சாதி ஒழிப்பு முன்னணி'யின் தொடர் வேலைகளால் எமது முடிவை நடைமுறைப்படுத்துவதில் தாமதமாகி வருகிறது.)

சாதி ஒழிப்பு - தமிழின ஓர்மை - நாடாளுமன்றத் தேர்தல் பாதைப் புறக்கணிப்பு - சமதர்ம புதிய ஜனநாயக தமிழ்த் தேச விடுதலை என்பதுதான் எமது நிலைப்பாட்டு இலட்சியமாகும். ஆனால் தமிழின ஓர்மையில், சாதி ஒழிப்பையும், மனித உரிமைப் பாதுகாப்பு, மனித சமத்துவம், மனித மாண்புகளை உயர்த்திப்பிடித்தலை முன்நிபந்தனையாகவும், அடிப்படை வேலைத் திட்டமாகவும்கொண்டுள்ளோம்.

குறிப்பாக, தமிழ்நாடு மார்க்சியப் பொதுவுடைமை அமைப்பும், தமிழ்நாடு பொதுவுடைமை (மா.லெ. பிரிவும்) 'வர்க்க அணி திரட்டலை' அடிப்படை அலகாகப் பேசி வருகின்றனர் என்பதும், பிற 'தமிழின விடுதலை' பேசும் அமைப்புகள்,

சமூக சீர்திருத்தத்தை மட்டுமே செயல்திட்டமாகக் கொண்டுள்ள நீங்கள், தமிழின விடுதலையைப் பேசுவதுதான் எமக்குப் புரியாத புதிராக உள்ளது. ஏனெனில், அனைத்து வகைச் சமூக சீர்திருத்தங்களும், சாதிய-வர்க்க மேலாதிக்கத்தைத் தகர்க்காது என்பது மட்டுமல்ல - வலுவாகப் பாதுகாக்கவும் செய்யும் என்கிற வரலாற்று உண்மையை நீங்கள் பார்க்க, ஏற்க மறுக்கிறீர்களா?

தத்தம் சாதியப் பார்வை நிலைப்பாட்டோடு தமிழின விடுதலையைப் பேசி வருகின்றன என்பதும் தாங்கள் அறியாதது அல்ல.

ஆ) ஆனால், பிரச்சினை அதுவல்ல. சமூக சீர் திருத்தத்தை மட்டுமே தங்களின் செயல்திட்டமாகக் கொண்டுள்ள நீங்கள், தமிழின விடுதலையைப் பேசுவதுதான் எமக்குப் புரியாத புதிராக உள்ளது. ஏனெனில், அனைத்து வகைச் சமூக சீர்திருத்தங்களும் நிலவுகிற சாதிய-வர்க்க மேலாதிக்கத்தைத் தகர்க்காது என்பது மட்டுமல்ல - வலுவாகப் பாதுகாக்கவும் செய்யும் என்கிற வரலாற்று உண்மையை நீங்கள் பார்க்க, ஏற்க மறுக்கிறீர்களா? என்பதையும் நாங்கள் அறிய ஆசைப் படுகிறோம்.

9. அன்றைய (9-4-2005) பொதுக்கூட்ட மேடையில், தி.மு.க.-வைக் கூர்மையாக விமர்சனம் செய்த தோழர் பார்வேந்தனை உங்களது தோழர்கள் முதலில் மேற்கொண்டு பேச விடாது குறுக்கிட்டுப் பார்த்ததும், பின்னர் அது 'அவர் கருத்து' என்று அவரைத் தனிமைப்படுத்திய 'நாகரிகமும்' எமக்கு அதிர்ச்சியை அளித்தன. இது/இவை தந்தை பெரியாரின் ஜனநாயக அணுகுமுறைகளுக்கு ஏற்புடையதாக இல்லையே என்பது எமது ஆதங்கம்.

(கூட்டு மேடைகளில் பேசும் கருத்துகள், பெரும்பாலும் அவரவர் இயக்கம் தொடர்பானதாகவே கருதுவது/கருதப்படுவது பொது வழக்காறுதானே? பின் ஏன் தோழர் பார்வேந்தனின் தி.மு.க. தொடர்பான விமர்சனத்தைத் தனிமைப்படுத்த வேண்டும்? மேலும் தி.மு.க. தொடர்பாக உங்கள் மதிப்பீடுதான் என்ன?)

ஆரியப் பார்ப்பனிய மனுவாத ஆர்.எஸ்.எஸ். கும்பலைத் தமிழ் மண்ணில் வளர்த்துவிட்டதும், சாதிய-மதவாத-இலஞ்ச/ஊழல்களை 'தார்மீக அறநெறிகள்' போல மொத்தச் சமுதாயமும் ஏற்கவைத்து, நடைமுறைப்படுத்தியதும், ஆங்கிலத்தை ஒவ்வொருவர் வீட்டு அடுப்படி வரையும் நுழைய வழிகளைத் திறந்துவிட்டதும், காவிரி நீர்ச் சிக்கலை மேலும் சிக்கலாக்கியதும், அரசியலைக் குடும்பச் சொத்தாக்கியதும், ஜனநாயக மறுப்புக்கு முன்மாதிரியாக இருந்து வருவதும், கச்சத்தீவைத் தாரை வார்க்க அனுமதித்ததும், பார்ப்பனிய-பனியா-இந்திய வல்லாதிக்கத்தையும், ஜி-8 மேலாதிக்கத்தையும் தமிழகத்தில நுழைய விட்டதும், அனைத்து வகைச் சமுதாயச் சீரழிவுகளையும் (பிழைப்பு வாதம்/துவேஷத்தனம் உள்ளிட்டு) அரியணையில் ஏற்றி வைத்ததும், இரண்டு தலைமுறைகளைச் சீரழித்ததும் தி.மு.க.வின் மகத்தான சாதனைகள்! - இல்லையா?)

10. அன்றைய (9-4-2005) பொதுக்கூட்ட மேடையில், தோழர் விடுதலை இராஜேந்திரன் அவர்கள் "சாத்தியமான வற்றிலிருந்துதான் எங்களது பணிகள் துவங்குகின்றன" என்ற பொருளில் பேசினார். எமது கருத்துப்படி, இது கொள்கை/கோட்பாடு/இலட்சியங்களுக்கான தற்கொலைப் பார்வை - அணுகுமுறையும், நிலைப்பாடும் ஆகும்.

ஆரியப் பார்ப்பனியச் சாதியவாதமும், இதர முதலாளியச் சீரழிவுகளும் மொத்தச் சமுதாயத்தையும் ஆளுகை செய்து கொண்டிருக்கின்றபோது, மாற்றத்தை/புதியவற்றை/முற்போக்கை விரும்புகிறவர்கள் முதலில் "எது சரி" என்பதிலிருந்துதான் சிந்திக்க வேண்டும் என்பதும், அதை சாத்தியப்படுத்தக் கடினமும், அளப்பரிய அர்ப்பணிப்பும், புதியன படைக்கும் இலட்சிய வெறியும், சரியான செயல்திட்டமும் வேண்டும் என்பதும் தங்களுக்கு (உங்கள் இயக்கத் தலைவர்கள்/முன்னணிகளுக்கு) தெரியாதா என்ன?

11. நிறைவாக, தேடலும் - ஆய்வும் - வெளிப்படைத் தன்மையும் - இலட்சியப் பற்றுறுதியும் - செயல் முனைப்புமுள்ள தந்தை பெரியாரின் பாசறையைத் தேடுகிறோம். ஏனெனில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான, அறுகிக் கெட்டி தட்டிக் காடாகிப் போன பார்ப்பனியச் சாதியவாத தமிழினத்தை மீட்டுருவாக்கம் செய்து, ஒன்றுபடுத்தி, ஓர்மையுடைய தத்துவ/அரசியல்/பண்பாட்டுப் பெரும்படை அணியை உருவாக்கி, பார்ப்பனிய வல்லாதிக்கம், ஜி-8 மேலாதிக்கங்களை வீழ்த்தி, சமதர்ம புதிய ஜனநாயக தமிழ்த்தேசம் படைக்க மிகச் சிலரால் மட்டுமே இயலாது என்பதை நாம் உணர்ந்திருக்கிற காரணத்தால்!

எனவே, உண்மையான/சரியான பெரியாரியவாதிகளை மட்டுமல்ல, நேர்மைமிகு அம்பேத்கரியவாதிகள் + உன்னதமிக்க மார்க்சிய, பொதுவுடைமைவாதிகளையும் நாங்கள் நேசிக்கிறோம்; காதல் என்கின்ற பேரன்பை வெளிப்படுத்துகிறோம்.

அதற்காக முதலாவதாகவும், மிக மிக முக்கியமானதாகவும், முற்போக்கு மற்றும் இடதுசாரிகளுக்காக நாங்கள் இரு கைகளையும் நீட்டுகிறோம். எங்களைப் பற்றிக் கொள்ளுங்கள். நாம் ஓர்மையுடன் களத்தில் நின்று, அனைத்து சாதியவாத + சமூக விரோத + மக்கள் விரோத அனைத்து அபாயங்களையும் வீழ்த்துவோம்! சமதர்ம புதிய ஜனநாயகத் தமிழ்த்தேசம் படைப்போம்!! வருக... என வரவேற்கிறோம்!!!

நாள்: 19-4-2005

தங்களின் மேலான பதிலை,

நட்புறவை நாடும்

பூ. சந்திர போசு

# அரிய மலர்

சிவாகாமி

பொழுது புலர்ந்த பின்பாவது உறக்கம் வரும் என்று நினைத்தது பொய்யாகிவிட்டது. உறக்கமின்மையால் தலை வலிக்க ஆரம்பித்தது. சரியாக எட்டு மணிக்கெல்லாம் நர்மதா வந்து விடுவாள். அதற்குள் தயாராக வேண்டும் நான்.

வெய்யில் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்து மழைக் காலம் துவக்கம் கண்டிருக்கிறது. அதிலும் ஷிமோகாவில் சொல்ல வேண்டுமா? தீர்த்தஹள்ளி, சொரபா எல்லைகளில் உயர்ந்திருந்த ஹியாத்திரி மலைத்தொடர் ஜூன் தொடக்கத்திலே மேகங்களை மறித்து மழையைப் பிழிந்து விடுகிறது. சென்ற மழைக் காலத்தில் பட்கல் சமுத்திரம் உப்பங்கழியை நிறைத்து ஊருக்குக் கொண்டுவந்து விட்டது வெள்ளத்தை!

சற்று நேரமாவது காலை நேரத்தில் உலாவச் செல்லலாம் என நினைத்து தோட்டத்துக்குச் சென்றேன். கால மாற்றம் காலரா, தொற்று இவற்றுடன் ஜூரம், தலைவலி எனக் கொண்டுவந்துவிடுகிறது. எனக்கு வந்திருந்தது கடும் ஜலதோஷம்.

தோட்டத்தை மிதித்ததுமே அடுக்கடுக்கான தும்மல்கள். தோட்டத்தில் மழைக்கு எழும்பிய சிறு கறுப்புப் பூச்சிகள் மூக்கிலும் புகுந்து விட்டன. குல்முகர் மலர்கள் இரவு மழையில் நைந்து செருப்புக்களின் கீழ் வருக்கி அரைபட்டன. இப்படியாக என்னுடைய மழைக் காலத்தை நான் பதிவு செய்தேன்.

நான் அடிக்கடி பயணம் செய்பவள்தான். மிஞ்சிப் போனால் மூன்றாம் நாள் வீடு திரும்புகிற மாதிரி என் பயணத்தை அமைத்துக் கொள்வேன். ஆனால் இந்தப் பயணத்திட்டம் என் கையிலிருக்கவில்லை. ஏறக்குறைய ஒரு மாத காலம் முக்கியமான அலுவல் காரணமாக வந்திருந்தேன். பல இடங்கள் சுற்றியலைந்து விசாரணைகள் நடத்த வேண்டியிருந்தது. என் அலுவலகப் பணியின் முக்கியத்துவம் காரணமாகவும், கன்னட மொழி தெரியாததாலும் நர்மதா என்னும் அதிகாரியை எனக்குத் தொடர்பு அதிகாரியாக நியமித்திருந்தார்கள். அவள் மாவட்டப் பஞ்சாயத்து அலுவலகத்தின் முக்கியப் பொறுப்பில் இருந்தாள்.

நர்மதா இளமையில் கவர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். இப்போதுகூட இனிமையான ரஸ்பூரிப் பழம் போல செழிப்பாகத் தெரிந்தாள். இடுப்பின் வனப்பு சேலை மறைப்பிலும் பளிச்சிட்டது. பொடி மூக்குத்தி ஒன்று படர்ந்த முகத்தில் பிரகாசித்து ஒளியூட்டியது.

அவள் என்னுடன் பழகிய விதம் அலாதியானது. என்னை மதிப்பது தன்னுடைய கடமை என்பதையும், உண்மையில் அவள் என்னை மதிக்கவில்லை என்பதையும் எனக்கு உணர்த்தியவாறிருந்தாள். இது என்னுடைய குறைபாடா அல்லது அவளுடையதா என்று எனக்கு திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை.

நான் அமெரிக்க மக்கள் வரலாறு குறித்த ஆங்கில நூலை பயணத்தின்போது படிக்கப் பிரித்தேன். இங்கே கொடுங்கள் என்று வாங்கியவள் சற்று நேரம் அதில் கண்ணை ஓட்டிவிட்டு "நீங்கள் பழகுவதற்கு மிகவும் எளிமையானவர்கள்" என்றாள் ஆங்கிலத்தில். நான் கொடுத்த அந்த புத்தகம் அந்த செய்தியை தெரிவித்ததா என்று கேட்க நினைத்த நான் "அதிகாரி என்பது அலுவலகத்தில்தான். மீதி நேரங்களில் சக அலுவலர்களோடு பழகுவது சாத்தியம்தான்" என்றேன்.

"ஆனால் பெரும்பாலானோர் அப்படியில்லையே. அது ஏன்?"

அவளது கேள்வி முகத்துதி போலிருக்கவே நான் எனது புத்தகத்தில் மூழ்கினேன்.

"உங்களோடு படித்த திம்மப்பா இங்கே வேலையாய் இருந்தப்போ எங்கே போகவேண்டும் என்றாலும் என்னைத்தான் அழைப்பார்"

எனக்குள் திம்மப்பாவின் நினைவு பனிமூட்டம் போல் கவிந்தது. அவன் என் சிநேகிதி ஒருத்தியைச் சுற்றி வந்துகொண்டிருந்த நாட்கள் அவை. அவள் கவிதை முயற்சியில் ஈடுபட்டிருந்தாள். திம்மப்பாகூட சிறுகதை எழுதுவானாம். "அதே கண்கள்" என்ற அவனது சிறு கதையில் நான்தான் கதாநாயகி என்று பெருமையுடன் சொன்னாள் சிநேகிதி. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குக் கூடத் தாங்காது என்பார்களே, அடுத்த நாளே அக்கன்னடக் கதையைப் படித்த ஒருவன் இது பிரபல எழுத்தாளர் ஒருவர் எழுதியது என்று போட்டுடைத்தான். அவன் மேலும் சில தகவல்களை போகிற போக்கில் விசிறியெறிந்தான். திம்மப்பா மூன்று பெண் குழந்தைகளுக்குத் தகப்பன். இதற்கிடையில் லண்டன் படிக்கச் சென்றபோது அங்கு பிலிப்பைன் நாட்டுக்காரியை மணந்து அவள் செலவில் படிப்பை முடித்துவிட்டு கையோடு விவாகரத்தும் கொடுத்துவிட்டு வந்தவன்.

இத்தகவல்கள் என் சிநேகிதியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

"திம்மப்பா சார் எந்த ஊருக்குச் சென்றாலும் தன் மனைவி மக்களை அழைத்துச் செல்வதில்லை" என்ற தகவலை நான் நர்மதா மூலம் அறிந்துகொண்டு வாளாவிருந்தேன்.

பேடிகே எனும் இப்பகுதிகளில் பிரசித்தமான சிவப்பு மிளகாய் பற்றி சொல்லிக்கொண்டு வந்தாள். "இதில் காரமில்லை, லேசான இனிப்பு உண்டு. உணவுக்கு இயற்கையான நிறத்தை வழங்குவதோடு பசியையும் தூண்டவல்லது."

அவள் ஊட்டச்சத்து பாடத்தை தனது உயர் கல்வியில் பயின்றவள் என்பதால் பெரும்பாலும் உணவு பற்றியும், அவற்றிலுள்ள ஊட்ட வகைகள் பற்றியும் பேசிக்கொண்டு வருகிறாள் என நான் நினைத்த போது "பிராமணர்கள் போஜனப் பிரியர்கள் அல்லவா" என்று தன் பேச்சுக்கு தானே விளக்கமளித்தாள்.

ஷிமோகா தாண்டும் முன்னமே குறுக்கிட்டது ஷிவப்பா நாயக் அரண்மனை. பாவாடை போலொரு வேட்டி, வேலைப்பாடுள்ள சரிகை வைத்துத் தைக்கப் பட்ட குர்தா, தலைப்பாகை இத்தியாதியுடன் வெண்ணிற மீசையில் வயதான ஷிவப்பா காட்சியளித்தார் பாது காக்கப்பட்ட புகைப்பட மொன்றில். ராஜாக்கள் எல்லோருமே ஏன் கோமாளிகள் போல் உடையணிந்திருக்கிறார்கள் என்று நிகழ்காலத்தி லிருந்து நோட்ட மிட்டேன். ஒரு காலத்தில் கொலை உபகரணங்களுடன் நெடிய நிலப்பரப்பை வளைத்துப் போட்டவன்தான் இந்த ஷிவப்பா. அதுகுறித்த ஓலைச்சுவடிகளை பார்வையிட்டபோது "அருகில்தான் வைஷ்ணவ கோவில். நான் ஏற்கனவே சொல்லி வைத்ததால் எல்லோரும் காத்திருக்கிறார்கள்" என்று நர்மதா காதில் சிறு குரலில் ஒலித்தாள். நான் கேள்வியுடன் நிமிர்ந்த போது "பழம்பெரும் கோவில்" என்று வழிபாட்டுத் தலத்துக்கு விசேடம் கற்பித்தாள்.

பாதி சிரைத்து குடுமியுடன் கூடிய புரோகிதர்கள் சமஸ்கிருத ப்ரார்த்தனைகளை சத்தம்போட்டு உச்சரித்து கல்லுக்கு அலங்காரம் செய்து பொம்மை விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். பழைமையே புனிதம் என்றால் வேதமும் புனிதம்தான். வேதங்களின் மகிமை பழைமையன்றி வேறென்ன என்று நினைக்கத் தலைப்பட்டு பழைமை என்ற மாயையிலிருந்து விடுபடுவது குறித்து எனக்குள்ளாக கேள்விகள் எழுந்தன.

தீபத்தட்டில் தாராளமாக ஒரு நூறு ரூபாயை விசிறியெறிந்தாள் நர்மதா. 'துளசி தீர்த்தம் இது' என்று அதில் கைகழுவிய என்னிடம் உரைத்தாள்.

"இனி நமது பயணங்களில் வழி பாட்டுத் தலங்களை, குறிப்பாக கலை நுணுக்கமற்ற கோவில்களை தவிர்க்கலாம்" என்றேன் அவளிடம்.

அப்படியும் அவள் அழகான காளைகளும் பசுக்களும் நிறைந்த கோசாலாவுக்கு இட்டுச் சென்று விட்டாள். வெளிநாட்டு மாடுகள், கிராஸ்கள் இவற்றை விஞ்சிவிடும் பெரிய நாட்டு மாடுகள் ராஜஸ்தானிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறி என்னை வென்று விட்டாள் நர்மதா.

மகாநந்தி என்ற மிகப்பெரிய காளை கார்வண்ணத்தில் மினுமினுத்தவாறு நின்றிருந்தது. உயர்ந்திருந்த அதன் திமில் வனப்புடன் விளங்கியது. இன்னும் பல்வேறு ரக காளைகள், பசுக்கள்.

கோசாலாவின் அருகிலேயே மாடுகளைப் போலவே பெரிதானக் கண்கள் கொண்ட இளம் மடாதிபதி இளங்கன்றுக் குட்டியை வருடிக் கொடுப்பதுபோல் ஒரு பெரிய தட்டி வைக்கப்பட்டிருந்தது. அதன் மூலையில் உள்ளூர் எம்.எல்.ஏ.-வின் போட்டோ கட்டம் கட்டி வைக்கப்பட்டிருந்தது.

நமது பெருமைகளை நாமே சொல்லிக் கொள்ளவில்லையென்றால் அது யாருக்கும் தெரியாமல் போய் விடும் என்ற அச்சம் யாரை விட்டது?

பசு மூத்திரத்தில் செய்த பற்பொடி என்று முகப்பில் விற்பனை செய்துகொண்டிருந்தார்கள். அதை நான் வாங்கிக் கொண்டேன்.

"இவ்வளவு தூரம் வந்த உங்களை மடத்தின் அதிபர் பார்க்க விரும்புகிறார்" நர்மதா தயங்கியவாறு சொன்னாள்.

நாங்கள் விசாலமான அறையில் சில நிமிடங்கள் காத்திருக்கும்படி செய்யப்பட்டோம். அறைக்கு வெளியே பலதரப்பட்ட மனிதர்கள் காத்துக் கிடந்தார்கள். வந்ததுமே உள்ளே சென்றுவிட்ட எங்களைப் பார்த்து குமைகிறார்களோ?

சற்று நேரத்தில வெள்ளியிலான கைப்பிடி கொண்ட சாமரம் மற்றும் சிறிய வெள்ளிக் குடத்துடன் காவியுடை இளைஞன் ஒருவன் தோன்றி "வர்றார்... வர்றார்..." என்று அறிவித்தபடி வந்தான். உடனே நர்மதா உள்ளிட்ட அனைவரும் தடால் மடால் என எழுந்து நின்றார்கள். ஓய்வுபெற்ற காவல்துறைத் தலைவர்தான் மடாதிபதிக்கு உதவியாக அமர்த்தப்பட்ட நிர்வாகி. இரண்டு மாதத்திற்கு முன்பாகத்தான் ஓய்வு பெற்றார். மூலையில் வெற்றுடம்பில் பூணூல் தெரிய கைகட்டி நின்றிருந்த உடைசலான ஒரு உருவத்தை சுட்டிக் காட்டினாள் நர்மதா.

புலித்தோல் போர்த்திய பசு - பசுத்தோல் போர்த்திய புலி. ஓய்வு பெறுவதற்கு முன்பும் - பின்பும் என்ற சமனங்களைப்பற்றி கற்பனை செய்தேன் நான்.

ஏன் இப்படியெல்லாம் சிந்திக்க வேண்டும்? ஓய்வுக்குப் பின் ராமா, கிருஷ்ணா என்று கடவுள் சேவை அல்லது பிழைப்பு உபாயம் என்றோ ஏன் நினைக்கத் தோன்றவில்லை.

மடாதிபதி குண்டுகுண்டுவென உருண்டு வந்தார். சம்மணமிட்டு அமர்ந்திருந்த என்னை இன்னார் என அறிமுகப்படுத்தினார் ஓய்வு பெற்ற காவல் துறைத் தலைவர்.

"எங்கிருந்தோ வந்து, அடர்ந்த காட்டுக்குள் உள்ள சிறுகுடிலைத் தேடி வந்தது நீங்கள் செய்த யோகம்"

யோகம் என்ற வார்த்தையை விளக்கிச் சொல்ல ஆரம்பித்த 'ஒய்வை' எனக்குத் தெரியும் எனத் தடுத்தேன்.

இருட்டு மஞ்சளில், அரக்குக் கட்டங்கள் விரிந்த மெலிதான சரிகையிட்ட பட்டுப் புடவையை எனக்குத் தந்தார் மடாதிபதி. இலவசப் புடவை பெற்றுக்கொள்ளும் ஏழை கிராமவாசியின் மனநிலையிலில்லாத நான் தயங்கினேன்.

"இது சிலருக்கு மட்டுமே தரப்படும் அரியவகை

பிரசாதம்" என ஊக்கப்படுத்தினார் ஒய்வு.

"இருந்து எங்களது எளிய விருந்துபசாரத்தை ஏற்றுக் கொண்டுதான் போகவேண்டும்."

"இல்லை, நேரமில்லை"

"சரி, தாகசாந்தியாவது செய்து கொள்ளுங்கள்"

நன்கு பழுத்த ரஸவாளி வாழை, பசும்பால், முந்திரிப் பருப்பு, உலர்ந்த திராட்சை வழங்கப்பட்டன.

வெளியே வந்தபோது மடத்துக்குச் சொந்தமான இருநூற்றி ஐம்பது ஏக்கரில் பாக்குத் தோட்டம் விரிந்திருந்தது. கருத்த மேனியர் பலர் அதில் வேலை செய்து கொண்டிருந்தனர்.

"மனிதர்கள், மனிதர்கள் காலில் விழுவது ஏற்புடையதல்ல" நான் சுயவிளக்கம் அளித்தேன்.

"அவர் எங்கள் குலத்தின் குரு. அதனால் அது எங்களுக்கு ஏற்புடையது" நர்மதா பதிலிறுத்தாள்.

"மடத்துக்கு சொந்தமான இரண்டாயிரம் ஏக்கர் நிலம் பறிக்கப்பட்டு விட்டது. மிருகங்களுக்கு இந்த உலகில் இடமில்லாமல் போய்விட்டது. பசுக்கள் மாமிசத்திற்காக கொல்லப்படுகின்றன. மனிதன் இயற்கையை நேசிக்கவில்லை."

நர்மதா அவ்வப்போது தனது கருத்தாக சில வற்றை சொல்லிக்கொண்டு வந்தாள்.

தீர்த்தஹள்ளி நெருங்கியபோது சூரியன் மேற்கில் பாக்குத் தோட்டங்களில் சரிந்து கொண்டிருந்தான். பிரசாதங்களை ருசி பார்க்காத என் நாவு குறித்து எவ்வித அக்கறையின்றி வண்டி மிக மெதுவாக சரிவுகளில் வளைந்து சென்று கொண்டிருந்தது.

தீர்த்தஹள்ளி ஒரு சிறிய நகரம் தான். நகரம் தாண்டி காடுகளின் நடுவில் இருந்த சிறு விருந்தினர் இல்லத்தில் எங்களுக்கு உணவு தயாராக இருந்தது.

அப்பளம்போல் காய்ந்த சப்பாத்திகளை, ஆறிப்போன வெண்டைக்காய் வதக்கலில் தொட்டுக் கொண்டு சாப்பிட்டோம்.

"இப்பகுதியில் உள்ளவர்கள் பீஃப் உண்பதில்லையா?" எனது கேள்வியை திடுக்கிட்டவள்போல் இன்னொரு முறை உறுதிசெய்து கொண்டாள் நர்மதா.

"விருந்தினர் இல்லத்தில் இது வெல்லாம் சமைப்பதில்லை" என்றார் பரிமாறிக்கொண்டிருந்த சமையற்காரர்.

உணவுக்குப் பிறகு விசாரணைகளை மேற்கொண்டேன். குறுக்குக் கேள்விகள் நுணுக்கமாக இருந்ததாக என் எண்ணம். முடிவதற்கு மாலை ஆறு மணியாகி விட்டது.

"தாவணகெரே வாயில் புடவைகள் விசேஷமானவை. இப்போது அவ்வாலைகள் மூடப்பட்டு விட்டன. எல்லாம் உலகமயத்தின் விளைவு" ஷிமோகா நோக்கிய பயணத்தின்போது பேச்சைத் தொடர்ந் தாள் நர்மதா.

"தமிழ்நாட்டிலும் நெசவாலைகளின் நிலை இதுதான்"

"நான் பட்டு அல்லது பருத்தி இரண்டில் ஏதாவதொன்றுதான் உடுக்கிறேன். இப்போதெல்லாம் பாலியெஸ்டர் மற்றும் சிந்தடிக் புடவைகள் விலை சரிந்து விட்டது. ஆபீஸில் ப்யூன் முதல் கிளார்க்குகள் வரை விதவிதமான சிந்தடிக் புடவைகளை அணிகிறார்கள். அதனால்தான் மாறிக்கொண்டேன் பட்டுக்கும் பருத்திக்கும்."

அடையாளத்தை தக்கவைத்து உயர்வு கற்பிக்க ஒரு சமூகமும், அடையாளத்தை இழந்து சமமாகி சங்கமமாகிவிடத் துடிக்கும் இன்னொரு சமூகம் பற்றியும் இயல்பாக சிந்திக்கத் துவங்கினேன்.

சமீபத்தில் ஒரு பிராமணப் பெண்ணின் இல்லத்துக்குச் சென்றிருந்தேன். எனக்கு பீங்கான் கிண்ணத்திலும், என்னுடன் இருந்த பிராமண விருந்தாளிக்கு எவர்சில்வர் டபரா செட்டிலும் காபி வழங்கப்பட்டது. அந்நிகழ்வு நர்மதாவின் கூற்றுக்குப் பிறகு தனி கவனம் பெற்றது.

இரவு முழுதும் புரண்டு கொண்டிருந்தேன். தொலைக்காட்சி பெட்டியோ, படிக்க எடுத்துச் சென்றிருந்த புத்தகங்களோ என் கவனத்தைப் பெறவில்லை. ஓயாமல் இருமிக்கொண்டும் மூக்கைச் சிந்திக் கொண்டுமிருந்தேன்.

அடுத்த நாள் சாகர் நோக்கி பயணப்பட்டோம். நீரலங்காரம் செய்த காட்டுப் பூக்கள் நிரம்பிய வனம் வழியே வண்டி விரைந்தபோது தூக்கம் அள்ளிக் கொண்டு போனது. மூக்கு அடைபட்டிருந்ததால் தூக்கத்தில் வாய் பிளந்து கொண்டது. காற்று தொண்டையை வறளச் செய்ததும் இருமல் தொடங்கியது.

"உங்களுக்கு உடல்நலமில்லை. சாகர் சென்று சேர்ந்ததும் டாக்டரை அழைக்கட்டுமா?"

நர்மதா பரிவுடன் கேட்டாள்.

"சாதாரணமான ஜலதோஷம்தான். சரியாகப் போய்விடும். டாக்டர் வேண்டாம்."

"வயதாக ஆக மரக்கறி உணவுக்கு மாறி வருகின்றனர் பலரும். மரக்கறி உணவுதான் எப்போதும் சிறந்தது" என் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு சொன்னாள் நர்மதா.

"ஜீரணிப்பது கடினம் என்பதால் சிவப்பு மாமிசம் தவிர்ப்பது நல்லது என்கிறார்கள். ஆனால் மீன், சத்து மிகுந்த எளிதில் ஜீரணம் ஆகக் கூடிய உணவு. கொழுப்பில்லாத மாமிச சூப்புகள் அருந்தலாம். வயதாக ஆக, மாமிச உணவை மட்டுமா நிறுத்தச் சொல்கிறார்கள்? நெய், பாலாடை, கொழுப்புச் சத்து நிறைந்த வனஸ்பதியால் செய்யப்பட்ட மரக்கறி உணவு வகைகள், சர்க்கரை-ஸ்வீட் வகைகள், வாயுத்தொல்லை தரக்கூடிய வாழைக்காய், உருளைக் கிழங்கு, கொத்தவரைக்காய் போன்ற பலவற்றையும்தான்."

என்னுடைய இந்த பதிலை ஏற்றுக் கொள்ளாமல் தலையை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் ஆட்டி

பதிலேதும் பேசாமல் இருந்தாள். ஊட்டச் சத்து விஞ்ஞானம் இதைத்தான் கல்லூரியில் போதித்ததா என்று கேட்க நினைத்த நான் வாளாவிருந்தேன்.

"கொல்லூர் மூகாம்பிகை கோவில் அருகில்தான். வரும்போது நீங்கள் பிரியப்பட்டால் பார்க்கலாம்."

நான் கண்களை மூடிக்கொண்டு இருக்கையில் சாய்ந்திருந்தேன்.

"ஆதிசங்கரர்தான் மூகாம்பிகை அம்மனை பிரதிஷ்டை செய்தது என்று சொல்கிறார்கள். இப்போதே இவ்வளவு அடர்ந்த காடாயிருக்கும் இந்தப் பிரதேசத்தில் எவ்வித சாலை மற்றும் போக்குவரத்தில்லாத காலத்தில் ஆதிசங்கரர் நடந்தே வந்திருக்கிறார் என்றால் அவர் கடவுளின் அருள் பெற்றவராகவே இருக்க வேண்டும்" நர்மதா சொல்லிக் கொண்டிருந்தாள்.

பள்ளிக்கூடம் அருகில் வண்டி நின்றது. சர்வ சிக்ஷ அபியான் திட்டத்தில் பள்ளிகளையெல்லாம் மூவண்ணத்தில் அலங்காரம் செய்திருந்தார்கள். சுவர்களில் ஞானபீடம் பரிசு வாங்கிய ஏழு கன்னட எழுத்தாளர்களின் உருவப்படங்கள் சித்திரமாக தீட்டப்பட்டிருந்தன. அவர்களின் பெயர்களைத் தெரிந்து கொண்ட நான், அவர்களில் சிலர் எழுதிய ஒன்றிரண்டு புத்தகங்களைப் பற்றிச் சொன்னேன். கூடவே தேவனூரு மகாதேவா, சித்தலிங்கையா பற்றியும் கொஞ்சம்போல் சொன்னேன். அவள் நான் சொன்ன இருவரும் பற்றி இங்கு யாருக்கும் தெரியாது என்றாள்.

"ஏழு பேர் ஞானபீடப் பரிசு வாங்கியிருந்தாலும் குவெம்பு ஒருவருக்கே சகல மரியாதையும் செய்யப்படுகிறது. எழுத்தில் என்ன இருக்கிறது? பிறப்பில்தான் எல்லாம். அவர் எழுதிய ராமாயண தரிசனத்திற்குத் தான் விருது கிடைத்தது. அது ஒன்றும் சிறப்பான புத்தகம் அல்ல. அவர் கர்நாடகத்திலேயே மிகவும்'பவர்ஃபுல் சாதியான ஒக்கலிகா பிரிவைச் சேர்ந்தவர். அவர்கள் பெரும் நிலச்சுவான்தார்கள். எழுவரில், இவர் ஒருவருக்கு மட்டும்தான் அரசு நினைவு இல்லம் ஏற்படுத்தியதோடு அவர் பெயரில் இயங்கும் ட்ரஸ்டுக்கு ஆயிரம் ஏக்கர் வனப்பகுதியையும் தானமாக வழங்கியிருக்கிறது. அதுமட்டுமல்ல அவர் பெயரில் ஒரு பல்கலைக் கழகம். அதன் துணைவேந்தர் அவரது மருமகன் சிதானந்த கௌடா. அவர் கல்லறையை மலைப் பாறைகளுக்கிடையில் அமைத்து அதற்கு கவிஷைலா என்று பெயரும் வைத்திருக்கிறார்கள். இன்னும் என்னென்னவோ! உங்களுக்கு நேரம் இருந்தால் திரும்பும் வழியில் நினைவு இல்லத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பலாம்."

குவெம்பு பற்றிய எனது கேள்வி ஞானத்தில் இத்தகவல்களெல்லாம் இல்லை.

ஷராவதி ஆறு கடலோடு கலந்து கிடந்தது. எத்தனை ஆறுகள் கலந்தாலும் கடலின் குணம் மட்டும் மாறுவதேயில்லை.

உப்பங்கழிகள் நிறைந்து ஊருக்குள் வெள்ளம் வந்ததால் சிலருக்கு மலைப்பகுதிகளில் மாற்று இடம் அளித்திருந்தார்கள். மெகானே அப்படிப்பட்ட இடம் தான். நாங்கள் செங்குத்து மலைப்பகுதியில் ஏறிக் கொண்டிருந்தோம். அடைபட்ட மூக்கிலும் தாழம்பூ வாசம் வந்தடைந்தபோது இங்கே தாழம்பூ இருக்கிறதா என்று வினவாமல் இருக்க முடியவில்லை என்னால். ஆம், சற்று தூரத்தில் இளமஞ்சள் மடல் விரித்திருந்தது தாழங்குத்து.

யூகங்கள் நிறைவேறுவதில் அலாதியான மகிழ்ச்சியுண்டு. வருங்காலத்தை முன்னறிவிப்பதில் யூகங்களின் பங்கு நிறைய உண்டு. தாழம் பூ வாசம் போல் எண்ண அலைகளும் காற்றில் மிதந்து கொண்டு தானே இருக்கின்றன. அவை மனம் எனும் புலனை அடையாமலா போய்விடும். பலவிதமான சிக்கல்கள் எழுந்து என்னை வளைத்தன. முயற்சி திருவினையாக்கும் என ஆறுதல் அடைந்தேன்.

மெகானே வந்ததும் நர்மதா கதை சொல்லத் துவங்கினாள் எனக்கு.

"பரசுராமரின் மனைவி ரேணுகாவை, இம்மலையில் வாழும் தலித்துகள் ரேணுக்கி அம்மன் என்கிறார்கள். ரேணுக்கி அம்மனை நிர்வாண கோலத்தில் வழிபடுவது சிறப்பு பூசை. இது மிக நெடுங்கால மாகவே நடந்து வருகிற ஒன்று. இதற்கு சமீபத்திய கர்நாடக தலித் இயக்கங்கள் எதிர்ப்பு தெரிவித்து தடை செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டம் நடத்தின. இந்த ஆர்ப்பாட்டத்திற்குப்பின் நடந்த நிர்வாண பூசையின்போது இம்மலைப் பிரதேசமே மக்கள் காடாகி விட்டது. சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி."

"இப்பொழுதும் நடைபெறுகிறதா?"

"தலித் இயக்கங்களின் தொடர்ந்த சலசலப்பால் அது தடை செய்யப்பட்டு விட்டது. ரகசியமாக நடத்துகிறார்களோ என்னவோ?"

தலித் இயக்கம் என்ற வார்த்தையை 'சாக்கடை' எனும் தொனியில் உச்சரிக்கிறாளோ எனச் சந்தேகம் ஏற்பட்டது எனக்கு.

திரும்பும் வழியில் அரிய தாவர வகையைக் கண்ணுற்றேன். முரட்டு மலைத்தாவரம் அது. பூமிப் பகுதியிலுள்ள சட்டி போன்ற கிழங்கிலிருந்து கண்ணாடி விரியன் போல வழுவழுப்பான தண்டு எழுந்து கொள்ள அதன் முனையில் உரித்த வெங்காய நிறத்தில் விங்கம் போன்ற தண்டும் அதைச் சுற்றி இளம் ரோஸ் வண்ணத்தில் ஓரிதழ் பூவும். வண்டியின் ஓட்டுநர் எனக்காக அதை சிரமப்பட்டு பறித்தெடுத்தார். அதை பத்திரப் படுத்தி வைக்கச் செய்தேன்.

குவெம்பு இல்லத்தில் காலடி எடுத்து வைத்த போது மூன்று ஏக்கர் பசும் புல்வெளியை விசைத் திருகில் சீராக தண்ணீர் சிதறி நனைத்துக் கொண்டிருந்தது. சிவப்பு ஓடுகள் வேய்ந்த இரண்டடுக்கு உயரம் கொண்ட பழங்காலத்து மாளிகை. ஷிவப்பா நாயக் அரண்மனையை விடப் பெரிது. எழுத்தாளர் குவெம்புவின் பரம்பரைச் சொத்து. பின்னால் ஐம்பது ஏக்கரில் பச்சையான பாக்குத் தோட்டம். அதுவும் அவருடையதே! கலை உணர்வுடன் தேக்கு மரத்தில் இழைக்கப்பட்ட பல்லக்கு, குதிரைலாயம், பெரிய வெந்நீர்க் குளிப்பறை இவை அவரின் மூதாதையர் பெருமையைச் சொல்லிக்கொண்டிருந்தன. மாளிகை உள்ளே பார்வை

யாளர்களின் காதுகளைத் தணித்தது இதமான கர்நாடக இசை. படுக்கையறை, குவெம்புவின் படிப்பறை எனச் சுற்றிவர அரை மணி நேரமாகியது. குவெம்பு மியூசியத்தில் அவரது தலைமுடி முதல் பாதரட்சை ஈறாக பாதுகாக்கப்பட்டிருந்தது. சிறுவயது முதல் பிணமானது வரை உள்ள எத்தனையோ நிழற்படங்கள்! இறுதிக் காலத்தில் அரசு செலவில் மைசூரிலிருந்து இங்கே ஹெலிகாப்டரில் அவர் கொண்டுவரப்பட்டது கூட பதிவாகியிருந்தது. அவர் மைசூர் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்தார். இப்போது அவரது மகன் பூரண சந்திர தேஜஸ்வி அப்பல்கலைக் கழகத்தில் பேராசிரியர். அவர் எடுத்த பல்வகையான பறவைப் படங்களில் அப்பா குவெம்புவின் கவிதை வரிகள்!

மாளிகைக்கு சில கல் தொலைவிலே கவிஷைலா. அங்கு நவீன பாணியில் கருங்கற்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. "எப்போதெல்லாம் எழுதவேண்டும் என்று தோன்றுகிறதோ அப்போதெல்லாம் இந்த மலைப்பாறைக்கு வந்து பரந்திருக்கும் வனத்தைப் பார்ப்பார். அப்படி எழுந்ததுதான் இராமாயண தரிசனம்." இராமாயண தரிசனம் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள் இவ்வாறு என்னை நோக்கி எறியப்பட்டன. நர்மதா இவற்றையெல்லாம் வன்மமான வர்ணனைகளில் விவரித்துக் கொண்டிருப்பதாகப் பட்டது.

யானை இருந்தாலும், இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற பழமொழி ஞாபகத்திற்கு வந்தது. யானையா, பூனையா என்று குயுக்தியாகவும் தோன்றாமலில்லை. காரணம் நான் குவெம்புவை படித்ததில்லை.

நாங்கள் ஷிமோகா திரும்பியபோது என்னை வரவேற்க கிட்டான் நின்றிருந்தார். அவரும் என்னைப் போன்ற அதிகாரிதான். காற்சட்டை, பனியன் இவற்றுடன் உலாவச் செல்ல தயாராக இருந்தார். ஒரு கப் தேநீருடன் சம்பிரதாயமாக அறிமுகமாகிக்கொண்டு என் அறைக்குள் நுழைந்தேன்.

அடுத்த நாள் வேலைத்திட்டம், அன்று கொண்டு வந்த குறிப்புகளைக்கொண்டு விசாரணை அறிக்கையைத் தயார் செய்வது குறித்து நர்மதாவிடம் உரையாடிக் கொண்டிருந்தேன்.

"கிட்டானைப் பார்த்தால் என்னுடைய பழைய அலுவலகத் தலைவர்தான் ஞாபகத்திற்கு வருகிறார். உங்களுக்குத் தெரியுமா, கிட்டான் வேலை ஒன்றும் செய்வதில்லை. வண்டியை எடுத்துக்கொண்டு பெங்களூர் வரை சென்று நண்பர்களுடன் தண்ணி போட்டுக் கொண்டிருந்ததாக இங்கே பேசிக் கொண்டார்கள். என்னுடைய பழைய அதிகாரி ஒரு எஸ்ஸி. சினிமாவில் வேறு நடித்தார். அதிகாரியாக இருந்துகொண்டு சினிமாவில் நடிக்கலாமா? எங்களைப் போன்ற பெண்கள் எப்படி கோப்புகளை எடுத்துச்சென்று கையெழுத்து வாங்குவது, ஒரே இன்டீஸன்ட் பிகேவியர்! பார்த்தாலே ஒரு மாதிரி இன்டீஸன்டா இருப்பார். ஒருமுறை ஒரு கோப்பில் கையெழுத்து வாங்கச் சென்றிருந்தேன். உடம்பெல்லாம் எண்ணெயைத் தடவிண்டு நிக்கிறார் ரவுடி கணக்காக!"

"எங்கள் ஊரில் கூட சினிமாவில் நடித்தவர்கள், நடிப்பவர்கள் முதலமைச்சராகவும், மக்கள் பிரதிநிதிகளாகவும் இருக்கிறார்கள். எல்லோரும் கைகட்டி வாய்பொத்தித்தானே நிற்கிறோம். இந்தியா முழுவதும் இப்படி நடக்கத்தானே செய்கிறது? சினிமாவில் நடிப்பது தகுதிக் குறைவு என்று யாரும் நினைப்பதில்லையே?"

"அதில்லம்மா. சினிமாவில் நடிக்கட்டும். ஆனால் பார்த்தாலே இன்டீஸன்டா இருக்கறதுதான். அதை எப்படிச் சொல்றதுன்னுதான் தெரியவில்லை."

இப்படி வெளியில் சொல்ல முடியாத வியாதி எதுவாயிருக்கும். நடிகன், அநாகரிகம் இவற்றுக்கு முன்னதாக அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்ற முன்னுரை எனக்கு அந்த வியாதியின் தன்மையைப் புரிய வைத்தது.

அவள் எனக்கு ஜலதோஷத்திற்கான மருந்து வகைகளை மருத்துவரிடமிருந்து வாங்கிக் கொடுத்து விட்டு விரைவில் குணமடைய பிரார்த்தித்துக் கொள்வதாகக் கூறி வெளியேறினாள்.

இரவு பாலும் வாழைப்பழமும் போதுமெனக் கூறியதும், அங்கு சமையற்காரராயிருந்த பட்டர், நல்ல மிளகு சூப் வைத்துத் தருவதாகக் கூறினார். இதைக் கூறுவதற்குள் நெஞ்சுக்குள் கரகரவென்றிருந்த கோழை அவரை ஒரு வழி பண்ணி விட்டது. பட்டரே, உடம்பைக் கவனித்துக் கொள்ளுங்கள் எனக் கூற நினைத்தேன். நரம்பு போன்ற அவருடைய உடம்பில் அது எத்தனை காலம் வாசம் செய்கிறதோ என்ற எண்ணம் என்னைத் தடுத்தது.

நான் காரமான சூப்பை அருந்தி தடுமத்தை கண், மூக்கு வழியாக வெளியேற்றி சிரமப்பட்டுக் கொண்டிருந்தபோது என் அறைக் கதவு தட்டப்பட்டது.

உடம்பு சரியில்லையாமே எனப் பரிவுடன் கேட்டுக் கொண்டு நுழைந்தார் கிட்டான்.

"என்ன இருந்தாலும் எனக்கு மூத்த அதிகாரியல்லவா நீங்கள்? உங்களை விசாரிக்கா விட்டால் அதுவே பெரிய விவகாரம் ஆகி விடுமல்லவா?" கூடவே அவர் என்னைக் கிண்டல் செய்தார்.

"மூத்த அதிகாரியாக இருப்பது அவ்வளவு பெரிய பாவமா என்ன, வயதாகி விட்டது. அதுதான்"

"நோ, நோ... என்னைவிட உங்களுக்கு வயது குறைவாகத்தான் இருக்கும்" என்று தன் வயதை ஐம்பத்தியிரண்டு எனக் குறிப்பிட்டார்.

நாங்கள் சற்று நேரம் உலக வழக்கங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

அவர் வாழும் வடகிழக்கு மாகாணங்களில் எப்படி அறியாமையும் வறுமையும் உள்ளது என்பதைப் பற்றி கூறிக்கொண்டிருந்தார்.

பன்றிக்கறி தின்னாமல் வாய் ஊறல் எடுக்கிறது என்று சப்புக் கொட்டினார்.

"நீங்கள் கடுமையாக உழைக்கிறீர்கள்?"

நான் மௌனமாக இருந்தேன்.

"நான் ஏழாவது முறையாக இம்மாதிரி வேலைகளுக்கு அனுப்பப்படுகிறேன். யாரும் விரும்பாத வேலை. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி கணக்காக எனக்கு இந்த வேலையைக் கொடுத்துத் துரத்தியிருக்கிறார்கள். அதனால் நான் வேலை செய்யப் போவதில்லை. அவ்வளவுதான்!"

"எனக்கு இம்மாதிரி ஊர் சுற்றப் பிடிக்கும். ஏனெனில் மனைவியின் தொல்லையிலிருந்து தப்பிக்கலாமல்லவா? எனினும் என் மனைவி இக்குறுகிய கால சுதந்திரத்தையும் அனுமதிப்பதில்லை. அடிக்கடி செல் பேசியில் தொல்லை செய்கிறாள்."

அவர் முடிப்பதற்குள் அவரது செல்பேசி ஒலித்தது. இதோ மறுபடி அவள்தான் என்று கூறியவாறு பேசிக்கொண்டிருந்தார்.

பேசி முடித்தவுடன் "பைசா பெறாத விஷயம். எப்படி ஆரம்பிக்கிறாள் தெரியுமா பேச்சை! நாம் ஒழைச்ச பணம் கஷ்டப்பட்டு சம்பாதிச்சதுதானே? நான் ஆமாம் என்றேன். பிறகு எதற்கு பக்கத்து வீட்டுக்காரி நான்கு நாட்கள் நமது நாய்கள் சலிக்கத் தின்னக்கூடிய நாயுணவை (பெடிக்ரி) திருடிக் கொண்டாளாம். இதற்கு நான் என்ன பதில் சொல்ல முடியும். சரி, சரி. நான் அப்புறம் பேசுகிறேன் என்று கட் பண்ணி விட்டேன். அடடா... இந்தப் பெண்கள் இருக்கிறார்களே.."

நாங்கள் எங்கள் வளர்ப்புப் பிராணிகள் பற்றி சந்தோஷத்துடன் சில செய்திகளை பரிமாறிக் கொண்டோம்.

"யாருக்காவது திருமணப் பரிசு அளிக்க வேண்டுமென்றால் ஒரு நாய்க்குட்டியைப் பரிசளிக்கலாம். திருமண வாழ்க்கை நீடிக்கிறதோ என்னவோ, நாயின் அன்பு நீடித்திருக்கும் என்பது உறுதி."

இப்படிப் பேசிக்கொண்டே போன விஷயம் அதிகாரிகளை நோக்கித் திரும்பியது.

"மூத்த அதிகாரிகள் அரசியல்வாதிகளின் வழியில் செல்வதைப் பார்த்து இளம் அதிகாரிகளும் பழகிக் கொள்ளுகிறார்கள்." ஏதோ ஒன்றைப் பேசுவதற்கு முகாந்திரமிட்டார் கிட்டான்.

"தாய் எட்டடி என்றால், குட்டி பதினாறடி அல்லவா?" நானும் பதிலுக்குச் சொன்னேன்.

"என்னை பன்சிலாலுடைய ஆள் என்றார்கள். பிறகு ஓம் பிரகாஷ் சௌதாலா வந்தவுடன் சௌதாலாவின் ஆள் என்றார்கள். என் மனைவியோ அவளுடைய ஆள் நான் என்றாள். ஆனால் ஐயோ, இத்தருணத்தில் நான் யாருடைய ஆளுமில்லாமல் அநாதையாகி விட்டேன்."

எனக்கு சிரிப்பு வந்தது.

"ஆஹா... சிரித்து விட்டீர்கள் கலகலவென்று. மூத்த அதிகாரி என்ற கரையை உடைத்து விட்டீர்கள்."

நான் மேலும் சிரித்தேன்.

"அது பயிற்சிக் காலம். எனது மூத்த அதிகாரி, பாவம் கடும் உழைப்பாளி. காலை ஆறுமணியிலிருந்து இரவு எட்டு மணி வரை வேலையில் மூழ்கியிருப்பான். ஆனால் பக்கா ஃப்யூடல். அவனுடைய வீட்டின் ஒரு பகுதி முகாம் அலுவலகமாக்கப் பட்டிருந்தது. இது வழக்கம்தான் இல்லையா? ஒரு விடுமுறை நாளில் சப்ராஸியை விட்டு, சப்ராஸி என்றால் தெரியும்தானே, அலுவலக சிப்பந்தியை விட்டு என்னை முகாம் அலுவலகத்திற்கு வரச் செய்தான். ஏன் ஒரு தொலைபேசி செய்தால் நான் வந்திருக்க மாட்டேனா என்ன? என்ன அவசரமோ என நான் அரக்கப் பரக்க ஓடி வந்தேன். என்னை அவன் முன்னால் உட்காத்திக்கொண்டு யாரிடமோ தொலைபேசியில் பேசுகிறான். பேசிக்கொண்டேயிருக்கிறான். பிறகு கோப்புக்களைப் பிரித்து பரிசீலிக்கத் துவங்கிவிட்டான். என்னை எதற்கு அழைத்தான் என்பதே புரியாமல் நான் ஒரு மணி நேரம் உட்கார்ந்திருந்தேன். சற்று நேரத்தில் இன்டர்காம் ஒலித்தது. எடுத்துப் பேசியவன் உள்ளே போவதற்கு எழுந்தான். உயர் அதிகாரி ஆயிற்றே, நானும் எழுந்தேன் சற்று நேரத்தில் திரும்பி வந்தான். அப்போதும் எழுந்தேன். சற்று நேரத்தில் மீண்டும் அழைப்பு வந்தது. எழுந்தான். நான் பேசாமல் அமர்ந்திருந்தேன். சிறிது நேரத்தில் உள்ளே சென்றவன் திரும்பினான். அப்போதும் நான் எழாமல் அமர்ந்திருந்ததை கவனித்தவன் ஹிந்தியில் சொன்னான் இப்படி,

'ஆப் சீனியர் ஆபீசர் ஆத்தே ஹெ உட்டா கர்த்தா ஹெ'

எனக்கு ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது. எனினும் மௌனமாக தலை குனிந்தவாறிருந்தேன். மூன்றாம் முறையாக வந்த அழைப்பை ஏற்று உள்ளே சென்ற போது, நான் எழுந்திருக்காதது மட்டுமல்ல, ஸ்மோக் பண்ண ஆரம்பித்தேன். பாதி சிகரெட் புகைந்து கொண்டிருந்தபோது அவன் உள்ளே நுழைந்தாலும், நான் முழுதும் புகைத்து விட்டு சாம்பல் தட்டில் சிகரெட் நுனியை நசுக்கித் தேய்த்தேன். அவன் பெண்டாட்டி உள்ளுக்குள்ளிருந்து நூறு தடவை அழைப்பாள். அப்போதெல்லாம் எழுந்திருந்து நிற்க வேண்டுமா, சாலா, என்ன சொல்லுகிறான் இவன்?"

சாலா என்ற வார்த்தையை உபயோகித்ததற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தொடர்ந்தான்.

"பிறகு அவன் என்ன செய்தான் தெரியுமா? 'கிட்டான், இனிமேல் எப்போதும் என் முன்னால் வராதே. உனக்குப் பயிற்சி தேவையில்லை. உன்னைப் பற்றி மோசமான ரிப்போர்ட் எழுதிவிடுவேன் என அஞ்ச வேண்டாம்' எனக் கூறினான். அதற்குப் பிறகு அவனிருக்கும் திசைப் பக்கம் நான் தலைகூட வைத்துப் படுக்கவில்லை. அவனும் தன் சொல்லைக் காப்பாற்றினான். நான் எதற்கு சொல்கிறேன் என்றால் அதிகாரிகள் நட்புடன் பழக வேண்டும். இரண்டு மூன்று வருடம் பிந்தி சேர்ந்தவர்களை சப்ராஸி போல் நடத்துவது எனக்குப் பிடிக்காது."

"ஆமாம். சப்ராஸியை எப்படி நடத்த வேண்டும்?"

அவன் சிரித்துக் கொண்டே "சப்ராஸியை சப்ராஸிபோல் நடத்த வேண்டும்" என்று சொல்லி இது ஜோக்குதான் என்று சேர்த்துக் கொண்டான்.

"ஒரு சில அதிகாரிகள் இன்னும் மோசம். நேர்மையாக இருக்கும் அதிகாரி அவர். இந்த நேர்மை பொல்லாத தலை கனத்தைக் கொடுத்திருந்தது. அவரைத் தவிர பிறர் எல்லோரும் ஊழல் பேர்வழிகள் என்பது அவரது கணிப்பு. அந்த ஆள் முதல் மந்திரிக்கு நெருக்கமாக இருந்தான்."

நான் குறுக்கிட்டு அதிசயமாக இருக்கிறதே என்றேன்.

"அதிசயம் என்ன, ஊழலில் ஈடுபடாத அதிகாரியை பக்கத்தில் வைத்துக்கொண்டால் இன்னும் வசதியாகப் போயிற்று. சிந்தாமல் சிதறாமல் மொத்தமும் பைக்குள் வந்து விழுந்து விடுமல்லவா? அதிகாரிக்கும் மகிழ்ச்சி தான், தனது நேர்மை கௌரவிக்கப்பட்டதென."

"சரி சொல்லுங்கள்"

"அந்தாளை சொந்த விஷயம் கருதி பார்க்கப் போனேன். அந்தாள் ஒரு பிராமண எஸ்ஸி"

"எனக்குப் புரியவில்லை"

"அதாவது எஸ்ஸியாக இருந்துகொண்டு பிராமணனைப் போல் நடந்து கொள்வது. கேளுங்கள், நான் உள்ளே நுழைந்ததும் என்னை ஒரு ஆடு மாடைப் பார்ப்பதுபோல பார்த்தார். சில பேர் கைகுலுக்குகிறேன் என்று செத்த மீன் போன்று சம்பிரதாயத்திற்காக கை கொடுப்பார்கள். இவர் அம்மாதிரிகூட செய்யத் தயாராயில்லை. என்ன கிட்டான், என்ன விஷயம் என மஹா சித்தாப்போட என்னைக் கேட்டார். நான் ம்... என்று இழுத்து ஒன்றுமில்லை என முடித்து, அவரைத் தாண்டிக் கொண்டு போய் அங்கே அவரிடம் பேசிக்கொண்டிருந்த பரிச்சயமான இன்னொரு அதிகாரிக்கு கைகொடுத்து விட்டு வெளியே வந்துவிட்டேன்."

"வடகிழக்கு மாகாணங்களிலிருந்து வரும் பழங்குடி மக்களுக்கு முக்கிய பொறுப்பு தருவதில்லையா உங்கள் மாநிலத்தில்?" பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த நான் கேட்டேன்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. எல்லாம் நாம் நடந்து கொள்வதிலிருக்கிறது. கை நீட்டத் தெரிந்தவனும், உயர் அதிகாரிக்கு சலாம் போடத் தெரிந்தவனும் வாழ்கிறான் இந்த உலகில். எனக்கு அப்படிச் செய்யத் தெரியாது. மனந் திறந்து சொல்கிறேன். நான் வாழ்க்கையை சிக்கலில்லாமல் நிம்மதியாக ஓட்ட விரும்புகிறேன். வரிந்து கட்டிக்கொண்டு, போட்டி போட்டு வேலை செய்வதில் எனக்கு விருப்பமில்லை. அதனால் இப்போதிருக்கும் நிலை போதும்."

நான் மௌனமாக இருந்தேன்.

"நீங்கள் மணிப்பூர் வந்திருக்கிறீர்களா?"

"இல்லை"

"எங்கள் மாநிலம் அது. இன்னும் மக்கள் கல்வியறிவின்றி, போதிய அடிப்படை வசதிகளின்றி வாழ்கிறார்கள். எங்கள் ஊரில் ஜெயித்து வந்த எம்.எல்.ஏ. ஒருத்தர். படிப்பறிவில்லாதவர். வாழ்நாளில் நகரத்துக்கே வந்திராதவர். தலைநகருக்கு வந்தவர் எல்லோரும் தொலைபேசியில் பேசுவதைக் கவனித்தவர் அவரும் தனது நண்பருக்கு தகவல் தெரிவிக்க வேண்டி, எழுந்து சென்று ரிசீவரை கையிலெடுத்து நம்பர் எதையும் சுழற்றாமல் 'நான் நாளைக்கு ஊருக்கு வந்து விடுவேன். அங்கு வந்து சந்திக்கிறேன்' என்று கூறி வைத்தார். கூட இருந்தவர் யாருக்குப் பேசினீர்கள் என்றதும், என் நண்பருக்கு என்றாராம். நண்பருக்கு தொலைபேசி இருக்கிறதா, நம்பர் என்ன என்று கேட்டதும், பேஸ்து அடித்தமாதிரி விழித்திருக்கிறார். பிறகு, கூட இருந்தவர் தொலைபேசி விஷயத்தை விளக்கினார். அப்படிப்பட்ட கிராமப் பகுதியிலிருந்து வந்தவன் நான். எனக்கு இது போதும்."

விட்டால் இன்னும் மணிக் கணக்கில் பேசுவார். ஆனால் எனக்கோ அறிக்கை தயார்செய்ய வேண்டிய நிர்பந்தம். ஆகையால் அவரிடம் வருத்தம் தெரிவித்து வழியனுப்பி கதவைத் தாழிட்டேன்.

அறிக்கைகளை தயார்செய்து முடிக்கும்போது நடுநிசியாகியிருந்தது. விளக்கை அணைத்து படுக்கையில் விழுந்தபோது எங்கே அந்த அரிய வகைப் பூ என்ற வினா முளைத்தது. ◆

# தமிழின் தொன்மை மறைக்கப்படுவதேன்

தமிழ்மொழி செவ்வை மொழியாக அறிவிக்கப்பட்டிருக்கும் அதே வேளையில், அதன் தொன்மை ஆயிரம் ஆண்டுகளுக்குட்பட்டதுதான் என தவறாகக் குறிக்கப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டித்துள்ளார் தமிழ் எழுத்தாளரும், வழக்கறிஞருமான சோதிப்பிரகாசம்.

அவர் மத்திய மாநில அரசுகளுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், தமிழ்மொழி 2500-3000 ஆண்டு தொன்மையுடையது என்றும், இதற்கு முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் இதர வரலாற்றறிஞர்கள் எழுதியுள்ள நூல்களே சாட்சியம் கூறும் என்றும் தெரிவித்துள்ளார்.

லத்தீன் மொழிக்கு இணையான தொன்மையுடைய தமிழ்மொழி, லத்தீனைப் போன்றல்லாது இன்றும் அழியாமல் வாழ்ந்து, வளர்ந்து வருகிறது. எனவே மத்திய அரசு தமிழ்மொழியின் தொன்மை பற்றிய தனது அறிவிப்பை மாற்றி உண்மை நிலையுடன் கூடிய அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

சோதிப்பிரகாசம் 'திரவிடர் வரலாறு' மற்றும் 'ஆரியர் வரலாறு' என்று இரண்டு வரலாற்று ஆய்வு நூல்கள் எழுதியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

# மக்கள் அறியாத அம்பேத்கர் 22

**இந்த தனித்தன்மை வாய்ந்த அறிவைப் பயன்படுத்தி பல உயிர்களை நடுக்கும் வழிகளை மட்டுமே இதுவரை மனித சமூகம் கண்டெடுத்துள்ளது. தன்னுடைய அறிவின் பலத்தால், மற்றவர்களை முட்டாளாக்கவே மனித சமூகம் இதுவரை முயன்று வருகிறது. தன் சிந்தனையில் உதிக்கும் அறிவு வயப்படும் கருத்துக்களை தன்னை உயர்ந்தவராகக் காட்டிக்கொள்ளவும், பிற உயிர்கள் தன் சுகத்துக்கு பணி ஆற்றவும் மட்டுமே இது வரை மனிதன் முயன்று வருகிறான்.**

## மதம் மற்றும் நெறி

மனிதன் பிற உயிர்களிடம் இருந்து மேம்பட்டு விளங்குவதற்கு அடிப்படைக் காரணம் அவனுடைய ஆறாவது அறிவு (rational sense) என உயிரியல் விஞ்ஞானி களால் அறியப்பட்டுள்ளது.

இந்த தனித்தன்மை வாய்ந்த அறிவைப் பயன் படுத்தி பல உயிர்களை நடுக்கும் வழிகளை மட்டுமே இதுவரை மனித சமூகம் கண்டெடுத்துள்ளது. தன்னுடைய அறிவின் பலத்தால், மற்றவர்களை முட்டாளாக்கவே மனித சமூகம் இதுவரை முயன்று வருகிறது. தன் சிந் தனையில் உதிக்கும் அறிவு வயப்படும் கருத்துக்களை தன்னை உயர்ந்தவராகக் காட்டிக்கொள்ளவும், பிற உயிர்கள் தன் சுகத்துக்கு பணி ஆற்றவும் மட்டுமே இது வரை மனிதன் முயன்று வருகிறான்.

இன்று தன்னை அறிவு ஜீவிகளாகக் காட்டிக் கொள்ளும் மனிதர்கள் யாவரும் இதற்கு தெளிந்த உதா ரணங்கள். ஒரு அறிவாற்றல் பொருந்தியவன் தன் னுடைய அந்த அறிவு என்னும் ஆற்றலை சக மனிதர் களை முட்டாளாக்கவே பயன்படுத்துகிறான்.

1. வெற்றிகரமான வியாபாரி
2. முதலாவதாக விளங்கும் நிறுவனத்தின் முதலாளி
3. சாதனை படைக்கும் முதன்மை வெற்றியாளன்

என உயர்ந்து காட்டப்படும் அனைத்தும் தன் சக மனிதர்களை தன்னுடைய ஆற்றலால் முட்டாளாக்கு வதில் வெற்றி கண்டவர்களின் வரிசையாகவே உள்ளது. இந்த வரிசை ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பொருந்தும். தனி மனித திரட்சியின் தலைமைக்கு மிகஅடிப்படைக் காரணம், தன்கீழ் திரளும் சமூகத்தின் திரட்சியை கட்டிப் போட்டு தன் பின் நிரந்தரமாக (!) நிலைத்து வைப்பதற் காக அவர் செய்யும் அறிவின் ஆற்றல் மாற்றங்கள் நம்மை இந்த கூற்றுக்கு உதாரணமாகக் கொள்ள வைக்கிறது.

போட்டி என்பதே அறிவின் வழியாகவும், போட் டியின் வெற்றி என்பதே அறிவின் இலக்கு என்பதாகவும் மனிதன் பல காலம் நினைத்து வந்திருக்கிறான். இந்தப் போட்டியில் வெற்றி பெறும் மனிதன் அதில் திருப்தி கொள்ளாது மீண்டும் மீண்டும் உச்சத்தில் இருந்து உயர் உச்சத்தை அடையவும், அங்கு எழும் போட்டிகளில் தன் மனம் தொய்வு பெறும்போது சோர்ந்து விடுதலும், அந்த சோர்வில் புதிய வழிகள் தோன்றியதாக கற்பனை பல செய்துகொண்டும் புதிய வழிகளில் சக மனிதனை ஏமாற் றும் யதார்த்த முறைமையே இன்றைக்கு வெற்றி யாகக் காணப்படுகிறது.

இடைக்கால வெற்றியை ஈட்டிய மனிதன் மகிழ்ச்சிக் களிப்பில் தனக்கு வெற்றியைத் தந்த 'இறை வனுக்கு' நன்றி கூறுவதும், தோல்வியை அதாவது இந்த இடைக்கால வெற்றியை தவறவிட்டவன் 'இறைவனி டம்' இறைஞ்சுதல் மூலமாக தனக்கு அடுத்த வாய்ப்பு என்ற மன அமைதி பெறுகிறான். மனிதனின் இந்த அறி வுப் போராட்டம் மனித உயிரின் ஒவ்வொரு சில அசை விலும் மிகத் தெளிவாகத் தென்படுகிறது.

இந்த வெற்றியடைந்த மனிதர்களின் வரிசை யிலேயே நாம் இன்று மதத்தைப் படைத்தவர்களையும், மத போதகர்களையும், அரசியல், சமூக ரீதியில் வெற்றி யடைந்தவர்களையும் கணக்கிட வேண்டியுள்ளது.

ஆனால், வெகு சில மனிதர்கள் மட்டும் தங்களின் அறிவை, தங்களின் சக மனிதர்களின் அறிவை தூண்டி விடவும், அவர்களின் பயன்பாட்டிற்கும் அர்ப்பணித் துள்ளனர். இந்த வெகுசில மனிதர்களில் வெகுசில மனிதர்கள் மட்டும்தான் மனித சமூகத்தின் விடுதலை மற்றும் மனித சமூகத்தின் தேவையை சரியாக உணர்ந்து வைத்திருந்திருந்தனர். அந்த அபூர்வமான மனிதர்கள் இந்த சமூகம் வாழ வெளிப்படுத்திய கருத்துக்கள் இன்று ஒட்டுமொத்த சமூக அசைவின் கருத்தியலாக விளங்கிக் கொண்டுள்ளது. இந்த கருத்தியல் தளங்களில் இந்த மண்ணின் அசைவு, மக்களின் வாழ்வியல் முறை, மனிதன் தன் சக மனிதனிடம் அணுகுமுறை ஆகியவை வரை யறுக்கப்படுகின்றன. அந்த வரையறையில் பல முரண் கள், சுய தேவைகள், உள்நோக்கங்கள் இருந்தாலும் இந்த கருத்தியல் தளங்கள் தன் அனைத்து செயல்பாடு களையும் நிர்வகிக்கின்றன. இந்த நிர்வாகத்தில் கருத்தியல் ஆட்சியாளர்கள் மட்டும்தான் முதன்மை பதவியிலும், அந்தக் கருத்தியலை எடுத்துச் செல்லும் அதிகாரத்தைக் கொண்டவர்களாகவும் உள்ளனர்.

இத்தகைய அர்ப்பணிப்பு மிகுந்த மனிதர்களில் பூமி அறிந்து வரலாறாய் பதிந்து போனவர்களில் முதன்மை மனிதனாய் நமக்குத் தெரிவது புத்தர் என்ற மாமனிதன். இவர் உலகம் முழுவதிலும் தன்னுடைய கருத்து உக்ரத்தால் ஒரு வெப்பத்தை ஏற்படுத்தினார். அந்த வெப்பம் மனிதனை மரணக் குளிரிலிருந்து சிக்காமல் வாழ்வதைப் பற்றிய 'நிம்மதி மிகுந்த வாழ்க்கை'யை மையமாகக் கொண்ட வாழ்க்கை நெறிகளை ஆதாரமாகக் கொண்டிருந்தது. மனிதனின் 'மரணம்' அவனுடைய உடலின் கூடு தன்னுடைய உயிரை தவிர்தலை மட்டுமன்றி, உயிர் விலகிய பின்னும் அந்த மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட கருத்தியல் தாக்கத்தை சீர்பிப்பது பற்றியதும் ஆகும் என்பது புத்தரின் நெறி. மரணம் என்பது உடற்கூட்டை தழுவி வாழும் உயிர் அதன் இருப்பிடத்தை விட்டு விலகுவது தான் என்ற அவருக்கு முன் வாழ்ந்த கபிலர் உருவாக் கியிருந்த சாக்கியத்தை புத்தர் மறுதலித்தார்.

**ஒரு மனிதனின் கருத்து**

- **பகுத்து ஆயும் அறிவியல் சிந்தனைக்கு தடை விதிப்பதாக இருந்தால்**
- **கற்பனையான மனித வாழ்க்கைக்கு பொறுத்தமற்றதாய்**
- **தனக்கும், தன் சக மனிதனுக்கும் பயன்படாத கருத்துக்களில் நேரம் விரயம் செய்வதை புத்தர் தடைவிதித்தார்.**

உலகத்தில் எந்த நெறியாளனும் இரண்டு படி நிலை களை தன் வாழ்க்கையில் கூறுகளாகக் கொண்டதில்லை. அந்த தனித்தன்மை படைத்த ஒரே நெறியாளனாக, சித் தார்த்தன் என்னும் அறிவு தாகம் கொண்ட இளைஞன், அறிவின் தெளிவை உணர்ந்த புத்தராக இரண்டு பரு வத்தை அடைந்த ஒரே மனிதனாக சுதாகர் என்னும் உயர்ந்த நிலையை புத்தர் மட்டுமே பிற மத நெறியாளர் களை ஒப்பிடும்போது பெறுகிறார். இந்த தன்மையை ஒரு விஞ்ஞானியுடன் நாம் சாதாரணமாக ஒப்பிடலாம். அறிவு தாகம் மேலிட்ட மனிதன் நீண்ட நாள் ஆராய்ச் சிக்குப் பிறகு புதிய அறிவியல் கோட்பாட்டை வெகுமக் களுக்காக படைக்கிறான். தன் தத்துவம் வெகுமக்கள் பயன்பாட்டை மையப்படுத்தி, தன் வாழ்நாள் முழுவதும் உழைக்கிறார். தன்னுடைய அறிவியல் கண்டுபிடிப்பு அனைத்து மக்களுக்கும் பயன்பட வேண்டும் என்பதில் மிகவும் தெளிவாக உழைக்கிறார். அவரின் தத்துவங் களை உலக நாடுகள் தங்கள் வாழ்வியல் நெறியாக ஒழுக ஆரம்பிக்கின்றன. இதில், இந்த தத்துவத்தைத் தந்த அறிவாளி தன் அறிவியல் கண்டுபிடிப்பிற்கு முன் என்ன வாக இருந்தான்? அவனுடைய அறிவியல் கண்டுபிடிப்பு எப்படி நிகழ்ந்தது? என்பதைப் பற்றி நாம் பெரியதாக கவனம் கொள்வதில்லை. மாறாக அவருடைய ஆய்வின் முடிவை ஆய்வு செய்கிறோம். இந்த மறு ஆய்வை எந்த ஒரு மதவாதியும் அனுமதிப்பதில்லை. ஆனால் புத்தர் இந்த மறு ஆய்வுக்காக சங்கம் என்ற அமைப்பைக் கட்டினார். உலகின் எந்த மதவாதியும், நெறியாளனும் செய்ய முன் வராத ஜனநாயகக் கடமையை புத்தர் செய்தார். அதனால்தான் பவுத்தம் தழைக்கும் பகுதிகள் ஜனநாயக அமைப்புகளாக உருவெடுக்கின்றன. ஜனநாய கம் மதிக்கப்படாத பகுதிகள் பவுத்த சிந்தனையை அங் கீகரிக்கும் தளங்களாக அமைவதில்லை.

●●

**மத சார்பற்ற அரசுகள்,**
**கம்யூனிச அரசுகள்**
**பவுத்த கருத்துக்களை**
**பெரும் அளவு ஏற்கின்றன.**
**பவுத்த கருத்துக்கள்**
**அந்த அமைப்புகளுக்கு**
**ஏற்புடையவையாகக்**
**காணப்படுகின்றன.**
**இந்த நிலையே பவுத்தத்தின்**
**ஜனநாயக அணுகுமுறைக்கு**
**உதாரணமாகும்.**

●●

மத சார்பற்ற அரசுகள், கம்யூனிச அரசுகள் பவுத்த கருத்துக்களை பெரும் அளவு ஏற்கின்றன. பவுத்த கருத் துக்கள் அந்த அமைப்புகளுக்கு ஏற்புடையவையாகக் காணப்படுகின்றன. இந்த நிலையே பவுத்தத்தின் ஜன நாயக அணுகுமுறைக்கு உதாரணமாகும்.

நீங்கள் காதுகளால் கேட்டவைகள் எல்லாம் சரி யானவை என்று முடிவிற்கு வந்து விடாதீர்கள்; உங்க ளிடம் தலைமுறை தலைமுறையாக தரப்படும் கருத்து கள் எல்லாம் சரியானவை என்று நம்பி விடாதீர்கள்; பொதுவாக மீண்டும் மீண்டும் சொல்லப்படும் கருத்துக் களை எல்லாம் உண்மை என்று முடிவுகட்டி விடாதீர் கள்; எழுதி வைக்கப்பட்டிருப்பதெல்லாம் உண்மை; விவர மாக உள்ளது; தொடர்ச்சியாக உள்ளது; பார்வைக்கு அவ்வாறு தெரிகிறது; ஒத்துக்கொள்ளும் வகை யில் உள்ளது; நல்லதைப்போல் தோற்றமளிக்கிறது; என்னி னும் மேலானவன் சொன்னான்; துறவி ஒருவர் சொன் னார் - என்பதற்காக ஆராயாமல் நம்பி விடாதீர்கள்.

மாற்றாக உங்கள் பகுத்தறிவைப் பயன்படுத் துங்கள். வெறுப்பு, பேராசை, சோர்வு, வன்மம் கலந்த வெறி ஆகியன உருவாக்காமல் உள்ளதா என ஆராயுங் கள். இந்த தத்துவங்கள் மனிதன் தன் சக மனிதனை வெறுப்பு கொண்டு அணுகாதிருத்தல், கொலை செய்யா திருத்தல், அவனுக்கு தடை செய்யப்பட்டதை அடையா திருத்தல், பிறன்மனை விழையா திருத்தல், பொய் கூறாமல் இருத்தல் ஆகியனவற்றை உள்ளடக்கியுள் ளதா? என ஆராயுங்கள். தன் சக உயிரினங்களிடம் இந்த பிழையான உணர்வுகள் அண்டாமல் உள்ளதா? எனவும் ஆராயுங்கள்.

இம்மூன்று பரிசோதனைகளுக்கும் அது உகந்தது என்றால் நீங்கள் அவைகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றார் புத்தர். புத்தரின் சங்கம் என்ற அமைப்பு இதை மையமாகக்கொண்டு விளங்கியது.

ஒவ்வொரு மனிதனும் சிறந்த உறுதிமொழிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை புத்தர் வலியுறுத்து கிறார். அவையாவன?

1. என் வாழ்க்கை முழுவதும் என்னுடைய பெற்றோர்களை நான் பாதுகாப்பேன்.

2. என்னுடைய சமூகத்தின் தலைவனை நான் மதித்து போற்றுவேன்.

இந்த இரண்டு உறுதிமொழிகள் மனிதன் கூட்டமாய் வாழ்வதற்கு அருகதை உள்ளவனாக மாற்றம் செய்வதோடு, அவன் அங்கு சிறந்து விளங்க (3) இனிய வார்த்தைகளை மேற்கொள்வேன்; (4) யாரையும் தீமைபட பேசமாட்டேன்; (5) சுயத் தேவைகளுக்கு பிர தானம் தரமாட்டேன்; பொதுத் தூய்மை அனுசரித்து வாழ்தல்; (6) தனக்கு கிடைத்த வாய்ப்பு, அறிவு ஆகியனவற்றை பிற மனிதர்களுடன் பகிர்ந்து கொண்டு வாழ்வேன்; (7) என் வாழ்க்கை முழுவதும் சினம் இல்லாமல் வாழ முயற்சிப் பேன்; சினம் மேலிட்டால் நான் அதை உடனே கண்டறிவேன் என்ற ஏழு உறுதி மொழிகளை மனிதன் கூட்டு வாழ்க்கை வாழ தேவை யானவைகளாக புத்தர் வரையறை செய்கிறார். 2500 ஆண்டுகளுக்கு முந்தைய வரையறை இன்றும் பொருத் தமாக உள்ளது பவுத்தத்தின் சிறப்பு. இதில் கவனம் செலுத்தாதவர்கள் ஒழுக்கத்தில் பிழை, மனதில் பிழை, பார்வையில் பிழை உடையவர்களாகத்தான் வாழ நேரிடும் என பவுத்தம் அறுதியிடுகிறது.

**ஒழுக்கத்தில் பிழை:**

1. காரணம் இன்றி கொலை செய்வது;
2. திருடுவது;
3. பயனற்ற வகையில் புலன் இன்பம் நோக்கி தரம் தாழ்வது.;
4. பொய் கூறுவது;
5. மதி மயங்கச் செய்யும் வகையில் மது உண்பது.

மனதில் பிழை:

1. முறையற்ற வகைகளில் பிறருக்கு உரிமையான வற்றை பெற விழைவது;
2. நெறியற்ற வகையில் பிறருக்கு இன்னல் தர முயற்சிப்பது.

**பார்வையில் பிழை:**

1. தானம் அளிப்பதில் பயன் இல்லை என நினைப்பது:
2. தியாகம் செய்வதில் பயன் இல்லை என நினைப்பது;
3. நன்மை தீமைகளில் நம்பிக்கையற்று இருப்பது;
4. இந்த உலகம் பொய்யானது என கூறுவது;
5. தனக்கு தாய், தந்தை இல்லை என்பது;
6. நல்லவன்-தீயவன் ஆகியோர் இருத்தலை உணர மறுப்பது;
7. ஆராயும் அறிவை நம்ப மறுப்பது

ஆகியவை என பவுத்தம் வரையறை செய்கிறது.

# இன்னொரு விடியல்

**வீ. ஏழுமலை**

எங்களின் அடிமை விலங்கை
உடைத்தெறிந்த புரட்சியின் புதல்வனே...

எச்சில் சாராயத்திற்கும்
கடித்து துப்பிய எலும்புத் துண்டுகளுக்கும்
வாலாட்டும் நாய்களாய்
உன் சமூகம்... ,

உன்னைக் காட்டிக் கொடுத்தும்
எங்களை கூட்டிக் கொடுத்தும்
உனது கொள்கையைக் கொன்று
எங்கள் இரத்தத்தில்
குளித்தும் குடித்தும்
கும்மாளமிடும் சுயநலத் தலைவர்கள்...

இன்னும்
எத்தனை நாளைக்குத்தான்
எங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டு
உணர்ச்சிகளை
கொலை செய்துக் கொள்வது?

வெண்மணி படுகொலைக்கு
பழிக்கு பழிதீர்க்க
இன்னும்
எத்தனை யுகங்கள்தான்
காத்திருப்பது.

எத்தனை முறைதான்
தாமிரபரணிக்கு
தப்பி பிழைப்பது?

பிறக்கும்போதே
தலைவனாக பிறக்கும்
உன் சமூகத்தில்
இன்னொரு முறை
நீங்கள் ஏன் பிறக்கக் கூடாது?

◆

# சோளகர் தொட்டி

## ஒரு வாசகனின் பார்வையில்

**தங்களுக்கு சிறிதேனும் தொடர்பும், சம்பந்தமும் இல்லாத வனக் கொள்ளைக்காரனுக்கு உதவி செய்ததாக கூறி, ஒரு பாவமும் அறியாத அப்பாவி மக்களை சுட்டுக் கொல்வது, கர்ப்பிணிப் பெண்ணை கும்பலாகச் சேர்ந்து கற்பழிப்பது, கணவன் முன்பு மனைவியைச் சூறையாடுவது, தந்தையும் மகனும் ஒருவருக்கொருவர் செருப்பால் அடித்துக்கொள்ளச் செய்வது, இன்னும் என்னென்ன அக்கிரமங்கள் உண்டோ அத்தனையும்...**

மு. ஹரிகிருஷ்ணன்

உருவ அமைதி உள்ளடக்கம், வெளியீட்டு உத்தி என நாவலுக்கே உரிய கலாச்சாரங்கள் கட்டுக்களை உடைத்து யாதொரு ஆடம்பர பந்தாக்கள் இல்லாமல் மிகவும் எளிமையாக வெளிவந்திருக்கிறது ச. பாலமுருகனின் சோளகர் தொட்டி. நெஞ்சத்தில் கொந்தளிக்கும் உணர்ச்சிகள் எந்த விதத்தில் வெளிப்படுத்தப்பட்டாலும் சத்தியம் படிப்பவரையோ, கேட்பவரையோ உள்ளம் கனக்கச் செய்யும் என்பது கண்கூடு.

களப்பணி செய்து பாலமுருகன் படைத்துள்ள இந்நாவல் பல உண்மைச் சம்பவங்களை உள்ளடக்கியிருக்கிறது. பொதுவாக இந்நாவல் இருபெரும் கூறுகளாகப் பிரித்து எழுதப்பட்டிருக்கிறது.

### முதல் பகுதியில்

எழில் கொஞ்சும் இயற்கையன்னை. அவள் மடிதுஞ்சும் வனதேவியின் மைந்தர்கள். வனமே அவர்களின் வாழ் வாதாரம். தேவைக்கு அப்பால் எதையும் தேடுவதில்லை, தீண்டுவதில்லை.

தொன்மையும், பழமையும் வாய்ந்த பழங்குடி இனம், அவர்களுக்கான கட்டமைப்பு சடங்குகள், சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை மண் வாசனையோடு மிகையின்றி பதிவு செய்துள்ளார் ஆசிரியர். நாவலின் ஆரம்பமே அம்மக்களின் மனப்பாங்கை அருமையாக படம் பிடித்திருக்கிறது.

உழைப்பில் விளைந்த தானியம் குத்தாரியாக குவிக்கப்பட்டுள்ளது. அதற்கு காவலாக நாயகன், அவனருகில் நாயகி. கூட்டத்தார் அனைவரும் களைப்பின் மிகுதியால் அயர்ந்து தூங்குகிறார்கள். அகோரப் பசியால் அவர்கள் தொட்டிக்கு ஆகாரம் தேடி வருகிறதொரு யானைக் கூட்டம். அரவங்கேட்டு கண் விழிக்கும் நாயகனும் அவனது கூட்டத்தாரும் தகரத்தை தட்டி ஓசையெழுப்பியும் வெடிகள் வெடித்தும் அந்த யானைக் கூட்டத்தை அப்புறப்படுத்துகிறார்கள்.

“அந்த கொம்பன் யானையை சென்ற வருடம் கேர்மாளம் பக்கம் பார்த்தேன். இந்த வருடம் அது அந்த பாங்காட்டில் திரிய வேண்டியது, நம்ம பாங்காட்டு ஓரம் வந்துவிட்டது. அதற்கு மூங்கில் குருத்து கிடைத்திருந்தால் ஏன் இங்கு வந்து நமக்கு இடைஞ்சல் தரப் போவுது. அதோடப் பசிக்கி ஆகாரமில்லை. மூங்கில் கூப்பு போட்டு வெட்டி லாரி லாரியா கீழ்நாட்டுக்குப் போறது இல்லாமலிருந்தா இங்க வந்திருக்கவே வந்திருக்காது. அது சத்திய வாக்குள்ளதாச்சே.”

யானையின் வருகைக்கு சுயச்சமாதானம் சொல்லிக் கொள்ளும் சோளகர் தொட்டி மக்கள் மிருக உள்ளக் கிடங்கையும் மிக இயல்பாகவே உணர்ந்திருந்திருக்கிறார்கள்.

தொடரும் அத்தியாயங்களில் கோல்காரன் சென்நெஞ்சா, கொத்தல்லி, பேதன் போன்ற தொட்டியின் மூத்த பழங்குடி மக்கள், சிக்குமாதா, சிவண்ணா, கரியன், புட்டன் போன்ற இளைய தலைமுறையினர், பேதன் மனைவி ஜோகம்மாள், அவளது மருமகளும், சிவண்ணாவின் மனைவியுமான மாதி, சென்நெஞ்சாவின் மருமகள் கெம்பம்மா, பாத்திரங்கள் உயிர்ப்புடன் உலா வருகிறார்கள். கடலையொத்த அவர்கள் உள்ளம், அதில் ஊடாடும் அவர்தம் சுதந்திர உணர்ச்சி, சுயத்தை இழக்காத தன்மான உணர்ச்சி, துன்பக்காலத்தில் ஒருவருக்கொருவர் தோள்கொடுக்கும் சகோதர உணர்ச்சி, வனத்தை தன் தாயாய் பாவிக்கும் தாய்ப்பாசம் இவற்றையெல்லாம் பிரதிபலிக்கும் ஒவ்வொரு சமூக நிகழ்வையும பாலமுருகன் பதிவு செய்துள்ள விதம், படிக்கும்போது மனம் நெகிழ்ந்து பேலித்துப் போகிறது.

ஒரு நாள் வேட்டை நாய்களுக்கு தப்பித்த மான் ஒன்று சிவண்ணாவின் கைகளுக்கு அகப்பட, அன்றைக்கு தொட்டி மக்களுக்கு விருந்து. விருந்துண்டாலும் தொட்டித் தலைவன் கொத்தல்லிக்கு வேதனை. தம்மினத் தொழிலாம் வேட்டைத் தொழில் நசிந்து நாசமாகிவிட்டதையெண்ணி உள்ளார்ந்த வருத்தம். அரசுடைமையாக்கப்பட்ட வனங்கள் வன மக்களின் கைகளை விட்டு பறிபோய் வெகுதூரத்தில்...

கோல்காரன் சென்நெஞ்சாவுக்கு இரு மக்கள். மூத்தவன் சிக்குமாதா. இளையவன் கரியன். சிக்குமாதா ஒரு சுறுசுறுப்பான வேட்டைக்காரன். வன வேடர்களுக்கே உள்ள துணிச்சலும் ஆண்மையும் ஒருங்கே அமையப் பெற்றவன். ஒருமுறை புதரில் கரையான் புற்றை நோண்டிக்கொண்டிருந்த இரண்டு கரடிகளில்

ஒன்றை சுட்டு வீழ்த்தி ஒற்றை ஆளாய் முதுகில் சுமந்து தொட்டிக்கு வருகிறான். கொத்தல்லி முதலான தொட்டி மக்களும், பக்கத்து தொட்டி மக்களும் அவனது வீரத்தை மெச்சி பாராட்டுகின்றனர். ஆனால் சிக்குமாதாவின் மனைவி கெம்பம்மாவிற்கு "வனம் எல்லா நேரமும் வேட்டைக்காரனுக்குச் சாதகமாகவே இருக்காது. அதனை வெறுமே வேட்டைக் களமாக்கி கோபமுட்டக் கூடாது" என வாட்டம்.

தொட்டிக்குப் பகிர்ந்து கொடுத்தது போக மீதி கரடி மாமிசத்தை உப்புக்கண்டமிட்டு மூங்கில் கம்பில் கட்டி வெயிலில் தோரணமாய் காய வைக்கிறான். அதுவே அவனுக்கு வினையாய் வந்து விடிகிறது. கரடி வேட்டைக்கு ஐந்தாம் நாள் வனத்தின் கங்காணி அடையாளம் காட்ட வனக் காவலர்கள் சிக்குமாதாவை கைது செய்கின்றனர். அவர்களில் ஒருவன் சிக்குமாதாவை கன்னத்தில் அறைய சிக்குமாதா அவன் நெஞ்சைப் பிடித்து கீழே தள்ள வன்மத்தில் காவலர்கள் சிக்குமாதாவை நையப் புடைக்கின்றனர். அத்துடன் நெய்த்தாலபுரம் வன பங்களாவில் சிறை வைக்கப்படுகிறான் சிக்குமாதா.

சிக்குமாதா கைதானது தம்மினத்திற்கே இழிவு என நொந்து வாட்டமுற்ற சென்நெஞ்சா தன் மகனை ஜாமீனில் எடுக்க தொட்டி ஆட்களுடன் குரும்பூர் மணியக்காரன் மாதப்பனிடம் முறையிட அவன் தன் உதவியாளனை அவர்களுடன் அனுப்பி வைக்கிறான். அங்கே வனத்துறை அதிகாரி இலஞ்சமாக ஆயிரம் ரூபாய் கேட்க, துரையன் பேரம் பேசி அறு நூறு ரூபாய் கொடுத்து சிக்குமாதாவை வெளியில் கொண்டு வருகிறான். உடலெங்கும் ரணப்பட்ட சிக்குமாதாவை தொட்டி மக்கள் மூங்கில் தொட்டிலில் கிடத்தி தொட்டிக்கு எடுத்துச் செல்கிறார்கள். தொட்டி மக்கள் வழியெங்கும் ராஜு"வின் உதவியை பாராட்டுகின்றனர். அவன் ஈட்டுத் தொகையாக கொடுத்த ஐநூறு ரூபாயை அடைக்கும் வழி யெண்ணி கொத்தல்லி மனம் வேதனைப்படுகிறது. அறுவடைக் காலத்தில் ராகியாகவோ அல்லது பணமாகவோ கொடுத்து விடலாம் என தொட்டி மக்கள் கூற சற்றே ஆறுதலடைகிறான்.

அறுவடைக்கு வழியின்றி வானம் பொய்க்க ஈட்டுத் தொகையின் வட்டி குட்டி போடுகிறது. தொட்டி மக்கள் பஞ்சம் பிழைக்க கர்நாடகாவிற்கு மிளகாய் பொறுக்க செல்கின்றனர். ஆனாலும் பஞ்சம் விடியவில்லை. பணத்தை குறித்த காலத்தில் திருப்பித் தர கைகூடாமல் சென்நெஞ்சாவின் மகன் கரியனை நாட்டுப்புற கவுண்டர்களின் பண்ணைகளில் அடிமைக் கூலியாக வைக்கலாம் என கெம்பம்மாவின் மாமன் சொல்ல சென் நெஞ்சா துடித்து வேதனைப்படுகிறான். இரவில் உறக்கமின்றி தவிக்கிறான். அருகில் படுத்திருக்கும் மகனின் பாதங்களை வருடிவிட்டு கண்ணீர் உகுக்கிறான் "சோளகனுக்குச் சுதந்திரத்தைத் தவிர வேறு என்னடா பெரிய சொத்து" என கலங்குகிறான். ஒருநாள் சென்நெஞ்சா நினைத்தபடியே அவன் நிலத்தை ராஜு"வின் குடும்பம் ஆக்கிரமிப்பு செய்துகொள்ள தொட்டி மக்கள் பெருத்த அதிர்ச்சிக்குள்ளாகின்றனர். போலிசிடம் பிடித்துக் கொடுப்பதாக மணியக்காரனும் சேர்ந்து மிரட்ட பணத்தை கொடுத்துவிட்டு நிலத்தை மீட்டுக் கொள்வதாக சென்நெஞ்சா அந்த பிரச்சினையை தற்காலிகமாக தீர்க்கிறான்.

சென்நெஞ்நா நிலம் பறிபோன இரவு பெய்யும் மழையில் தொட்டி நிறைந்து வழிந்தோடுகிறது. சொன்ன வாக்கு மீறி ராஜு" சென்நெஞ்சாவின் நிலத்தை உழவு ஓட்டுகிறான். பட்ட கடனைத் தீர்க்க வழியின்றி வாய் திறக்கவொண்ணாமல் உறைந்து போகிறான் சென் நெஞ்சா. நண்பனின் நெஞ்சக் குமுறலில் பேதனும் மனம் வாடுகிறான். சென்நெஞ்சாவின் மகன் கரியனை அழைத்து "இதுவும் உன் பூமிதான். வா, சேர்ந்து விதைக்கலாம், சேர்ந்தே சாப்பிடலாம். இதுக்காக ஏன் கலங்குறே. தைரியமாக இரு!" என அவனையும் உழவு ஓட்ட பணிக்கிறான்.

படிப்பறிவற்ற அந்த வன மக்களின் பரந்த மனப்பான்மை, பாசாங்கற்ற அன்பு, பிரதிபலன் எதிர்பாராமல் உதவும் உள்ளம் இருப்பதை பகிர்ந்துண்ணும் பொதுமைச் சித்தம் ஆகியவற்றை உணர்ந்து, உள்வாங்கி உள்ளது உள்ளபடியே ஒரு நேரிடைக் காட்சிபோல் நம்முன் வைக்கிறார் நாவலாசிரியர்.

வனக்காவலர்களின் கொடுமைக்கு ஆளாகி தொட்டியில் யாரிடமும் சரியாகப் பேசாமல் பைத்தியம்போல இருந்து வந்த சிக்குமாதா மெல்ல மெல்ல சகஜ நிலைக்கு வந்தாலும் அவனது போக்கு இயல்பின்றி மாறிவிடுகிறது. தொட்டியின் எதிரி ராஜு"வுடன் சேர்ந்துகொண்டு சந்தன மரம் வெட்டுகிறான். நல்ல சம்பாதனையுடன் ஒரு முறை தன் தந்தையைச் சந்தித்து கஞ்சா கதிர்களை பாசமாக கொடுக்கிறான். அவனது மாறுபட்ட போக்கை யெண்ணி உள்ளம் குமைந்து சென்நெஞ்சா மகனை வெறுத்துப் பேசுகிறான்.

அதற்கு சிக்குமாதா "இந்த தொட்டியிலுள்ளவர்களைப்போல நானும் முட்டாளாயிருந்தேன். வாழ வழி காட்டியவன் துரையன். ஏழு நூறு ரூபாய்க்கு முப்பது குடும்பம் ஏற்பாடு செய்ய முடியவில்லைன்னு மணியகாரனிடம் கேட்டீங்களே... உங்களை மாதிரி நானும் முட்டாளாயிருந்தேன். இந்த வனத்திலிருக்கற ஒரு சின்ன சந்தன மரத்த வெட்டிக் கொடுத்தா ஆயிரம் ரூபா கெடச்சிருக்கும். அதுக்குப் போயி அந்த மணியக்காரனிடம் கையேந்தினா நம்மை முட்டாளுன்னு அவன் நினைக்க மாட்டான்? உங்களுக்கு எத்தனை பணம் வேணும்... நான் ஏற்பாடு செய்யறேன். நான் சொல்ற மாதிரி கேளுங்க" என தொட்டி மக்களின் ஏமாந்த பிழைப்பைச் சாடுகிறான் சிக்குமாதா.

**படிப்பறிவற்ற அந்த வன மக்களின் பரந்த மனப்பான்மை, பாசாங்கற்ற அன்பு, பிரதிபலன் எதிர்பாராமல் உதவும் உள்ளம் இருப்பதை பகிர்ந்துண்ணும் பொதுமைச் சித்தம் ஆகியவற்றை ஒரு நேரிடைக் காட்சிபோல் நம்முன் வைக்கிறார் நாவலாசிரியர்.**

"இவன் பேசியதை கேட்டாயரி, மரத்தை அறுத்து பிழைங்கன்னு சொல்றான். சோளகனுக்கு இது அடுக்குமா? நாம சந்தன பொட்டுக்குக்கூட இதுவரைக்கும் ஒரு கிளையைக்கூட ஒடித்ததில்லை. இவன் காட்டை அழியாட்டம் செய்யறது அப்படின்னு சொல்றான். இந்த மாதிரி பிழைக்கறதுக்கு செத்து குழிக்குள்ளே போயிடலாம்" என கண்டித்து பதிலுறுக்கிறான் சென்நெஞ்சா.

வறுமையின் இறுகிய பிடிக்குள் சிக்கித் துவண்ட போதும், பணம் காய்ச்சி மரமான சந்தன மரம் முதலான வனப்பொருட்களை மருந்துக்காகக்கூட அம்மக்கள் தீண்டியதில்லை. வாழ்க்கை சின்னாபின்னமாகிச் சிதைந்தாலும் ஒருபோதும் அம்மக்கள் வனத்திற்கு ஊறு விளைவிக்கவில்லை.

இந்நிலையில் சிக்குமாதா எதிர்பாரா வண்ணம் வேட்டைக்கு சென்றவிடத்தில் யானையால் தாக்குண்டு அகால மரணமடைகிறான். அவன் மனைவி தனிமையில் வாடினாலும் மகனை தன் கை உழைப்பினாலேயே வளர்க்க விரும்புகிறாள். சென்நெஞ்சா மகன் இறந்த வேதனையில் மருமகளிடம் சற்று பாராமுகமாக இருக்கிறான். இளைய மகன் கரியனுக்கு திருமணம் செய்யவும் முற்படுகிறான். மகன்மீது வாஞ்சையும் தன் மீது பாசமும் வைத்துள்ள கொழுந்தன் கரியனை மணக்க கெம்பம்மா நாட்டம் கொள்கிறாள். அவள் விருப்பத்தை தொட்டி தலைவன் கொத்தல்லி முன்பாக முறையிடுகிறாள்.

கணவனை இழந்த விதவை கைக்குழந்தையுடன் தான் மறுமணம் செய்து கொள்வதாகவும், அதுவும் மனதிற்கிசைந்தவனை மணப்பேன் என்று வாதிடும் போது அப்பெண்ணின் மனத்திட்பம், துணிவு எண்ணி வியக்காமலிருக்க முடியவில்லை. கெம்பம்மா அசல் பெண்ணுரிமை பேசும், புத்தாயிரத்தின் புதுமைக் கலாச்சாரத்தின் முன்னோடி. நாவலாசிரியரின் மிகச் சிறந்த கதாபாத்திரமாக கெம்பம்மா பரிணமிக்கிறாள்.

தொடரும் நிகழ்வுகள் தொட்டியின் அழிவுக்கு அடிகோலுகின்றன. மணியக்காரன் பேதனின் நிலத்தையும், சென்நெஞ்சாவின் நிலத்தையும் முழுதும் அபகரித்த ராஜுவுக்கு அரசு பதிவு செய்து வைக்கிறான்.

அரசு தரப்பில் வனக் கொள்ளைக்காரன் வீரப்பனைத் தேடும் பணி தீவிரமாகிறது. வனத்ினுள் சோளகர் தொட்டி மக்களின் போக்குவரத்து பூரணமாக தடை செய்யப்படுகிறது. பேதனும், சென்நெஞ்சாவும் சீர் காட்டை இழந்த வேதனையில் உயிர் துறக்கிறார்கள்.

வீரப்பனை தேடிப்பிடிக்க கர்நாடக போலிஸ் அதிகாரி ஒசியூரப்பா சோளகர் தொட்டியடுத்த வனத்தில் முகாமிடுகிறான். இரவுதோறும் போலிஸ் முகாமிற்கு பாதுகாப்பாக பாரா நடக்கச் சொல்லி தொட்டி மக்களை அடித்து உதைத்து பலவந்தப்படுத்துகிறான்.

கெம்பம்மாவின் உடல்நலக் குறைவால் பாரா நடக்க போகாத கரியனை உயிர்நிலையில் தாக்கி அவனை நிரந்தர நோயாளி ஆக்குகிறான் ஒசியூரப்பா. சிவண்ணாவின் தீக்கங்காணி வேலை பறிபோகிறது.

## நாவலின் இரண்டாம் பாகத்தில்

காட்டுப் புலியை வேட்டையாட நரிப்படையொன்றை அரசு நிர்மாணிக்க, அவை வேட்டையாட கையாலாகாமல் வெறியெடுத்து மலம் தின்னும் நேர்த்தியை வெகு அற்புதமாக பதிவு செய்திருக்கிறார் பாலமுருகன்.

அதிரடிப்படையின் மூலம் சோளகர் தொட்டி மக்கள் உட்பட வனவாழ் பழங்குடியினர் அடைந்த வன்கொடுமைகள் வார்த்தைகளில் அடங்காது. ஒவ்வொன்றையும் படிக்கும்போது நம் இதயத்தில் இடி இறங்குகிறது.

கங்காணியாக வேலை பார்த்த சிவண்ணா தொட்டி மக்களின் நலவாழ்வில் அக்கறைகொண்டு போலிசின் தேடுதல் வேட்டைக்கு வழிகாட்டியாகச் செல்கிறான். போலிஸ் செய்யும் அக்கிரமங்கள், அராஜகங்களினால் மனம் கொதித்து முகாமிலிருந்து தப்பித்து ஓடி மறைகிறான். வன்மம் கொண்ட போலிஸ் வீரப்பனுக்கு அவன் உணவுப் பொருட்கள், ஆயுதங்கள் தந்துதவியதாக பொய்க் கேசு ஜோடித்து கைது செய்வதற்கு தீவிரமாக தேடுகிறது. சிவண்ணாவின் மனைவி மாதியையும், மகள் சித்தியையும் கற்பைச் சூறையாடுவதுடன் பிறப்புறுப்பில் மின்சாரம் செலுத்தி மனித குலம் தலை குனியும் இழிச் செயலைப் புரிகின்றனர். வீரப்பனுக்கு முந்தி விரித்ததாக அவதூறு வேறு!

இதுமட்டுமல்ல. தங்களுக்கு சிறிதேனும் தொடர்பும், சம்பந்தமும் இல்லாத வனக் கொள்ளைக்காரனுக்கு உதவி செய்ததாக ஒரு பாவமும் அறியாத அப்பாவி மக்களை சுட்டுக் கொல்வது, கர்ப்பிணிப் பெண்ணை கும்பலாகச் சேர்ந்து கற்பழிப்பது, கணவன் முன்பு மனைவியைச் சூறையாடுவது, தந்தையும் மகனும் ஒருவருக்கொருவர் செருப்பால் அடித்துக்கொள்ளச் செய்வது, இன்னும் என்னென்ன அக்கிரமங்கள் உண்டோ அத்தனையும்...

சம காலத்தில் நமக்கு அண்மையில் வாழ்ந்து வந்தவொரு பழங்குடி இனத்திற்கு இத்தனை அழிமானங்கள், அவலங்கள், இன்னல்கள், இடர்பாடுகள், சித்திரவதைகள், சீர்கேடுகள் நடந்து கொண்டிருந்திருக்கிறது. அது குறித்து எந்தவொரு பாதிப்பும் இன்றி, வீரப்பனின் சாகசத்தையும், அவனைப் பிடிக்கச் சென்ற நரிக்கூட்டத்தின் வீரம் குறித்தும் டிவியில் பார்த்தும், பேப்பர் படித்துக் கொண்டும் நாம்...

நமக்கருகில் சத்தமின்றி மனித இனம் மெல்ல மெல்ல செத்துப் பிழைத்த அவலம் சற்றும் உணராமல்... நாமெல்லாம் மனித இனந்தானா?

சினிமாக்காரியின் படுக்கையறையில் படுப்பவன் முதல்கொண்டு, அவள் அணியும் உள்ளாடைகள் வரை தலைப்புச் செய்தியாக அதி கடமையுணர்ச்சியில் பதிவு செய்யும் ஒலி, ஒளி, எழுத்து ஊடகங்கள் எங்கே போயின.

பொய் வழக்கு தொடர்ந்தால் சாமான்யனின் கோவணத்தையும் கூட ஈடாக பெற்றுத் தரும் அரசுச் சட்டங்கள் தாமழித்துவிட்ட சோளகர் தொட்டி மக்களின் வாழ்வை மீட்டுத் தருமா? இல்லை அவர்கள் எதிர்கால வாழ்வு ஆனைவாய் கரும்பா? கேள்விக்கு பதில் இல்லை.

நாவலில் தென்படும் மிகப் பெரிய குறை மக்களின் உணர்ச்சி மிக்க உரையாடல்கள் எழுத்துத் தமிழில் எழுதப்பட்டு ஏதோ ஒரு செயற்கையான மொழி பெயர்ப்பு உரையாடல்களாக சாரமற்று இருக்கிறது. அவை அந்த மக்களுக்குரிய அல்லது பழக்கப்பட்ட வட்டார வழக்கில் பதிவாகியிருந்தால் நாவல் இன்னும் கூடுதல் கவனம் பெற்றிருக்கும். படைப்பின் கனம் கூடியிருக்கும்.

◆

# இரண்டு சிற்றிதழ்கள்

அ. ராமசாமி

தமிழின் இலக்கியம் சார்ந்த சிறுபத்திரிகை உலகில் அவ்வப்போது சில பத்திரிகைகள் தோன்றுவதும், சில காலம் வந்துவிட்டு நின்றுவிடுவதும் வாடிக்கையான நிகழ்வுகள். ஒரு சிறுபத்திரிகையின் தோற்றத்தின் பின் புலத்தில் எப்போழுதும் ஒரு நபர் அல்லது நான் கைந்து பேர் கொண்ட சிறு குழுவினர் இருந்து எழுதுவது, அச்சிடுவது, தபாலில் அனுப்புவது எனச் செயல்படுவர். இந்த வேலைகளுக்காக மட்டும் என்றில்லாமல் அதனால் ஏற்படும் பணம் மற்றும் பொருள் இழப்புகள் பற்றிக் கூட கவலைப்படுவதில்லை. காரணம் அதில் வரும் படைப்புக்களும் கருத்துக்களும் தமிழ்ச் சூழலில் காத்திரமான விளைவுகளையும் விவாதங்களையும் உண்டாக்கும் என்பது நம்பிக்கை. இந்த நம்பிக்கையை சில சிற்றிதழ்கள் நிறைவேற்றியிருக்கின்றன. பல சிற்றிதழ்கள் எந்தவிதமான தாக்கங்களையும் ஏற்படுத்தாமல் மறைந்தும் போயிருக்கின்றன. சில இதழ்கள் ஒற்றைத் துறைகளை மட்டும் பற்றிப் பேச, சில இதழ்களோ கலை இலக்கியம் சார்ந்து எல்லாத் துறைகளிலும் கருத்துக்களையும் படைப்புகளையும் வெளியிடும். பின்னணியில் இருக்கும் நபர்கள் அரசியலற்றவர்களாக (apolitical) இருந்தால் கலை இலக்கியம் மட்டுமே அவ்விதழின் உள்ளடக்கமாக இருக்கும். அரசியல், பொருளாதார, சமுதாயச் சிந்தனை கள் இல்லாமல் கலை இலக்கியங்கள் இல்லை எனக் கருதுபவர்கள் இதழின் உள்ளடக்கத்தில் அத்தகைய விவாதங்களையும் சேர்த்துக் கொள்வார்கள்.

சிற்றிதழ்கள் என்பதற்குத் தொடக்கத்தில் கொள்ளப்பட்ட அர்த்தம் வணிக ரீதியாகப் பெரும் லாபத்தை நோக்கமாகக் கொண்டு வெளிவந்த இதழ்களுக்கு மாற்று என்பதாகத்தான். படைப்பு மற்றும் கருத்து ரீதியாகப் புதியனவற்றைச் செய்து பார்க்கவும் மைய நீரோட்டத்தில் புதிய சிந்தைனைப் போக்குகளைப் புகுத்துவதற்கான சோதனைக் களம் எனவும் அதன் அர்த்தத் தளங்கள் பின்னர் மாறின. இந்த நிலையிலிருந்தும் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தவை 1970-களில் தோன்றிய மார்க்சீய லெனினியக் கட்சிகளின் பிரசாரத்திற்காகத் தொடங்கப்பட்ட இதழ்களும் அவற்றை ஆதரித்துப் பேசுவன போலத் தோற்றமளித்த தன்னார்வக் குழுக்களின் பத்திரிகைகளும்தான். இலக்கியம் மட்டும் என்று இருந்த சிறுபத்திரிகைகளின் முகத்தை அரசியல் சமூகமும் கலந்த கலவையாக மாற்றின. 1990-களில் தோன்றிய சிறுபத்திரிகைகளில் தவிர்க்க முடியாத கூறாக மாறியது தலித்தியச் சிந்தனை, படைப்புகள், படைப்புகள் பற்றிய பார்வைகள், அரசியல் மற்றும் சமூகத் தளத்தில் சாதிய வன்முறையின் பங்கு எனப் பல தளங்களில் தலித்தியச் சிந்தனை தனது இடத்தை உறுதி செய்துள்ளது. சிறுபத்திரிகைகளில் உறுதி செய்யப்பட்ட இந்த இடம் இன்று பெரும் பத்திரிகைகளுக்கும் விரிந்து

# 7 வரலாறு யாரை விடுதலை செய்யும்?

**வரலாற்றை நேர்மறையாக அணுகுவதும், எழுதப்பட்ட வரலாறுகளில் இருக்கக்கூடிய கோணல்களைச் சரி செய்வதும் விடுதலைப் போராட்டத்தின் பகுதியாக இருக்கத் தக்கன என்பதில் சந்தேகமில்லை. அதே நேரத்தில் வரலாறு மட்டுமே நிகழ்காலத்தின் கை விளக்காகவோ, எதிர்காலத்தின் கலங்கரை தீபமாகவோ இருந்திடவும் முடியாது.**

கொண்டிருக்கிறது. சிந்தனை என்ற அளவிலும் படைப்பு என்ற நிலையிலும் சிந்திக்கின்ற ஒருவனின் மூளையை ஆதரவாகவோ எதிர்ப்பாகவோ யோசிக்க வைத்துவிட்டது தலித்தியம். இதனைச் சாதித்த தனி நபர்களாகச் சிலரையும் இதழ்களாக சிலவற்றையும் கூறலாம்.

பல்வேறு விவாதங்களினூடாக நிறப்பிரிகை தொடங்கி வைத்த அந்தப் பணியைப் புதிய கோடாங்கி முன்னெடுத்துள்ளது. தொடர்ந்து தலித், தலித் முரசு போன்ற இதழ்கள் வளர்த்தெடுத்துள்ளன. இந்த வரிசையில் தலித் வரலாற்றை மட்டும் விவாதிப்பதற்கும் எழுதுவதற்கும் எனப் போதி என்ற புதிய இதழ் வந்துள்ளது. தலித்திய விவாதங்களுக்குப் புதிய திசைவழிகளை அறிமுகப்படுத்தும் ரவிக்குமார் அதன் ஆசிரியர். பேரளவுகளிலிருந்து நுண் அளவிற்குள் நுழைகின்றபோது எல்லாரும் உடன் வருவர் என்று சொல்ல முடியாது. ஒட்டு மொத்த விவாதத்திலிருந்து வரலாறு என்ற நுண் அளவிற்குள் நுழைந்துள்ள போதியின் வாசகர் எண்ணிக்கை பரந்த தளமாக இருக்க வாய்ப்பில்லை என்பது தவிர்க்க முடியாதது. அறிவுசார் நிலையிலும் கல்வியுலக ஆய்வு முறையியலுடனும் அமைந்த கட்டுரைகளைக் கொண்டதாக முதல் இதழ் வெளிவந்துள்ளது. பொதுவாகக் கடந்த காலத்தைப் பற்றிய பேச்சு விடுதலையை முன்னெடுக்கும் இயக்கங்களின் ஒரு பகுதிதான். வரலாற்றை நேர்மறையாக அணுகுவதும், எழுதப்பட்ட வரலாறுகளில் இருக்கக்கூடிய கோணல்களைச் சரி செய்வதும் விடுதலைப் போராட்டத்தின் பகுதியாக இருக்கத் தக்கன என்பதில் சந்தேகமில்லை. அதே நேரத்தில் வரலாறு மட்டுமே நிகழ் காலத்தின் கை விளக்காகவோ, எதிர் காலத்தின் கலங்கரை தீபமாகவோ இருந்திடவும் முடியாது.

1990-களின் இடையாண்டுகளில் தொடங்கப் பட்ட இலக்கிய இதழ் உன்னதம். நவீனத்துவத்திற்குப் பிந்தய எழுத்து முறையில் அதிக ஆர்வம் கொண்ட கௌதம சித்தார்த்தன் என்ற தனி நபரின் முயற்சியால் தொடங்கப்பட்ட அவ்விதழ் கவிதை, சிறுகதை, ஓவியம் என்னும் படைப்புத் தளங்களில் பரிசோதனைகளைச் செய்வது பற்றி அதிகம் கவனம் செலுத்தியது என்றாலும், அதன் தாக்கம் அவ்வளவாக இருந்ததில்லை என்றே சொல்ல வேண்டும். வெவ்வேறு கால இடைவெளிகளில், வடிவங்களில் பத்து இதழ்கள் கொண்டு வந்த சித்தார்த்தன் நிறுத்திவிட்டார் என்றே நினைத்த நேரத்தில் திரும்பவும் கொண்டுவரத் தொடங்கியுள்ளார். தொடங்கப் பட்டபோது முற்றமுழுதான இலக்கியப் பத்திரிகையாகத் தொடங்கிய சித்தார்த்தன், நான்கு ஆண்டுகளுக்குப் பின் கொண்டு வந்துள்ள உன்னதம்-11, சில குறிப்பிடத்தக்க மாற்றங்களுடன் கொண்டுவந்துள்ளார். முக்கியமான மாற்றம் தலித்திய விவாதங்களையும் தலித் படைப்பாளிகளையும் இடம் பெறச் செய்ய வேண்டும் என நினைத்துள்ளதைக் குறிப்பிட வேண்டும்.

ரவிக்குமாரின் ஒடுக்கப்பட்டோர் அரங்கு என்ற கட்டுரை அட்டைப்படக் கட்டுரையாக இடம்பெற, எழுத்தாளர் சிவகாமியின் பத்தி எழுத்தையும் - மெல்லிய துளையிட்ட காகிதத்தின் வழி - இடம்பெறச் செய்துள்ளார். இவர்களோடு, தமிழ் படைப்புலகிலும் சிந்தனைத் தளத்திலும் பலரது பெயர்களும் இதழில் இடம் பெற வேண்டும் என நினைத்துள்ளதும் புலப்படுகிறது. அம்பை, சுந்தரராமசாமி ஆகியோரின் கதைகளும், மாலதி மைத்ரி, ரமேஷ்:பிரேம் ஆகியோரின் சில குறிப்புகளும், அ. மார்க்ஸ், சாரு நிவேதிதா, ராணி திலக் ஆகியோரின் கடிதங்களும் (பழைய கடிதங்கள்). விக்ரமாதித்யன், ஜி. முருகன், பழனிவேள், கே.சி. செந்தில் குமார் ஆகியோரின் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. இடைநிலை மற்றும் பெரும் பத்திரிகைகளின் மனநிலைக்கு மாறான சிறுபத்திரிகை மனநிலை விதந்து பார்க்கும் தொனியுடைய உன்னதம் அவற்றின் உத்திகளான பத்தி எழுத்து, விளம்பரம், கால அளவில் கறார்த் தன்மையைப் பின்பற்றத் தொடங்கியுள்ளது ஒரு சுவையான முரண்தான்.

வந்துள்ள இதழ்கள் வரலாற்றைப் படைக்கவும், வரலாறாக மாறவும் வாழ்த்தலாம்.

---

**கு. உமா தேவி**

# நாங்கள் பெண் என்பதால் மட்டுமல்ல

ஒரு பறவையின் சிறகு
காற்றின் மேல் முனையை
பற்றியபடி திருக்க

மீட்பாரற்று - வனாந்தர மணலில்
புதைக்கப் பட்டிருக்கின்றன
எங்கள் வாழ்க்கை

வண்ணத்துப் பூச்சிகளின் வெற்றிடத்தை
அடர்ந்து கருக்கும்
எத்தனை இரும்பு வளையங்களை
உடைத்தெறிந்து மீள்வது?

வாழ்தலின் இரகசியம் புரிந்து
திமிறி மேலெழ முனைகையில்
சிவந்ததும் - கருத்ததும்
கூரிய நகம் கொண்டதுமான
கைகள்
எம்மிருப்பை அழுத்தினபடி
எம்மை தாழ்த்தி
முதுகின் மீது விளக்கேற்றி
பிரகாசமடைகின்றன

பீறிடும் தழலுணராது -
காலகாலமாய் குனிந்தே கிடக்க
தொங்கிக் கிடக்கும் எம்
நகில்களை இர(ரு)சித்தவாறே
சுகாதீதமடைகிறான் பண்ணையார்

காடுகள் - மலைகள் - தோப்புகள்
ஆற்றோரங்கள் அந்தப்புரங்கள்
இன்ன பிற இடங்களில்
இப்போதும் எங்கேனும் சிதைக்கப்படலாம்
எங்களில் எவளேனும் ஒருத்தியின் உடல்

நாங்கள் பெண் என்பதால் மட்டும் அல்ல
" "

◆

# ரெங்கம் நெருக்கங்கள்

மு. அம்சா

"செல்லம்... இன்னும் வூட்டுக்குள்ளேயே அடைஞ்சிக்கிட்டு என்னா பண்றே... பொழுது விறு விறுன்னு ஏறிக்கிட்டு போவுது... இரும்பாலை பஸ் போயி எவ்ளோ நேரமாவுது பாரு...! எல்லாரும் வயக்காட்டுக்கு போயிட்டாங்க... சீக்கிரமா வா..." வாசலில் நின்றவாறு வள்ளி கூப்பாடு போட்டாள்.

"சித்த இரு வள்ளி, பிள்ளைங்களுக்கு கொஞ் சூண்டு கஞித்தண்ணி ஊத்தி எடுத்தாரேன்.போவும்போது குடுத்துட்டு போயிடலாம்." செல்லம் பரபரவென்று தூக்குப் போகினியில் இரண்டு உருண்டை களியைப் போட்டு நீத்தத் தண்ணியை கொஞ்சம் ஊற்றி மூடினாள். கையகல பழைய துணியில் சிறிது கல் உப்பும், சிறிய வெங்காயம் சிலதும் போட்டு முடிந்து தூக்குப் போகினியில் காதோரங் கட்டியவாறு வெளியே வந்தாள்.

கடைசிப் பையன் முருகன், நான்கு வயதுக் குழந்தை மண்ணில் விளையாடிக்கொண்டிருந்தது. தூக்கிவந்த பானைத் தண்ணியில் முகம் க்ழுவிவிட்டு, அதே ஈரக் கையால் தலையை ஒதுக்கிவிட்டு பக்கத்து வீட்டு திண்ணையில் உட்கார வைத்தாள். மீண்டும் உள்ளே ஓடி, நெளிந்து பெயிண்ட் உதிர்ந்த ஒரு தகர சிலேட்டையும், அலுமினிய தட்டு ஒன்றையும் மஞ்சள் பை ஒன்றில் போட்டு முருகனின் அருகில் வைத்தவாறு "கண்ணகி, ராமு அண்ணங்கூட 'அரைக்கிளாசு' போயிடு... பள்ளிக்கூடத்தில சோறு போடுவாங்க" என்ற வளாய் குடிசையின் தட்டிப்படலை இழுத்து சாத்தி விட்டு "உம்... வா வள்ளி போலாம்..." என்று விரைந்தாள். "அம்மா" என்று அழ ஆரம்பித்த முருகனின் குரலை அலட்சியம் செய்து ஓடினார்கள் வயக்காட்டை நோக்கி.

"தலைக்கு கொஞ்சம் எண்ணெய் தடவறது செல்லம். பாரு வரவரன்னு இருக்குது..."

"அடப் போடி... என்னதான் ஓடி ஓடி ஒழைச் சாலும் கையிக்கும், வாயிக்குமே பத்த மாட்டங்குது. இதுல சோப்புன்னும் எண்ணெயின்னும் எங்க வாங்க முடியுது. இந்த வெள்ளிக்கிழமையாவது கூலி வாங்கி ஒரு ரெண்டு ரூவாயிக்கு எண்ணெய் வாங்கணும்..." தன் பரட்டைக் கூந்தலை ஒரு கையால் அழுந்த நீவி விட்ட வாறு நடையை எட்டிப் போட்டாள்.

அவளும்தான் என்ன செய்வாள் பாவம். நாலு குழந்தைகளை வைத்துக்கொண்டு, ஊதாரிக் கணவ னின் பொறுப்பில்லாத் தனத்தினால் ஓடி யாடி விளை யாட வேண்டிய வயதில், பள்ளிக்கூடம் சென்று நாலு எழுத்து படிக்க வேண்டிய பிள்ளைகளை வேலைக்கு அனுப்பி கஷ்டப்படுத்திக்கொண்டு...

அடுக்கடுக்காக குழந்தைகள் பிறந்தபோதும் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள இருவருமே பயந்தனர்.

"எம் பையன் தறிக்கட்டை அடிக்கிறான். கையுங் காலும் ஓயாம கட்டைய மாத்தி மாத்தி மிதிச்சாதான் சோறு. அவன் ஆபரேஷன் பண்ணிக்கிட்டு நாளைக்கு ஏதாச்சும் ஒன்னுன்னா சோத்துக்கு எங்குப்போறது" என்று மாமியார்காரி தூபமிட சித்தன் பின் வாங் கினான்.

"அடியே செல்லம்... ஆபரேஷன் பண்ணிக் கிட்டா, குனிஞ்சி நிமுந்து வேலை செய்ய முடியாது. வெட்டு வெடுக்குன்னு ஒரு பாரத்தை தூக்க முடியாது. நம்ப என்ன ஒக்காந்து திங்கற பரம்பரையிலா பொறந் துக்கும்! நாலு காட்டுக்கு கூலி வேலைக்கு போனாத்தான் நம்ப வூட்டு அடுப்பு எரியும். நீ பாட்டுக்கு ஆபரேஷன் பண்ணிக்கிட்டு வந்து படுத்துக்கிட்டா ரெண்டு ரொட்டித் துண்டு வாங்கித் தரக்கூட ஆளு இருக்காது. ஒரு பானை தண்ணி மொண்டுக்கிட்டு வரலாம் னாகூட ஒருத்தர எதிர்பார்க்கணும்ல..." விவரம் தெரி யாத பயமுறுத்தல்கள் அவளை பயமுறுத்த கிராமத்து செவிலிப் பெண் வரும்போதெல்லாம் ஓடி ஒளிந்தாள்.

அதையும் மீறி அவள் தேடிப் பிடித்து உபதேசித் தால் "இங்க பாரு நர்சம்மா... ஆண்டவனா பாத்து குடுக் கறான். கஷ்டப்பட்டு ஒரு அஞ்சு ஆறு வயசு வரைக்கும் வளத் துப்புட்டா அப்புறம் அதுங்க வவுத்துக்கு அதுங்க சம்பாரிச்சிக்கும்."

"அப்டியெல்லாம் இல்ல செல்லம். ஒன்னோ, ரெண்டோ இருந்தா கொஞ்சம் செல்வாக்கா வளக்க லாம்ல... படிக்க வச்சு ஒரு நல்ல வேலை வெட்டிக்கு அனுப்பலாமில்ல... குழந்தைகளுக்கும் நல்லது, ஒனக்கும் ஒடம்புக்கு நல்லது. நீ நினைக்கிற மாதிரி ஆபரேஷன் பண்ணிக்கிட்டா ஒரு ஆபத்தும் வராது..." எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாமல் ஆறு பெற்று, இரண்டு கண்ணை மூடி, நான்கு இருக்கிறது.

பெரியது இரண்டும் பெண்கள். செல்விக்கு 12 வயது. அடுத்தவள் கலாவுக்கு 10 வயது. இரண்டு பேருக்கும் முன் பணமாக ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு கயிறு திரிக்கும் வேலைக்கு அனுப்பி விட்டார்கள். செல்விக்கு 5 ரூபாய் கூலி. கலாவுக்கு 3 ரூபாய். விடியற் காலையில் மூன்று மணிக்கெல்லாம் எழுந்து ஓட வேண்டும். திரும்பிவர மாலை நான்கு மணிக்கு மேலாகி விடும்.

கிராமத்தின் குடிசைத் தொழிலாய் கயிறு திரிக்கும் தொழில் அமைந்துபோனது. கொஞ்சம் வசதி படைத்தவர்கள் நான்கைந்து மெஷின்களை வாங்கிப் போட்டு கூலிக்கு ஆள் வைத்து கயிறு திரிப்பார்கள். மெஷின் சுத்துவதற்கு ஒரு கூலி. கயிறு திரிப்பவர்களுக்கு (தேங்காய் நார்) கட்டு கணக்கு. திரித்த கயிறை கட்டுவற்கு ஒரு ஆள். ஒத்தைப் பிரியிலிருந்து தண்ணீர் சேர்த்துக் கயிறு வரை திரித்து விடுவார்கள்.

விடியற்காலையில் கட்டு பிரித்து உதறி, நாரோடு கலந்து நீர் தெளித்து, நீண்ட இரும்புக் கம்பியால் அடித்து அடித்து அதன் கடினத் தன்மையை மிருது வாக்கி, கூடையில் அள்ளி இடுப்பில் மாட்டிக் கொண்டு பிரிவிடும் பெண்கள் மெஷினின் அருகில் வந்ததும் மெஷின் சுற்றும் குழந்தைகள் கைப்பிடியை பிடித்தால் மதியம் இரண்டு, மூன்று மணி வரை ஓய்வே இருக்காது.

உள்ளங்கைகள் சிவந்து புண்ணாகி, மரத்து... அந்த பத்து, பணிரெண்டு வயதில் குழந்தைகளின் கைகள் காப்பேறிவிடும். இடையில், பிரிவிடுபவர்களின் குரலுக்கு தகுந்தாற்போல் சுத்துவதை நிறுத்தியும், பின் பக்கமாக சுழற்றியும், தவறிப் போகையில் அவர்களின் குட்டு களை தலையில் வாங்கியும் அந்த பிஞ்சுகள் படும் வேதனை மிக அதிகம்.

செல்லத்திற்கு மூன்றாவதும், நான்காவதும் பையன்கள். எட்டு வயது சீனியை சேலத்தில் ஒரு ஒர்க் ஷாப்பில் வேலைக்கு விட்டிருந்தாள். இருபது கிலோ மீட்டர் டவுன் பஸ்ஸில் நெரிசலில் பயணம் செய்து பட்டறைக்குச் சென்று வேலை செய்துவிட்டு, அந்த பிஞ்சு திரும்ப வந்து வீடு சேரும்பொழுது இரவு ஒன்பது மணியாகிப்போகும்.

சின்னவன் முருகனைக்கூட பள்ளியில் சேர்க்கும் எண்ணம் இல்லை. இன்னும் ரெண்டு வருடம் கழித்து கயிற்று மெஷினுக்கு பிரிமுறுக்க அனுப்பி விடுவேன் என்று அப்போதிருந்தே செல்லம் சொல்லிக் கொண்டிருக்கிறாள். இப்போது கூட 'அரைக்கிளாசு' என்று அவர் கள் குறிப்பிடும் பாலர் பள்ளிக்கு அனுப்புவதே அங்கே போடும் சாப்பாட்டிற்காகத்தான்.

செல்லமும், வள்ளியும் வேலை நடக்கும் வயக் காட்டிற்கு சென்ற போது மற்ற பெண்கள் வயலில் இறங்கி விட்டார்கள். நெல் அறுப்பு ஆரம்பமாகி விட்டது.

"ஏம்மா... ஒங்களுக்கு வேலை நேரம் தெரியாதா...? எல்லாரும் வயல்ல எறங்கின பெறவுதான நீங்க தெனமும் வர்ரீங்க. போங்க.. போங்க... இன்னைக்கு ஒங்களுக்கு வேலை கெடையாது. இருக்கற ஆளுங்களே போதும்..." காட்டுக்காரரின் அதட்டல் அவர்களை வரப்பிலேயே நிற்க வைத்தது.

"தெனமும் எங்க மாமா நேரங் கழிச்சு வர்றம். இந்த அறுப்பு ஆரம் பிச்சதிலர்ந்து இன்னைக்குத்தான் செத்த நேரமாயிருச்சு. நாளைக்கெல்லாம் சுருக்கா வந்துடறங்க..." என்று கூறியவாறு வள்ளி வயலில் இறங்கி விட்டாள். செல்லத்தையும கண்ணை சிமிட்டி இறங்க வைத்தாள்.

"இந்தா.. நா சொல்லிக்கிட்டே இருக்கேன். நீங்க பாட்டுக்கு வயல்ல எறங்கினா என்ன அர்த்தம்...? ஒங்கள மாதிரிதான மத்த பொம்பளைகளும். அவங்க எட்டு மணிக்கெல்லாம் வயல்ல எறங்கலையா...?" காட்டுக்கார் அதட்டினாலும் விரட்டவில்லை.

கிராமத்தில் வேலை என்பது, அதுவும் விவசாயக் கூலி வேலை என்பது நிரந்தரமற்றது. வானம் பார்த்திருக்கும் பூமியே அங்கே அதிகமானதால், வானம் பொய்த்துப்போனால் நிலைமை மோசமாகி விடும். ஆறு மாதம் வேலை இருக்கும் - நாத்து நடவு, களை எடுப்பு, மண் கொத்துவது என்று. பயிர்கள் வேர் பிடித்து, சூல் கொள்ள ஆரம் பித்து விட்டால் மீண்டும் அறுவடை வரை வேலை இருக்காது. அப்போதெல் லாம் அங்கே இங்கே புல் பிடுங்கி போடுவதும், ஏரியில் காவலாளிக்குத் தெரியாமல் கருவேல் மரங்களை வெட்டி விறகு சேர்ப்பதுமே வேலையாகிப்போகும்.

"சரி... சரி... மசமசன்னு நிக்காம வேலையப் பாருங்க... நாலு பாத்தி குனிஞ்சு நிமிந்திங்கனா பொழுது உச்சிக்குப் போயிடும். ஆபீசு உத்தி யோகக்காரங்க மாதிரி போட்டது போட்டபடி கௌம்பிடுவிங்க. இந்த ரெண்டு நாள்ல அறுப்பு வேலைய முடிச்சிட்டிங் கன்னா, அப்புறம் போரடிக்க ஆரம்பிச்சரலாம். மாசம் பொறக்கப் போவுது. பொங்கலுக் குள்ள புது நெல்லு வூடு போயி சேர ணும்... சுருக்கா வேலையப் பாருங்க."

எட்டு மணிக்கு வயலில் இறங்கி னால் இரண்டு, மூன்று மணிக்குத் தான் மேலேறுவார்கள். பெரும் பாலும் அரைநாள் வேலைதான். முழு நாள் வேலையெல்லாம் கிடை யாது. ஏழு, எட்டு மணி நேரம் வேலை செய்துவிட்டு அவர்கள் பெறும் கூலி என்னவோ பத்து ரூபாயும், பதினைந்து ரூபாயும்தான். தொழில் வரை முறைகள் அங்கே கையாளப்படுவதில்லை. ஒரு நாள் உழைப்பை கொடுத்துவிட்டு அரைநாள் கூலி வாங்கு வதற்காக அவர்கள் கவலைப்படுவதும் இல்லை. இதற்கே நான் நீ என்று போட்டி போடும் பொழுது, சட்டம் பேசினால் உள்ளதுமல்லவா போய்விடும்!

பெண்கள் குனிந்து குனிந்து நிமிர, நெற்பயிர் செமை செமையாய் குவிந்தது. அறுப்பு முடிந்து நெல்லுக்கட்டுகளை தூக்கிவந்து களம் சேர்த்துவிட்டு அவர்கள் கிளம்பியபோது மணி மூன்று.

செல்லம் தன் குடிசையை அடைந்தபோது, முருகன் திண்ணையில் சுருண்டு முடங்கிபடுத்திருந் தான். அருகில் பள்ளியில் சாப்பிட்ட தட்டும் கழுவப் படாமல் கிடந்தது. வாயும் துடைக்காமல், கையும் சரியாக கழுவாமல் வாய் பிளந்து தூங்கிய குழந்தையைச் சுற்றி ஈ மொய்த்துக்கொண்டிருந்தது.

தண்ணியைத் தொட்டு அவனது வாயும், கையும் துடைத்துவிட்டு குடிசையினுள் நுழைந்தாள். பசி வயிற்றைக் கிள்ளியது. சோற்றுப் பானையை திறந்து

பார்த்தாள். இரவு கிளறிப் போட்டிருந்த களி உருண் டையில் மிஞ்சியிருந்த ஒன்றும் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தது. கெட்டுப்போய்விட்டதுதான். அதைப் பார்த்தால் வயிறு நிறையுமா...? ஒரு குண்டாவில் எடுத் துப்போட்டு பச்சைத் தண்ணீரை விட்டு கரைத்துக் குடித்தாள். கெட் டுப்போன களிக்கு பச்சைத் தண்ணீர் தான் சரி. புளித்த தண்ணியை ஊற்றினால் வாயில் வைக்க முடியாது.

களி வயிற்றை அடைக்கவும் தூக்கம் கண்களை சுழற்றியது. இடுப்பு வேறு விண்விண்னென்று வலித்தது. சற்று படுத்தால் தேவலாம் என்று நினைத் தவள், நினைவை மாற்றிக்கொண்டு எழுந்தாள். சொட் டுத் தண்ணீர் வீட்டில் இல்லை. படுத்தால் ஒரு வேலை ஆகாது என்ற எண்ணத்துடன் ரப்பர் குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணீருக்குக் கிளம்பினாள்.

"என்னாம்மா தெனமும் களியாவே கிண்டி போடற...? எனக்கு நெல்லுச் சோறுதான் வேணும்..." சீனி முரண்டினான். தினமும் களியை சாப்பிட்டு அரிசி சாதத் திற்கு ஏங்கும் அந்த சிறுவனை செல்லம் கண்ணீருடன் அணைத்துக் கொண்டாள்.

"ரேசன்ல வாங்குற அரிசி தீந்து போச்சு. கூலியும் வரல... எப்படிக் கண்ணு அரிசி வாங்க முடியும். வெள் ளிக்கிழமை கூலி வாங்கி அரிசி சோறு ஆக்கிப் போட றேன். இன்னைக்குத் தின்னு... களி தின்னாத்தான நல்லா சத்து வரும். சீக்கிரமா பெரிய வேலையெல்லாம் கத்துக்குவ... தின்னு ராசா!" அடம் பிடித்தவனை ஆசை காட்டி சாப்பிட வைத்தாள். ரேசன் அரிசியைத் தவிர, கடையில் வாங்குவதென்பது முடியவே முடியாது. கிலோ பத்து ரூவா, பன்னன்டு ரூவா போட்டு வாங்க கட்டுப் படியாகாது.

"அம்மா.. நா ரெண்டு நாளா பிரி உட்டு பாத் தம்மா... கொஞ்சம் கொஞ்சம் நல்லா வருது. சீக்கிரமா கத்துக்குவன்... கையிதாங் கொஞ்சம் புண்ணாயிருச்சு..." கண்கள் மின்ன தன்முன் நீட்டிய செல்வியின் கரங் களைப் பார்த்து செல்லம் பதைத்துப் போனாள். அந்தப் பிஞ்சுக் கரங்களின் மேல்தோல் பிரிந்து புண்ணாகிப் போயிருந்தது. மனம் நொந்தவளாய் தேங்காய் எண் ணெய் பாட் டிலை எடுத்து கவிழ்த்தாள். ஒரு சில துளி களே சொட்டு சொட்டாய் செல்வியின் கைகளில் விழ அதை உள்ளங்கை முழுக்க தடவிவிட்டாள்.

"நல்லாயிரும் கண்ணு. சீக்கிரமா பிரி உட கத்துக் கிட்டியினா நீங்க ரெண்டு பேருமே தெனம் ஒரு கட்டு நாரு உடலாம். முப்பது ரூவா கெடைக்கும். தம்பி கூட இன்னம் ஒரு வருசத்துல வேலை கத்துக்குவான். இல்ல சீனி... ஒனக்கும் சம்பளம் நெறையா கெடைக்கும். நமக்கு கஷ்டமே இருக்காது... சம்பாதிக்கும் ஆசையில் பிள்ளை களின் மனதை திருப்பிவிட... அவர்கள் உடல் கஷ் டத்தை மறந்தனர். பள்ளிக் கூடம் செல்லும் பிள்ளை களைப் பார்த்து ஏங்கி கண்ணீர் வடிக்கும் அந்த சிறுசு கள் அந்த நிமிடம் தினம் முப்பது ரூபாய் சம்பாதிக்கப் போவதை எண்ணி மனதுக்குள் மகிழ்ந்து கிழிந்த பாயில் தங்களை சாய்த்துக் கொண்டன.

தன்னால் ஒரு குழந்தையைக் கூட படிக்க வைக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில் செல்லம் கண்ணீர் வழிய சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்தாள். தங்கள் வாழ்க்கை மட்டும் ஏன் இப்படி...! காடும், கழனியும், பசியும், பட்டினியுமாய்....! கந்து வட்டியும், கிழிந்த புடவையுமாய்...!

தூக்கத்தூடே மெல்ல கண்ணயர்ந்தவளை சித் தனின் குரல் மெல்ல விழிப்படைய வைத்தது. "ஏய்... என் னாடி பொட்டக் கழுதைக்கு இன்னேரத்துலிய தூக்கம். புருசங்காரன் வந்தோட்டி சோறு போட்டுட்டு தூங் கலாமின்னு இல்லாம... தூக்கத்தப் பாரு..." குடி போதை யில் எட்டி உதைத்தான்.

தூங்கும் பிள்ளைகள் விழிப்பதற்குள் சட்டென எழுந்தாள் செல்லம். "தா... சும்மா சத்தம் போடாம குந்து... தூங்கற பிள்ளைகள எழுப்பாம தின்னுப்புட்டுப் போயி படு..." ஒரு உருண்டை களியை அலுமினிய தட்டத்தில் போட்டு புளிச்சக் கீரையை சிறிது வழித்துப் போட்டு அவன் முன்னால் நகர்த்தினாள்.

"என்னா... இன்னைக்கும் களி தானா... ஏண்டி ஆத்தாளும் மக்களுமா தெனம் சம்பாரிக்கிறிங்களே... அரிசி வாங்றதுக்கென்னாடி... தெனமும் இந்த எழவ எவந் திங்கறது..." குமுறியவாறு தட்டத்தை தூரமாய் தள்ளிவிட அது சுவற்றில் மோதி நின்றது.

போதையில் எதுவும் தெரியாமல் அப்படியே கவிழ்ந்தான். இனி அவனை சாப்பிட வைக்க முடியாது. காலையில் ஏதாவது கரைத்துக் குடுத்தால் இரவு ஒன்றுமே நடக்காததுபோல் குடித்து விட்டு தறிக் கொட்டாயிக்கு ஓடி விடுவான்.

உளறியபடி கிடந்தவனை சற்றே தூக்கியும் இழுத் தும் வந்து வெளியே கட்டிலில் படுக்க வைத்தாள். அவன் சாப்பிடாது விட்ட களியை ஒரு குண்டானில் போட்டு தண்ணீரை ஊற்றி மூடினாள். மீண்டும் அவளுக்கு தூக்கம் வரவில்லை. முதல் தூக்கம் கலைந்து விட்டால் மறுபடியும் தூக்கம் பிடிக்க வெகு நேரம் ஆகிவிடும்.

குடிசையின் வாயிற்படியிலேயே உட்கார்ந்து விட்டாள். வெளியில் எங்கும் இருள் கவிழ்ந்திருந்தது. அவள் வாழ்க்கையைப் போல் நிலவு இல்லாத வானில் எங்கேயோ ஒவ்வொரு நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன.

கட்டிலில் போதையில் காலை பரப்பிக்கொண்டு தூங்கிக் கொண்டிருக்கும் கணவனையும், கிழிந்த பாயில் வேலை களைப்பில் கள்ளொழுக தூங்கிக் கொண் டிருக்கும் குழந்தைகளையும் மாறி மாறிப் பார்த்தாள். இதில் எது துக்கம், எது சந்தோசம். முதல் துக்கமாகிய கணவனால் வந்த இரண்டாவது துக்கங்களா இந்த குழந்தைகள்? விடியாத அந்த இரவில் செல்லம் தன் கழுத்தில் கிடந்த தாலிக் கயிற்றை தொட்டுப் பார்த் தாள். எந்த அர்த்தமும் இல்லாமல் அது ஒரு தாம்புக் கயிறென... சுருக்குக் கயிறென சிறிது சிறிதாய் தன்னை அழித்துக் கொண்டிருப்பதாய்... முழங்காலில் முகத்தை புதைத்துக் கொண்டு கதறினாள்... எதற்கு அழுகிறோ மென்றே தெரியாமல்.

■

# இயற்கையை கையகப்படுத்தும் பெண்மொழி

மகாராசன் : செல்வம்

நூல் : பாம்புக் காட்டில் ஒரு தாழை
ஆசிரியர் : லதா
வெளியீடு : காலச்சுவடு, திச.2004
விலை : ரூ. 50

தனித்த ஒரு பனுவல் எனும் வாசனையைத் தாண்டி, ஒரு பனுவலுக்குள் இயங்கும் பல பனுவல்களோடு ஒன்றிக் கொள்ள இன்றைய கவிதை மொழி பல வாசல்களைத் திறந்து விட்டிருக்கிறது. ஒரு படைப்பாளி சொல்ல வந்ததைத் தாண்டியும், அல்லது அதனில் இருந்து விலகிப் போவதற்கும் இன்றைய கவிதை பொறுப்பேற்றுக் கொள்கிறது. அதுமட்டுமல்லாமல், படைப்பாளியின் மன வெளிக்குக் கவிதையின் ஊடாக வாசகனை அவ்வெளிக்கே அழைத்துச் செல்வதற்கும் இன்றைய கவிதை மொழி தன் பயணத்தை நீட்டித் திருக்கிறது.

ஒரு பனுவலுக்குள் இயங்கும் பனுவல்களின் வெளிகளுக்குள் அரசியல், ஆன்மீகம், பொருளியல், சமூகம், உற்பத்தி உறவு, பண்பாடு, மொழி என எல்லாமும் விரவிக் கிடக்கின்றன. அவற்றின் பக்கங்களில் எல்லாம் அலுப்படையாமல் மிக இலகுவாகக் கைகோத்துக் கொண்டு திரிவதற்கு லதாவின் கவிதை மொழி இடம் கொடுத்திருக்கிறது. சொற்களைக் கொண்டு கொலுவாக்கும் படிமங்களின் சலனங்கள் சொற்களற்ற மவுனத்திலிருந்து எழும்படி பண்ணுகின்றன ஒவ்வொரு கவிதையின் வெளியிலிருந்தும் சட்டெனத் தரையிறங்க முடியாத நிலையினையும், நெருங்க முடியாத தளத்தின் பக்கம் ஒட்டி நின்று பார்க்கும்படியாகவும் கவிதைகள் தளம் அமைகின்றன.

வாழ்வின் சகலத்திலும் அரும்புகளைப் பழக்கி அதை அதனதன் இயல்பென்று விடுகிற உயிரியல்ல மனிதர். மனித வாழ்வின் மாற்றத்திலிருக்கும் பல தளங்கள் அணுகமுடியாத புகைச் சுருள்களாக மாறுகின்றன. தளங்கள் அனைத்தும் மனிதமயமாகிப் பேசிக்கொண்டிருக்கின்றன;மவுனத்தோடு உணர்வுகளை எழுப்பும் உறவுகளைத் துலக்கிக் கொண்டிருக்கின்றன. நம்மோடு தொடர்புகொள்ள வைக்கப்பட்டவையோடுதான் நாம் நமக்கான பொருள்கோடலைக் கொண்டிருக்கிறோம் என்பதும், பல தளங்களை மறுத்துவிட்டு ஒரு தளத்தோடு நின்றுபோவதில் செழுமையான - உயிரோட்டமுள்ள வாழ்வின் நாலாவிதத்திலும் பாய்ந்துவிடக்கூடிய கற்றை இல்லை என்பதுவுமாக அவிழ்கின்றன கவிதைப் புலப்பாடுகள்.

ஒவ்வொரு மனிதரையும் குறைந்த அளவு இகழ்ச்சியோடும், அதே அளவு புகழ்ச்சியோடும் சந்திக்கவோ/பழக நேரவோ தயாரிக்கப்பட்டுவிடும் மன அமைப்பில் மனதை அதன் தன்மையுடன் புரிந்து கொள்வதற்கு 'எதிர்பாராத பொழுது' கவிதை உதவும்.

'பால் பேதம்/சோர்வு தரும்' (ப.32) கவிதையில் மனம், காலம், பெண், ஆண், இயக்கம் என எல்லாமும் அடங்கியிருக்கிறது. 'பிரிவுத் துயரில் உறையும் வெளி பற்றி/எவருக்கென்ன' எனும் வரிகளின் இறுதியாகக் காலம் கடந்து/எதையும் கடந்து அனைத்துக்குமான உள்ளீட்டைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது முர்க்கமும் மண்டியிடலும் மீறிய இயக்கம் அல்லாத கருணைக் கல்லாகி விடுகிறது. எவ்வுயிருக்கும் எது தேவையானது? அல்லது அவ்வுயிருக்கே உள்ள தனித்துவம் எது? உன்னத மானது எது? என்கிற கேள்விகளுக்கு 'கரையும் கடலும்' (ப.38) கவிதை பதில் சொல்லலாம். நியாயம் மீறுகின்ற அநியாயத்தின் நியாய தர்க்கங்கள் எனப் பிணைந்து கிடப்பதை எங்கிருந்து அவிழ்க்கத் துவங்குவது என்பதை அவரவரிடமே கொடுத்து விடுகின்றன பல கவிதைகள்.

இருத்தல் குறித்த கேள்விகளையும் பதில்களையும் தருவித்துப் பார்க்கிறபோது, தொலைந்துபோகும் அடையாளத்தைத் தொன்மம் வந்து தொட்டுத் துலக்குவதைப் போல உளறிக் கொட்டுகிறது மொழி. நம் வாழ்நாளில் ஒவ்வொரு மழையும் நினைவுகளைக் கிளறி விடப் போது மானவையாக இருந்தாலும், கண் முன்னே தெரிகிற வெளி அழுகிக் கொண்டிருப்பதைக் காப்பாற்ற முடியாததாகவும் இருப்பதை 'வெளி' (ப.52) கவிதை சொல்லிச் செல்கிறது.

உலகை இழுத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லும் எல்லாக் குதிரைகளுமே 'இருப்பு மறுப்பு/பிறப்பு மரிப்பு/ கடந்து கடந்து/புதிய உயிர்ப்பு'(ப.71) என்பதற்குத் தலை கவிழ்த்துக்கொள்ள வேண்டும். 'காத்திருப்பதில் நட்ட மெதுவும்/பெரிதாய் இல்லை/உயிர்வாழ்வதைத் தவிர' (ப.62) - உயிர்வாழ்தலில்தான் காத்திருப்பு வாய்க்க முடியும்.

மரபிலிருக்கும் தலைவி தலைவன் களவு முற்றிலும் நவீனத்தில் தகைவது கட்டை விட்டுவிட்டு வெளியே பறப்பதாக் கொள்ளலாம். மரபிலிருந்து மிகக் கணிசமாகப் பெற்றதை அடுத்த கட்டப் பாய்ச்சலுக்காக அதன் மிளிரலை ஒளிரவிடுவது அழகு. 'ஆற்றுப் பாடல்' (ப.75) பாலத்தை விடுவித்துக் கொள்கிற மனம் நவீன களத்தின் துல்லியங்களைப் பார்வைக்கு வைக்கிறது.

பெண்மொழி தன் உடலின் மூலம் இயற்கை யாவற்றையும் கையகப்படுத்திக் கொண்டிருக்கிறது. இயற்கையே பெண்ணாக ஆகும்போது அவளின் மொழியும் புதிதான ஒன்றாகிறது. செயற்கையாகிவிட்ட/ வறட்சி மிக்க மொழிக்கு மாற்றாக அது தன்னைப் பேசுகிறது; இயற்கையைப் பேசுகிறது; இயற்கையின் உள்ளிருக்கும் எல்லோரையும் யாவற்றையும் பேசுகிறது.

முதன் முதலாக அது தன்னிலிருந்தும், தனது சுயத்தி லிருந்தும் பேசுகிறது.

இயற்கையேபெண்ணுடல் என்பதற்குச் சிலவற்றை சுட்டலாம்.

'வலி ருசிக்கும் அற்புதத்தை
அறிவாயோ என் பூவே'

'அணுவைத் துளைக்கத்
தாங்குமோ என் சிறு பூ'
'தீயில் விறைத்து நின்ற காலம்
நீர்த்தூவலில் வெடித்துச் சிதற
விழிகள் உயிர்பெற்று விடைபெற்றன' (ப.33)

'வெளி எங்கும் பாம்பு...
மடல்களை உதிர்த்த தாழை
ஒற்றைத் தண்டுடன்
வளர்கிறது' (ப.46)

மதம் முன்மொழிய மனிதர்கள் வழிமொழிய தொடரும் வரலாற்றில் புது முடிச்சு போடும் நிகழ் அசாதாரணமானது. ஆண்மைக்கு எதிராக நிலைபெறும் பெண்மை சரிக்குச் சரியாக இருக்கிறதே தவிர தாழ் வென்று கற்பிக்கும் ஆண்மொழிக் கருத்தியலைத் தகர்த்திட பெண் உடலும் ஆயுதமாக முன்வந்து வரலாற்றினைப் புரட்டிப் போடத் தொடங்கியிருக்கிறது. லதாவின் எல்லாக் கவிதைகளிலுமே இத்தகைய பெண்மொழிச் சொல்லாடல்கள் முளைத் திருப்பதைக் கவனிக்கலாம்.

# விழி. பா. இதயவேந்தனின் மலரினும் மெல்லிது ஒரு பார்வை

பொன். குமார்

**பதினைந்து கவிதைகளும் எழுத்தாளரின் கூற்றாகவே எழுதப்பட்டுள்ளது. எழுத்தாளர் விழி. பா. இதயவேந்தனின் சமூக உணர்வுகளாகவே சிறுகதைகள் பரிணமிக்கின்றன. இச்சிறு கதையாளர் கவிஞர் என்றாலும் கட்டுரையாளரானாலும் இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகளை அதன் தாக்கமே இல்லாமல் எழுதியிருப்பது கவனிப்பிற்குரியது.**

சிறுகதையாளர், கட்டுரையாளர், கவிஞர் என முப்பரிமாணம் பெற்றிருந்தாலும் சிறுகதையே விழி.பா. இதயவேந்தனின் சிறப்பு. 'நந்தனார் தெரு' தொடங்கி ஏழு சிறுகதைத் தொகுப்புகள் வழங்கியவர் தற்போது 'காவ்யா' மூலம் வெளியிட்டிருக்கும் தொகுப்பு 'மலரினும் மெல்லிது.' இத்தொகுப்பில் பதினைந்து சிறுகதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தளத்தில் இயங்குகிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழ், விளிம்பு நிலைக்குக் கீழ் வாழ்பவர்களே இச்சிறுகதைகளில் காணப்படும் மனிதர்கள். குறிப்பாக தலித்துகள். விழி.பா. இதயவேந்தனின் ஒவ்வொரு படைப்பும் தலித்தை மேம்படுத்துவதாகவே இருக்கும். இத்தொகுப்பும் விதிவிலக்கல்ல. எனினும் பொதுவான பார்வையுமுண்டு.

ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட பிரதிநிதியாய் 'மலரினும் மெல்லிது' மூலம் விஸ்வரூபமெடுத்துள்ளார் விழி.பா. இதயவேந்தன். பாட்டாளி மக்கள் உழைக்கும் வர்க்கத்தின் குரலாய் ஒலித்துள்ளார். ஆடம்பரமற்ற எழுத்தையே தொகுப்பு நெடுக கையாண்டுள்ளார். ஆனால் உரைநடையிலும் சில இடங்களில் உரையாடலுக்கான சொற்களை பிரயோகித்துள்ளார். இதிலுள்ள பதினைந்து கவிதைகளும் எழுத்தாளரின் கூற்றாகவே எழுதப்பட்டுள்ளது. எழுத்தாளர் விழி.பா. இதயவேந்தனின் சமூக உணர்வுகளாகவே சிறுகதைகள் பரிணமிக்கின்றன. இச்சிறு கதையாளர் கவிஞர் என்றாலும் கட்டுரையாளர். ஆனாலும் இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகள் அதன் தாக்கமே இல்லாமல் எழுதியிருப்பது கவனிப்பிற்குரியது. முந்தைய தொகுப்புகளின் தொடர்ச்சியாகவே உள்ளது 'மலரினும் மெல்லிது.' எழுத்தாளரின் இலக்கியத் தடத்தில் மேலுமொரு பதிவு இத்தொகுப்பு. எழுத்தாளரின் படைப்பு மனம் தலித்தியரின் முன்னேற்றத்தையே மேம்பாட்டையே மையம் கொண்டுள்ளது மீண்டுமொரு முறை உறுதி செய்துள்ளது 'மலரினும் மெல்லிது.' 'இந்தச் சிறுகதைத் தொகுப்பும் எனது மற்ற தொகுப்புகளைப் போலவே சமூகப் பிரச்சினைகளை மையப்படுத்தி பொறுப்போடும் அக்கறையோடும் படைக்கப்பட்டது' என இதயவேந்தன் இத்தொகுப்பின் முன்னுரையில் எழுதியிருப்பது உண்மையே. அவ்வாறேயுள்ளது 'மலரினும் மெல்லிது'. ◆

# கணிதம் நம் உடைமை

## 10

குடியரசன்

சில தினங்களுக்கு முன்னர் நடந்த ஒரு உரையாடலை இக்கட்டுரையின் முகப்பாகத் தர விரும்புகிறேன். பூஜ்ஜியம் என்ற எண் ஒற்றை எண்ணா, அல்லது இரட்டை எண்ணா? என்பதே அந்த உரையாடலின் கருப்பொருள்.

கணக்குத் தெரிந்தவர்கள் மிகச் சுலபமாக இதற்கு விடை சொல்லி விடுவார்கள். எனக்கு விடை மட்டும் முக்கியமல்ல. கூடுதலாக விடைக்கான விளக்கமும் வேண்டும் என்றேன்.

சில நிமிட மவுனம். நீங்கள் விடையைச் சொல்லுங்கள். அந்த விடைக்கான விளக்கத்தை நான் சொல்லுகிறேன்.

பூஜ்ஜியம் என்பது இரட்டை எண். உலகத்தில் உள்ள எல்லா முழு எண்களையும் ஒற்றை எண் மற்றும் இரட்டை எண் என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்து விடலாம்.

ஒற்றை, இரட்டை என்ற வரையறைக்குள் அடங்காத முழு என்கள் ஏதும் கிடையாது. இப்பொழுது விளக்கங்கள், பூஜ்ஜியம் எப்படி இரட்டை என்று?

Even = இரட்டை

Odd = ஒற்றை

நான் 10-ஆம் வகுப்பு வரை தமிழ் மீடியம் படித்தவன். அதனால் இரட்டை எண்ணுக்கு Even Number என்பதை நினைவில் வைத்துக் கொள்ள E-இரட்டை என்றும், odd-இன் முதல் எழுத்து O - அதாவது ஒற்றை என்றும் நினைவில் வைத்துக் கொண்டேன். சில மாதங்கள் சென்ற பிறகு even என்பதில் 4 எழுத்துக்கள் உள்ளன. 4 என்பது இரட்டை எண். எனவே even என்றால் இரட்டை எனவும்; odd என்பதில் மூன்று எழுத்துக்கள் மட்டுமே உள்ளன. 3 என்பது ஒற்றை எண். எனவே odd என்பது ஒற்றையைக் குறிக்கும் என்றும் கூடுதலாகப் புரிந்து கொண்டதாக நினைத்துக் கொண்டேன்.

இதை இப்படியும் சொல்லலாம். என்னுடைய அறிவு என்பது தமிழ் மொழியில் உள்ள சொற்களில் மட்டுமே புதைந்து கிடந்தது. புதிய மொழிச் சொற்கள், குறிப்பாக ஆங்கில மொழிச் சொற்களை நினைவில் வைத்துக் கொள்ள தமிழ் பொருளோடு அந்த ஆங்கில வார்த்தையின் அமைப்பை அல்லது உச்சரிப்பை எனக்குப் புரிந்த வகையில் இணைத்து நினைவில் வைத்துக் கொண்டேன்.

Even என்பதில் முதல் எழுத்தும் 'இ'. இரட்டை என்பதின் முதல் எழுத்தும் 'இ'. எனவே இரட்டைக்கு even என்பது என் மனதில் ஆழப் பதிந்து விட்டது. Even என்ற சொல்லின் பொருளை நான் வெகு காலம் யோசிக்காமலேயே விட்டு விட்டேன். இரட்டை என்ற சொல் மட்டுமே என் மனதில் 2,4, 6... போன்ற எண்களுக்கு விளக்கம் தந்தன.

அதெல்லாம் சரி. பூஜ்ஜியத்தை எப்படி இரட்டை எண் என்று சொல்கிறீர்கள்?

இரட்டை எண்ணின் பண்பு என்ன? என்பது என் உரையாடலில் எனக்குக் கிடைத்த விடை.

ஒரு நிமிடம் அதிர்ச்சியடைந்தேன். அவரோ கணிதம் மேல் வகுப்புகளில் படிக்காதவர். இவர் எப்படி ஒரு நுணுக்கமான கேள்வியை கேட்கிறாரே என்று ஆச்சரியப் பட்டேன்.

இவர் பொதுவாகவே எதையும் நம்மால் சமாளித்து விட முடியும், நம்முடைய அறிவு கொண்டு எதையும் புரிய வைத்துவிட முடியும் என்று தன்னை நம்புபவர். அதனால் எத்தகைய கடுமையான சூழலையும், அச்சம் சிறிதும் அடையாமல், மிக வேகமாக, அதே நேரத்தில் நிதானமாக கையாண்டு குறி பிசகாமல் வெற்றி கொள்பவர். இவருடைய பல அசைவுகளை அருகிலிருந்து கவனித்தவன் நான் என்பதால் அதிக எதிர் பார்ப்புடன் நெருக்கடி நிலைகளில் இவருடைய பதில் செயல்களை நான் கூர்ந்து கவனிப்பேன். அது எனக்கு விரிவான ஆச்சரியத்தையும், குவியமான அச்சத்தையும் என்னுள் பரவவிடும்.

இந்த நிலை எடுக்காமலிருந்தால், கண்டிப்பாய் இழப்பு நமக்குத்தான் என்பதை நான் அவரிடம் சொல்லும்போது, எனக்காக அந்த நிலை எடுத்து அதன் காரணமாக சிக்கல் வந்தபோதும் அதையும் எதிர் கொண்டு வெற்றி பெற்றவர். வெற்றிக்குப் பின்னர் இப்பொழுதாவது என்னை நம்புங்கள்; நான் குறிப்பிடும் வழியில் பயணப்படுவது மட்டும்தான் நமக்கு பாதுகாப்பு என்பார்.

சரியான பாதை எதுவெனத் தெரிந்தும், எனக்கு புரிய வைப்பதற்கு அல்லது என் சொல்லுக்கு கவுரவம் தர வேண்டும் என்பதற்காக நான் சொன்ன முரட்டுப் பாதையில் பல முறை அவர் பயணித்திருக்கிறார். அதனால் வரும் இடையூறுகளை சமாளிக்கும்போது என்னை உதட்டளவில் கடுமையாக கோபிப்பார். அதனால் நாங்கள் சோர்ந்து போனால் பழியை தன்மீது

போட்டுக்கொண்டு என்னால் இதைவிட பல மடங்கு கூடுதலாகத் தாங்க இயலும் என்பதை நிருபிப்பார்.

இரட்டை என்களின் பண்பு இதுதான். பின்வரும் உதாரணங்களைப் பாருங்கள்:

(a) $2 + 11 = 13$

(b) $4 + 12 = 16$

(c) $6 + 13 = 19$

(d) $8 + 14 = 22$

(e) $10 + 15 = 25$

(a) 2 + 11 = 13. இதில் 2 என்பது இரட்டை எண். 11 ஒற்றை எண். அவைகளை கூட்ட நமக்கு 13 என்ற ஒற்றை எண் கிடைக்கிறது.

(c) 6 + 13 = 19. இங்கு 6 இரட்டை எண். இதனுடன் 13 ஒற்றை எண். இரண்டையும் கூட்ட 19 என்ற ஒற்றை எண் கிடைக்கிறது.

(e) 10 + 15 = 25 இரட்டை எண்ணுடன் ஒற்றை எண்ணைக் கூட்ட ஒற்றை எண் பதிலாகக் கிடைக்கிறது.

(b) 4 + 12 = 16. 4 என்பது இரட்டை எண். அதனுடன் 12 என்ற இரட்டை எண்ணைக் கூட்ட 16 என்ற இரட்டை எண் கிடைக்கிறது.

இதே நிலைதான் (d)-க்கும்.

இரட்டை + ஒற்றை = ஒற்றை

இரட்டை + இரட்டை = இரட்டை

அதாவது இரட்டை எண்ணுடன் இரட்டை எண்ணை கூட்டினால் இரட்டை விடை. இரட்டை எண்ணுடன் ஒற்றை எண்ணைக் கூட்டினால் விடை ஒற்றை.

இரட்டை எண் தன்னோடு சேரும் எண்ணின் இரட்டை அல்லது ஒற்றைத் தன்மையை மாற்றுவதில்லை. மாறாக

(f) $5 + 2 = 7$

(g) $5 + 3 = 8$

(f) 5 என்ற ஒற்றை எண், 2 என்ற இரட்டை எண்ணைக் கூட்டும்போது 7 என்ற ஒற்றை என்ணைத் தருகிறது.

(g) 5 என்ற ஒற்றை எண் 3 என்ற ஒற்றை எண்ணைக் கூட்டும்போது 8 என்ற இரட்டை எண்ணைத் தருகிறது.

அதாவது இரட்டை எண் என்பது தன்னோடு இணையும் எண்ணின் தன்மையை மாற்றுவதில்லை. அளவை மட்டும் மாற்றுகிறது.

ஒற்றை எண் என்பது தன்னோடு இணையும் எண்ணின் தன்மையை மாற்றுகிறது. அளவையும் மாற்றுகிறது.

இங்கு காணுங்கள்.

(h) $0 + 5 = 5 \Rightarrow 0 +$ ஒற்றை = ஒற்றை

(i) $0 + 6 = 6 \Rightarrow 0 +$ இரட்டை = இரட்டை

(j) $0 + 0 = 0 \Rightarrow 0 + 0 = 0$

இங்கு (h) பூஜ்ஜியமும் தன்னோடு சேரும் ஒற்றையை ஒற்றையாகவே தருகிறது. (i) தன்னோடு இணையும் இரட்டையை, இரட்டையாகவே தருகிறது. (j) தன்னோடு இணையும் பூஜ்ஜியத்தை பூஜ்ஜியமாகவே மதிப்பு மாறாமல் தருகிறது.

இரட்டை எண்களின் பண்பு, தன்மை மாறாமல் பாதுகாப்பது என்று இருக்கும்போது, பூஜ்ஜியம் மட்டுமே ஆதி இரட்டை எண்ணாக நமக்குத் தெரிகிறது.

நான் கேட்டேன், இரட்டை எண்களின் பண்பு என்ன என்று உணர்ந்து கேட்டீர்களா? அல்லது மேலோட்டமாகக் கேட்டீர்களா? நான் மிகவும் மேலோட்டமாகத்தான் கேட்டேன் என்று அவர் பதில் தந்தார்.

கணிதம் நாம் படிக்காமல் இருந்திருந்தால் என்னால் இவர்போல இருந்திருக்கவியலாது என்று என் மனதிற்குள் சொல்லிக்கொண்டேன். நான் கணக்கு படித்தவனாக இருக்கும் தளத்தில் இவரது ஆளுமை என்னை வியக்க வைக்கிறது என்னும்போது, பொதுத் தளத்தில் இவருடைய சிந்தனை மற்றும் கணிப்பு என்னை மலைக்க வைக்கிறது.

இங்கு பாருங்கள். 0,1,2,3,4.....

(k) மூன்று (3) என்ற ஒற்றை எண்ணிற்கு முன்னும் பின்னும் இருபுறமும் 2 & 4 என்ற இரட்டை எண்கள்.

(l) அதைப் போலவே 1 என்ற ஒற்றை எண்ணுக்கு இரு புறமும் 0 & 2 என்ற இரண்டு இரட்டை எ்ண்கள்.

எனவே "0" ஓர் இரட்டை எண் என்றேன்.

Even என்பதன் சரியான தமிழ் சொல் என்ன? சமத்துவம் என்பது பதிலாக வந்தது.

எண்களை, தன்னுடன் சேரும்போதும் அதன் தன்மை மாறாமல் தருவதால் அதை even என்கிறார்கள். தமிழில் இரட்டை என்கிறார்கள். இரட்டை என்பது தன்மையை பாதுகாக்கும் சொல்போல் இல்லையே?

Odd என்பதன் பொருள் மாறுபட்ட என்பதாக நாம் கொள்ள வேண்டியுள்ளது. எண்களின் சேர்ப்பை கவனத்தில் கொண்டு even & odd என்ற ஆங்கிலச் சொல்லிற்கு போதிய தமிழ் சொல் வழங்கப்படவில்லை என்பது எனக்குப் புரிந்தது.

இரட்டை என்பதில் 4 எழுத்து. ஒற்றை என்பதில் மூன்று எழுத்து. எனவே இரட்டையின் தன்மையை புரிந்துதான் இவ்வார்த்தைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பாரும் உண்டு.

இரட்டை எண் என்றால், சமமாகப் பிரித்தல். மீதியின்றி பிரிய வேண்டும். இந்த வரையறை 2 = 1 + 1; 4 = 2 + 2 என்பதற்குப் பொருந்தலாம். 0 = 0 + 0 என்பதற்குப் பொருந்தவில்லையே. 0 = 0 + 0 + 0 என்றுகூட எழுத வாய்ப்புள்ளபோது அதை சமமாகப் பிரிகிறது என்பது இவர்கள் "0" -யும் தனித்து இணைத்து யோசிக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

சரி, பவுத்தம் பூஜ்ஜியத்தை எப்படி அணுகுகிறது? சூன்யவாதம் பூஜ்ஜியத்தை ஆய்கிறது?

இல்லாமல் இருப்பதும் ஓர் இருப்பு நிலைதான். தெளிந்த நீரில் என் முகம் தெளிவாக பிம்பமாகத் தெரிகிறது.

ஆற்று நீரில் மிகப் பெரிய நிலா ஒளியும் தெரிகிறது.

ஆற்றில் எங்கு தேடினும் திண்மப் பொருளாய் நிலா கிடைப்பதில்லை.

தன்னில் எதனையும இருத்தி வைக்காமல் அதன் பிம்பத்தை நீர் விளக்குகிறது.

நிலா விலகும்போது, நீர் அதை இருத்தி வைத்துக் கொள்வதில்லை.

முழு நிலவை முழுமையாகக் காட்டும் நீர் அப் பொருள் நகரும்போது துளியும் சலனம் அடைவதில்லை.

நிலா ஒளிரும்போது பிம்பமும் ஒளிர்கிறது. என் செயல் அவ்விடத்தில் பிரதிபளிக்கிறது.

சில காலம் தள்ளி பிம்பம் கருமை கொள்கிறது.
நான் ஊடகத்தை குறை சொல்கிறேன்.
உரு தன்னை தேய்த்துக் கொள்கிறது.
நிலா
போலியாய் தன்னை மறைத்துக் கொள்கிறது.
பிம்பம்
அதுவே உண்மை.
சரியான பிரதிபளிப்பு.
உரு.
நிலையில்லாதது.
பிம்பம்
நிலையில்லாத உருவின் நிலையான
வெளிப்பாடு.
உருவின் சலனம்
பிம்பத்திலும் அதிர்வு.
ஊடகம் தன்னை அலட்டிக் கொள்வதில்லை.
வளரும் நிலா கூட
பிம்பத்தில் ஓசையின்றி
வளர்கிறது.
ஊடகம் எதிலும் தன்னை பறிகொடுப்பதில்லை.
பிம்பம் பெரியதாய்
பிம்பம்.
நிலாவால் அசையாத நீர்
நீருக்கும் ஓர் even தன்மை.
பவுர்ணமி நிலாவால்
நீர் எம்பி குதிக்கின்றது.
நிலா தோன்றா நாளும்
நீர் அதை தேடி எழுகிறது.
நிலாவின் முழுமையும்
இருப்பு அற்ற நிலையும்
ஊடகத்தின் மேற்புறத்தை
சலனமாய் அதிர வைக்கிறது.
நிலா
நீரில் தெரிவது மட்டும் பிம்பம் அல்ல.
மேகத்தில் தோன்றுவதும் பிம்பமே.
நீர்
பிம்பத்தின் பிம்பத்தை
வலியில்லாமல்
தன்னுள் இருந்து
இருப்பற்று
வெளிப்படுத்துகிறது.

இது மாயை அல்ல.
இதுபோன்ற மனிதர்களின்
மனதையும் நான் கண்டிருக்கிறேன்.
even தன்மை
சமத்துவமாய்
மிகச் சிலரின்
நெஞ்சக நினைப்பாய்
இன்றும் உள்ளது

இவனும் புத்தன்தான்.
புத்தனுக்கும் அழத் தெரியும்
நான் கண்டதில்லை.
புத்தனுக்கும் சிரிக்கத் தெரியும்
நான் கண்டதில்லை.
இவனும் மனிதன்தான்.
இவன் அழுகை
மனித பயணத்தின் ஒரு பள்ளத்தாக்கு.
இவன் சிரிப்பு
எம்பியிருக்கும் ஒரு மலை.
மலையும், ஆழமும் இவன்
பயணத்தில் இருந்தாலும்
நான் கண்டதில்லை.
நான் பார்த்த புத்தன்
even தளத்தில்
அச்சமற்று
தன்னை அறிந்து கொள்ளாமல்
புறத்தை
அசைத்துச் செல்கிறான்
இன்றைய புத்தன்.

நான்:
சலனமற்ற நீரில்
நிலவும் சில மேகங்களும் தெரிகின்றன.
அணு
வான்வெளி கோள்களின்
தெரியும் பிம்பங்கள்.
ஊடகத்தின் வழி
தெரியும் உருவமே பிம்பம்.
அவர் காட்சிக்கு
கோடீஸ்வரனாகத் தெரிகிறார். ஆனால்
அவர் அவ்வாறில்லை.
இன்னொருவன் துறவி போல
தோற்றமளிக்கிறார். ஆனால்
அவனும் அவ்வாறில்லை.
உடல் பலத் தோற்றங்களைத்
தெரிவிக்கிறது.
உடல்,
என்னுடைய உடல் - எனது பிம்பம்
நான்
உள் மறைந்திருக்கும்
உரு.
உரு-விற்கும் பிம்பத்திற்கும்
ஏன் இவ்வளவு தூரம்.
நான்
வேகமாக மாறத் தெரிந்தேன். ■

# கேள்வி பதில்

முனிமா

**நுழைவுத் தேர்வை ரத்து செய்து அரசு ஆணை வெளியிட்டது என் போன்ற தலித் மாணவர்களுக்கு மிகவும் சந்தோஷத்தை அளித்தது. ஆனால் கோர்ட் அந்த ஆணையைத் தடை செய்து விட்டது. ஏனிப்படி நடக்கிறது எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.**

**- மணியன், கரிவலம்வந்தநல்லூர்.**

நுழைவுத் தேர்வை அறிமுகப்படுத்தியதற்குக் காரணம், கட்சி சிபாரிசுகள் மூலம் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத் துறைகளில் மாணவர் சேர்க்கை நடைபெறுவதைத் தவிர்க்கத்தான். பள்ளி கல்வி +2 வகுப்பு வரை வெவ்வேறு முறைகளில் இருப்பதால், +2 மதிப்பெண்களைக்கொண்டு மாணவர் தகுதியைத் தீர்மானிக்க முடியாதென்பதும் ஒரு காரணம்.

இதைச் சரி செய்ய, கிரமப்புற மாணவர்கள் மற்றவர்களுக்கு நிகரான வாய்ப்புக்களைப் பெற ஒரு குழு அமைத்து, இதுவரை உள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்து, அவற்றிற்குத் தீர்வு காண வழிவகை செய்ய வேண்டியது அவசியமான ஒன்று. கிராமப்புற மாணவர்களுக்கு அல்லது சி.பி.எஸ்.இ. மூலம் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம். அல்லது எல்லோரும் ஒரே வகையான தேர்வு முறையை அனுசரிக்க வழிவகை செய்யலாம். அல்லது கிராமப்புறங் களில் பள்ளிக் கல்வித் தரத்தை உயர்த்தி வழி செய்யலாம். அல்லது ஆய்வின் முடிவு நுழைவுத் தேர்வை ரத்து செய்வதுதான் சரி என்றால் அப்படியும் செய்யலாம்.

ஆனால் நுழைவுத் தேர்வை எழுதவும் அனுமதித்து விட்டு, அதன் முடிவுகளும் அறிவிக்கப்பட்ட பின்பு நுழைவுத் தேர்வை ரத்து செய்தது என்பது வரப்போகின்ற தேர்தலை குறி வைத்துத்தான் என எண்ணத் தோன்றுகிறது.

நீதிமன்ற வழக்கில் அரசு தரப்பில் தயாரிக்கப்பட்ட தர்க்கங்களும் ஏனோதானோ என்ற அடிப்படையில் இருப்பது நமது சந்தேகத்தை வலுப்படுத்துகிறது.

எதையும் முறையாக, உரிய காலத்தில் செய்தால் தான் நீதிமன்றமும் ஆதரவாகச் செயல்பட முடியும் என்பது என் கருத்து.

**சேதுசமுத்திரத் திட்ட துவக்க விழாவில் தமிழக முதல்வர் கலந்து கொள்ளப் போவதில்லையாமே?**

**ராமு, தூத்துக்குடி.**

2300 கோடியில் நிறைவேற்றப்படவிருக்கும் இத் திட்டத்தினால் விளையும் நன்மைகள் யாருக்குப் போய்ச் சேர்கின்றன? முதற்கட்டமாக அல்லது உடனடியாக பயன்பெற இருப்பவர் ஏறக்குறைய நாற்பது கப்பல் அதிபர்கள். அதாவது கோடீஸ்வரர்கள். இதன் மூலம் அடுத்த கட்டமான தொழில் அபிவிருத்தியில் பயன் பெறப் போகிறவர்கள் மிகக் குறைந்த அளவிலான வசதி படைத்த வணிகர்கள். வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மிக அதிகமான தலித் மக்களுக்கும் இந்தத் திட்டத்திற்கும் சம்பந்தமில்லை. இந்த இரண்டாயிரத்து முன்னூறு கோடியில் மத்திய அரசு விளைநிலங்களை வாங்கி தலித் மக்களுக்கு அளிக்குமேயானால், அதனால் கிடைக்கும் நன்மைகள் பலப்பல. இப்படித்தான் நமக்கு எண்ணத் தோன்றுகிறது. நம்முடைய எண்ணங்கள் இவ்வாறாயிருக்கும்பட்சத்தில் விழாவில் யார் கலந்து கொண்டால் என்ன, அல்லது கலந்து கொள்ளா விட்டால்தான் என்ன? தமிழக அரசு பட்ஜெட்டில் தலித் மக்களுக்கு சேர வேண்டிய 1800 கோடியை தனியே ஒதுக்குமாறு கேட்பதிலேயே நமது கவனம் இருக்கிறது. என்ன செய்ய?

**இறுதியாக பாஸ்வான் கட்சி இரண்டாக உடைந்து விட்டது என்று செய்தித்தாளில் பார்த்தேன். தமிழக அளவில் இதன் விளைவுகள் என்ன?**

**- இராமலிங்கம், குத்தாலம்.**

தேர்தல் அரசியல் என்பது லாட்டரி மாதிரி. கோடி கோடியாக டிக்கட்டுகள் விற்பனை செய்யப்பட்டாலும் அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்குத்தான் பரிசு. தனி நபர் லாபம்தான் தேர்தல் அரசியலில் உண்டு என்பதை இச்செய்தி அறிவிக்கிறது. எனினும் பொறுத்திருந்து பார்ப்போம்.

**தலித் ஒற்றுமை என்று நீங்கள் பலவிதமாகப் பேசியும் எழுதியும் வருகிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில் தலித் ஒற்றுமை சாத்தியமே இல்லை. பல காலமாக தலித் இயக்கங்களைப் பார்த்து கற்ற அனுபவத்தில் தேர்ந்த பாடம் இது. உங்கள் கருத்து என்ன?**

**- பிரிட்டோ, சென்னை.**

மூத்த பிள்ளை படிக்காமல் ஊர் சுற்றி பெயிலாகி விட்டதால் உங்கள் இளைய பிள்ளையை படிக்க விடாமல் நிறுத்தி விட்டீர்களா? சில ஆண்களும் பெண்களும் விவாகரத்து கேட்பதால், உங்கள் பிள்ளைக்கு திருமணமே வேண்டாம் என்று முடிவு செய்து விட்டீர்களா? சொந்த விஷயத்தில் எவ்வளவு அக்கறையுடனும், கனிவுடனும், நம்பிக்கையுடனும் இருக்கிறீர்

*கள்! ஆனால் பொது விஷயம் என்று வந்துவிட்டால் மட்டும் எவ்வளவு சுலபமாக கைகழுவி விடுகிறீர்கள் நீங்கள்? இப்படி நம்பிக்கை இல்லாமல் இருப்பதற்கு பொறுப்பின்மையே காரணம். ஆகையால் நம்பிக் கையை இழக்காமல் தொடர்ந்து திட்டமிட்டு உறுதியு டன் செயல்படுவோம். வெற்றி நிச்சயம்.*

**எங்கள் ஊர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கருட மங்கலம். நாங்கள் தலித்துகள். இங்குள்ள சாலை குண்டு குழியுமாக இருப்பதினாலும், கலெக்ஷன் இல்லை என் பதனாலும் எங்கள் ஊருக்கு வந்த பஸ்ஸை நிறுத்தி விட் டார்கள். நாங்கள் ஊர் மக்களுடன் சேர்ந்து சுமார் இரு நூறு பேர் சென்ற மாதம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு முறையிட்டோம். ஆனால் எவ்விதப் பலனு மில்லை. எங்கள் ஊருக்கு பஸ் வர என்ன செய்யலாம்?**

**- ராணி, கருடமங்கலம்.**

*சாலையைச் செப்பனிடக் கோரி பஞ்சாயத்துத் தலைவரையும், தொகுதி சட்டமன்ற உறுப்பினரையும் அணுகலாம். நீங்களே மினி பஸ் இயக்க அனுமதி வாங்கலாம். அல்லது பள்ளிக்கருகிலேயே விடுதி கட்ட திட்ட மிடலாம். சைக்கிள் போன்ற வாகனங்களைப் பயன்படுத்தலாம். - பஸ் வசதி வரும் வரை, விடுதி கட்டும் வரை அல்லது சாலை செப்பனிடும் வரை. தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளலாம். இவ்வாறு பல வழிகள் உள்ளன. ஆனால் உங்கள் ஊரில் நாற்பது ஏக்கர் பஞ்சமி நிலங்கள் இருப்பதாக திருச்சி சண்முக சுந்தரம் (பஞ்சமி நில மீட்பு இயக்கம்) மூலம் அறியப் பெற்றோம். ஊருடன் சேர்ந்து பஸ்ஸுக்காகப் போரா டும் நீங்கள் இந்தப் பஞ்சமி நிலத்தைத் திருப்பித் தரு வதை ஊருடன் சேர்ந்து போராடுவதற்கு முன்நிபந் தனையாக வைக்க முடியுமா என்று சிந்தியுங்கள். வாழ் வாதாரமான நிலத்தைப் பறிகொடுத்து விட்டு நிற்கும் நீங்கள் இதைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய அவசிய முள்ளது.*

**வழக்கறிஞர் கௌதம சன்னா அயோத்திதாஸர் பற்றிய அரிய வரலாற்றுக் குறிப்புகளை எழுதியுள்ளார். மிகவும் வரவேற்கப்படுகிறது அவரது எழுத்து. தயவு செய்து அயோத்திதாஸர் வாழ்க்கையையும், வரலாறையும் தொடராக எழுதச் சொல்லுங்கள் அவரை.**

**- தேவன், சென்னை.**

*சாகித்ய அகாதமிக்காக பண்டிதர் அயோத்திதாஸ ரின் வாழ்க்கை வரலாறை எழுதிக்கொண்டிருக்கிறார் சன்னா. இன்னும் ஓரிரு மாதங்களில் முடித்து விடுவார். சாகித்ய அகாதமி அதைப் புத்தகமாக வெளியிட இருக் கிறது.*

**மதுராந்தகம் அருகிலுள்ள தச்சூரில் தலித் கிறிஸ் தவர் களின் போராட்டத்தை தலித் முரசு பத்திரிக்கையில் படித்து அறிந்தேன். புதிய கோடாங்கி பத்திரிக்கையில் அதைப் பற்றிய செய்தி ஏதுமில்லை. ஏன்?**

**- குமரேசன், மங்களாபுரம்.**

*புதிய கோடாங்கி தச்சூர் போராட்டத்தை வீடியோ வில் பதிவு செய்து குறும்படமாக வெளியிட உள்ளது. குறும்படம் தயாரித்து உலக கத்தோலிக்கச் சங்கத்தின் தலைமையிடமாகிய ரோமில் திரையிட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஏனெனில் தச்சூரில் உள்ளது கத்தோலிக்க தேவாலயம். உலகக் கத்தோலிக்கர்கள், இங்குள்ள கத்தோலிக்கரிடம் உள்ள சாதி ஆதிக்கத் தைத் தெரிந்து கொண்டு வெட்கப்படட்டும், கண் டனம் செய்யட்டும் அல்லது நடவடிக்கை எடுக்கட்டும்.*

**மக்கள் அறியாத அம்பேத்கர் தொடர் சிறப்பாக வந்து கொண்டு இருக்கிறது. முடிந்தவுடன் புத்தகமாக வெளியிட ஏற்பாடு செய்யுங்கள்.**

**- பூபாலன், செங்கல்பட்டு.**

*உங்கள் ஆலோசனை ஏற்கப்படுகிறது.*

**சுனாமி பாதிப்பிற்காக பலவகை தொண்டு நிறு வனங் கள் ஏராளமான நிதி உதவி பெற்றும் மெத்தன மாகச் செயல் படுகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் வறுமையிலும் வேலை யில்லாத் திண்டாட்டத்திலும் வாடுகிறார்கள். வழி என்ன?**

**- குப்பன், நாகபட்டிணம்.**

*தொண்டு நிறுவனங்கள் பெற்ற நிதியை பகிரங்க அறிவிப்புச் செய்ய வேண்டும். அதேபோல் நிவாரணப் பணி, நீண்டகாலப் பணி ஆகியவற்றையும் மக்கள் குழு வில் வைத்து அவர்களின் ஒப்புதல் பெற்று செயல் படுத்தட்டும். அப்போதுதான் பெறப்பட்ட நிதி பாதிக் கப்பட்ட வர்களைச் சென்று சேரும்.*

**பஞ்சமி நில மீட்பு தேர்தல் அறிக்கையாக வரப் பெறும் என்று குமுதம் ரிப்போர்டர் செய்தி படித்தேன். மாநில நிலவுரிமைக் குழுப் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி இது. வாழ்த்துக்கள்.**

**- கார்த்திகேயன், சென்னை.**

*அவசரப்பட வேண்டாம். தேர்தல் அறிக்கை இன் னும் வெளியிடப்படவில்லை. தலித்துகளுக்கான ஆறா யிரம் பின்னடைவு இடங்கள் நிரப்பப்படும் என்று கூறி யது சென்ற தேர்தல் அறிக்கை. இருந்தும் ஒரு பின் னடைவு இடம்கூட நிரப்பப்படவில்லை என்பதை தலித்துகள் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. வரும் தேர்தலில் பஞ்சமி நில மீட்பு தேர்தல் அறிக்கை யில் சேர்க்கப்பட்டாலும் ஒரு ஏக்கர் நிலம் கூட மீட்கப் படாமல் போவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆகையால் முன்பை விட பஞ்சமி நிலத்தை மீட்கும் வழிகளை ஆராய்ந்து அனைத்து தலித் இயக்கங்களும் மிகக் கடுமையாக உழைத்தாலன்றி மீட்டெடுப்பு சாத்திய மாகாது. கிராம அளவில் தலித்துகள் ஒன்று சேர்ந்து குழுவாக விழிப்புடன் செயல்படாவிடில் இத்திட்டம் அறிவிக்கப்பட்டாலும் நிறைவேறாது என்பதைக் கவ னத்தில் கொள்ள வேண்டும். பஞ்சமி நிலம் மட்டுமல் லாது, நிலச் சீர்திருத்தத்தை அமல்படுத்தவும், தரிசு நிலங் களை தலித்துகளுக்கு வழங்கவும் கடுமையான முயற் சிகள் மேற்கொள்ள வேண்டி உள்ளது.* ◆

# பெரியாண்டவன்

பவானி

சின்னமல அடிவாரத்தில நாந்த பாளையம்னு ஒரு ஊரு. இந்த மலைக்கு எதுத்தாப்பல கீற மல பேரு கோனா குன்னு. இந்த ரெண்டு மலைக்கும் நடுவுல கீற ஊர்தான் நாந்தபாளையம். கண்ணுக்கு எட்டின தூரத்துக்கு பச்செ பசேல்னு பயிறு வெளையுது. கல்லக்காவும், நெல்லும், துவரையும், உளுந்தும், கெவுரும் வளந்தது வளந்தபடியேயும், அறத்தது அறத்தபடியேயும் கீதுங்க. மண்ணா... தங்கம் போட்டா தங்கம் வெளயும்.

நாளஞ்சு வருசத்துக்கு முன் னெல்லாம் இப்பிடியாபட்ட வெள்ளாம வெளஞ்சது இல்ல. சின்னமலயில பெய்யிற மழ தண்ணி ஓடியாந்து வீந்தாலே கோடி வியற ஏரி பக்கத்திலயே கீது. இந்த ஏரி தண்ணி நம்பிதான் பயிறு பச்சிலுவைப் பாங்க. காயிற காய்ச் சல்ல கொஞ்சம் நஞ்சம் தண்ணியும் ஈத்துக்கிச்சி. இதனால அவங்கவங்க தான் சத்துக்குத் தகுந்தாபல கெணறு வெட்டி பயிர் வெச்சாங்க. அதலயும் தண்ணி நிக்கல. கழனி காடும் கொல்ல மோடும் காஞ்சிங்கெடக்கது. மானம் ஈத்துப் புடிச்சி காஞ்ச காய்ச்சல்ல ஏரிக்கரையில நாளஞ்சு பன மரமும் ஒனந்து போச்சி. தோப்புல இருந்த புளிய மரமும் மாமரமும் பட்டுப் போச்சி. வெறும் அனல் காத்துதான் வீசிங்கடுக்குது. சின்னமலயில கீற மரமும் மஞ்ச புல்லும், செடிகொடியும் காஞ்சி சுண்டி போச்சி. இப்ப ஜனங்க வவுத்துப்பாட்டுக்கே லோலு பட்டுப் போயி, ஆட்டமாட்டெல்லாம் ஒன்னும் முக்காலுமா வித்து துண்ணுபுட்டு, நெலத்த அப்பிடியப்பிடியேவுட்டு ஊர் மேல போயி சேர்ந்திச்சிங்க. தெருவுல காக்கா கரகுஞ்சி கெடையாது. வூட்டு மஞ்சம் புல்லையும் கொம்பு கொடியையும் செல்லரிச்சிங்கடக்குது. வெய்யில் லயும் காத்துலயும் உலுத்துப் போன மண்ணு சுவத்த கருப்பு தும்பாட்டிங்க கதெ பேசிக்கினு காவல் காத்து கெடக்குது. முல்லு வேலி தோட்டத்ல சில்லு வண்டு கத்துதே தவிர மழை வந்த பாடில்ல. வூட்டும் பின்னால கீற புளிய மரத்தில கட்டி வெச்ச கொல்லு ஒனந்த மாடு யரப்பு வாங்கி கத்தனது கத்தன படியே கெடக்க வேண்டியதுதான்.

இப்ப எல்லாம் அந்த மதிரி பஞ்ச காலம் இல்ல. நல்ல வெள் ளாமை. கழனிகாடும். கொல்ல மோ டும் ஈரங்காத்துங்கெடக்குது. ஏரியி லும், குட்டையிலும் தவளயும், மீனும் மேஞ்சி கெடக்கு. காஞ்சி கெடந்த ஓடயில ஈரம் கசிய, சப் பாத்தியும் கத்தாழயும் தண்ணி தண்ணியா வளந்துகீது. பஞ்சம் பொயிக்க நெலத்தவுட்டு ஓட்ன வங்க திரும்பி வந்து பாத்தா நெலத்த வேத்தாளு ஒட்டிங்கீறா னுங்க. என்னா பண்ணுறது. அஞ் சோ பத்தோ குடுத்தத வாங்கிக்கினு அவங்க காட்டையே முக்கா பங்குக்கு ஏர் அடிச்சிங்கீதுங்க.

ஓடம்புல ஜொன நீர்பட்டது தான் தாம்சம், முல்லுபட்ட காயம் எப்படி போச்சினே தெரியல. தல மூழ்வி நிமிந்து பாத்தா, எங்க இருக்கிறோம் எவத்த இருக்கிறோம்னு தெரியல. வானத்துக்கும் ஜொனைக்கும் கோல் புட்சாப்பில வெளிர் நீல நெறத்தில வெளிச்சம் பிச்சிக்கினு ஆடாம கொள்ளாம அடிக்கிது. புதுசா வெளிச்சத்த பாத்த ஜீவ ராசியில்லாம் அலண்டு அட்சிக்கினு ஓடுதுங்க. மரத்திலயும் கூண்டுலயும் இருந்த பறவ கூட்ட மெல்லாம் லபலபன்னு யரச்சிலு போட்டுக்கினு பிச்சிலிட்டுக்கினு போவுது

இந்த ஊர்ல ஒவ்வொரு வகை ராவுக்கும் ஒரு குல தெய்வம் இருக்கும். பெரியாண்டவன கும்புற வகை யராதான் ஊர் நாட்டாமை. இத னால சித்திர மாசத்தில பெரி யாண்ட வனுக்கு முப்பூச குடுத்து கெறிசோறு போடுவாங்க. அக்கம் பக்கத்து ஜனமெல்லாம் வந்து சேறும். மக்க மனு சார்னு இருந் தாலும், இல்லாட்டியும் சாதி சனம் ஒன்னுங்கிறதனால வூட்டுக்கு வூடு சாப்பிட கூப்புடு வாங்க. எல்லாம் கெறி சோறுதான். சாந்திரத்தில கெயகெட்டைங்க கள்ளும் சாராயத் தையும் குடிச்சிபுட்டு கும்மாளம் போட்டுத் திரியும். மின்னேரத்தில வுட்ட ஆட்டம் விடிய விடிய நடக்கும். ஜனமெல்லாம் ஆட்டம் பாத்துட்டு பளபளனு பொழுது வெடிய வூடு போய் சேரும்.

பெரியாண்டவன் சொம்மா வாட்டசாட்டமா இருப்பான். கடா மீசையும், நத்தெ கண்ணும், முட்டெ ஓதறும் சட்டியாட்டம் முஞ்செ வெச்சிருப்பான். ஒலக்கை யாட்டும் கையும், காலும் பனுவு கெல்லாட்டம் மார வெச்சிருப்பான். இதல சொக்கி வீந்த பொம்பளங்க எம் மாத்தரம். பத்தாளு வேலைய ஒரே ஆளா வெய்யில்னு மழைன்னு பாக் காமசெய்வான். அதுக்கேத்தாப் பல மொடா மொடாவா கூழும், சட்டி நெறய கெறியும் துண்ணுவான்.

கட்ன பெண்டாட்டி போதாதுன்னு பல பொம்பளங்கிளையும் வளச்சி வெச்சிந்தான்.

சின்னமலயில வேங்கையும், சீப்பு மரமும், மூங்கிலும் வளந்து கெடக்கும். அதவுட்டா நெல்லி மரம் ஏகபட்டடது. மஞ்சம்புல்லு குத்துலு குத்தலா வளந்துங் கெடக்குது. மல உச்சி வரைக்கும் யாரும் போவ மாட்டாங்க. ஆடு மாடு மெய்க்கப் போறவங்ககூட அந்த சட்டப்பறை வரைக்கும்தான் போவாங்க. அதுக்க மேல ஆட்டெ மாட்டெ ஓட்டியும் போவ முடியாது. ஏதோ சிங்கம் புலி யானைக்கு பயந்து இல்ல. கன்னி மாருக்கு பயந்துதான். மல உச்சில ஜொன ஒன்னு கீது. அதலதான கன்னி மாருங்க தங்கிங்கீது. அந்த ஜொன யிலிந்து தீர்த்தத்த எடுத்தாந்து, ரொம்ப நாளா சந்தனப்பட பட்டு, கேடுபடா படுத்துங்கீறவங்களுக்குப் போட்டம்னா, நோவு நொடிவுட்டுப் பூடும். அந்த தீர்த்தத்த கன்னி கழியாத அறியாத பசங்கதான் எடுத்தார்னம். மத்தபடி வேற யாரும் எடுத்தாரக் கூடாது. இதெல்லாம் யாரால எடுத்தார முடியும். முன்னப் பிடித்தான் ஒரு பையன் தீர்த்தம் எடுத்துக்கினுவரன்னு போனவன் போனவன்தான். இன்னி வரைக்கும் வூடு திரும்பல.

இந்த ஜொனயில இறங்கி தல மூழ்கிறவனுக்கு சகல சம்பத்தும் சக்தியும் கெடைக்கும். அந்த ஜொனய சுத்தி ஏழு வெள்ளை யானைங்க காவலுக்கு இருக்கும். இதுங்கள மீறி போயி தீர்த்தத்த எடுத்துக்கினு வரவோ, குளிச்சிட்டு வரவோ முடியாது. நம்ம பெரியாண்டவனுக்கு இது மேல ஒரு கண்ணு ரொம்ப நாளா வச்சிருந்தான். ஆத்தா பேச்சியும் கேக்கல, கட்ன பொண்டாட்டி பேச்சியும் கேக்கல. கூத்தி யாரு பேச்ச கேட்டுக்கினு அமாவாச கெருக்கல்ல கெளம்பி போனான். கும்மிருட்ல கல்லு முல்லு பாக்காம போனது போனபிடியே கீறான். சட்டப் பாறைக்கு மேல போறது லேசு பட்ட காரியமில்ல. அதுக்கு மேல வெறும் மூங்கெ பொதாறு. கை காலு மூஞ்செல்லாம் மூங்கெ மலாரு பட்டு ரத்தம் சொல சொலயா வழிது. எல்லாத்தையும் தாங்கினு தம்புடிச்சி போயிக்கினுகீறான். மானத்தல மினுக்கிற நட்சத்திரமா கிட்சத்திரமா ஒன்னு கெடையாது. மினுக்காம் பூச்சி இங்கவொன்னு அங்க வொன்னுமா பறந்து போவுது. ஓடைச் சரவில ஆந்தைங்க அலற சத்தம் கேக்குது. இவனுக்கு முன்னால கீற கல்லு சந்திலந்து திடுக்கினு பிச்சிலிட்டுக்கினு ஓட்ன மொசலு சத்தம் கப்பங் கலங்கி குண்டி ஓடிஞ்சி வேத்து விருவிருத்துப் பூட்டான். இருந்தாலும் மனச தளரவுடல. மறுபிடியும் பொதாரு ஓடையின்னுபாக்காம கன்னிமாரு ஜொன கிட்டப்போவ பாதராவு ஆயி போச்சி.

மல மேலந்து சுத்திமுத்திப் பாக்கிறான். எங்க பாத்தாலும் கருகும்முனு கீது. எங்கோ ஒன்னு ரெண்டு எடத்தில வெளக்கு வெளிச்சம் தெரியுது. மத்தபடி ஒன்னும் தெரியல. கழனி காட்டுல குள்ளநரி ஊளவுடுற சத்தம் மல உச்சி வரைக்கும் கேக்குது. கை காலயும், மூஞ்சிலயும் வயிஞ்ச ரத்தத்த தொடச்சா ஒரே எரிச்சல் தாங்கல. ஜொனயாண்ட பாத்தா ஏழு வெள்ளை யானயும் தும்பி ஆட்டிக்கினு கீதுங்க. எல்லா யானையும் ஒன்னபோலவே கீது. பெரியாண்டவனுக்கு இப்ப என்னா பண்றது ஏது பண்றதுனு தெரியாம பெரிய கல்லும் பின்னால மறஞ்சிங்கிறான். அந்த நேரத்திலதான் யானைங்க எல்லாம் ஒன்னும் பின்னால ஒன்னா ஓடை பக்கமா போயி மூங்கெ குருத்த பட்டு பட்டுன்னு ஓடிச்சி துன்னுங்கீறத பாத்துப்புட்டு எக்காள மிட்டான்.

வட்டமா கீற ஜொனகிட்ட போயி நின்னு பாத்தான். தீர்த்தம் உள்ளக் கீதா? மேலயே கீதான்னு தெரியில. பக்கத்தில கெடந்த கெல்ல தூக்கி உள்ள போட்டா தொபுக்குன்னு தீர்த்தம் மேல அடிக்கிது.

சத்தங்கேட்ட யானைங்க துன்னுந்த மூங்கெ குருத்த வுட்டுப்புட்டு ஒரே ஓட்டமா பிளிரிட்டுக்கினு வரதுக்குள்ள ஜொனயில இறங்கிட்டான். ஓடம்புல ஜொன நீர் பட்டது தான் தாம்சம், முல்லுபட்ட காயம் எப்படி போச்சினே தெரியல. தல மூழ்வி நிமிந்து பாத்தா, எங்க இருக்கிறோம் எவத்த இருக்கிறோம்னு தெரியல. வானத்துக்கும் ஜொனைக்கும் கோல் புட்சாப்பில வெளிர் நீல நெறத்தில வெளிச்சம் பிச்சிக்கினு ஆடாம கொள்ளாம அடிக்கிது. புதுசா வெளிச்சத்த பாத்த ஜீவ ராசியில்லாம் அலண்டு அட்சிக்கினு ஓடுதுங்க. மரத்தில்யும் கூண்டுலயும் இருந்த பறவ கூட்ட மெல்லாம் லபலபன்னு யரச்சிலு போட்டுக்கினு பிச்சிலிட்டுக்கினு போவுது. ஆனா யானைங்க கண்ணு பிதுங்க பிளிருதே ஒழிய ஜொனய வுட்டு அப்பால போவல.

ஜொன கரையெல்லாம் அழகழகா செதுக்கி வெச்சிக்கிற பொம்பல செலயும், தூணும் வெளிச்சத்தில மின்னுது. யானைங்களால ஏற முடியாம ஜொனத்தியே மண்டையில ரெத்தம் கசிய கசிய முட்டுன முட்டுல, ஜொனயே நெலத்தில மிதக்கிறாப்பல ஆட்டம் காணுது. தண்ணி மேலும் கீழும் அலம்பும் போதெல்லாம் செலயும் தூணுங்களும் தண்ணி ஒழுவிக்கினு நல்லாத் தெரியுது. பெரியாண்டவனுக்கு பழைய நெனவே இல்லெ. புது ஒல சுத்துக்கே பூட்டான். இவன் ஓடம் பக் கண்ட செலயெல்லாம் படுக்கு படுக்கினு தண்ணி ஒழுவ கண்ண சிமிட்டுது. ஒதடு அசையுது. செத்த நேரத்துல கன்னம் பிதுங்க சிரிக்கது. திடுதிப்புனு எல்லா செலயும் கொழ கொழன்னு புழுவாட்டம் நெளியுது. சட்டியில துள்ளர வெறா மீனாட் டம் பெரியாண்டவங்கூட எகிறி குதிச்சி மேயுதுங்க.

யானைங்க பிளிர்றன பிளிர்லயும், முட்டுற முட்டுலயும் ஜொன மேலும் ஆடி அலம்பவே பெரியாண்டவன் கரை மேல ஏறி நின்னு செத்த கண்ண மூட்னதுதான் தாம்சம். ஜொனைக்கும் வானத்துக்கும் பிரகாசமா எரிஞ்ச வெளிச்சம் திடீர்னு காணோம். கம்மு இருட்ல றெக்கை மொளச்சி ஜொனையே கொத்தி பறந்து ஊருக்குத் தூக்கிம் புட்டான். பின்னாலயே றெக்கை மொளச்சி பறந்துபோன யானைங்களால புடிக்க முடியாம தோத்துப் புட்டு கோனா குன்னுல கீற வங்குக் குள்ள மானந் தாங்காம பூந்துக்கிச்சி.

ஜொன நீரு நெலத்தில இறங்கி ஊற ஊற, பாலம் பாலம்மா வெடிச்சிப்போன கெழனிகாடும், கொல்ல மோடும் ஆவி பறக்க ஈரம் கசியுது. ஏரி, குளம் குட்டை மடுவுன்னு ஊத்தெடுக்கிது. ஏரிக் கரையில காஞ்ச பன மரமும், தோப்புல பட்டுப் போன புளியாம் மரமும், மா மரமும் துளுக்குது. பூக்குது. காய்க்கிது. தீஞ்ச சின்னமல பூரா பச்செபசேல்னு ஆயி போச்சி - பெரியாண்டவன கும்பிடற வகைறா தவிர.

# பட்ஜெட் 2005

ஐ. ஜா. ம. இன்பகுமார்
(inbame@yahoo.co.in)

"இந்த பட்ஜெட்டுக்கு 10-க்கு 8 மதிப்பெண் கொடுக்கலாம்" (இந்திய பொருளாதார நிபுனர்கள்)

"1997-க்குப் பின் வந்துள்ள, நல்லதொரு யதார்த்தமான பட்ஜெட்" (இது தரகு முதலாளிகள்)

"இதற்கு முன் எந்த பட்ஜெட்டும் இதனைப்போல கிராமப்புற வளர்ச்சிக்கான திசைவழியை சுட்டிக்காட்டியதில்லை " (வலது கம்யூனிஸ்ட்)

பட்ஜெட் என்பது ஒரு வருடத்தின் நிதி அறிக்கை. கடந்த சில வருடங்களாக வருடத்தின் நிதி அறிக்கையாக பார்க்கப்பட வேண்டிய பட்ஜெட், தற்பொழுது அரசுகளின் கொள்கை அணுகுமுறைகளின் சாரமாக பார்க்கப்படுகின்றது. இந்த பட்ஜெட்டில் விவசாயம், உற்பத்தித் துறை, உள் கட்டமைப்பு ஆகியவற்றிற்கு அதிக கவனம் செலுத்தியுள்ளதாக (பார்க்க இந்தியா டுடே) ப. சிதம்பரம் கூறியுள்ளார். இவர் தற்போதைய நிதி அமைச்சராவார்.

**பொதுவான பார்வை**

• விவசாய உற்பத்தித் துறை, உள் கட்டமைப்பு ஆகியவற்றிற்கு அதிக கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக ப. சிதம்பரம் கூறியுள்ளார்.

• முதலாளிகள் மூலம் வளர்ச்சியை ஊக்குவிக்க நினைத்தாலும், உற்பத்தித் துறையில் இந்திய தொழில் துறை இன்னும் சிறப்பாக தன்னை போட்டிக்குத் தயார் செய்ய வேண்டி இருக்கின்றது.

• தேசிய குறைந்தபட்ச செயல்திட்டத்திற்கு இணங்கிப்போய் இந்த பட்ஜெட் உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயத் துறையை அரசு அல்லது தனியார் முதலீடு மூலம் வளர்த்தால், உற்பத்தித் துறையில் இந்திய தொழில் துறையை சிறப்பான சந்தைப் போட்டிக்கு தயார்படுத்துதல்.

**நாமம் போடும் நலத்திட்டங்கள்**

• ஐக்கிய முன்னணியின் 'குறைந்தபட்ச செயல் திட்டத்தில்' ஒவ்வொரு கிராமப்புற, நகர்ப்புற ஏழை மற்றும் கீழ்நிலை நடுத்தர குடும்பத்திலும், உடற்பகுதியில் உள்ள ஒருவருக்கு குறைந்தபட்ச கூலி கிடைக்கும் வகையில் ஆண்டுக்கு 100 நாட்களாவது சட்டபூர்வ வேலை உத்திரவாதம் கிடைக்கும்.

**பட்ஜெட் சொல்வது என்ன?**

• இந்த திட்டத்தில நகர்ப்புறத்தை ஒதுக்கிவிட்டு, 'தேசிய கிராமப்புற வேலை உத்திரவாதத் திட்டம்' என புதிய திட்டம்போல பெயர் சூட்டப்பட்டுள்ளது.

• இந்த திட்டத்திற்கு 5400 கோடி ரூபாய், 50 லட்சம் டன் உணவு தானியம் என இரண்டுமாக சேர்த்து 11,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இது கடந்த ஆண்டை ஒப்பிடும்போது 27.5% அதிகம் எனவும் கூறப்பட்டுள்ளது.

• பணத்தின்/ரூபாயின் வீழ்ச்சியை கணக்கிடும் போது ஒதுக்கீடு மிகவும் குறைவாக உள்ளது.

**பட்ஜெட் குறித்த ப. சிதம்பரத்தின் பார்வை**

• பட்ஜெட் 2005, கூட்டணி அரசின் முன்னுரிமைகளை பிரதிபலிக்கிறது.

• தேசிய குறைந்தபட்ச செயல் திட்டத்திற்கு இணங்கிப் போகிறது.

• விவசாயம், உற்பத்தித் துறை, உள் கட்டமைப்பு ஆகியவற்றிற்கு அதிககவனம் செலுத்தப்பட்டுள்ளது.

• முதலீடுகள் மூலம் வளர்ச்சியை அதிகரித்தல்.

• விவசாயத் துறையை அரசு மூலம் ஊக்குவித்தல் அல்லது தனியார் மயமாக்குதல்.

• தொழில் துறையை, சந்தைப் போட்டிக்கு தயார் படுத்துதல்.

• ஜவுளி, சர்க்கரை போன்ற துறைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்துதல்.

• உள் கட்டமைப்பு வளர்ச்சிக்காக 'சிறப்பு இலக்கு வாகனம்' என்ற நிதி விநியோக முறையை உருவாக்கியிருத்தல்.

• 10,000 கோடியை பயன்படுத்தக்கூடிய புதிய திட்டங்களை அடையாளம் காணுதல்.

• ஒரு குறிப்பிட்ட மட்டம் வரை நேரடி வரி ஏதும் இல்லை.

• கார்ப்பரேட் மீதான வரி அதிகரித்தல்.

• உற்பத்தித் துறைக்கும், உறபத்தி சாராத துறைக்கும் சமாளித்தல் வரி விதித்தல்.

• சென்வாட் விகிதத்திற்கு சமமான தீர்வைகள் விதித்தல்.

இவற்றில் பெரும்பாலானவற்றை காங்கிரஸ் அரசு இல்லாத மாநிலங்கள் ஏற்கவில்லை.

கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் என்பது மிகப் பெரிய வேலைவாய்ப்புத் திட்டமாகும். எப்படி யெனில் ஏற்கனவே உள்ள 'கிராம - நகர்ப்புற நபர் களுக்கு வேலைக்கு உணவு திட்டம்' அறிவிக்கப்பட் டுள்ளது. இது தனியான புதிய வேலைவாய்ப்புத் திட்டம் அல்ல.

• வேலைக்கு உணவு திட்டம் ஏற்கனவே இந்தியா முழுவதும் 150 மாவட்டங்களில் மட்டும் செயல்படு கிறது. இந்த ஆண்டு அதே மாவட்டங்களிலோ அல்லது வேறு 150 மாவட்டங்களிலோ இத்திட்டம் செயல் படுமா என்பது இன்னும் தெளிவாக்கப்படவில்லை.

• இதில் வேடிக்கையான விஷயம் என்னவென் றால் இதே திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 11,000 கோடி ரூபாய் பணத்தை இனிமேல்தான் கண்டுபிடிக்க வேண்டும் என ப. சிதம்பரம் பட்ஜெட் உரையிலேயே பகிரங்கமாக சொல்லியிருக்கிறார்.

• இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் அரிசி/ கோதுமையின் விலை கிலோ ஒன்றிற்கு 11 ரூபாய் என பட்ஜெட்டில் ஒதுக்கி உள்ளார். துர்நாற்றம் அடிக்கும் மக்கிப்போன இவ்வரிசியை ரூ.5-க்கு மேல் யாராவது வாங்குவார்களா? என்பதே சந்தேகம்தான். இந்த கணக்குப்படி, இந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் உணவு தானியத்தின் மதிப்பு 2750 கோடி மட்டுமே. இந்த பணத்தோடு நமது மத்திய நிதியமைச்சர் கண்டு பிடிக்கப்போகும் 5400 கோடியையும் சேர்த்து வரும் ஆண்டில் தேசிய கிராமப்புற வேலை உத்திரவாத திட்டத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடு 8200 கோடி மட்டுமே. 11,000 கோடி அல்ல என்பது புலனாகும்.

• மேலும் 'சம்பூர்ண கிராமிய யோஜனா' என்ற திட்டத்திற்கு ஏற்கனவே இந்த நிதி ஒதுக்கீடு 990 கோடி ஆக குறைக்கப்பட்டுள்ளது.

• இதில் தானியக் கூலி 50 லட்சம் டன் நெல், கோதுமை ஆகியவை அடங்கும். இந்த தானியத்தை இந் திய உணவுக் கழகம் வழங்குமாம்.

• ஏற்கனவே உணவு மானிய செலவால் நொடிந்து போய் கிடக்கும் இந்நிறுவனத்தின் தலையில் 50 லட்சம் டன் தானிய கடன் என்றால், இந்திய உணவு கழகம் திவால் ஆக வேண்டியதுதான். ஒரு கட்டத்தில் இந் நிறுவனத்தை அரசால் நடத்த முடியாது என மூடு விழா நடத்தி தனியாருக்கு தாரை வார்க்கப்படும்.

• தனியார்மயத்திற்காக தன்னை தயார்படுத்தி வரும் இந்த இந்திய உணவு கழகத்திற்குத்தான் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகம் முகவர் அமைப் பாக செயல்படும் என கடந்த ஆண்டு நமது முதல்வர் அவர்கள் கூறினார். உழவர்களிடம் இந்திய உணவு கழகம் சார்பாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் நெல் கொள்முதல் செய்து கொடுத்தது. நாங்கள் தனித்த நிறுவனம் அல்ல - ஒரு முகவர் அமைப்புதான், எனவே உழவர்களுக்கு கொள்முதல் ஊக்கத் தொகை தர முடியாது என சட்டமன்றத்திலேயே தமிழ்நாடு அரசு அறிவித்தது.

• இந்நிலையில் இந்திய உணவு கழகத்திற்கு மூடுவிழா நடத்தப்பட்டாலும் அதனை எதிர்நோக்கி 'கார்கில்' 'மான் சாண்டோ' 'கோவர்த்தின்' 'டுபாண் டோ' போன்ற பன்னாட்டு கம்பெனிகள் காத்திருக் கின்றன.

• திட்ட கமிஷனின் கூற்றுப்படி, ஒரு கிராம பஞ்சாயத்தில் ஒரு குடும்பத்திற்குதான் 100 நாட்களுக்கு வேலை கிடைப்பதாக ஒப்புக்கொண்டுள்ளது. கிராமப் புறத்தைச் சார்ந்த ஏழை மக்களுக்கு குறைந்தபட்சம் 100 நபர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் எனில் 40,000 கோடியிலிருந்து 50,000 கோடி ரூபாய் ஒதுக்கப் பட் டுள்ளது வெறும் கண்கட்டி வித்தை மட்டுமே.

• ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்படும் 'இந் திரா சபாய் போஜனா' என்ற திட்டத்தைத்தான் ப. சிதம்பரம் 'பரத் நிர்மான்' என்ற பெயரில் அறிமுகப் படுத்தியுள்ளார். இந்த திட்டத்தின்படி ஏழை மக்க ளுக்கு 2009-க்குள் 60 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக் கப்படும் என உறுதியளித்துள்ளது மைய அரசு.

### கிராமப்புற வளர்ச்சியின் நிர்வாணமாக்கப்பட்ட உண்மை

கிராமப்புற வளர்ச்சிக்கு உதவும் பட்ஜெட் என சொல்லப்படும் இந்த பட்ஜெட்டில், கிராமங்களில் தார்ச்சாலை போட்டு நகரத்தோடு இணைப்பது, கிராமங்களில் தொலைபேசி, கணினி வசதி ஏற்படுத்திக் கொடுப்பதுதான் கிராமப்புற வளர்ச்சி என கூறப்படு கின்றது.

1980-இல் ஒரு நபருக்கு 1780 என்றிருந்த உணவு இன்று 155 கிலோவாக குறைந்துள்ளது. இது இப் படியே செல்லுமெனில் 2020-இல் உணவு தானியங் களை வெளிநாட்டில் இருந்து கூடுதல் விலைக்கு இறக்கு மதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும் அபாயம் உள்ளது.

### உலக முதலாளிகள்தான் உழவர்களா?

• கடந்த ஆண்டு பட்ஜெட்டையும், இந்த ஆண்டு பட்ஜெட்டையும் உற்றுநோக்கும்போது, இந்த ஆண்டு பட்ஜெட்டில் வேளாண்மை என்பதில் 'வேளாண் தொழில் நிறுவனங்களும்' சேர்க்கப்பட்டுவிட்டன என்பது புரியும். வேளாண்மைக்கான நிதி ஒதுக்கீட்டில் இந்நிறுவனங்கள் அதிகம் பயனடையும்.

• வேளாண்மைக்கு அடிப்படைத் தேவை நீராதாரங்கள். இந்த நீராதாரங்களை பெருக்குவதற்கும், இருக்கின்ற நீராதாரங்களை செப்பனிடவும் எந்த திட்டமும் இந்த பட்ஜெட்டில் இல்லை. நாடு முழுவ தும் உள்ள நீராதாரங்களை பழுது பார்க்க, தூர்வார, செப்பனிட்டு பாதுகாக்க வெறும் 100 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியுள்ளது. இதில் தமிழ்நாட்டுக்கு எவ்வளவு வந்துவிடும்?

• இந்த ஆண்டு வேளாண் கடன்களுக்கு வட்டி தள்ளுபடிகூட செய்யவில்லை. ஆனால் கடந்த ஆண்டை விட கூடுதலாக ரூ.3500 கோடி புதிய வேளாண் கடன் வழங்கும்படி அரசு கூறியுள்ளதாக ப. சிதம்பரம் கூறுகி றார். அப்படி எனில் இந்த பட்ஜெட்டில் வேளாண்மை என்ற வரையறைக்குள் வேளாண் சார் தொழில்

நிறுவனங்களும் சேர்க்கப்பட்டுவிட்டதால் இக்கடன் வாய்ப்பை வெறும் ஊறுகாய், சோளப்பொறி ஆகிய வேளாண் சார் தொழில்களில் ஈடுபட்டுள்ள இந்துஸ் தான் லீவர் போன்ற பன்னாட்டு கம்பெனிகளும், டாபர் போன்ற வடநாட்டு நிறுவனங்களும் மட்டுமே வேளாண் கடன் பெறும் வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளன.

• மேல் உணவு தானியங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவது குறித்து இந்த பட்ஜெட்டில் ஒன்றும் பேசப்படவில்லை. அதற்கு மாறாக மாற்று பயிர் திட்டங்களுக்கு வக்காலத்து வாங்கியுள்ளார்.

• இந்தியாவில் ஏழு முக்கிய நகரங்களை அழகு படுத்த 5000 கோடியை ஒதுக்கியுள்ள நிதி அமைச்சர், விவசாய வளர்ச்சிக்கு 6425 கோடி ரூபாய் ஒதுக்கியிருப் பதிலேயே விவசாயத்திற்கான முக்கியத்துவம் எந்த அளவிற்கு உள்ளது என்பதினை நாம் உணர முடியும். இந்த இலட்சணத்தில் அதாவது விவசாய வளர்ச்சிக்கு என ஒதுக்கப்பட்டுள்ள 6425 கோடியில் 10-இல் ஒரு பங்கு, அதாவது 630 கோடி ஏற்றுமதி சார்ந்த தோட்டப்பயிர் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அப்படியெனில் உண்மையில் விவசாய வளர்ச்சிக்கு என ஒதுக்கப் பட்டுள்ளது 6425 கோடி அல்ல, ரூ.5795 கோடி மட்டுமே.

• 110க்கும் அதிகமாக மக்கள் தொகை உள்ள இந்தியாவில் விவசாய கடனுக்காக 1,08,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாய கடன்பெறும் விவசாயி களின் எண்ணிக்கையை ஒரு கோடியாக உயர்த்த வேண் டும் என நமது நிதியமைச்சர் கூடிறியுள்ளார். அப்படியெனில் ஒரு கோடி விவசாயிகள் தவிர மற்றவர்கள் கதி என்ன? இது ஒரு பக்கம் என்றால் ஒப்பந்த விவசாயத்தில் நுழைந்துள்ள பெப்சி, செல்லாக் போன்ற பன்னாட்டு நிறுவனங்களும் ப. சிதம்பரத்தின் பார்வையில் அந்த ஒரு கோடி விவசாய பட்டியலில்தான் வருவார்களா?

• ஒரு கோடி ஏக்கர் புதிதாக விளைநிலமாக்கப் போவதாக பட்ஜெட்டில் முழங்கியிருக்கும் சிதம்பரம், ஒரு கோடி ஏக்கர் நிலத்தை அப்பாவிகளிடம் இருந்து பிடுங்கப்போகிறாரா? அல்லது அரசு புறம்போக்கு நிலங்களை அப்பாவி போன்ற விவசாயிகளிடம் குத்த கைக்கு விடும் சதியா?

**ஆக்டபஸின் கரங்களாக**

WTO-வின் நிபந்தனைகளின்படி 2005 ஏப்ரல் 1 முதல் தாராள இறக்குமதி என்ற நிலைமையை முழுமை யாக நிறைவேற்ற வேண்டும் என்பதிற்கேற்ப மய்ய அரசின் வரிக் கொள்கையும் அமைந்துள்ளது.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் அனைத்து தொழில் உற்பத்திப் பொருட்களுக்கும் சுங்கவரி வெகுவாக வெட்டப்பட்டதோடு சிறு தொழில்களுக்கென ஒதுக்கப்பட்ட சொற்ப தொழில்களுக்கும் பெரும் முதலாளிகளுக்கும் அளந்து விடப்பட்டுள்ளது. சிறு தொழில் நலிவடையும். பதிவு செய்யப்பட்ட 40% சிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. மேலும் 30% சிறுதொழில்கள் மூடுவிழாவை எதிர்பார்த்துவரும் நிலையில் உள்ளது.

**மதிப்பு கூட்டு வரியா? மரண வரியா?**

இது சிறு மற்றும் நடுத்தர வர்க்கங்களை வீழ்த் தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. கடையின் பெயரோ, கையெழுத்தோ இல்லாமல் பென்சிலால் கிறுக்கி கல்லா கணக்கில் மொத்த வாணிகம் செய்யும் மார்வாடி, குஜராத்தி சேட்டுகளை 'வாட்' ஒன்றும் செய்யாது. மாறாக குடும்பத்தவர், உறவினர் உழைப் பையே பெரிதும் சார்ந்து வணிகம் செய்யும் சிறு நடுத்தர வணிகர்களையே இது பாதிக்கும்.

• ஏற்கனவே கைவிடப்பட்ட 'பல்முனை வரி'யே தற்போது வாட் என்ற மதிப்புக் கூட்டு வரி எனும் பெயரில் இந்த பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

• உதாரணமாக ரூ.1000 உள்ள ஒரு பொருளுக்கு 12.5% வரி என கொள்வோம். இப்போது இந்த பொரு ளின் மதிப்பு ரூ.1125 ஆகிறது. (இந்த பொருளை கையாளுவதற்கு ஆகும் சுமை, கடன், போக்குவரத்துக் கட்டணம், இருப்பு வைப்பதற்கான செலவு மற்றும் பணியாளர்கள் சம்பளம் போன்ற செலவுகளையும் சேர்த்து இப்பொருளின் மதிப்பு தற்சமயம் ரூ.1500 ஆகிறது.) இப்பொருள் சில்லறை வியாபாரிக்குப் போகிறபோது மீண்டும் 12.5% வரி சேர்க்கப்படுகிறது. அதாவது ரூ.187.50 சேர்கிறது. கடையில் நுகர்வோர் இதனை வாங்கும்போது ரூ.1657.50 கொடுக்க வேண்டிய தாகிறது. இந்த வரிச் சுமை கடைசியில் மக்கள் தலையில் தான் விடியப்போகிறது.

• தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சராசரி தனிநபர் வருவாய் ரூ.11343 ஆகும். இது தனி நபர் வரு மானத்தில் முன்னேறியுள்ள மாநிலங்களில் திரட்டப்ப டும் வரி அளவைவிட அதிகம்.

• மதிப்பு கூட்டு வரியால் வரி ஏய்ப்பு அதிகரிக் கும். இந்நிலையில் ஊழல் பெருகும். விலைவாசி உயரும். வாங்கும் சக்தி குறையும். வேலை வாய்ப்பு இருக்காது. சில்லறை வணிகத்தில் வெளிநாட்டின் ஆதிக்கம் ஏற் படும். ஏகபோக சக்திகளின், அந்நிய சக்திகளின் ஆதிக் கம் ஏற்படும்.

**வேலை வாய்ப்பு ஓர் கானல் நீர்**

வேளாண்மை, சிறுதொழில், வாணிகம் இவை யெல்லாம் பாதிக்கப்படும்பொழுது வேலைவாய்ப்பு என்பது ஏட்டளவில் மட்டுமே. ஒரு பக்கம் வேளாண்மை பொய்த்ததினால் படித்த கிராமப்புற தலித் இளைஞர் கள் சாதி இழிவிலிருந்து விடுபட சிறுதொழில் நோக்கி நகரங்களுக்கு இடப்பெயர்ச்சி செய்கின்றனர். அதையும் கேள்விக்குறியாக மாற்றியுள்ளது இந்த பட்ஜெட்.

• கடந்த காலத்தை பார்க்கும்பொழுது ஹூன் டாய் கார் நிறுவனம் 5000 கோடி ரூபாய் முதலீட்டில் கார் தொழிற்சாலை தொடங்கியது. ஆனால் 500 பேருக் குத் தான் அதில் வேலை கிடைத்தது. அதாவது 10 கோடி முதலீட்டிற்கு ஒரு வேலை.

• ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் படும் என்று தனது உரையில் நிதியமைச்சர் குறிப்பிட் டுள்ளார். அதன்படி இந்த நிதியாண்டில் 20 லட்சம் புதிய வேலைவாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும்.

ஆனால் இந்த பட்ஜெட்டில் இதற்காக ஒரு பைசாகூட ஒதுக்கப் படவில்லை.

**மிகப் பெரிய மோசடி**

இந்த பட்ஜெட் அபாயகரமான பாதையிலே முன்பைவிட வெகுதூரம் போய்விட்டது என்பதே உண்மை. இதற்கு பட்ஜெட்டில் இருந்து சிலவற்றை அடையாளப்படுத்தலாம்.

• பெரிய பெரிய நிறுவனங்களின் வருவாய்க்கு வரி குறைக்கப்பட்டுள்ளது.

• டீசல், பெட்ரோல் ஆகியவற்றிற்கு வரி விதிக்கப் பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோல மற்ற பொருட் களுக்கும் வரி விதிக்கப்படும் நிலை உருவாகுமெனில் சந்தைப் பொருட்களின் விலையும் உயரும்.

• பணப் புழக்கத்தை முறைப்படுத்த வங்கிகளுக்கு அரசாங்க உத்தரவுப்படி சில கட்டுப்பாடுகளை ரிசர்வ் வங்கி விதித்திருந்தது. இப்படிப்பட்ட கட்டுப்பாடு களை இந்த பட்ஜெட் நீக்கிவிட்டதால் தனியார் வங்கிக்கும், மோசடி நிதி நிறுவனங்களுக்கும் உள்ள வேறுபாடு நீங்கிவிட்டது. இதனால் ஏழைகள், விவ சாயிகள், தலித்துகள் ஆகியோர் வட்டியால் சுரண்டப் படுவார்கள்.

• பட்ஜெட்டுக்கு முன்பே வீட்டுமனை தொழி லில் வெளிநாட்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்படும் என்ற அறிவிப்பு, பன்னாட்டு நிறவனங்களின் கை களுக்கு நிலம் கைமாறுகிறது என்பது தவிர வேறு என்னவாகயிருக்க முடியும்?

• உலக மயமாக்கத்திற்கு வேறு மாற்றில்லை என்ற ஏகாதிபத்தியத்திற்கு நமது பட்ஜெட் விலை போய்விட்டது என்பதே இன்றைய கசப்பான உண்மை யாகும்.

**நிறைவாக**

பட்ஜெட் அறிவிப்புகளை குறிப்பாக செலவினங் களை பணம் இல்லை என்று அவைகளை கைவிடும் உரிமைக்கு அரசு சட்டமே போட்டு வைத்துள்ளது. பற்றாக்குறை, குறிப்பிட்ட எல்லையை தாண்டாமல் தடுக்க பட்ஜெட்டில் ஒதுக்கிய நிதியைக்கூட செலவிடா மல் இருக்க MRMP என்ற இந்த சட்டம் வழிவகுக்கிறது. தொடர்ந்து வளர்ந்து வரும் அரசாங்க கடனுக்கு வட்டி, பாதுகாப்புச் செலவு ஆகிய இரண்டும் வருவா யில் பெரும் பகுதியை விழுங்குவதைக் குறித்து இந்த பட்ஜெட் சிறிதும் கவனம் செலுத்தவில்லை. இவை மாறவேண்டுமெனில் மக்கள் பெருந்திரளாகத் திரண்டு நமது பட்ஜெட்டிற்கான முன்வரைவினை தயாரிக்க வேண்டிய கட்டாயம் நம்முன் உள்ளது.

---

# மௌனம் சம்மதமா

சதயானந்தன்

சிந்தும் வியர்வைக்குக் கருவிகள்
கவுரவம் சேர்த்ததா? வேலை வாங்கும்
வித்தைகள் பெருக வழி வகுத்ததா?

கைவினைக் கலையை இயற்கை உணவைக்
காவுவாங்கிய இயந்திரங்களின் பொம்மலாட்டத்தில்
ஆறறிவாளி பொம்மையானது முடிவா? தொடக்கமா?

கடிகார வடிவில் நுழைந்து மின்னணு அடுப்பு வரை
வளர்ந்து வீட்டை ஆக்கிரமிக்கும் சாதனங்கள்
வளர்ச்சிச் சின்னங்களா?
சுயம் அழியும் அடையாளங்களா?

இயந்திர ஆதிக்கம் எங்கும் விரிந்த
சிலந்தி வலையாய் மனித நேயம் ஒழித்து
சொரணைகளை சுத்தமாய் சுரண்டி விடுமா?

வாகனங்களின் இரைச்சலுக்குப் பழகிய விலங்குகளின்
மூளும் புகைக்குப் பழகிய பறவைகளின்
மௌனம் சம்மதமா?

◆

## விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு பற்றிய முதன்நிலை அறிக்கை மீது ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் வரவேற்கப்படுகின்றன.

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கூலித் தொழிலாளர்களுக்கு 1948-ஆம் ஆண்டின் குறைந்தபட்ச கூலிச் சட்டத்தின் அடிப்படையில் ஏற்கனவே உள்ள குறைந்தபட்ச கூலியை உயர்த்தி விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அதிக குறைந்தபட்ச ஊதியத்தை பெறும் வகையில் கீழ்க் கண்டவாறு குறைந்த பட்ச ஊதியத்தை உயர்த்திட அரசு முதன்நிலை அறிக்கை வெளியிட சட்டப் பேரவையில் 29.3.2005-இல் மாண்புமிகு முதல்வர் பேரவை விதி 110-இன் கீழ் தாமாக முன்வந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இதன் அடிப்படையில் இதுகுறித்த ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகளையும் இரண்டு மாத காலத்திற்குள் அரசுக்குத் தெரிவிக்க பொது மக்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையும் 28-3-2005 அன்று G.D. (2D) எண் 10 மூலமாக இதற்கான உத்தரைவையும் பிறப்பித்துள்ளது.

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கூலித் தொழில்களின் விவரம், ஏற்கனவே நிர்ணயிக் கப்பட்டுள்ள குறைந்த பட்ச ஊதியம் மற்றும் தற்போது அரசு உயர்த்த முடிவு செய்துள்ள குறைந்த பட்ச ஊதியம் ஆகியவற்றின் விவரம்:

- சொந்த ஏர் மற்றும் உழவு மாடுகளுடன் உழவுப்பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் தற்போது ஒரு நபருக்கு ரூ.100 ஆக உள்ளது. இதை ரூ.150 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

- பணி அமர்த்துபவரால் ஏர் மற்றும் உழவு மாடுகள் வழங்கப்பட்டால் உழவுப் பணிக்கு தற்போது நாள் ஒன்றுக்கு ரூ.54 என ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை ரூ.80 ஆக உயர்த்தி வழங்க முடிவு செய்துள்ளது.

- கதிர் அறுத்தல், கதிர்க் கட்டுகளை சுமந்து வந்து களத்தில் சேர்த்தல், கதிர் அடித்தல், நெல் தூற்றுதல், நெல்லை அளந்து மூட்டைகள் ஆக்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள ஆண் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் தற்போது நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு ரூ.54 ஆக உள்ளது. இதை ரூ.80 ஆக உயர்த்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

- இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதை ரூ.70 ஆக உயர்த்த முடிவு செய்துள்ளது.

- சாகுபடி பொருளாக ஊதியம் வழங்கப்பட்டால் மொத்த மகசூலில் 8-இல் ஒரு பங்கு ஊதி யமாக வழங்கப்பட வேண்டும். பணம் அல்லது பொருள் இவ்விரண்டில் அதிகமானது எதுவோ அது வழங்கப்பட வேண்டும்.

- நெல் அல்லது பிற பயிர்கள் அறுவடை செய்யும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு இதே அளவில் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

விதைத்தல், நாற்று நடுதல், நாற்று பறித்தல், களை எடுத்தல் பணிகளில் ஈடுபடும் ஆண் தொழி லாளர்களுக்கு தற்போது நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு ரூ.54 என குறைந்த பட்ச ஊதியம் உள்ளது. இதே வேலையில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.45 என உள்ளது. இதை முறையே ரூ.80 மற்றும் ரூ.70 என நிர் ணயிக்க அரசு முடிவு செய்துள்ளது.

- வரப்புகளையும், வயல்களையும் சீரமைத்தல், தேனீ வளர்த்தல், கோழி வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் மரம் ஏறுதல் வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு ரூ.54 எனவும், இதே வேலையில் ஈடுபடும் பெண்களுக்கு ஒரு நபருக்கு 5 மணி நேர

வேலைக்கு ரூ.45 எனவும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை முறையே ரூ.80 மற்றும் ரூ.70 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

- விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களுக்கு பணி அமர்த்துபவரால் உணவு வழங்கப்பட்டால் அவ்வாறு வழங்கப்படும் உணவின் பண மதிப்பு ஊதியத்திலிருந்து கழிக்கப்படக் கூடாது.

- வேலை நேரங்களின் பணியின் தன்மையில் வேறுபாடு இல்லாது தொழில் புரியும் ஆண், பெண் தொழிலாளர் இரு பாலர்களுக்கும் 1976-ஆம் ஆண்டு சம ஊதிய சட்டத்தின்படி சம ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

நம்மில் பெரும்பாலானோர் ஒருங்கிணைக்கப்படாத, அமைப்பு சாராத விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மத்தியில் அவர்களின் உரிமைகளுக்காக பணி செய்வதால், இவ்வரிய வாய்ப்பை மிகச் சரியாக பயன்படுத்தி விவசாய நில முதலாளிகள் அரசு உயர்த்த முடிவு செய்துள்ள கூலி உயர்வை ஆட்சேபித்து அரசுக்கு கருத்துகள் அனுப்புவதை எதிர்த்து எண்ணிக்கையில் அதிகபட் சமான ஆலோசனைகளை கீழ்க்கண்ட அம்சங்களை உள்ளடக்கி அரசு செயலாளர், தொழி லாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600009 அவர்களுக்கு கடிதத்தில் முகவரியிட்டு **நிலச் சீர்திருத்த ஆணையாளர், சேப்பாக்கம், சென்னை-600005** என்ற முகவரியை அஞ்சல் உறையில் எழுதி நிலச் சீர்திருத்த ஆணையாளர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

தங்கள் பரிந்துரையில் உள்ளடக்க வேண்டிய அம்சங்கள்

1. அரசு தற்போது உயர்த்தி உத்தரவிட தீர்மானித்துள்ள குறைந்தபட்ச ஊதியம் இன்றைய உலகமயமாக்கல் தாக்கத்தின் சூழ்நிலையில் போதுமானதாக இல்லை. ஒவ்வொரு பணி வகைக்கும் மேலும் ரூ.100 கூடுதலாக உயர்த்தப்பட ஆலோசனை தெரிவிக்க வேண்டும்.

2. தற்போது முடக்கி வைக்கப்பட்டுள்ள விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தினை உயிர்ப்பித்து அவ்வாரியத்தின் மூலம் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து நலத் திட்டங்களோடும், பலன்களோடும் கூட கூடுதலாக தற்பொழுது அமைப்பு சார்ந்த தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு உரிமையாக உள்ள பணிப் பாதுகாப்பு, பணிக் கொடை, விபத்துக் காப்பீடு, சேம நல நிதி, தொழிலாளர் வைப்பு நிதி, தொழிலாளர் அரசு காப்பீட்டுறுதி, குழுக் காப்பீடு, மருத்துவக் காப்பீடு, பிழைப்பூதிய உறுதி போன்ற அனைத்து தொழிலாளர் உரிமைகளும் மேற்படி அறிவிப்பில் சேர்த்து உத்தரவிட ஆலோசனை தெரிவிக்க வேண்டும்.

3. விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்காக 1999-இல் அமைக்கப்பட்ட கோலப்பன் கமிட்டி பரிந்துரைத்துள்ள அனைத்து பரிந்துரைகளையும் சட்டப்படியும் குறைந்தபட்ச அத்தியாவசிய அவசியமுமாய் இருப்பதால் மேற்படி அறிவிப்பில் சேர்த்து உத்தரவிட ஆலோசனை தெரிவிக்க வேண்டும்.

மேற்படி நிலச்சீர்திருத்த ஆணையாளர் அவர்களுக்கு தாங்கள் அனுப்பி வைக்கும் ஆலோ சனைகளின் ஒரு நகலை எங்கள் முகவரிக்கு அனுப்பி வைத்தால் அவற்றை தொகுத்து நாங்களும் மேற்படி ஆணையாளருக்கு பிரதிநிதித்துவப்படுத்த வாய்ப்பாக அமையும்.

இது குறித்த ஆலோசனைகள், விவரங்கள், மேலதிக தகவல்களுக்கு அனித்ரா சட்ட ஆலோச கரை அணுகலாம்.

**சாய்ராம்,**

**திட்ட அலுவலர் - 98411-39307;**

**ஆரோக்கிய மணிராஜ்,**

**சட்ட ஆலோசகர் - 94441-24446).**

◆

# மக்கள் சமத்துவம்

(விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையிலிருந்து செயல்படும் மக்கள் சமத்துவம் என்ற அமைப்பின் அமைப்பாளர் அ.ஞா. சமத்துவம் பஞ்சமி நில மீட்பு தொடர்பாக விருதுநகர் மாவட்ட ஆட்சியருக்கு 23-5-2005 அன்று எழுதிய கடிதத்தின் சாராம்சம்)

அ.ஞா. சமத்துவம்

கடந்த ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பதுகளில் இராமநாதபுரம் மாவட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்ட விருதுநகர் மாவட்டத்தில் குடியிருந்து வந்த - அப்போது பஞ்சமர் என அழைக்கப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சில நோக்கங்களுடனும், சில நிபந்தனைகளுடனும் அரசாங்கம் நிலங்களை வழங்கியது. வழங்கப்பட்ட இந்நிலங்கள் வருவாய்த் துறைப் பதிவேடுகளில் DC கண்டிசன் நிலங்கள் என பதிவு செய்யப்பட்டன. ஆனால் நடைமுறை வழக்கில் இவை பஞ்சமி நிலங்கள் என பேசப்பட்டன. இந்நிலையில் எந்த நோக்கத்திற்காகவும், என்ன நிபந்தனைகளோடும் இவர்களுக்கு அந்நிலங்கள் வழங்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டதா? அதன் நிபந்தனைகள் பாதுகாக்கப்படுகின்றனவா என்பதை சமூக அக்கறையின் அடிப்படையில் அறிய விரும்புகிறோம். எனவே விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மதிப்புமிகு அ. முகமது அஸ்லாம் அவர்கள் நமது மாவட்டத்தில் உள்ள பஞ்சமி நிலங்கள் பற்றிய விவரப் பட்டியலை வெளியிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு 'மக்கள் சமத்துவம்' சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

## பஞ்சமி நிலங்களின் வரலாறு

அந்நியர்களால் இந்தியா ஆளப்பட்டு வந்தபோது தமிழ்நாட்டில் உள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் கடந்த 1891-இல் ட்ரிமென்கிரி என்பவர் மாவட்ட ஆட்சியராகப் பணி செய்து வந்தார். பஞ்சமர் சாதி என்றும், அய்ந்தாம் சாதி என்றும் சொல்லப்பட்டு வரும் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை இவர் மிகுந்த அக்கறையுடன் ஆழமாக ஆய்வு செய்து இவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு நிலங்கள் வழங்கப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

இவ்வறிக்கையின் அடிப்படையில் இந்தியாவில் வாழ்ந்துவரும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு நிலங்களை வழங்க வேண்டும் என்ற சட்டம் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. (அரசாணை எண் 1010 - நாள் 30.9.1892)

இச்சட்டத்தின்படி இந்தியா முழுவதும் குடியிருந்த தலித் மக்களுக்கு பஞ்சமி நிலம் என்ற பெயரிலும், டிசி நிலம் என்ற பெயரிலும் நிலங்கள் வழங்கப்பட்டன. தமிழகத்தில் மட்டும் சுமார் 12 லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலம் தலித் மக்களுக்குக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இவ்வாறு தலித் மக்களுக்கு அரசு நிலங்களை வழங்கியபொழுது அரசு ஒரு சில நிபந்தனை விதிமுறைகளையும் வகுத்தது. அதன்படி வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்களை முதல் பத்தாண்டுகளில் யாருக்கும் விற்கவோ, தானம் செய்யவோ, அடமானம் வைக்கவோ, குத்தகைக்கு விடவோ கூடாது என்றும், பத்தாண்டுகளுக்குப் பின் வேறு தலித் இன மக்களுக்கு மட்டும் விற்கவோ, தானம் செய்யவோ, அடமானம் வைக்கவோ, குத்தகைக்கோ விடலாம் என்றும், நிபந்தனைகளை மீறிச் செய்யப்படும் நில உரிமை மாற்றங்கள் சட்டப்படி செல்லுபடியாகாது என்றும் ஒருசில விதிமுறைகளை விதித்தது. (காண்க: வருவாய்த் துறை நிலையான ஆணை 15.9 மற்றும் அரசாணை 2217 தேதி 1-10-1941)

இத்தகைய குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் நிலங்கள் வழங்கப்பட்டதால், இவை டி.சி. கண்டிசன் நிலங்கள் என்று வருவாய்த் துறைப் பதிவேடுகளில் குறிக்கப்பட்டுள்ளன என அறியப்படுகிறது. ஆனால் நடைமுறை வழக்கில் இவை பஞ்சமி நிலங்கள் என்றே அழைக்கப்பட்டன.

## வருவாய்த் துறை அதிகாரிகளின் மெத்தனப் போக்கு

ஆனால், தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் இதர இனததவரால் பல ஆண்டு காலமாய் கைப்பற்றப்பட்டு அனுபவித்து வருவது தெரிந்தாலும் கூட கிராம நிர்வாக அலுவலர்கள் அதனை முறையாகத் தெரிவிக்காமல் பஞ்சமி நில விதிகள் மீறப்படவில்லை என்றே குறிப்பு எழுதுகின்றனர் என்றும், மேலும், மேல் தணிக்கை செய்யும் அதிகாரிகளான வருவாய் ஆய்வாளர்கள், துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் போன்ற மேலதிகாரிகளும் நிலங்களை நேரில் சென்று பார்க்காமல் கிராம நிர்வாக அலுவலர்கள் எழுதி வைப்பதையே தாங்களும் ஒப்புக்கொண்டு கையெழுத்திடுகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

எனவே பஞ்சமி நில மீறல் என்பது வருவாய்த் துறையின் சம்மதத்தோடும், ஒத்துழைப்போடும் நடக்கிறது. அல்லது அவர்களின் அலட்சியத்தால், தங்கள் பணியைச் சிறப்பாகச் செய்யாததால் ஏற்படுகிறது என்றும் பஞ்சமி நிலங்களின் முழு பொறுப்பும் வருவாய்த் துறையையே சாரும் என்றும் சொல்லப்படுகிறது.

# வரலாற்று சிறப்பு மிக்க இரண்டு தீர்ப்புகள்

*1979-ஆம் ஆண்டு, கர்நாடக மாநில அரசு அம்மாநிலத்தில் தலித் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்கள், மற்ற இனத்தாருக்கு எவ்விதத்திலும் மாற்றப்படுவது செல்லாது என்று ஆணை பிறப்பித்தது. இந்த அரசாணையை எதிர்த்து அம்மாநிலத்தைச் சேர்ந்த சிலர் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று சொல்லும் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 14-ஆம் பிரிவுக்கு இந்த அரசாணை எதிரானது என்று அவர்கள் வாதாடினர். ஆனால், தலித் மக்களுக்கு இத்தகைய அரசாணை சரியானது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (காண்க: உச்ச நீதிமன்ற வழக்கு எண் 389/1985)*

*தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கரகத்தஹல்லி என்ற கிராமத்தில் குடியிருந்து வந்த அக்குமரன் என்ற தாழ்த்தப்பட்டவருக்கு சர்வே எண் 249-இல் உள்ள 3.39 ஏக்கர் நிலத்தை கடந்த 31-12-1955 அன்று அரசாங்கம் வழங்கியது. இந்நிலத்தை வழங்கும்பொழுதே வருவாய் வாரிய நிலையாணை 15 ( Standing Orders of the Board of Revenue) பத்தி 9 சிறப்பு படிவம் D-இல் உள்ள 9-ஆவது விதியின்படி, ஹரிஜன் அல்லாத சாதி இந்துவுக்கு இந்நிலத்தை விற்பனை செய்யக்கூடாது என நிபந்தனையும் விதித்திருந்தது. சுமார் 14 வருடங்கள் கழித்து மேற்படி அக்குமரன், முத்து என்ற தாழ்த்தப்பட்டவருக்கு இந்நிலத்தை விற்பனை செய்தார். ஆனால் நிலத்தை வாங்கிய முத்து என்பவரோ விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு எதிராக கே. பழனியப்பன் என்ற கே. சுப்பிரமணியன் என்ற தாழ்த்தப்பட்டவர் அல்லாதாருக்கு இந்நிலத்தை விற்பனை செய்து விட்டார். எனவே தாழ்த்தப்பட்ட அல்லாதவருக்கு நிலத்தை விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனை மீறப்பட்டதால் நில ஒப்படைப்பு ஆணை ரத்து செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை (Writ Petition) மனுச் செய்தார். ஆனால் இதே காரணத்தை சொல்லி நிபந்தனையை மீறி செயல்பட்டவரின் நீதிப் பேராணை மனு தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியது (WA எண் 624/88 - உயர்நீதிமன்றம், சென்னை - நாள் 22-1-1001)*

### அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் நில நிர்வாக ஆணையரின் கடிதம்

*பஞ்சமி நிலம் ஆக்கிரமிப்பு போன்ற குற்றச்சாட்டு களை தவிர்க்கும் பொருட்டு அல்லது தடுக்கும் பொருட்டு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கடந்த 19-8-1996-இல் கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்தில் "பஞ்சமி நிலங்கள் என்று பொது மக்களின் பேச்சு வழக்கில் சொல்லப்படும் டிசி. நிலங்களை ஆதிதிராவிட வகுப்பினர் அல்லாத சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு நப ருக்கு விற்கவோ தானமாக வழங்கவோ முடியாது. அவை பிற நபர் எவருடைய அனுபோகத்திலாவது இருக்கு மாயின் வருவாய் நிலை ஆணை 15 (41)-இன் வகைமுறை களின்படி, முதன் முதல் ஒப்படை பெற்றவருக்கு அல்லது அவருடைய சட்டப்படியான வாரிசுக்கு அவை திரும்ப எடுத்துக் கொள்ளப்படலாம் அல்லது மீட்கப்படலாம்.*

*எனினும் ஏதோவொரு காரணத்திற்காக இந்த டிசி. நிலங்கள் பிற சமுதாயத்தைச் சார்ந்த நபர்களுக்கு விற்கப் பட்டதாக பல நிகழ்ச்சிகள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் பட்டாக்களும் கூட ஆவணங் களின் அடிப்படையில் அவர்களின் பெயர்களில் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளன. நாளடைவில் முதலில் வகைப்படுத்தப்பட்டது மெல்ல மறந்து போனது. இவ் வாறு நிகழ்தல் கூடாது. ஆதிதிராவிட வகுப்பினருக்கென ஒதுக்கப்பட்ட நிலங்கள் அவர்களுக்காகவே பாதுகாக் கப்பட்டு பேணி வரப்படுதல் வேண்டும்."*

*எனவே பதிவு-உரிமை மாற்றங்கள் அனைத்தும் டிசி. நிலங்கள் எதையும் உள்ளடக்கியிருக்கிறதா என்று உறுதியாக அறிந்து கொள்வதற்காக அவை கவனமாகச் சரிபார்க்கப்பட்டு அவ்வாறு இருக்குமானால் அந்தப் பதிவு வருவாய் நிலை ஆணை 15 (41)-இன் வகை முறை களை மீறியுள்ளது என்ற காரணத்தின் அடிப்படையில் அது மறுக்கப்படுதல் வேண்டும். அந்த நோக்கத்திற்காக, பதிவு உரிமை மாற்றம் எதனையும் செய்யுமாறு ஆணை யிடும் முன்பே, மண்டலத் துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் ஆகியோரால் முழுமையாக விசா ரணை செய்யப்படுதல் வேண்டும். மேலும் 'A' பதிவேட் டிலும், அதோடுகூட 'UDR'பதிவேட்டிலும், 10 (1) சிட் டாவிலும் உள்ள பதிவுக் குறிப்புகள் முறையாக பரி சோதிக்கப்பட வேண்டும். ஐயம் எழும் நேர்வில் அல்லது எதிர்கோரிக்கைகள் இருக்கும் நேர்வில் அது சந்தர்ப் பத்திற்கேற்ப, வருவாய்த் துறை கோட்டாட்சியருக்கு/ துணையாட்சியருக்கு சாட்டியனுப்பப்பட்டு டிசி. நிலம் மற்றும் நிபந்தனை பட்டா நிலத்தைப் பொறுத்தும்கூட பதிவு உரிமை மாற்றம் செய்யப்படுமாறு ஆணையிடப் படுமுன்பு அவருடைய ஆணை பெறப்படுதல் வேண் டும். ஆதிதிராவிட வகுப்பினர் அல்லாத மக்களுக்கு டிசி. நிலங்களின் பட்டா உரிமை மாற்றத்தைப் பதிவு செய்த அலுவலர்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு உட்படுத்தப்படுவார்கள்.*

*கிராம நிர்வாக அலுவலர்கள் அனைவரும் நிலை யான 'A' பதிவேட்டிலுள்ள பதிவுக் குறிப்புகளைப் பொறுத்து, டிசி. நிலத்துடன் ஒரு குறிப்பிட்ட பட்டா தொடர்புடையதாயிருக்கிறது என்று 10 (1) சிட்டாவின் தொடர்புடைய பங்கங்களில் துணிச்சலுடன் குறிப்பிடு மாறு அறிவுரை வழங்கப்படலாம்.*

### VAO - வின் கடமைகள்

கிராம நிர்வாக அலுவலர்கள் ஒவ்வொரு மாதமும் பின் பாதியில் சாகுபடி பதிவுக்காக நிலங்களைப் பார்வையிட வேண்டும். பார்வையிடும்பொழுது பஞ்சமி நிலங்கள் பற்றிய விதிகள் மீறப்பட்டுள்ளனவா என்று ஆராய வேண்டும். மீறப்பட்டிருந்தால் கிராம நிர்வாக அலுவலர்கள் உடனே வட்டாட்சியருக்குத் தெரிவிக்க வேண்டும் வருவாய் ஆய்வாளர் குறைந்த பட்சம் ஆண்டுக்கு இரு முறையாவது பயிர் தணிக்கையின்போது இந்த பஞ்சமி நிலங்களை கட்டாயமாகப் பார்வையிட்டுக் குறிப்புகள் எழுத வேண்டும். இந்த அதிகாரிகள் பார்வையிட்டதில் பஞ்சமி நிலங்கள் பற்றிய விதிகள் மீறப்பட்டு, இதர இனத்தவரால் இந்நிலங்கள் அனுபவிக்கப்படுவது தெரிய வருமானால், அது குறித்து அவர்கள் அறிக்கை அனுப்ப வேண்டும். கோட்டஆட்சியாளர் இந்த பஞ்சமி நிலங்களை மீட்டு மீண்டும் அதன் உரிமையாளர்களான தலித் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

நிலையான 'A' பதிவேட்டின்படி, டி.சி. நிலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலங்களை, கிராமங்கள், நில அளவை எண்கள், பரப்பளவு முதலானவற்றை அளிக்கின்ற ஒரு பட்டியல் ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும், ஒவ்வொரு கிராம நிர்வாக அலுவலகத்திலும், பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக வைத்து வரப்பட வேண்டும். அத்தகைய நிலம் வகுப்புச் சமுதாயத்தைச் சார்ந்திராத பிற நபர் எவருக்கும் விற்கப்படவோ உரிமை மாற்றம் செய்யப்படவோ தானமாக வழங்கப்படவோ கூடாது என்றம் தெரிவிக்கப்பட வேண்டும்"

இவ்வாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கடிதம் எழுதியிருப்பதோடு இவ்விசயத்தைக் குறித்து மாவட்டத்தில் உள்ள கீழ்நிலை அலுவலர்கள் அனைவருக்கும் பொருத்தமான அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு இதுவரை வெளிவந்திருக்கும் அரசாணைகள் நல்ல நோக்கத்தில் இனிக்க இனிக்க எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் அதன் வெற்றி என்பது இந்த ஆணைகளை நடைமுறைப்படுத்துவதில்தான் இருக்கிறது. இல்லையெனில் இவைகள் அர்த்தபுஸ்ட்டி இல்லாமல் அச்சடிக்கப்பட்ட வெறும் காகிதங்கள்தான் என மக்கள் முடிவுக்கு வர வேண்டியதிருக்கும்.

### விருதுநகர் மாவட்டத்தில் பஞ்சமி நிலங்கள்

விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 94 நபர்களுக்கு பஞ்சமி நிலங்கள் நூற்றி ஒன்பது ஏக்கரும், நாற்பத்து இரண்டு சென்டும் அரசு வழங்கியதாகச் சொல்லப்படுகிறது. தற்சமயம் இப்பஞ்சமி நிலங்கள் உரிமையுள்ள தலித் மக்களால் அல்லது அவர்களின் வாரிசுகளால் மட்டுமே சொந்தமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்று நம்புகிறோம். அத்துடன் பார்வையில் கண்ட கடிதத்தில் உள்ள அறிவிப்பின்படி .......... நிலையான 'A' பதிவேட்டின்படி .......... அனைத்து வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அலுவல கத்திலும் பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக அதன் விவரங்கள் வைக்கப்பட்டிருக்கும் என்று நம்புகிறோம்.

இச்சூழ்நிலையில், விருதுநகர் மாவட்டத்தில் தலித் மக்களுக்கு வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் எதிர்பாராத வகையில் விதிகளுக்கு முரணாக தலித் அல்லாதவர்களுக்கு கை மாறியிருந்தால் அந்நில உரிமை மாற்றங்கள் சட்டப்படி செல்லுபடியாகாது.

மிகச் சிறந்த உற்பத்திக் கருவியான நில உடைமையிலிருந்து தலித் மக்கள் அந்நியப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். இந்நிலை மாற்றப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு தலித் மக்களிடமும், தலித் அமைப்புகளிலும், மனித உரிமை அமைப்புகளிலும் பரவலாக்கப்பட்டு வருகிறது.

எனவே விருதுநகர் மாவட்டத்தில் தாலுகா வாரியாக உள்ள பஞ்சமி நிலங்களின் பரப்பளவு மற்றும் தற்போது பஞ்சமர் அல்லாதவர்களிடம் கை மாறி இருக்கும் பஞ்சமி நிலங்களின் பரப்பளவு, அப்பஞ்சமி நிலங்களை தற்சமயம் அனுபவித்து வரும் தலித் அல்லாதவர்களின் பெயர்ப் பட்டியல் ஆகிய விவரங்களை அருள் கூர்ந்து தந்து உதவுமாறு "மக்கள் சமத்துவம்" சார்பில் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கடமை உணர்வுடன்

அமைப்பாளர்

மக்கள் சமத்துவம்

# மாறுவேசம்

குடியரசன்

முகில்வண்ணன் - இந்தக் கல்லூரியின் சமூகவியல் பேராசிரியர். இந்திய சமூக அமைப்பைப் பற்றி பல நூறு கட்டுரைகளை அனைத்து வகையான பத்திரிக்கைகளிலும் எழுதியுள்ளார். இவர் தனது தந்தையால் கம்யூனிஸ்டாக வளர்க்கப்பட்டார். எங்களது கல்லூரியின் முற்போக்குவாதி. பிறப்பால் பார்ப்பனர். ஆனால் தன் செய்கையால் தன்னை நேரு போல முற்போக்குவாதியாக நாங்களெல்லாம் ஏற்றுக்கொள்ளும்படி நடந்து கொள்பவர்.

நான் பிறப்பால் தாழ்த்தப் பட்டவன். அதிலும் மாட்டுக்கறி தின்னும் ஆதிதிராவிட குடும்பத்தில் பிறந்தவன். நான் கல்லூரி வந்த பிறகு மாட்டு இறைச்சி தின்பதை விட்டுவிட்டேன்.

நான், சிரஞ்சீவி, ராஜன், சிவா மற்றும் விமல் ஆகிய ஐவரும் முகில்வண்ணனின் தீவிர பித்தர்கள். வகுப்பில் அவர் பாடம் நடத்தும்போது எந்த அளவிற்கு அவருடைய வார்த்தைகளை உன்னிப்பாக கவனிக்கிறோமோ, அதைவிட கூடுதலாக நாங்கள் அவருடன் சேர்ந்து ரோட்டோரக் கடையில் சாப்பிடும்போது அவர் பேசுவதை கவனிப்போம்.

எங்களது முகில்வண்ணன் சார் சராசரி பிராமணர்கள் போலன்றி மாநிறமாக இருப்பார். செயல்பாட்டில் ஒரு கம்பீரம் தெரியும். மிகவும் ஆண்மையாகப் பேசுவார். எங்களது சார் வாயைத் திறந்தாலே வார்த்தைகள் புதுமையாக வெளிவரும். தமிழுக்கு இவ்வளவு கம்பீரமா என்று நாங்கள் அவர் வார்த்தை களுக்கு வாய்பிளந்து பார்ப்போம்.

எங்கள் கல்லூரியின் பிரின்ஸ்பால் ஒரு பார்ப்பனர். மிக்வும் ஆச்சாரமானவர். கண்டிப்பானவர். எப்பொழுது பார்த்தாலும் பகவத் கீதை பற்றியே பேசிக்கொண்டிருப்பார். அவர் பெயர் சேஷாத்திரி. மாணவர்களிடம் ஒழுக்கம் மற்றும் அறிவு வளர ஒவ்வொரு மாணவனும் பகவத் கீதை படிக்க வேண்டும் என்று வாதிடுவார்.

எங்கள் முகில்வண்ணன் சாரும், பிரின்ஸ்பால் சேஷாத்திரியும் ஒரே பார்ப்பன சாதி என்பதை யாராலும் நம்ப முடியாது. அவர்களின் பேச்சு, செயல்பாடு, பழகும் மனிதர்கள் எல்லாமே வித்தியாசம்தான்.

என்னுடைய பெயர் எள்ளன். என் அப்பா கிராமத்தான். எங்கள் தாத்தா பெயர் விளங்க வேண்டும் என்று எனக்கும் அவர் பெயரான எள்ளன் என்று வைத்துவிட்டார். வகுப்பில் என்னை எல்லோரும் 'எள்' என்றே கூப்பிடுவார்கள். என் நண்பர்களுக்கு மட்டும் சிரஞ்சீவி, ராஜன், சிவா, விமல் என்று நாகரீகமான பெயர்கள் இருக்க எனக்கு மட்டும் எள்ளன் என்பது போகப் போக வெறுப்பாய் உள்ளது. இருந்தாலும் பழகிப்போய் விட்டது.

இந்த நாட்டில "சாதி" இன்றும் இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? என்று எங்க் சார் வகுப்பில் கேட்கிறார். இந்தக் கேள்வி பாடத்தோடு தொடர்புடைய கேள்வி.

"சார், நகரத்தில் சாதி இல்லை. ஆனா கிராமத்திலேதான் சாதி இருக்கிறது" என்றேன் நான்.

"அப்ப சாதி ஒழிய என்ன செய்ய வேண்டும்"

"சார்.. நம்ப கிராமங்களை ஒழிச்சுட வேண்டும்"

"தம்பி... நீ கொஞ்சம் தெளிவாச் சொல்லு"

சிவா எழுந்தான். "சார், எங்க ஊர் ஐயர் எங்களைப் பார்த்தாலே விரட்டுவார். இப்ப நாங்க பட்டணத்திற்கு வந்திட்டோம். எங்களை இனி அவராலே விரட்ட முடியாது சார்."

ராஜன் சொன்னான் "ஆமாம் சார். இவங்க சொல்றது ரொம்ப சரி. நாங்க லீவுல ஊருக்குப் போனாக் கூட..." உடனே முகில்வண்ணன் சார் இடைமறித்து "என்ன இது.. ஆளாளுக்கு அவுங்க சொந்தக் கதை பேசுறீங்க. எல்லோரும் லீவுல ஊருக்குத் தான் போவாங்க."

"இல்ல சார். நாங்க இதுவரைக்கும் லீவுல ஊருக்குப் போனதில்லை. ஏன்னா எங்களுக்கு ஊரு கிடையாது. காலனி மட்டும்தான் உண்டு."

வகுப்பே சிரித்தது.

ராஜன் தொடர்ந்தான். "ஆமா சார். இப்பல்லாம் நாங்க லீவுல காலனிக்குப்போய், பிறகு ஊருக்குள்ள போனாக்கூட ஊரு அக்ரகாரத்தக்காரங்க அவ்வளவா வையரதில்லை."

"இதுதான் சாதிக்குக் காரணமா?" முகில்வண்ணன் சார் கேட்டார்.

நான் தொடர்ந்தேன். "நகரத்திலே சாதி இல்லே சார். கிராமத்திலே மட்டும்தான் சாதி இருக்கு சார்."

"எப்படிடா"

"சார்... நீங்க, நம்ப பிரின்ஸ்பால் போன்றவங்க எங்கள சாதி பாத்து ஒதுக்கிறதில்ல. காரணம் இது நகரம் சார்."

முகில்வண்ணன் சார் முகம் கருத்தது. "எள்ளு... நீ உட்கார். உனக்கு உம் புத்தி போகலைடா. வகுப்பு இன்னிக்குப் போதும், நாளைக்குப் பார்க்கலாம்." என்று கூறிவிட்டு பக்கத்து கிளாசுக்குப் போய்விட்டார்.

மதிய உணவுவேளை வந்தது. பல நாள் நான் முகில் சார் டிபன் பாக்ஸின் மீதியை காலி பண்ணி யிருக்கிறேன். சில நாட்கள் எனக்கு அவருடைய சாப்பாட்டை முழுவதுமாகத் தந்திருக்கிறார். உணவு இடைவேளையில் அவர் ஒரு வாழைப் பழம், சிகரட் ஒன்றும் சாப்பிடுவார்.

காலேஜுக்குள் சிகரட் பிடிக்கக் கூடாது என்பதற்காக சார் எங்கள்

ஐந்து நண்பர்களோடு ரோட்டு கடையில் எங்களுக்கெல்லாம் பழம், பிஸ்கட் வாங்கித் தந்துவிட்டு அவர் மட்டும் சிகரட் பிடிப்பார். விருப்பம் உள்ளவர்கள், பழக்கம் உள்ளவர்கள் கவுரவம் பார்க்காமல் என்னுடன் சேர்ந்து சிகரட் பிடிக்கலாம் என் பார்.

பிரின்ஸ்பாலிடம் சார் பல முறை எங்களுடன் சேர்ந்து நேரம் போக்கு வதற்காக புத்திமதி வாங்கியுள்ளார்.

எங்க காலேஜில் சில தாழ்த்தப் பட்ட சமூகத்து பேராசிரியர்களும் உண்டு. எங்களைப் பார்த்தாலே முகத்தை வேறு பக்கம் மாற்றிக் கொள்வார்கள்.

எங்க முகில் சார் மாதிரி நீங்க ளெல்லாம் ஏன் முற்போக்காக மாறக் கூடாது என்று பிற வாத்தி யார் களைப் பார்த்து எனக்கு கத்த ணும் போல அடிக்கடி இருக்கும்.

இன்றைக்கு வகுப்பில் நடந்தது கண்டு நான் மிகவும் பயந்து விட் டேன். சார் மிகவும் நல்லவர். அவர் மனதைப் புண்படுத்துற மாதிரி நான் அவரை சாதி சொல்லி பேசியிருக்கக் கூடாது. அவர் எனக்கு ஏங்கல்ஸ், காரல் மார்க்ஸ், முதலாளித்துவம், சர்வாதிகாரம், ஏகாதிபத்தியம், பன்னாட்டு கம்பெனிகளின் சதி, IMF-இன் சூழ்ச்சி இப்படி பற்பல விசயங் களில் என்னை அறிவாளியாக்கி இருக்கிறார்.

நாட்டில் வர்க்கப் புரட்சி நடந் தால்தான் சமத்துவம் மலரும். அதற்கு மண்ணுக்கேத்த மார்க்சியம் என்றெல் லாம் சொல்லி என்னையும் அவருக்கு சமமாக நினைத்து நடத்தினார். சார் மனதை மிகவும் புண்படுத்திவிட் டேன். எனக்கு மிகவும் மனம் கனத்து விட்டது. என் முகத்தின் சதையை யாரோ இறுக்கிஅமுக்குவதுபோல வலித்தது. வலி தாங்கமுடியாமல் அழுதேன். தேம்பித்தேம்பி அழு தேன்.

யாருடனும் பேசவில்லை. நேராக வீட்டுக்குச் சென்றேன். உணவு பிடிக் கவில்லை. தூக்கம் பிடிக்கவில்லை. இருந்தும் அசதியாக இருப் பதாகக் கூறி போர்வையை இழுத்துப் போர்த்தி தூங்க முயற்சித்தேன்.

விடியற்காலை நாலு மணி வரை தூக்கம் வரவில்லை. இனியும் வராது. எழுந்தேன். தயாரானேன். நேராக பஸ் பிடித்து முகில் சார் வீட்டிற்குச் சென்றேன். மணி 5.45. "சார்... நான் எள் வந்திருக்கிறேன்."

"தம்பி... சார் தூங்குகிறார். ராத் திரியெல்லாம் சரியாத் தூங்காம புரண்டு புரண்டு அரட்டிக்கொண் டிருந்தார். இரு, எழுப்புகிறேன்" என்று சாரின் மனைவி உள்ளே சென் றார். பலமுறை வந்துபோன வீடாக இருந்தாலும் இன்று அந்த இடத் தில் நிற்கவே பயமாக இருந்தது.

சார் இரண்டு டீ குவளையுடன் வெளியே வந்தார். என்னிடம் ஒரு கோப்பையைத் தந்துவிட்டு, தான் ஒன்றைச் சுவைக்கத் தொடங்கினார்.

டீ கிளாசை நான் கீழே வைத்தேன். கண்கள் பனிக்க "சார், என்னை மன்னித்து விடுங்கள் சார்" என்றேன் நான்.

"உனக்கு சின்ன வயது. நீ என் னைத் தேடி வந்து உன்னுடைய வருத்தத்தைப் போக்கிக் கொள்ள வந்துவிட்டாய். நீ வராவிட்டால் என் இன்றைய தினமே சோகமாகப் போய் இருக்கும்." சாரின் குரல் கம்மியது.

என் உள்ளம் அவரின் கால் களில் விழுந்தது. எனக்கு ஏன் இவ் வளவு மட்டமான குணம். நல்ல சாரை நோகடித்து விட்டேனே.

"தம்பி... நீ இன்று என்னுடனேயே சாப்பிட்டுவிட்டு காலேஜுக் குக் கிளம்பலாம்." நமக்கு நல்லவங் களை புரிந்துகொள்ளத் தெரிய வில்லை. அதனால்தான் நம்மை தாழ்த்தப் பட்டவங்கன்னு ஒதுக்கி வைத்துள்ள னர் என்று எனக்குப் புரிந்தது. என் சார் மட்டும் இல்லை யென்றால் எனக்கு மனதில் தெளிவு என்பதே ஏற்பட்டிருக்காது.

இன்று முதல் வகுப்பு எங்க சாரு டையது. சார் வந்தார். மிகவும் உற் சாகமாக வகுப்பு நடத்தினார். மதி யம் வந்தது. நான் அவருடைய டிபன் பாக்ஸின் மீதி உணவை காலி செய் தேன். சார் சிகரட் பிடித்தார். எங் களுக்கு பழம் வாங்கித் தந்தார்.

இப்பொழுதெல்லாம் சார் என்னு டன் கூடுதல் அன்புடன் பழகுகிறார். நான் விவரிக்க இயலாத அன்பு டனும் மரியாதையுடனும் இவரு டன் பழகுகிறேன்.

மாலை 6.00 மணி. வர்க்கப் புரட்சி என்பது தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே நடப் பது மட்டுமல்ல. அது ஒடுக்கப்பட்ட வர்களுக்கும், ஒடுக்குபவர்களுக்கும் இடையே நடப்பது மட்டுமல்ல. அது இருப்பவனுக்கும் இல்லாத வனுக்கும் இடையே நடப்பது.

"சார்... வர்க்கப் புரட்சியின் முடிவு எதுவாக இருக்கும்?"

"சோசியலிசம்"

"அப்போ எப்படி இருக்கும் சார்?"

"முதலாளிகளே கிடையாது, ஒடுக் குபவர்களே கிடையாது, இல்லாத வர்களே கிடையாது என்ற நிலை."

என் மனதில் சட்டென்று உதித் தது. மனதில் மட்டும் நினைத்துக் கொண்டேன்.

"தொழிலாளி x முதலாளி; அடிமை x ஆண்டான்; இல்லா தவன் x இருப்பவன்; ஒடுக்கப் படுபவன் x ஒடுக்குபவன்.

தொழிலாளி எல்லோரும் முத லாளி ஆகலாம். அடிமை எல்லோ ரும் ஆண்டான் ஆகலாம். இல்லாத வன் எல்லோரும் இருப்பவன் ஆக லாம். ஆனால் நாங்க, எங்க ஆதிதிரா விட சமூகம் எல்லாம் பாப்பாராகப் போகிறோமா? சீ... ரொம்ப அசிங் கமாக இருக்கு... பாப்பார வாழ்க்கை எனக்கு அருவருப்பா இருக்கு" என மனதிற்குள் நினைத்துக்கொண்டேன்.

"சார், நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும். ரொம்ப பெரிய உதவி செய்யணும்"

"சொல்லுடா... கண்டிப்பாக உனக்காகச் செய்கிறேன்"

"ஒரு வாரம் நீங்க மட்டும் தனியா என் கூட என் தாத்தா ஊர் காலனி யில் தங்கணும்"

"டேய்... நீ என்னை இன்னுமாடா சந்தேகப்படுறே?"

"இல்லை சார். இதுல ஒரு விசய மிருக்கு சார்."

"டேய்... நான் சின்ன வயதில் எவ் வளவு காலனிகளில் தங்கி அவர்களின் எச்சில் உணவையும், அவர்கள் தந்த கிழிந்த உடையையும் அணிந்து அவுங்க கூட வாழ்ந்து, அவர்களுக்கு மார்க்

சிய வகுப்பு எடுத்திருக்கிறேன். இன்னஞ் சொல்லப்போனா, என் காலடி படாத சேரிகளே இல்லைடா. இதெல்லாம் உனக்குத் தெரியுமா..."

"அதுக்கில்லை சார்..."

"பின்ன எதுக்கு?"

"சார், நீங்க எங்க தாத்தா ஊர்க் காலனியில் ஒரு வாரம் தயவுசெய்து தங்கணும். அது முந்தி

நீங்க தங்கினீங்களே அதுமாதிரி இல்லை. இது வேறு மாதிரி."

"என்னடா வேறு மாதிரி"

"அதாவது சார், எங்க தாத்தா ஊர் கரூர்க்குப் பக்கத்தில் உள்ள திருமலைநாதன்பட்டின்னு ஒரு ஊரில் உள்ள காலனி. அந்த காலனியில நீங்க ஒரு வாரம் தங்கணும். இதல முக்கியமான விசயம் என்னான்னா... நீங்களும் ஒரு தாழ்த்தப்பட்டவர். என்னுடைய நண்பனின் சித்தப்பா. நீங்க படிக்காதவர். அதாவது ஓர் ஏழை தாழ்த்தப்பட்டவரா எங்க காலனியில் உள்ள மத்த தாழ்த்தப்பட்டவர்கள்போல சமமாக உள்ளதுபோல வாழணும் ஒரு வாரம்."

முகில்வண்ணனுக்கு எரிச்சலாக வந்தது. இருந்தாலும் தன்னுடைய புரிதல் அளவிற்கு நான் இல்லை என்பதை சொன்னால் என் மனம் ரொம்பவும் வருத்தப்படும் என்பதற்காக ஒத்துக்கொண்டார்.

"டேய் எள்... நாளையிலிருந்து ஒரு வாரம் நம்ம காலேஜ் செமஸ்டர் லீவு. இந்த ஒரு வாரம் நாம உங்க தாத்தா வாழும் காலனிக்குப் போய் தங்கலாம்."

"தங்கலாம் இல்ல சார். வாழலாம்."

"சரிடா... வாழலாம்... வா..."

## பருவம்-II

திருமலைநாதன்பட்டி ஊரில் இருவரும் நுழைகின்றனர். "சார்... நீங்க முதல்ல எங்க தாத்தா முகவரியை இந்தக் கடைக்காரரிடம் விசாரிங்க..."

முகிலும், நானும் முதன்முதலாக இந்த ஊருக்குள் வருகின்றோம். இங்க இரட்டை டம்ளர் நடைமுறையில் உள்ளது. முகில் விசாரிக்கிறார், டீ போடும் நபரைப் பார்த்து. என் தாத்தா வீட்டு விலாசத்தை ஒரு தாளில் எழுதியதை அவரிடம் தந்து "இந்த விலாசம் எங்கே இருக்கு?"

"எனக்குப் படிக்கத் தெரியாதுங்க" கடைக்காரர் உட்பட அனைவரும் சங்கேசமாகச் சொன்னார்கள்.

"ஆறுமுகம் வீடு எங்கே இருக்கு?" இரண்டு டீ ஆர்டர் செய்து குடித்துக் கொண்டே வினவினார் முகில்.

"எந்த ஆறுமுகம்?"

"இந்த ஊரில் எத்தனை ஆறுமுகம் இருக்காங்கப்பா?"

"கவுண்டர் ஆறுமுகம் ஒருத்தர். அப்புறம் காலனியில் செத்தமாடு தூக்குற ஆறுமுகம் ஒருத்தன்..."

"ஆமாங்க... அந்த ஆறுமுகம் தானுங்க..."

"நீங்க அந்த ஆறுமுகத்திற்கு உறவா?"

"ஆமாங்க..." என்றார் முகில்.

டீக்கடைக்காரர் முகம் கறுத்தது.

"இந்தாங்க டீக்கான காசு" என்றார் முகில்.

"யோவ்... பணம் தர்ரது இருக்கட்டும். முதல்ல அந்த டீ கிளாசை கழுவி வைத்துவிட்டுப் போய்யா..."

"ஏன் நீங்க கழுவ மாட்டீங்களா"

"டேய்... நீ காலனிக்காரன்னு தெரியாம தந்துட்டேன். இப்பத்தான் தெரியுது. ஒழுங்கு மரியாதையா டீ கிளாசை கழுவி வைத்து விட்டுப் போடா."

முகிலுக்குக் கோபம் வந்தது. இரண்டு டீ கிளாசையும் படாரென தரையில் ஓங்கி அடித்து உடைத்தார். பத்து ரூபாயை டீக்கடைக்காரரிடம் தந்து "டீக்கும், டம்ளருக்கும் சேர்த்து எடுத்துக்குங்க" என்றார்.

முகிலின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து. ரத்தம் முகத்திலிருந்து வடிந்தது. பின்னர் சரமாரியாக பலர் முகிலின் மீது பாய்ந்தனர். நான் முடிந்தவரை சமாளித்தேன்.

என் தாத்தாவும் எள்ளன்தான். அவர் வீட்டு வாசல் கட்டிலில் முகில் காயங்களும் மருந்துமாக படுத்துக் கொண்டார்.

"ஊருக்கு வந்த புள்ளையை அவனுங்க அடிச்சுட்டானுங்களே. இவனுங்க உருப்புடுவானுங்களா..." என் பாட்டி புலம்பினாள்.

முகிலுக்கு அவரின் உடல் வலியை விட ஒரு டீக்கடைக்காரன் தன்னை அடித்தது அவமானமாக இருந்தது. தான் ஒரு பேராசிரியர். சர்வதேச அரங்குகளில் சோசியாலஜி பற்றியும், கிராமத்து கட்டமைப்பு பற்றியும், மக்களின் விழிப்புணர்வு பற்றியும் பேசி கைதட்டல், பரிசு, ஆரவாரம் அடைந்ததெல்லாம் அவரின் கண் முன்னே வந்து சென்றது. அவரையும் அறியாமல் தனக்குப் புரியாத ஏதோ ஒன்று உள்ளதென நினைத்தார்.

இதுவரை முகிலின் முன் கை நீட்டிக்கூட யாரும் பேசியது இல்லை. இவர் இதற்கு முன் சேரிகளில் முகாம் நடத்தியபோதுகூட "என்ன சார், நீங்களெல்லாம் இங்க வந்து பிரச்சினை பண்ணலாமா?" என்று சாதி இந்துக்களும், போலீஸ்காரர்களும் கெஞ்சியது நினைவுக்கு வந்தது.

மாசக் கணக்கில் சேரியில் தங்கி உணவு, உடை வாங்கி வாழ்ந்தபோது அவருக்கு ஊர் மக்கள் பிழைக்கத் தெரியாதவன், ஏமாளி, வரட்டு சித்தாந்தம் பேசுகிறவன் என்று பட்டம் தந்தனர் முன்பு. சேரி மக்களோ, இவர் ஒரு போராளி, முற்போக்குவாதி, நல்லவர் என்று புகழ்ந்தனர்.

ஆனால் இன்று...

என் பாட்டி ஆரம்பித்து விட்டாள் "ஏம்பா... இவ்வளவு வயசாகுதே... உனக்கு நிதானம் தப்பிப் போச்சா? தண்ணி போட்டுட்டு வந்தியா? உனக்கு டீ கிளாசை உடைக்கிற அளவிற்கு திமிரு எங்கிருந்து வரும்? இதே கண்டி அவுங்க கட்சிக் காரங்க இருந்திருந்தா இன்னேரம் உன்னை வெட்டிப் போட்டிருப்பாங்க.

நாமதான் காலங்காலமா அவங்க கிட்ட செரட்டையிலே டீ வாங்கிக் குடிக்கிறோம். நீ கை தவறி உடைஞ்சு போச்சு அந்த கண்ணாடி கிளாசுன்னு சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கிட்டு இருக்கலாம். இதுக்குப் போயி கோபப்பட்டு, அடி வாங்கிட்டு

வந்திருக்க. நம்மால அவனை திருப்பி அடிக்க முடியுமா? இல்ல, நாம என்ன அவனை திருப்பி அடிக்கிற சாதியா...” மேலும் புலம்பல் தொடர்ந்தது.

முகில் என்னைக் கூப்பிட்டார். “நாம காலையில போலீஸ் ஸ்டேசனுக்குப் போய் புகார் தரணும்.”

“சார், நீங்க சொன்ன பழைய வாக்குறுதியை மீறமாட்டீங்களே?”

“டேய். நான் அடிபட்டுக் கிடக்கிறேன். இதில் உனக்குப் போட்டி வேற வேணுமா?”

“இல்ல சார். நீங்க உங்க உறுதி மொழியை மீறினால், உங்களால தாழ்த்தப்பட்டவரா ஒரு நாள்கூட வாழ முடியாது. அது கஷ்டம்னு நான் முடிவிற்கு வந்துவிடுவேன்.”

“டேய்... உனக்கு எந்த நேரத்திலே போட்டி போடறதுன்னே தெரியலைடா.”

“இல்ல சார். தாழ்த்தப்பட்டவரா வாழ நீங்க நினைச்ச உடனே இந்த சமூகம் உங்களை எதிர்க்குது. அதுக்காகச் சொன்னேன். பிறகு உங்கள் இஷ்டம்.”

“சரி. உன் விருப்பப்படியே நான் போலீஸ் ஸ்டேசனில் படிக்காத தாழ்த்தப்பட்டவனாகவே நாளை புகார் தரலாம்.” தூக்கம் இல்லாத இரவு ஒன்று அவரை முதன் முதலாக அன்று அவமானப்படுத்தியது.

காலையில் இருவரும் 15 கி.மீ. தூரம் சைக்கிள் மிதித்து போலீஸ் ஸ்டேசன் அடைந்தோம்.

“என்னாயா? மூக்கிலே பெரிய அடி. எங்க விழுந்த?”

“என்னை டீக்கடைக்காரன் நான் தாழ்ந்த சாதின்னு சொல்லி முகத்திலே குத்திட்டான்”

“நீ என்னா சாதி?”

முகில் என்னைப் பார்த்தார்.

“சார்... நாங்களெல்லாம் ஆதிதிராவிடருங்க சார்” என்று நான் கூறினேன்.

“யோவ்... நீ சாதியிலே அது. அதைச் சொல்லி அந்த டீக்கடைக்காரன் திட்டினான்னு சொல்ற. நீ ஏன் திட்டுடர மாதிரி நடந்துகிட்டே. சமாதானமா போ. எங்களுக்கு நிறைய வேலை இருக்கு.

முகில் கடுப்புடன் “சார், எங்க புகாரை வாங்கி FIR போடுங்க”

“இங்க ரைட்டர் இல்ல. அவர் மூனு நாள் லீவு. நீ என்ன பண்ற... நேரா கரூர்க்குப் போய் SP ஆபீஸ்ல புகார் தா” என்று விரட்டியடித்தார்

முகிலும் நானும் சைக்கிளில் காலனி திரும்பினோம்.

“டேய் எள்... நான் புகார் தருவதற்கு முன்பு வேறொரு பயத்துடன் இருந்தேன்.”

“என்ன சார்?”

“எங்கே கம்யூனிட்டி சர்ட்டிபிகேட் கேட்பார்களோ என்றுதான்”

“சார், அதெல்லாம் புகார் மேல நடவடிக்கை எடுக்க விருப்பம் இருந்தால்தான். இவுங்க ஊரை பகைச்சுக்க மாட்டாங்க. SC போலீஸ் கூட நடவடிக்கை எடுக்க மாட்டாங்க. ஏன்னா, அது காலனியை ஊர் கட்டுப்படுத்த.”

முகில்வரும்வழியில் ஒருகம்யூனிஸ்ட் கொடியைக் கண்டார்.

“தம்பி எள்... சைக்கிளை இங்கு நிறுத்து.

நானும், சாரும் அந்த கம்யூனிஸ்ட் கொடியின் அருகில் சிறிது நேரம் நின்றோம். ஐந்து இளைஞர்கள் வந்தனர். கையில் தீக்கதிர் பத்திரிக்கை. பக்கத்துக் குடிசையில் லெனின், மார்க்ஸ் என்று தலைவர்கள் புகைப்படங்கள்.

முகில் ஒருவரிடம் பேச்சுக் கொடுத்தார். “என்னை டீக்கடைக்காரன் சாதி காரணமாக முகத்தில் குத்தி விட்டான்.”

“தோழர்... டீக்கடைக்காரர் ஒரு தொழிலாளி. அவனை ஆட்டுவிப்பது எது? வர்க்கப் போராட்டத்திற்கு இந்த சாதிதான் தடையாக உள்ளது. இருவரும் ஒரே வர்க்கம் என்று...

“போலீஸ் நிலையத்தில் கூட எங்கள் புகாரை வாங்காமல்....” முகில் பேச...

“தோழர், போலீஸ் நிலை ஓர் ஆயுதம் தாங்கிய அரசின் அடிமை நிலை. அங்கு நீதி கிடைக்காது.”

முகில் அழ ஆரம்பித்துவிட்டார். தான் இதுவரை சொல்லி வந்த கம்யூனிசம் பறையனாய் வேடம் போட்டவனின் ஒரு நாள் காயம் தணிக்க இயலவில்லை. பறையனாய் வாழ்பவனின் வலி, அவ்வலியில்லாதவர்களுக்கு புரியவே புரியாது என்று உணர்ந்தார்.

“எள்... சாதி ஒழிக்க நீதான் தீர்வு சொல்ல வேண்டும். நான் அதை ஆதரிப்பேன். என்னால் உன் வாழ்க்கையை, கடந்த 700 வருடங்களாக உங்கள் சமூகம் வாழ்ந்த நெருக்கடி வாழ்க்கையை மறைத்துவிட்டு என்னைப் போன்றவர்கள் சாதிக்கு விடிவு சொல்வது எங்களின் அறியாமையே. இது சாதி இந்துக்களின் ஒடுக்குமுறையை விட கொடுமையானது” என்று முகில் தன் தோல்வியை ஒத்துக்கொண்டு காலனியிலிருந்து ஊர் திரும்பினார்.

மறுநாள் முதல் முகில்வண்ணன் பழையபடி இல்லாமல் பாடம் நடத்துவது, வீட்டிற்குப் போவது என்று இருந்தார். ஒரு வாரம் இதே நிலைமை தொடர்ந்தது. பின்னர் முகில்வண்ணன் பழையபடி கம்யூனிசம் பேசினார். கட்டுரைகள் எழுதினார். சர்வதேசிய அரங்குகளுக்குச் சென்று வர்க்கப் போராட்டம்பற்றி வகுப்புகள் எடுத்தார்.

நான் கேட்டேன் “சார், அன்னிக்குச் சொன்னீங்க...”

“டேய் எள்... அன்றைக்கு ஏதோ உணர்ச்சிவசப்பட்டுபேசிவிட்டேன். சாதி பேன்ற சின்னச் சின்ன விசயங்களில் என் நேரத்தை செலவு செய்ய விரும்பவில்லை. இந்த நாட்டில் 80% வர்க்கப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்துள்ளனர். வர்க்கப் போராட்டம் வெல்லும்போது உன் சாதியும் அழியும். நீயும் என்னுடன் இணைந்து வர்க்கப் போராட்டத்தில் பங்கெடுக்க வா” என்றார் முகில்.

எனக்கு இப்பத்தான் புரியுது. சாதியை பாதுகாப்பது அந்த புரியாத டீக்கடைக்காரன் மட்டுமல்ல. இந்த எல்லாம் புரிந்த சுயநல படிப்பாளி-அறிவாளிகளும்தான் என்று.

◆

# மக்கள் பகுதி

23.6.2005-ஆம் தேதி இரவு இரண்டு மணிக்கு லால்குடி தாலுக்கா P.K. அகரத்தில் கந்தசாமி மகன் செல்லதுரை என்ற கருப்பையா இரண்டு போலீஸ்காரர்களுடன் வந்து தாழ்த்தப்பட்ட சமூகத்தினனாகிய எனது கடைக்கு தீ வைத்துக் கொளுத்தி நாசம் செய்துவிட்டனர். காரணம் ஏற்கனவே ரூ.6000 வரை கடன் வைத்திருந்ததினால் பொருள் தர முடியாது என மறுத்து விட்டேன். இது விஷயமாக சிறுகனூர் காவல் நிலையம் சென்று மனு கொடுத்தபோது அந்த மனுவை கிழித்துப் போட்டுவிட்டு, போலீஸ்காரர்களின் பெயர்களை நீக்கி விட்டு, கருப்பையா மீது மட்டும் புதிதாக மனு எழுதித் தரச் சொல்லி எப்.ஐ.ஆர். பதிவு செய்துள்ளார்கள். அநியாயம் செய்த மூவர் மீதும் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

– ரெ. அய்யாவு, பி.கே அகரம்.

*ஆசிரியர் குறிப்பு: தலித் மக்கள் யாவரும் கவனத்தில் கொள்ள வேண்டியது ஒன்று உள்ளது. பொதுவாக காவல் நிலையம் செல்லும் படிப்பறிவற்ற ஏழை தலித்துகள் இதுபோல பல இடைஞ்சல்களை சந்திக்கின்றனர். புகாரை காவல் நிலையத்தில் பதிவு செய்வதற்கு முன்பாக முதலமைச்சர் அலுவலகம் (தனிப் பிரிவு), காவல்துறை தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு நகல்களை ஈஜிஸ்தர் தபால் மூலம் அனுப்பி விட்டு அதன் பிறகே காவல் நிலையம் செல்ல வேண்டுகிறோம். அவர்கள் கிழித்துப் போட்டார்கள், அல்லது வற்புறுத்தி மாற்றி எழுதினார்கள் என்பதற்கு அத்தாட்சி வேண்டுமல்லாவா? உங்கள் மனு திருச்சி மாவட்ட காவல் துறை கண்காணிப் பாளருக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.*

நாங்கள் வேலூர் மாவட்டம் ஆற்காடு தாலுக்கா திமிரி ஒன்றியம் வளையாத்தூர் கிராமம் ஆதிதிராவிடர்கள் பகுதியில் வசித்து வருகிறோம். எங்கள் கிராமம் மலைகளுக்கு அருகில் உள்ளது. மின்வசதி இதுகாறும் செய்து தரப்படவில்லை. தயவுசெய்து ஆவண செய்யவும்.

– ஊர்ப் பொது மக்கள் சார்பாக: துரைசாமி,
அம்பேத்கர் நகர், வளையாத்தூர்.

*ஆ.கு. வேலூர் மாவட்ட ஆட்சியருக்கு மனு அனுப்பப்படுகிறது.*

நான் சலவைத் தொழிலாளி. 25 வருடமாக வாடகை வீட்டில் நான்கு பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறேன். எனக்கு குடியிருப்பு வசதி தர வேண்டும்.

- T. தமிழரசன்.
மாதா கோவில் தெரு, வ.கூடலூர், லால்குடி தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

*ஆ.கு. திருச்சி மாவட்ட ஆட்சியருக்கு மனு அனுப்பப்படுகிறது.*

*திருச்சி, லால்குடி தாலுக்கா, வந்தலைக்கூடலூரில் வசிக்கும் கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து தொகுப்பு வீடு கேட்டு மனுக்கள் வந்துள்ளன. அவை மாவட்ட ஆட்சித் தலைவரின் நடவடிக்கைக்காக புதிய கோடாங்கியின் பரிந்துரையுடன் அனுப்பப்படுகின்றன.*

*எம். ஆரோக்கியராஜ், த/பெ மாணிக்கம், ஜி. ராஜேந் திரன், த/பெ ஞானாதிக்கம், எம். மரியநாதன், த/பெ மரிய ஆரோக்கியம், அ. சந்தானம், த/பெ அந்தோணி, பி. செல்வராஜ், த/பெ பெரியசாமி, ஜி. தேவ அன்பு (சிலுவை மேரி மகளிர் சங்க உறுப்பினர்), அ. சிமியோன், த/பெ அந்தோணி, ம. தேவதாஸ், த/பெ மரிய ஆரோக்கியம், மலர், க/பெ தன்ராஜ், ஜோ. ராயப்பன், எம். சவுரியார், த/பெ முத்துசாமி, அ. விக்டோரியா, க/பெ அந்தோணி குருசு, எ. மாரிமுத்து, த/பெ முதலி.. அந்தோணி குருஸ், த/பெ அடைக்கலசாமி,மு. கருப்பன், த/பெ மூக்கன்.*

*திருச்சி மாவட்டம் முசிறி தாலுக்கா புலிவலம் கிராமத்திலிருந்து தொகுப்பு வீடு கேட்டு கீழ்க்கண்டவர் களிடமிருந்து மனுக்கள் வந்துள்ளன. அவை திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பரிந்துரையுடன் அனுப்பப்படுகின்றன.*

*ப. ராஜகோபால், த/பெ மருதை, செல்வி, க/பெ போஜராஜ், எஸ். பாப்பாத்தி, க/பெ டி. சிவக்குமார், எஸ். வெற்றிக்கொடி க/பெ எஸ். சுப்ரமணி.*

*திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் தாலுக்கா எதுமலை கிராமம் அம்பேத்கர் தெருவில் வசிக்கும் தலித் மக்கள் தொகுப்பு வீடு கேட்டு மனுச் செய்துள்ளார்கள். மனுக்கள் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்படுகின்றன.*

பி. சத்தீஷ் குமார், த/பெ பொன்னுசாமி, ராமச்சந்தி ரன், சி. அன்பழகன், வை. சின்னசாமி, ரா. கோமதி, ஆர். பிச்சையம்மாள், ஆர். மணிமேகலை, எஸ். ஜெயந்தி, எம். பூங்காவனம், ஆ. பிச்சைமுத்து, பி. மாரிமுத்து, ஏ. ராஜ், தேவி, த/பெ பன்னீர்செல்வம், பி. பெத்தாயி, க/பெ பிச்சை (late).

மணச்சநல்லூர் தாலுக்கா கரியமாணிக்கம் கிராமத்திலிருந்து வரப்பெற்ற மனுக்களின் விவரம்:

ரோஜாப்பூ மகளிர் சுய உதவிக் குழு, 15 உறுப்பினர் களுக்காக அதனது தலைவர் பே. புஷ்பவள்ளி, செ.சு. இலஞ்சியம், மாரிமுத்து, த/பெ பழனியாண்டி.

---

*மணச்சநல்லூர் தாலுக்கா பெரகம்பி தலித் மக்களிடமிருந்து தொகுப்பு வீடு மனுக்கள் பெறப்பட்டுள்ளன. மனுதாரர்கள் விவரம்:*

*சிவசுந்தரி, பாஸ்கர், விஜயலட்சுமி, தங்கமணி, கமல வள்ளி, எஸ். பார்வதி, கே. பார்வதி, மாரியாயி, செந்தில் குமார், பானுமதி, மகேஷ். சுரேஷ், செல்வராஜ், வள்ளியம்மை, அரசம்மாள், பிச்சையம்மாள், ரேணுகா, புகழேந்தி, ராசேந்திரன்.*

---

நான் கணவரை இழந்து நான்காண்டு காலமாகிறது. அரசின் விதவை உதவித்தொகை பெற்று வந்தேன். கடந்த ஒரு வருடமாக எனக்கு வழங்கவில்லை. என் கஷ்டத் துக்கு உதவ வேண்டும்.

- ப. தனக்கோடி, க/பெ (லேட்) பன்னீர்செல்வம், பி.கே. அகரம், திருச்சி மாவட்டம்.

இந்த ஏழை ஆதி திராவிடப் பெண்ணுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்க பரிந்துரை செய்யுங்கள்.

- மலர்க்கொடி, க/பெ நமச்சிவாயம், 94 கரிய மாணிக்கம் அஞ்சல், மணச்ச நல்லூர் தாலுகா, திருச்சி மாவட்டம்.

எங்கள் ஊர் இராமநாதபுரம் என்று ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இருந்துள்ளது. நாங்கள் தாழ்த்தப் பட்டவர்கள் என்பதால் தாரக்கியப்பட்டி என்று மாற்றி விட்டார்கள். இதனை இராமநாதபுரம் என்றே வழங்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.

- ஊர்ப் பொதுமக்கள், இராமநாதபுரம் (தாரக்கியப் பட்டி), அரியாபூர் கிராமம், மஞ்சம்பட்டி வழி, மணப் பாறை தாலுக்கா, திருச்சி மாவட்டம்.

தவளவீரம்பட்டியில் காமராசர் ஆட்சி காலத்தில் ஆதி திராவிடர்களுக்கு 250 ஏக்கர் வழங்கப்பட்டது. 175 ஏக்கர் பட்டா வழங்கிய பின், மீதி நிலம் அருந்ததியினருக்கென ஒதுக்கப்பட்டு ஒப்படை செய்யப்படவில்லை. ஒப்படை செய்யாத காரணத்தினால் ஆதி திராவிடர் அதனை ஆக்ரமணம் செய்து தங்களுக்கு பட்டா வழங்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தொடர்ந்து மனு கொடுத்து வந்துள்ளனர். இருந்தும் 1994-இல் பினாமிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதை ரத்துசெய்து ஆதிதிராவிடர்களுக்கு வழங்கிட வேண்டு கிறோம்.

- ஊர்ப் பொதுமக்கள், தவள வீரம்பட்டி, தரகம்பட்டி வழி, மணப்பாறை தாலுக்கா, திருச்சி மாவட்டம்.

நாங்கள் சக்கிலியர்கள். 1994-ஆம் ஆண்டு ஆதி திராவிடர் நலம் தனித் தாசில்தார் மூலமாக 44 காலி மனைப் பட்டாக்கள் கொட்டம்பட்டி கிராமத்தில் சர்வே எண் 68/Cயில் வழங்கப்பட்டன. ஆனால் எங்களால் உரிமை கொண்டாட இயலாதவாறு பிறர் ஆக்கிரமணம் செய்துள்ளனர். ஆக்கிரமணத்தை அகற்றி எங்களுக்கு ஒப்படையுங்கள்.

- சக்கிலியர்கள், கொட்டாம்பட்டி கிராமம், திருச்சி மாவட்டம்.

எங்கள் ஊரில் ஏழு மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இவர்கள் யாருக்கும் தொகுப்பு வீடோ, விளை நிலமோ கிடையாது. இவை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

- மகளிர் சுய உதவிக் குழுக்கள், கரிய மாணிக்கம், திருச்சி மாவட்டம்.

1996-ஆம் ஆண்டு இலவச வீட்டு மனை வழங்கப் பட்டும் ஆக்கிரமிப்பாளர் வசம் நிலம் உள்ளது. மீட்டுத் தரவும்.

- பூமணி, க/பெ செல்வம், அருந்ததியர் தெரு, புலிவலம், முசிறி தாலுக்கா.

---

ஊனமுற்றவனாகிய எனக்கு கருணை அடிப்படையில் வேலை தர வேண்டுகிறேன்.

-சொ. செந்தில், வந்தலைக் கூடலூர், திருச்சி மாவட்டம்.

எங்கள் ஊரில் நீண்ட நாளாக பாதை பிரச்சினை உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களாகிய நாங்கள் மிகவும் சிரமப்படுகிறோம். அடிப்படை வசதிகளை செய்து தாருங்கள்.

- ஊர்ப் பொதுமக்கள், வந்தலைக் கூடலூர்.

பெரமங்கலம் அண்ணா நகரில் தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் சுமார் 300 குடும்பங்கள் குடியிருந்து வருகிறோம். கடந்த 30 வருடங்களாக அரசுக்குச் சொந்தமான ச.எண் 125/1 பட்டா எண் 498-இல் வசித்து வருகிறோம். பல்வேறு மனுக்கள் அளித்தும் வீட்டு மனைப் பட்டா கிடைத்தபாடில்லை. விரைவில் ஏற்பாடு செய்யவும்.

- வீ. பெரியசாமி (ஆதிதிராவிட மக்கள் சார்பாக), அண்ணா நகர், பெரமங்கலம், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.

*(மேற்கண்ட விண்ணப்பங்கள் அனைத்தும் தொடர்புடைய அதிகாரிகளுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப் பட்டுள்ளன)*

◆

# ஓடாத தச்சூர் மாதா தேரும், ஓடி விளையாடும் சாதியும்

கௌதம சன்னா

கத்தோலிக்க கிறித்தவர்களின் இந்திய வருகை 1541-இல் நிகழ்ந்தது என்று மென்மையான வார்த்தைகளால் அலங்கரிக்க முடியுமா?

இந்திய துணைக் கண்டத்தில் கிறித்துவர்களின் வருகை ஒரு ஊடுருவல்போல நிகழ்ந்தது என்று சொன்னால் அது பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை உண்டாக்குவதற்குப் பதில், இந்து சாதிச் சேற்றினுள் ஒரு பந்தமாகவே இன்னும் இந்திய கிறித்துவம் இருந்து வரும்போது வேறு கோணத்தில் எப்படி பார்க்க முடியும்?

இதில் கோளாறு கிறித்துவத்திலா? கிறித்துவர்களிடையேயா?

கிரிகோரி ரஸ்புடின் ரஷ்யாவின் ஜார் கால ஆட்சியின்போது மக்களின் கொடுங்கனவாக இருந்ததாக வரலாறு பதிவு செய்துள்ளது. ஜாரின் மதத் தலைமைப் பீடத்தை கைப்பற்றி அரசாட்சியை ஆட்டுவித்ததோடு, மக்களை கொடுமைக்கு உட்படுத்தி வதைப்படுத்தினான் இந்த மதகுரு ஜார் அரசன். பிற்பாடு கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட மக்களாலேயே பயங்கரமாகக் கொல்லப்பட்டான்.

கிரிகோரி ரஸ்டின் ருஷ்ய பரப்புக்கு வெளியே செல்லாக் காசு. ஆனால் போப்பாண்டவர்கள் அப்படி அல்ல. மத்திய கால ஐரோப்பா முழுவதும் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தது. ஐரோப்பிய சரக்குக் கப்பல்கள் சென்ற பரப்பெங்கும் அவர்களது அதிகார கொடி பறந்தது. போப்புகளில் 15-ஆம் போப் பிரபலமானவர் - குறிப்பாக இந்திய துணைக் கண்ட மக்களுக்கு. ஏன்?

15-ஆம் போப் கிரிகோரி, கிரிகோரி ரஸ்டினைப் போல கொடுங்கோலராக இல்லாவிட்டாலும், தலித்துகள் அவரை ரஸ்டின் கிரிகோரியை விட மேலானவராக நினைக்க முடியாது. இவர்தான் இந்தியாவில் கத்தோலிக்க கிறித்துவத்தை ஏற்கும் யாரும் தங்களது சாதியை விடத் தேவையில்லை என அதற்கு ஒரு அங்கீகாரத்தை வழங்கியவர்.

இந்திய சாதிக்கு போப் கிரிகோரி வழங்கிய ஞானஸ்தானம் புனிதம் மாறாமல் இன்றும் இருந்து வருகிறது. அதன் ஒரு குறிப்பிடத்தக்க சான்றாக தச்சூர் இருக்கிறது.

- இக்கிராமத்தில் உள்ள தேவாலயம் செங்கல்பட்டு மறை மாவட்டத்திலேயே மிகப் பெரியது. பழைமை வாய்ந்தது.

- அலங்கார வேலைப்பாடுகளால் அழகுபடுத்தப்பட்ட தேவாலயம் ஒரு சிறிய குன்றின் அடிவாரத்தில் உள்ளதால் யாரையும் வசீகரிக்கும் தோற்றம்.

- ஆனால் பூசைகள் நடப்பதில்லை. தேவாலயம் திறந்து மாதங்களாகிறது. தொங்கும் பூட்டு உடைக்கப்பட்டு திருட்டுத்தனமாக சில வேளை பூசை.

- நகராத மாதா தேர்கள்.

- ஒலிக்காத ஊமையாய் தேவாலய மணி.

- சிலுவையில் அறையப்பட்ட இயேசு பூட்டப்பட்ட தேவாலயத்தில் மௌனமாக தனியாக இருக்கிறார்.

- தேவாலயத்திற்கு வழங்கப்பட்ட இயேசுவின் ரத்தமான திராட்சை ரசம் புளித்து போதை வஸ்துவாய் மாறியதுபோல் தோன்றுகிறது.

- தனித்து விடப்பட்ட இயேசுவும், மாதாவும் தீண்டத்தகாதவர்களாய் துன்பப்பட்டு நிற்கிறார்கள்.

ஏன்?

தச்சூர் கிராமத்தில் உள்ள தேவாலயத்தில் உள்ள தலித்துகள் முன்வைத்த கோரிக்கையில் இவ்வளவும் நிகழ்ந்தது என்பதைவிட, இதை மறுக்கும் ரெட்டியார்களால் இவ்வளவும் நிகழ்ந்தது. ரெட்டியார்கள் மறுத்தவை:

1. தலித்துகள் தேவாலயத்தில் பைபிள் வாசிக்கக் கூடாது.

2. தேவாலய பங்கு பேரவையில் தலித்துகள் உறுப்பினர்களாக வர முடியாது.

3. பூசைத் துணைவர் சிறுவர்களாக தலித்துகள் இருக்கக்கூடாது.

4. தேர் பவனி சேரிப்பகுதியில் வராது.

5. தேவாலயத்தின் எடுபிடி வேலையை மட்டுமே தலித்துகள் செய்ய வேண்டும்.

6. பூசையின்போது சமத்துவம் அளிக்கக் கூடாது. நற்கருணையில் ரெட்டியார்களுக்கே முதலிடம்.

7. பூசையில் தெலுங்கு மொழிக்கே முன்னுரிமை. கடவுளுடன் பேசுவதற்கு உகந்த மொழி தெலுங்கு.

ரெட்டியார்கள் மறுத்த இவ்வுரிமைகள் சுயமரியாதை உள்ள யாரையும் தூண்டச் செய்யும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் தலித்துகளுக்கு இந்து மதத்தில்

மரியாதையில்லை என்பதோடு, அது அவர்களின் சுய மரியாதையை களங்கப்படுத்துகிறது என்பதால் அதை விட்டு வெளியேறி அவர்கள் கிறித்துவ மதத்தை ஏற்றார் கள். ஆனால் கிறித்துவ மத நிறுவனத்திலும் இந்து மதத்தின் அதே நிலை தொடர்ந்தால் அவர்கள் பேசா மல் இருக்க முடியாது.

இந்த ஆண்டு மே மாதம் 18-ஆம் தேதி கொடி யேற்றத்துடன் துவங்க வேண்டிய தேவாலயத் திருவிழா வும், தேர் பவனியும் நடைபெறவில்லை. மாவட்ட நிர்வாகம் இ.கு.ச. 144-இன் படி தடையுத்தரவு போட்டு, திருவிழாவை ரத்து செய்து, தேவாலயத்தை பூட்டியது டன், ஏராளமான போலீஸ்காரர்கள் குவிக்கப்பட்டார் கள். 31-ஆம் தேதி நகர வேண்டிய பெரிய மாதா தேர் நகர வில்லை. தடையுத்தரவு ஜூன் மாதம் 18-ஆம் தேதி வரை அமலில் இருந்தது. அதற்கிடையில் மாவட்ட நிர்வாகத் திடம் கோவில் சாவிகள் இருந்தபோது, தேவாலயம் கள் ளத்தனமாகத் திறக்கப்பட்டு, 'திருட்டுத்தனமாக பூசை ரெட்டியார்களால் நடத்தப்பட்டது. மேலும் இறந்து போன ஒரு ரெட்டியாரின் பூதவுடல் திருட்டுத்தனமாக கோவிலுக்குள் கொண்டு செல்லப்பட்டு பூசை நடத்தப் பட்டது.

சட்டப்படியும், தார்மீகத்தின் அடிப்படையிலும் போராடும் தலித்துகள் - சட்ட விரோதமாகவும், திருட்டுத் தனமாகவும் நடைபெறும் இந்த மோசடி பூசை என்ற பெயரில் நடக்கும் அத்துமீறல்களை எதிர்கொள்ள தெரியவில்லை.

அரசு மாவட்ட நிர்வாகமும், மறை மாவட்ட நிர் வாகமும் இதில் என்ன செய்ய வேண்டும்? பிரச்சினை யின் வரலாறு, அது சொல்லும் பாடம் என்ன? அடுத்த இதழில் விரிவாகக் காண்போம்.

## தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒரு கடிதம்

அரசியல் சட்டம் உங்களுக்கு சிறப்பான அதிகாரத்தை வழங்கி இருக்கிறது. இந்த அதிகாரத்தைக்கொண்டு அடித்தட்டு (தலித்) மக்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றுவீர்கள் என்று நாங்கள் பெரிதும் எதிபார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால், மிகவும் வருத்தத்தோடு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு தெரிவிப்பது. தாங்கள் இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த பிறகு சாதி மோதல்கள் குறைந்திருந்தாலும், எவ்வித குற்றச்சாட்டுக்கும் ஆளாகாத, மிகவும் திறமையும் நேர்மையும் மிக்க தலித் அதிகாரிகளான திரு. கிறிஸ்துதாஸ் காந்தி இ.ஆ.ப., திருமதி சிவகாமி இ.ஆ.ப. ஆகிய இருவருக்கும் பணி வழங்காமல் காத்திருப்போர் பட்டியலில் வைத்திருந்தீர்கள். அதோடு சில தலித் உயர் அதிகாரிகளுக்கு திறமைக்கேற்ப பணி வழங்கப்படவில்லை.

சிறப்பான சட்ட அதிகாரத்தைப் பெற்றிருக்கின்ற தாங்கள் தலித் உயர் அதிகாரிகளின் திறமையை முடக்குகின்ற வகையில் காத்திருப்போர் பட்டியலில் வைத்ததை அவர்களின் திறமைக்கும், நேர்மைக்கும் வழங்கப்பட்ட தண்டனையாக கருதுகின்றோம்.

அதேபோன்று பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சி யேந்தல் போன்ற ஊராட்சி மன்ற தலைவர் தேர்தலை நடத்த விடாமலும், அப்படி நடத்தினால் வாக்களித்த மக்களை ஊரைவிட்டு விலக்கி வைக்கப்படுகின்ற தீண்டாமை கொடுமைக்கு தாங்கள் விரைவில் தீர்வு காண வேண்டி கேட்டுக் கொள்கின்றோம்.

எப்பேர்ப்பட்ட மனிதரும் (மதத்தலைவர்) சட்டத்தின் முன் சமம் என்று துணிந்து நடவடிக்கை எடுக்கின்ற தாங்கள், மேற்குறிப்பிட்டுள்ள ஊராட்சி மன்றங்களின் தேர்தலை நடத்த விடாமல ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

பொதுச் செயலாளர்,
தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டு ஒன்றியம்,
பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ்,
ராணிப்பேட்டை

## பரிக்கல்லுக்குப் பரிசு

மலேசியாவில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்மறை ஆராய்ச்சி மாநாட்டிற்காக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பரிக்கல் என். சந்திரனின் சிறுகதை ஆறாவது இடததைப் பிடித்து 50 அமெரிக்க டாலர்களைப் பரிசாகப் பெற்றுள்ளது.

# காளி

**கன்னட மூலம் : மொகள்ளி கணேஷ்**

**தமிழில் : தி. சு. சதாசிவம்**

பேட்டையில் பொழைக்கிற என்னைப் போன்ற வங்களுக்கு கிராமத்துலேருந்து டெலிகிராம் வந்தா போதும்; கொடலு ஈரலெல்லாம் நடுங்கத் தொடங்கிரு துங்க. என்னமோ அவமானம் ஆயிட்ட மாதிரி. ஆயிரக் கணக்கான ஜனங்களுக்கிடையில நாமே பொணமாகி மயானத்துக்கு புறப்பட்டிருக்கிற மாதிரி மனசுக்குள் திகி லாகிறது. அதே சமயத்துல, அளவுக்கு மீறிய கோவமும் ஆத்திரமும் வந்து யம தூதனுங்களப்போல குத்துதுங்க. ஒரு மாசத்துக்கு முன்னாடி போயிருந்தப்போ சேரியில சண்டை போட்டுட்டு வந்தேன். நான் யாரோட தகராறு பண்ணி, திட்டி, அடிச்சி, ஒதச்சிட்டு வந்தனோ அவங்க கிட்டயிருந்தே இப்போ தகவல் வந்திருக்கு. தகவல் கடிதத்த கொண்டுவந்து குடுத்துட்டுப்போன சேவகன் புட்டத்து மேலயே ஒதய்க்கணும்னு ஆத்திரமும் எரிச்ச லும் தொண்ட வறண்டு போனாலும் வந்தது. மொத்த தேசத்தோட கோவம் எதும்மேல திரும்பணுமோ அதும் மேல ஆயரக்கணக்கான வருஷங்களா திரும்பிப் பாயாம இருக்கிற கையாலாகாத்தனம் கண்ணுமுன்னால வந்தது.

காளியோட கடைசி நிமிசங்களுக்காக நான் இப்போ ஊருக்குப்போயேத்தீர வேண்டிய தவிர்க்க முடி யாத கட்டாயம் வந்திருக்கு. நாம இப்பிடித்தான், எதக் கும் உதவாத சின்ன காரணத்துக்காக ரத்தம் சிந்தி எது வும் செய்ய முடியாத நிலையில் ஒருத்தரை ஒருத்தர் கண் டிச்சிகிட்டு நிராசை, ஏமாற்றத்தோடு வேறெங்கெயோ முகத்த மறைச்சி கிட்டு வாழ்ந்துகிட்டிருக்கிறோம். அன் னைக்கு சண்டை நடந்ததோட சரியான விவரங்க இப்போ நினைவுக்கு வரல. என்னைக்கும் போலவே அதே கெட்ட நேரம்; சதா காலமும் நம்மவிட்டு நீங்காத எரியும் நேரம்; கொல்லும் வஞ்சம் தீர்க்க காத்திருக்கிற கண நேரம் - எப்பவும் மனசை கலக்கத்துக்குள்ளேயே வச்சிருக்கிற நிலையில் காளிய அன்னைக்கி அடிச்சப்போ அவளோட பொக்கு கட்டின தவடைங்களுக்கு நடுவே என் கை விரலுங்க தங்களோட ஆத்திரத்தை தணிச்சு கிட்டதுங்க. கழுத்தைப் பிடிச்சி நசுக்கி தள்ளினப்போ என்னோட மெதுவான நகங்க அவளோட வயசான தோலை பற்றித் தடங்கிறி செகப்பாக்கின. வலுத்த தோள் களால தள்ளினப்போ அவளோட பழங்காலத்தவை என்னும்படியான எலும்புகளோட மறைவில உட்கார்ந் திருந்த எங்க பரம்பரை முன்னோருங்க எதுவும் செய்ய முடியாதவங்களாகி 'அடிப்பா அடி. அடிக்கிற சக்தி வரணும்னுதான் நாங்கெல்லாம் உன்ன வளத்து பலசாலி யாக்கினது'ன்னு சொல்ற மாதிரி சாக்கடை பக்கத்தில புரண்டுகிட்டிருந்தாங்க. அந்த நொடியில காளிய கொன் னுடணும்-ன்ற அளவுக்கு கோவம் வந்தது.

காரணம் என்னவோ அப்படியொன்னும் மகத்தா னது இல்லதான். ரொம்ப சின்ன விஷயத்துக்குக்கூட அப் பப்போ ஆத்திரமடையறது பழைய காலத்துலயிருந்தே எங்க குடும்பத்து ஆளுங்களுக்கெல்லாம் பழக்கமாப் போயிருக்கணும். ஆத்திரம் வர்ற வேகத்துல என் கண் ணுங்களுக்கு ஒண்ணுமே தெரியாது. பாட்டன் முப்பாட் டனுங்க கட்டின இந்த வீட்டு பாகத்துல தன்னோட ஒரே மகனுக்கு சரியானபடி பங்கு வரலேன்னற பேச்சுக்குத் தான் அன்னைக்கு சண்டை உண்டானது. மிருகங்க இருக்கிறதுக்கும் தகுதியில்லாத இந்த வீட்டோட பங்கு போடற விஷயத்துலதான் ஆரம்பிச்சது அந்த சண்டை; பல அநியாயமான விஷயங்களோடு கலந்து போயிருந் தது. எங்க பாட்டன் சாகிறதுக்கு முன்னாடியே வீட்ட எல்லாருக்கும் சரியா பங்கிட்டு போயிருந்தா இந்தத் தகராறுங்களெல்லாம் இருந்திருக்காதோ அல்லது அதுங்க இன்னும் அதிகமாயிருக்குமோ என்னமோ தெரியல. என் பங்குக்கு வீட்டோட முன்பாகம்தான் வரணும்ன்ற என் பிடிவாதத்துல காளி பயித்தியக்காரியப் போல பாய்ஞ்சு வந்து என் கழுத்தப் புடிச்சி இழுத்துத் தள்ளி மூத்திரம் போற தொட்டியில என்ன பொறட்டி எடுத்து சேறும் சகதியுமாக்கி அவமானத்துக்குள்ளாக் கிட்டா. அதுக்கப்புறம் நாள் முழுக்க நானும் அவளோட மகனும் காளியும் மத்தவங்களும் என்னமோ பெரிய யுத்தம் மாதிரி அடிதடியில இறங்கி யாரும் தோக்காம ஜெயிக்காம ஓய்ஞ்சிபோனோம்.

**'திதி' சாப்பாட்ட சொமந்துனு வந்த பிறகு காளி சேரிய சேர்ந்த என்னை மாதிரி பையன்களுக் கெல்லாம் பரிமாரி சாப்பிட வச்சி சந்தோஷப்படுவா. கூடை கணக்குல கொண்டுவந்த களியை அன்னைக்கு ராத்திரியே சின்ன சின்ன கவளங்களா புட்டுபோட்டு தண்ணியில நனைச்சி ஒணத்தி அப்புறமா பொடியாக்கி அதுக்கப்பறம் பசிக்கும்போதெல்லாம் கூழு காச்சி குடிக்க வச்சி நிம்மதியா மூச்ச விடுவா.**

**இப்போ காலம் முடிஞ்சி காளி மயானத்துல மண்ணுக்கடியில மண்ணாகி படுத்துக்க நெலத்த சொந்தமாக்கிக்கிட்டிருந்தா. புதைக்கிறதுக்கு முன்னால அவ முகத்த கடைசியா ஒரு முற பாக்கத் தொடங்கினேன். எங்களை மாதிரியானவங்கள வளத்து பாசமும் உயிரும் நிரப்பி செத்துப்போன பல முன்னோருங்களைப் போலவே இப்பவும் காளியோட செத்த முகத்துலயும் ஏதோவொரு தெளிவில்லாத கனவு இருக்கிறதைப் போலவும், என்னையே பாத்து கிட்டுருக்கிறதைப் போலவும் பாடையில படுத்துகிட்டிருந்தா**

'இவ்வளவெல்லாம் படிச்சி நாலு பேருக்கு 'யோசனை' சொல்ற உன்னைப் போல ஆளுங்களே இப்படிப் பண்ணினா எப்படி'ன்னு ஜனங்க காறி துப்பத் தொடங்கினதுக்குப் பிறகு நான் தலை கெட்டுப்போயி மறுபடியும் பேட்டைக்கு வந்து எல்லாத்தையும் மறக்கத் தொடங்கியிருந்தேன். அதுக்குள்ளவே காளி பக்கத்துலேருந்து கடைசிக் கடிதம். இப்போ போயேத் தீரணும். கடைசி பிடி மண்ணோட குணத்த (பிறவிக் கடனை) தீர்த்தே யாகணும். அவளோட மகன் காளப்பனே எழுதின கடிதம். அதே நினைப்பு, அதே காளி, அதே குண்டான், அதே பழையதோட பிச்சைச் சொத்து மூட்டை. நாங்க எவ்வளவுதான் சண்டைபோட்டு அடிச்சி ஒதச்சிகிட்டு திட்டிகிட்டாலும் பசியெடுத்ததும் ஒடனே ஒண்ணு சேந்து துக்கப்படறது ரத்தத்தோடு கலந்து போயிருக்குது.

அவளோட கடைசி காலத்துல எங்கிட்ட அவ அடி ஒத பட்டிருந்தாலும் காளியோட கட்டுச்சோறு பிச்சை என்னமோ உயிரோடுயிருக்கிற உண்மையப் போல என்னை வாட்டத் தொடங்கியிருந்தது. நான் வளர்ந்ததே காளியோட கைக் கவளத்துலதான். அப்போ காளி எங்க மொத்த (மாட்டுத்) தொட்டியிலயே பெரும் புள்ளியாயிருந்தா. பல அனாதைக் கொழந்தைங்களுக்கு அம்மாவாயிருந்தா. பெரிய கவுண்டர் வீட்டுல குப்பைக் கூட்றதே காளியோட ஒரே வாழ்க்கையின் நோக்கம்ன்ற மாதிரி வேலையாயிருந்தது. அவ கண்ணு முன்னால என்னைக்கும் குப்பை தெரியவேக்கூடாதுன்ற மாதிரி சந்து பொந்துங்கள்ல இருக்கிற குப்பையயெல்லாம் எந்த எதிர்பலனும் இல்லாமப் போனாலும் கூட்டிப் பெருக்கி, சுத்தம் பண்ணி கைகழுவாமப்போனா அவளுக்கு மனச் சமாதானமே இருக்காது. இந்த கவுண்டரோட மாட்டுத் தொட்டி எங்க ஊரு பக்கத்துலயே இருந்தது. கோழி கூவினவுடனே காளி தன் அக்குள்ல ரெண்டு மூணு வகையான தென்னந் தொடப்பங்கள வச்சினு பொகயில மென்னுனே புறப்பட்டான்னா; நானோ இல்ல காளப்பனோ இவ பின்னால்ல, சொல்லுக்கு அடங்கிப்போற நாய்ங்களப்போல பின்னாலயே பெரிய பாத்திரம் ஒண்ண எடுத்துனு பொறப்பட்டுப் போவோம். எனக்கு இப்ப கூட அது ஒரு சுகமான காலமாத் தோணுது. பொழுது விடியிற நேரம். பனித்துளியில் நனைஞ்ச காடுகரைங்க தோட்டம் தொரவுங்க, கூவுற பறவைகளோட கலகல சத்தம், தொலைவா கூலி வேலைக்காக அவசர அவசரமா போர்வைய போத்தினு போய்கிட்டிருக்கிற ஜனங்களோட வீடுங்கள்ல கிடைக்கிற பழையதோட ருசியின் கற்பனைக் குதிர... அதுங்க மேல உக்காந்து ஓடற சுகம்... காளிக்கு அப்படிப்பட்ட சுகத்தோட நெனப்பு இருந்ததோ இல்லியோ சரியாத் தெரியல. அவ புருசன் நம்மய்யா என்னமோ விபத்துல செத்துட்டபிறகு அவ ஊரு குப்பைய சுத்தம் பண்றதையே பெரிய தவமா செய்துகிட்டிருந்தா.

கவுண்டரோட விசாலமான மாட்டுத் தொழுவங்களோட சாணி, கோமியம், குப்பையயெல்லாம் காளி பெருக்கிவாரிக் கூட்டும்போது அவளையே கண்சிமிட்டாம உத்துப் பாத்தபடி உக்காந்திருப்பதும் கூட எனக்கு ஏதோவொரு சுகத்த குடுத்துகிட்டிருந்தது. அதே மாதிரி இந்த காளி எவ்வளவு சீக்கிரமா குப்பைய வாரி பழையத வாங்கிக்க சொல்வாளோன்னு காத்துனு பரபரப்போட இருப்பேன். இருந்த ஒரே பாத்திரத்துல பல வீட்டுப் பொம்பளைங்க போடற பழைய சோறு ஊத்தற கொழம்ப ரசங்கள வாங்கி நிரப்பிக்கும்போது ஏதோவொரு உற்சாம், சக்தி, சந்தோஷம் என் ஒடம்பு முழுக்க நெறஞ்சி தழுவி வழிஞ்சிபோய்கிட்டிருக்கும். தற்செயலா அந்த கவுண்டரோட அழகான பொம்பளைங்க தங்களோட மெத்துனிருக்கிற கையால ஒய்ரத்துலேருந்து பழையத எங்க பாத்திரத்துல ஊத்தும்போது, சில சமயங்கள்ல அதிகப்படியா வழிஞ்சியோட்ற பழைய கூழு, கொழம்புங்களோட துளிங்க மேல எனக்குள்ளவே கெர்வம் பொங்கிவரும். மொழங்கை மேல துள்ளிவந்து உக்கார்ற கொழம்ப அங்கெயே நக்கிப் பாத்து, என்கிட்டேயிருந்து நீ தப்பிச்சிப்போக முடியாதுன்றதைப்போல கண்ணை உருட்டிப் பாப்பேன். அஞ்சாறு வீட்டு கலங்கிய கொழம்பு புதுமாதிரியான மணத்தோடு என் மனசு மேல போர் தொடுக்கும். நான் உள்ளுக்குள்ளவே வாதிட்டபடி; உன்ன வயிறு நெறைய குடிச்சி என்னால ஜீரணிச்சிக்க முடியுமான்னு கணக்குப் போட்டு பாப்பேன். காளியென்னமோ தெனமும் என் பொறுமைய சோதிச்சபடியே இருப்பா. கவுண்டர் வீட்டுக்காரங்க 'போதும் வுடு; தெனமும் இந்த சாணியும் கோமியமும் இருந்தே இருக்கு. அதை எவ்வளவுன்னுதான் வாரிக் கொட்டி சுத்தம் பண்ணுவே'ன்னு சொன்னாலும் விடாம சுத்தம் பண்ண கச்சகட்டினு நிப்பா. 'பள்ளிக்கொடம் போக நேரமாயிடிச்சி வாம்மா'ன்னு கூப்பிட்டாலும் அவ என் பேச்ச காதுல போட்டுக்கவே மாட்டா. அடுத்த வீட்டுக்காரங்க எந்த மாதிரியான பழையத போடுவாங்களோன்னு யோசிக்கிறதுலயே அப்போ என் புத்தி சக்தியெல்லாம் கரைஞ்சி போய்கிட்டிருக்கும். தொழுவத்தோட ஒரு மூலையில ஆடுமாடுங்களோட பக்கத்துல உக்காந்துனு அவ்வளவு பெரிய வீட்டோட உள் பாகங்களையெல்லாம் கற்பனையிலேயே எண்ணிப்பாத்து, மொத்த வீட்டோட அழகு அலங்காரங்களயெல்லாம் எப்பிடியிருக்கும்ன்னு யூகிச்சு, இவங்க வீட்டுல சமையலறை எந்த மூலையில் இருக்கும்ன்றத வெறும் பழைய சோறு-கொழம்பு வாடையிலிருந்தே கண்டு பிடிச்சிடுவேன். இவ்வளவு பெரிய வீட்டுல என்னென்னவெல்லாம் இருக்கும்ன்றத கற்பனை செய்யக்கூட முடி

யாம பல தடவை சோர்ந்து போயிடுவேன். சில நேரங்கள்ல அந்த வீட்டுலேருந்த மீசைவச்ச ஆம்பளைங்க யாரையாவது பாத்தவொடனெ காரணமேயில்லாம பயமும் திகிலும் அளவுக்கு மீறி ஏற்படும். அவங்க முன்னாடி நாய் குட்டியப்போல கூனிக்குறுகி தாழ்மயோடு பயந்து மரியாத காட்டி தலைய குனிஞ்சி எழுந்து நிக்கணும்ன்ற கட்டளை என்மேல படிஞ்சிருக்கிறமாதிரித் தோணும்.

காளிக்கு இந்த மாதிரி பயமே எதுவும் இல்ல. குப்பைய சுத்தம் பண்ணின பிறகு பழையது கூழோ கஞ்சியோ குடுங்கோன்னு அவ கேக்கவும் மாட்டா. எத்தனையோ வீடுங்கள்ல வேல வாங்கிட்டு கூழோ கஞ்சியோ (பழையதை) குடுக்க மாட்டாங்க. 'மார்லம்மி' (மகா நவமி) பண்டிகையன்னிக்கி மிச்சம் மீந்திருக்கும் புளிக் கொழம்பு, காரத்தொவையல், பொரியல், கூட்டு, பாயசம், சோறு, களி இதுங்கள முன்ன எப்பவோ குடுத்ததுக்கு கணக்கு போட்டு பாத்துட்டு 'போ, போ'ன்னிடுவாங்க. காளி வேலையில் அதிகமா முழுகிப் போயிடற அளவுக்கு என் பொறுமை தாங்க முடியாததாப் போயிடும். வேலையில் நேரமாயிட்டா ஊருக்குத் திரும்பிப் போய் பள்ளிக்கூடத்துக்குப் போக எனக்குத் தாமதமாகி, அப்புறம் மாஸ்டர் (ஆசிரியர்) கிட்ட லேட்டா வந்தேன்னு நான்தான் அடிவாங்க வேண்டியிருக்கும்.

ஒரே பாத்திரத்துல பல வீட்டு சோறு, கொழம்பு, களி, காரத் தொவையல், புளிக் கொழம்பு, காய்கறிங்க எல்லாம் கலந்துபோய், அதைச் சாப்பிடற புண்ணியத்துக்காக நான் அப்போ பள்ளிக்கூடத்தையும் புறக்கணிச்சிட்டு காளியோட முந்தானைய பிடிச்சுகிட்டு அலைஞ்சுகிட்டிருந்தேன். இப்படிப்பட்ட ருசியப் பழகிட்ட பின்னால நான் ஊர்ல சாயங்காலம் ஆகஆக எந்த வீட்டுல எந்தெந்த வகையான கொழம்பு, காரத்தொவையல பண்ணிகிட்டிருக்காங்கன்னு ஒரு நொடியில மோப்பம் புடிச்சே கண்டு பிடிச்சிடுவேன்.

அதிலயும் காளியோட போகும்போது 'யார் வீட்டுலயாவது பழய கறிக் கொழம்பாவது கிடைக்கிற மாதிரி பண்ணுயப்பா கடவுளே'ன்னு ரொம்ப பயபக்தியோடு மனசார வேண்டிக்குவேன். அதிலயும் பன்னிக் கறிக் கொழம்பு ஏதாவது அதிர்ஷ்டவசமா ஒரு அரை அகப்பையாவது கெடைச்சா போதும். அதை அந்த கோமிய நாத்தமெடுக்கும் தொழுவத்திலேயே உக்காந்து எலையில வழிச்சி போட்டுகிட்டு நக்கிச் சாப்பிட்டு அளவுக்கு மீறி சந்தோஷப்பட்டுக்குவன். இப்படிப்பட்ட கறியோட 'ருசி' கிடைக்கிறமாதிரியிருந்தா சாகிறவரைக்கும் ஒழுங்கா கட்டுப்பாடோட இவங்க வீடுங்கள்ல கொத்தடிமையா வேலை செய்யவும் நான் தயாராயிருக்கிறேன்னு மனசுக்குள்ளவே தீர்மானம் பண்ணிப்பேன். ஒரு துண்டு எலும்புக்காக, ஒரு கவளம் கருணைக்காக, ஒரு இரக்கமான பார்வைக்காக அவங்க முன்னால நான் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தாழ்ந்துபோய் தலை குனியவும் தயாராகிக்கிட்டிருந்தேன்.

எல்லோருக்கும் தலைவணங்கி கை கூப்பணும்ன்னு காளி சொல்றத தட்டாம தாழ்மையோட கடைபிடிச்சேன். பெரியவங்க வீட்டு 'திதி' நாளுங்கள்ல எங்க சேரியோட தரித்திரமே அடையாளம் தெரியாம மறைஞ்சுபோயிடும். ரெண்டு மூணு புட்டுக் கூடைங்கள் சுமந்துகிட்டு போய் காளிகூடவே ஒரு பக்கமா உக்காந்து 'திதி' சாப்பாட்டு காரியமெல்லாம் முடியிறவரைக்கும் மூச்சை கையில பிடிச்சிகினு காத்துகிட்டிருப்போம். நான் மட்டும் 'திதி' சாப்பாட்டு கறி (மாமிச) வாசனையோட தாக்குதல தாங்க முடியாம சோந்துபோய் அவங்க வீட்டு புழக்கடை வேலி மறைவுல படுத்துடுவேன். காளி பழைய காலத்து தேவதையப்போல அவங்க கூப்புடறதுக் காகவே காத்துகிட்டிருப்பா. கண்ண மூடி கற்பனையிலேயே அந்த 'திதி'யோட சோறு, கொழம்பு, எறச்சி, பொரியல், தொவையல், கூட்டு, பாயசங்களையெல்லாம் தாராளமா மனவாசல்ல அண்டா குண்டா நெறைய குவியல் குவியலாக நெறச்சிகிட்டு, அதுங்களையெல்லாம் நிதானமாக வகைவகையா பிரிச்சி பாத்து சாப்பிட்டு சப்புகொட்டி, திடீர்ன்னு அந்த சாப்பாட்ட சமைச்ச பெரிய பெரிய பாத்திரங்களையே எடுத்துகிட்டு பறந்துவந்து சேரிக்கு நடுமத்தியில் கொட்டி எல்லாரையும் காக்காய்ங்களப்போல கத்திகிட்டு கபகபன்னு தின்றமாதிரியெல்லாம்யோசிச்சுகிட்டிருப்பேன்.

காளி இல்லாமயிருந்தா இது எதுவுமே நடந்திருக்காது. நானே அந்த சோறு, எறச்சி, கொழம்பு, தண்ணியெல்லாமுமா ஆகி, பயந்துபோய், செத்த மாட்டை பெணந்தின்னிக் கழுகுங்க ஒரு நொடியில தங்களோட கூரான அகலமான அலகுகளினால் தின்னு முடிச்ச மாதிரியும் கனவு கண்டதா அதிர்ந்து போயிடுவேன். 'திதி' சாப்பாட்டோட வாசன என்ன ஏதோவொரு உலகத்து போதையேறிய கிள்ளரியின் குரலைப்போல கவர்ந்திழுத்து அசரச் செய்யும். வந்தவங்களுக்கெல்லாம் பரிமாறி முடிஞ்ச பிறகு வேலிப்புதரோரம் விழுந்து கிடக்கிற எங்கள கவுண்டர் தன்னோட ஆளுங்கள விட்டு உரக்க கூப்பிட வைப்பார்.

அவங்க கூப்பிட்டவுடனே உயிர்வந்தது போலாயிடும். வந்தவங்களுக்கெல்லாம் சாப்பாடு பரிமாறி எங்கே எல்லாம் முடிஞ்சி போயிடுமோன்னு பதறி 'கடவுளே எங்களுக்கும் 'திதி' சாப்பாடு கெடைக்கிறமாதிரி கருண காட்டு'ன்னு வேண்டிகிட்டிருப்பேன் அப்ப்போ அவங்க கவனம் எங்க பக்கமா திரும்பறது . முன்னாலயும் பின்னாலயும் நாங்க நடமாடும்போது நாயிங்கள அடிச்சி வெரட்டுற மாதிரி பயங்காட்டி எங்களையும் வெலக்குவாங்க.

எப்பிடியோ 'திதி' சாப்பாட்ட சொமந்துனு வந்த பிறகு காளி சேரிய சேர்ந்த என்னை மாதிரி பையன்களுக் கெல்லாம் பரிமாறி சாப்பிட வச்சி சந்தோஷப்படுவா. கூடை கணக்குல கொண்டுவந்த களியை அன்னைக்கு ராத்திரியே சின்ன சின்ன கவளங்களா புட்டுபோட்டு தண்ணியில நனைச்சி ஒணத்தி அப்புறமா பொடியாக்கி அதுக்கப்பறம் பசிக்கும்போதெல்லாம் கூழு காச்சி குடிக்க வச்சி நிம்மதியா மூச்சு விடுவா. சோத்தையும் கூட இப்பிடித்தான் தண்ணியில ஊறவச்சி ஒணத்தி இடிச்சி மாவாக்கி கஞ்சி காய்ச்சி குடுப்பா.

காளி இல்லாமயிருந்திருந்தா இப்பொ இதையெல்லாம் சொல்லும் எந்த சக்தியும் யோக்கியதையும் எனக்கு இருந்திருக்காது. ரொம்ப பஞ்சம் வந்துட்டா நாங்க அவ கூடவே எதுக்குமே தயாராயிருந்தோம். ஊர்ல ஆடு மாடு எருமை ஏதாவது செத்ததுன்னா காளி மூலமாத்தான் அதுங்களோட கடைசி சவ சடங்குங்க நடக்கும். சேரியச் சேர்ந்த இன்னும் ரெண்டு பேரோட காளி என்னையும் கூப்புட்டுனு செத்த பிராணியோட பக்கத்

துல போவா. சவ சடங்குன்னா அந்த பிராணிய கொஞ்சம் தொலையா மறைவான இடத்துக்கு இழுத்துகிட்டுப் போய் அதுங்களோட தனியா எடுத்த மாமிசப் பகுதிங்கள எடுத்து வச்சிகிட்டு எஞ்சியிருக்கிற பாகங்கள குழியில் போட்டு மண்ணு தள்ளி மூடறதுதான். கறிக்காக வேற பொம்பளைங்க வந்து தகராறு பண்ணினா அவங்களோட சண்டைபோட்டு நல்ல நல்ல மாமிசப் பகுதிங்கள தன் பக்கம் சேத்துக்குவா. நெறஞ்ச கறிக் கூடைய தலைமேல சுமந்துகிட்டு மேலேருந்து திருட வர்ற பருந்து காக்காய்ங்கள பயப்படுத்தி வெரட்டினு நடக்கும் போதே கறியிலேருந்து கசியிற ரத்தத் துளிங்க தலைக்கு எறங்கி, அப்புறம் அது தலைமுடி நடுவில இடம் பிடிச்சினு, நெத்தி, காதுங்க பக்கமா ஒழுகி, கன்னம், புருவங்க மேல ஈங்க அதுங்க சாப்பாட்ட பறிச்சிகிட்டுபோற திருடங்களப்போலஎங்களச் சுத்தி 'உய்ய்'ன்னு சத்தம் போட்டுனு தாக்குறதுக்காக வீணா முயற்சி பண்ணி தோத்துப் போகுங்க. யார் வந்தாலும் சரி உங்கள உயிரக் குடுத்தாவது காப்பாத்துவேன்ற மாதிரி சேரியிலேருந்து பின்னாலயே வந்த எங்க நாய்ங்க மொழ நீளத்துக்கு நாக்குங்கள 'ஜொல்லு' வழிய தொங்கப் போட்டுகிட்டு பின்னாலயும் முன்னாலயும் உற்சாகத்தோட வந்துகிட்டிருக்கும்.

அவ்வளவு கறியையும் அந்த ராத்திரியே காளி வெளக்கு முன்னால உக்காந்து ரொம்ப சாதாரணமா அறுத்து துண்டுபோட்டு சரங்களப்போல மொழ நீளத்துக்கு செஞ்சி கயித்துமேல தொங்கபோட்டு காயப் போட்டுடுவா. பருந்து, காக்கா, நாயிங்ககிட்டயிருந்து அதுங்கள காவல் காக்கிறதுகூட எதனாலயோ மனசுக்கு ஆறுதலாயிருக்கும். ஒணந்த அந்தக் கறிய காளி துண்டு போட்டு பலாக்காயி கொட்டையோடு சேத்து கொழம்பு வச்சா நெறைய சின்னப் பையனுங்க, படிக்கிறதையும் விட்டுட்டு உற்சாகமா அவ வீட்டுக்கு தண்ணி கொண்டு வந்து நெரப்பி, தெருவப் பெருக்கி, ஆட்டம்போட்டு தெரு நாய்ங்கள பக்கத்துலயே உக்கார வச்சிகிட்டு காத்துகிட்ருப்பாங்க. பாதி வெந்த அந்த கறிய தவடைப் பல்லு நொந்தாலும் சரி, மென்னு மென்னு சாரத்த உறிஞ்சித் தின்னுட்டு வாசல்ல படுத்துனு காளியோட விடுகதைங்கள ஸ்பிங்ஸ் தேவதையவிட சுலபமா விடுவிச்சி வானத்து நட்சத்திரங்கள எண்ணினே தூங்கிப் போயிடுவோம். பள்ளிகூடத்துல படிக்கிறதுக்கு சாத்தியமே இல்லாமயிருந்த எவ்வளவே நாட்டுப்புற பாடங்கள் நாங்க அவகிட்டேயிருந்து கத்துகிட்டிருந்தோம். மொத்த குடும்பத்துலேயே அவளோட கூடவே நாங்க காலம் கழிக்கிறதுன்னா அத எதுவோ சொர்கத்து பாதையில நடந்து போகிறமாதிரி இருக்கும். அப்பிடி பாத்தா அந்த பெரிய வீட்டோட உறவுங்கள்லியே காளி எனக்கு பாட்டியாக வேண்டியிருந்தது.

அவ என்னுமோ எப்பவும் அக்குள்ல விதவிதமான துடைப்பங்கள வச்சுகிட்டே இருப்பா. காளியோட சிபாரிசுல பெரியவங்க வீட்டுல கூலிக்கு சேர்றதுக்கு அப்போ நான் கனவுகண்டுகிட்டிருந்தேன். ஆனா, காளியோட இப்போதைய கடைசி காலத்துல இதுங்கெல்லாம் விசித்திரமான உண்மைங்களா என்னெ குத்திக் குடையுதுங்க. 'நாலஞ்சு ஊட்டுல பிச்சையெடுத்து கஷ்டப்பட்டு களியோ கூழோ வாங்கி பொழச்சாதானே பொழப்புன்றதுக்கு ஒரு அர்த்தம் இருக்கும்'ன்னு பாராட்டு வாங்கணும்ன்ற தீவிரமான ஆசை மோகம் உயரத்துக்கு வளர்ந்துயிருந்தது. வருஷத்துக்கொரு முறை கூலியாளுங்க கவுண்டரு தச்சுத்தர்ற புதுத் துணிய உடுத்திகிட்டு சேரிக்கு திரும்பிவந்து பட்டாபட்டி நிக்கரு மேல நிறமுள்ள அரைக்கை சட்டைய போட்டுனு டவல் போட்டுகிட்டு பீடி புகைச்சிகிட்டே நடமாடும்போது நானும் அப்படியாகிறது என்னைக்கின்னு ஏங்கி ஏமாத்தத்தினால் துக்கம் பொங்கி வந்துடும். எனக்கு எதுவும் எழுதவும், படிக்கவும் தெரியவே தெரியாதுன்னும், இனிமே என்னால ஒருபிடி உப்புக்கும் உதவ முடியாத போயிடும்னும், இப்பவே எப்பிடியாவது எதையாவது செஞ்சி கூலி வேலைக்கு சேத்திருன்னும் நான் காளிய யாரும் இல்லாதப்போ வேண்டிக்குவேன்.

காளி என் ஆசைய காதுலயே போட்டுக்காத மாதிரி என் பேச்ச ஒதுக்கிட்டு என் தலைய வாரி கன்னத்து மேல கண் மைய வச்சி தலைக்கு விளக்கெண்ணெய பூசி பள்ளிக் கூடத்துக்குப் போன்னு விரட்டுவா. அப்போ நான் பரிட்சையில வேணுமின்னே சரியா எழுதாம, 'இந்த வாட்டி நான் பெயிலாயிடணும், அப்பொவாவது கோபத்துல என்ன கூலி வேலைக்கு சேத்துடுவாங்க'ன்னு தந்திரம் பண்ணுவேன்.

இப்படிப்பட்ட சமயத்துலதான் ஒருமுற எங்க சேரியச் சேர்ந்த அரும்பு மீசை கூலி வேலைக்காரன் ஒருத்தன துண்டு துண்டா வெட்டி ஏரி மதகுகிட்ட வீசி யெறிஞ்சிட்டு, அதுக்குப் பிறகு அவனோட மிச்சம் மீதியிருந்த மாமிசங்கள பருந்தும் நாய்ங்களும் தின்ற பயங்கர காட்சிய நாங்கெல்லாம் போய்ப் பாத்துட்டு வந்தபிறகு கூலி வேலைக்கு போகிற கனவ பொடியாக்கி தூளாக்கி காத்துல ஊதிவிட்டுட்டேன். அந்த கூலி வேலையாளு 'எங்க பொண்ணத் தொட்டுட்டான்'ன்னு பெரிய கவுண்டர் ஆத்திரமடைஞ்சு ஆளவச்சி கொன்னுட்டு யாரும் இதப்பத்தி மூச்ச விடக்கூடாதுன்னு ஊரையே பயப்படுத்தி வச்சிட்டார். காளிக்கு இந்த கொலையோட பின்னணி தெரிஞ்சிருந்ததாலயோ என்னமோ எங்களையெல்லாம் என்னென்னமோ சொல்லி பயங்காட்டிட்டா. அதுக்கப்புறம் நான் என்னைக்கும அவகூட தொழுவத்துப் பிச்சைக்குப் போகவேயில்ல.

நான் வளர வளர காளியோட தொடர்பிலேருந்து விலகிப் போய்க்கிட்டேயிருந்தேன். ஆனாலும் அவளோட எச்சை, கைச்சோறு எதையாவது எங்கிருந்தாவது வேண்டி கொண்டுவந்து குடுத்துகிட்டிருந்தது மட்டும் என் ரத்தத்தோட சேர்ந்து போயிருந்தது. அவளுக்கு முன்னால எந்த குழந்தையும் அழுக்காயிருக்க அவ விட்டதேயில்ல.அவங்க புட்டத்தக் கழுவி மூக்குச் சளியச் சிந்திப்போட்டு முகத்தக் கழுவி தலைய சீவிவிட்டு அனுப்பி வச்சிடுவா. ஊர்ல எந்தவொரு பண்டிகை, திருவிழா, விசேஷங்க வந்தாலும் காலைலேருந்து சாயங்காலம் வரைக்கும் ஊர்ல மொத்தத் தெருவுங்களையே பெருக்கி சுத்தம் பண்ணி கோலம் போட்டு புழுதியெல்லாம் தண்ணீர் தெளிச்சி குப்பையயெல்லாம் கூடைங்கள்ல அள்ளி சொமந்துனு போயி தொலைவுல எறிஞ்சிட்டு வந்து நல்லபடியா தெரியிற தெருவுங்களையே தியானத்தோட உத்துப் பாத்து சந்தோஷமும் திருப்தியும் பட்டுக்குவா. எங்க பள்ளிக்கூடத்துல சுதந்திர நாளைக் கொண்டாடுற அன்னைக்கு பரந்து கிடக்கிற மைதானத்தையெல்லாம் பெருக்கி கோலம் போட்டு தொலைவா நின்னு பையனுங்க அந்த மைதானத்துல

ஓடியாடி நடமாடறதையே கண் நெறைய பாத்துகிட்டு நிப்பா. குப்பைன்னா அவளுக்கு கொஞ்சங்கூட புடிக்காது. குப்பைய பெருக்கி தூசும் தும்பும் அழுக்காகி அவளே அழுக்கு மூட்டையா இருந்தாலும் யார் யாரு வீட்டு முன்னாலயோ இருக்கிற அவளோட குப்பை வார்ற வேலையப் பாத்து ஜனங்க அவள குப்பத் தொட்டி, குப்பக்காரின்னே கூப்பிடுவாங்க.

இதையெல்லாம் நான் இப்போ வெக்கத்தோடவும் பெருமையோடவும் நெனச்சிப் பாக்கிறதுக்குப் பின்னால ஏதோவொரு தெளிவில்லாத சங்கடம் இருந்துகிட்டேயிருக்கு. நான் வளரும்போதே அடிமரத்துலேருந்து தொலையாப் போகிற புத்திய யாருகிட்டேயிருந்து எப்பிடி எப்போ எங்கே கத்துகிட்டனோ எனக்கேத் தெரியல. இப்பிடி பிச்சையெடுத்த கை கவளத்தை ஊட்டின கைகளுக்கு நான் ஒரு மாசத்துக்கு முன்னால தான் தொல்லை கொடுத்தத இப்போ நெனச்சிகிட்டா மாயாபஜாரான அந்த பேட்டையோட ஜன சமுத்திரத்துக்கு நடுவே என் மயானத்தோட தொடக்கமும் முடிவும் தெரியவேத் தெரியல. இல்லேன்னா சோத்தோட ஒரு பருக்கையோ அல்லது புன்சிரிப்போட ஒரு துளியோ கூட என் கண்ணுக்குத் தெரியறதில்ல.

தொடர்ந்து வந்த தந்திச் செய்தியோட வேதாளத்தை எப்பவும் போலவே நான் முதுகில் சுமந்துகிட்டு வந்து மயானத்துல நின்னதும் என் கண்ணுலேருந்து ஒரு சொட்டு கண்ணீரும் வரல. கண்ணு, மனசு, உடம்பு முழுக்க காளியே நெறஞ்சிருந்தா.

சண்டை நடந்த அன்னைக்கி அவ பேசின பேச்சு என்னை வாட்டி குத்தத் தொடங்கிச்சி. இப்போ காலம் முடிஞ்சி காளி மயானத்துல மண்ணுக்கடியில மண்ணாகி படுத்துக்க நெலத்த சொந்தமாக்கிக்கிட்டிருந்தா. புதைக்கிறதுக்கு முன்னால அவ முகத்த கடைசியா ஒரு முற பாக்கத் தொடங்கினேன். எங்களை மாதிரியான வங்கள வளத்து பாசமும் உயிரும் நிரப்பி செத்துப்போன பல முன்னோருங்களைப் போலவே இப்பவும் காளியோட செத்த முகத்துலயும் ஏதோவொரு தெளிவில்லாத கனவு இருக்கிறதைப் போலவும், என்னையே பாத்துகிட்டுருக்கிறதைப் போலவும் பாடையில படுத்துகிட்டிருந்தா. சாகப் போறவ மேல என்னென்னமோ கையாலாகாத என்னோட கோவத்தோட விஷத்த கக்கிக்கிட்டிருந்தேன்... அவளுங்கூடத்தான் எவ்வளவு கூரான கத்தியினால என்ன குத்திகிட்டிருந்தா...

‘கதை எழுதறானாம் கதைய! நம்ப மானம் மரியாதயயெல்லாம் தெருவுக்கு இளுத்துனு வந்து; ஒண்ணுக்கு ஒம்பதா சேத்து; செத்துப்போனவங்க கெட்டுப்போனவங்க எல்லாரையும் தெருவுக்கு இளுத்துனு வந்து; எல்லாரையும கதையாக்கி வித்துட்டு, அந்த காசுல வயித்த நெப்பிக்கணுமா? இப்பிடியாப்பட்ட பொளப்ப நான் செத்தாலும் சரி மண்ணோடு மண்ணாயி என் எலும்புங்கள கரையான் தின்னாலும் சரி, நான் பொளைக்க மாட்டேன். நம்ம பொளப்பயெல்லாம் கத பண்ணி காசாக்கி பொளைக்கிற உம்மாதிரி ஆளுங்க நான் செத்தாகூட ஒருபுடி மண்ணுகூட போடாதீங்க. அய்யோ இப்பிடியாயிடிச்சேயப்பா நம்ம பொளப்பு’ அப்படின்னு பொலம்பி என்னை திட்டினதெல்லாம் நெனப்புக்கு வரத் தொடங்கிச்சி. துக்கத்த தீத்துக்கலாம். பசியப் பொறுத்துக்கலாம். சாவச் சகிச்சிக்கலாம்... ஆழமான இந்த அவமானங்களையும் தாங்கிக்கலாம். ஆனா காளியப் போலயிருக்கிற உயிருங்கள மறுபடியும் அடையறதுக்கான வழிதான் எங்கெயிருக்குன்னு மயானத்து மணல்ல சோர்ந்துபோய் உக்காந்து யோசிக்கத் தொடங்கினேன். காளியோட உயிர்மூச்சு காத்துல மிதந்து சுத்திவந்த மாதிரியா பிரமிச்சுப் போனேன்.

◆

## புதிய கோடாங்கியின் எழுச்சி முழக்கம்

நாள் : 2-7-2005

நேரம் : காலை 10 மணி

இடம் : திலகம் திருமண மண்டபம், சோளிங்கர்

ஒருங்கிணைப்பு

இன்பகுமார் (அனித்ரா ட்ரஸ்ட்)

தொலைபேசி : 94434-48979

## மனித உரிமை வார விழா

**நாள் : 7.7.2005**

**நேரம் : மாலை 4.00 மணி**

**இடம் : திருச்சி**

**தொடர்புக்கு**

**ரமேஷ்நாதன்**

**தொலைபேசி: 94431-50398**

## தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

நாள்: 9, 10 ஜூலை, 2005

இடம்: தேவகோட்டை

தொடர்புக்கு

வெரோனிகா, விடியல் தன்னார்வத் தொண்டு நிறுவனம்

தொலைபேசி: 04561-279778

# பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி ஊராட்சிகளில் தொடரும் சனநாயகப் படுகொலை

## அனைத்துக் கட்சிக் கூட்டத் தீர்மானங்கள்

**பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் ஆகிய ஊராட்சித் தனித் தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோரை ஊராட்சி மன்றத் தலைவர்களாக வரவிடாமல் தடுக்கப்பட்டு வரும் சாதிய வன்கொடுமைகள் குறித்து ஒரு பொது முடிவை எடுக்கும் வகையில் 8-5-2005 அன்று சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் தொல். திருமாவளவன் தலைமையில் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

தீர்மானங்கள்

1. 1996 முதல் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் ஆகிய ஊராட்சி தனித் தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோரைத் தேர்தலில் நிற்கவிடாமல் அச்சுறுத்தி வருவதுடன் அதனை மீறி தேர்தலில் போட்டியிட்ட வர்களையும் அவர்தம் குடும்பத்தினரையும் சமூகப் புறக் கணிப்பு செய்து, ஒடுக்கி வருவதையும், வெற்றி பெற்றவர்களை பதவி ஏற்றவுடன் பதவி விலக வைத்து அவர்களை அடிமை களாக இழிவுபடுத்துவதையும், இத்தகைய கேவலத்தைப் பல ஆண்டுகளாக தொடர்ந்து வேடிக்கை பார்த்து வரும் ஆட்சி யாளர்களின் அக்கறையற்ற ஒருசார்பு போக்கினையும் இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

2. கடந்த ஒன்பது ஆண்டுகளாக மேற்சொன்ன ஊராட் சிகளில் தொடர்கின்ற சாதிய மேலாதிக்கத்தால் பாதிக்கப்பட்டு வரும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தற்சார்பு நிலையை உருவாக் கிட தாழ்த்தப்பட்டோர் ஒவ்வொருவருக்கும் தமிழக அரசு உழ வுக்கு நிலங்கள் வழங்கிட வேண்டும். அத்துடன், தாழ்த் தப்பட்டோர் வசிக்கும் பகுதிகளில் பலசரக்குக் கடை, தேநீர்க் கடை போன்றவற்றை உடனடியாகத் திறந்திட வேண்டும். மேலும் அய்யத்திற்கு இடமளிக்கும் வகையில் திடீரென காலமான விடுதலைச் சிறுத்தைகளின் வேட்பாளர் நரசிங்கம் குடும்பத்தினருக்கு ரூபாய் இரண்டு லட்சம் இழப்பீட்டு தொகை யும், உழுவதற்கு இரண்டு ஏக்கர் நிலமும் உடனடியாக வழங்க வேண்டும் எனவும் தமிழக அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள் கிறது.

3. மேற்சொன்ன ஊராட்சிகளில் நடைபெற்று வரும் வன் கொடுமைகள் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான நடவடிக்கை மட்டு மின்றி, எளிய மக்களுக்கான சனநாயத்திற்கும், இந்திய அரசி யலமைப்பு சட்டத்திற்கும் எதிரான போக்கு என்பதனால், சனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ள ஒவ்வொருவ ரும்.இப்போக்கிற்கு எதிராக இணைந்து நின்று எதிர்வினை ஆற்றவேண்டியுள்ளது. ஆகவே, அகில இந்திய அளவில் சன நாயக உணர்வுள்ள அரசியல் தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து வரும் சூன் திங்கள் இறுதியில் சென்னையில் 'அனைத்துக் கட்சி மாநாடு' நடத்துவ தெனவும் அத்துடன், பாதிக்கப்பட்டோர் பங்கேற்று அவ்வூராட்சி களில் நடைபெறும் வன்கொடுமைகள் குறித்து சட்ட வல்லு நர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் முன்னிலையில் எடுத்துரைக்கும் வகை யில் 'பொது மக்கள் விசாரணை' நடத்துவதெனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

---

மா. சுரேஷ்

நீர் பாய்ச்சி
நிர்மூலப்படுத்தாதீர்
நெருப்பின் விளையாட்டு
நெருப்புகளோடுதான்

அது மட்டுமே
அறிந்திருக்கிறது
இவர்கள் மட்டுமே
தீண்டத்தக்கவர்கள்
என்று

◆

உயரத்தில்
இன்னும் உயரம் நோக்கி
பறக்கும்
பறவைக்கு
தூரமாகிக் கொண்டேயிருப்பது
வானம் மட்டும்தான்
கீழ் நோக்காத வரை.

◆

# புதிய கோடாங்கி நிகழ்வுகள்

ஜூன் மாதம் 22-ஆம் தேதி மாநில தலித் நில உரிமைக் குழு புதிய கோடாங்கி அலுவலகத்தில் கூடியது. இரண்டாண்டு கால வேலைத் திட்டம் வகுக்கப்பட்டது. மாநிலமெங்கும் நில உரிமை மற்றும் பஞ்சமி நிலம் பற்றி விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது. கௌதம சன்னா தலைமையேற்க, யாக்கன், இன்பகுமார், பேரா. கல்யாணி, சோதிப்பிரகாசம், பெ. தமிழினியன், அதேகாம் பின்னகம் லலிதா, தலித் பெண்கள் இயக்கப் பிரதிநிதிகள் மற்றும் புதிய கோடாங்கி எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர்.

25, 26 தேதிகளில் பஞ்சமி நில மீட்பு இயக்கமும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும், லீட் தொண்டு நிறுவனமும் இணைந்து தலித் நில உரிமை கருத்தரங்கை நடத்தின. கருப்பன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) தலைமையேற்க, திருச்சி சண்முகசுந்தரம் ஒருங்கிணைக்க, கௌதம சன்னா, அகவி, சங்கர், ராமர் போன்ற எழுத்தாளர்களும் புதிய கோடாங்கியின் வாசகர் வட்டப் பொறுப்பாளர்களும், பல்வேறு கிராமங்களிலிருந்து வந்த தலித்துகளும், தலித் பெண்கள் சுய உதவிக் குழுக்களும் கலந்து கொண்டனர். எழுத்தாளர் சிவகாமி சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் பஞ்சமி நில மீட்பு இயக்கத்தில் மாநில தலித் நில உரிமைக் குழுவுடன் இணைந்து பணியாற்ற வாக்குறுதி அளித்தது. சுமார் ஐநூறு பேருக்குக் குறையாமல் டோல்கேட் சீனிவாசா திருமண மண்டபத்தில் குழுமியிருந்தனர். கருப்பன் அவர்கள் சிறப்புக் கூறுத் திட்டத்தில் தலித்துகளுக்கான தனி ஒதுக்கீட்டின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். கௌதம சன்னா தலித் நில உரிமை வரலாற்றையும், சட்டப் பிரச்சினைகளையும் விரிவாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து சண்முகசுந்தரம், அருணாச்சலம், ஏ. தங்கவேல், ராமமூர்த்தி, வேலுச்சாமி (லீட்), கௌதம சன்னா மற்றும் புதிய கோடாங்கி எழுத்தாளர்கள் உள்ளிட்ட குழு

வந்தலைக் கூடலூர்
கருட மங்கலம்
பி.கே. அகரம்
சனமங்கலம்
வாளையூர்
புலிவலம்
பெரமங்கலம்

ஆகிய கிராமங்களுக்குச் சென்று நில உரிமை பிரச்சாரத்தை மேற்கொண்டது. இந்த எல்லா ஊர்களிலும் முப்பது ஏக்கர் தொடங்கி இருநூற்று நாற்பது ஏக்கர் பஞ்சமி நிலங்கள் சாதி இந்துக்கள் வசம் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பிரச்சாரத்தில் தலித் பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு நில உரிமை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், அவ்வவ்வூர்களில் உள்ள பிரத்யேகப் பிரச்சினைகளைக் கையாள்வது குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

ஜூன் 23-ஆம் தேதி மதுராந்தகம் நீர்ப்பெயரில் ஆதிதிராவிட மாணவர்கள் 90 சதவிகிதம் உள்ள கிருத்துவப் பள்ளியில் மாதம் ஒரு மாமனிதர் என்ற நிகழ்ச்சியில் எழுத்தாளர் சிவகாமி கலந்துகொண்டு தனது வாழ்க்கையனுபவத்தை மாணவர்கள் உற்சாகமும் விழிப்பும் பெறும் வகையில் பகிர்ந்து கொண்டார். பறையிசை, விழிப்புணர்வு நாடகங்கள், பாடல்கள் கொண்ட கலைநிகழ்ச்சி மாணவர்களால் சிறப்பாக நடத்தப்பட்டது. அருட்திரு ஜான் சுரேஷ், பள்ளித் தாளாளர் தலைமை உரை ஆற்றினார்.

அதே நாள், தலித் கிறித்துவர்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்படாத தச்சூர் கிராமத்திற்கு கௌதம சன்னா தலைமையில் புதிய கோடாங்கி எழுத்தாளர்கள் சென்று, தலித் கிறித்துவர்களை சந்தித்து அவர்கள் பிரச்சினையை அறிந்தனர். அவர்களுக்கு ஆலோசனைகள் பல வழங்கப்பட்டன.

**புதிய கோடாங்கியும், எல்.ஐ.சி. எஸ்சி/எஸ்டி நலச்சங்கமும் இணைந்து நடத்தும் கருத்தரங்கு**

## கல்வி-கிராமப்புற மாணவர்கள் நிலை

**நாள் : 14-7-2005 (வியாழக்கிழமை)**

**நேரம் : மாலை 4.00 மணி**

**இடம் : கேன்டீன் ஹால், LIC கட்டிடம், அண்ணா சாலை, சென்னை**

தொடர்புக்கு
பாரதிதாசன்
**தொலைபேசி: 2860 4100 Extn..344**

# பொன். குமாரின் ஹைக்கூ அனுபவங்கள்

விழி. பா. இதயவேந்தன்

தமிழ் இலக்கியச் சூழலில் கவிதைகள் இன்னும் பலருக்குப் பிடிபடாமலேயே உள்ளது. அதிலும் தமிழ்ச் சான்றோர்கள் பலருக்கு மரபின் தொடார்ச்சியாக கவிதைகள் இருந்தால் மட்டுமே நெருங்கிப் பார்க்கிற எண்ணங்கள் மேலோங்கி இருந்தது. நவீன சிந்தனையாளர்கள் இவற்றிலிருந்து மாறுபடத் தொடங்கி விட்டனர். இன்று தமிழ்க் கவிதைகளுக்கான சூழல் களத்தை வென்று பயணிக்கத் தொடங்கிவிட்டது. கவிதைகளில் விதவிதமான சோதனை முயற்சிகளும் புதிய புதிய மேலை நாட்டு கருத்தரங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மைக்கால வரவான நம் ஜப்பானிய ஹைக்கூ பாணிக் கவிதைகளும் தமிழ்க் கவிதைகளில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை, கவிஞர் பொன். குமார் எழுதியுள்ள 'ஹைக்கூ அனுபவங்கள்' என்னும் புத்தகத்தைப் படிக்கும்போது நம்மால் உணர முடிகிறது. இத்தனைக்கும் 'ஹைக்கூ கவிதைகள் சப்பையானது' எனக் கவிஞர் மு. மேத்தாவும் 'குண்டு சட்டிக்குள் குதிரையா' எனக் கவிஞர் பழமலய் போன்றவர்களும் ஹைக்கூ குறித்து விமர்சித்து வந்தாலும், தமிழில் நூறு பேர்களுக்கு மேல் ஹைக்கூ சிறப்பாக எழுதி வருவதாக கவிஞர் குறிப்பிடுகிறார்.

'ஹைக்கூ என்பது அனுபவம். எழுதுவதும் ஓர் அனுபவம். பேசுவதும் ஓர் அனுபவம். விமர்சிப்பதும் ஓர் அனுபவம்' எனப் பொன். குமார் சொல்வதுபோல பல விதமான அனுபவங்களினூடே இப்புத்தகத்தின் 15 பேர் தொகுப்பு நூல்கள் பற்றிய கவிஞர் விமர்சனத்தை நாம் திறனாய்வு செய்ய வேண்டியுள்ளது. ஏறத்தாழ 2000 ஹைக்கூ கவிதைகளும், சில புதுக் கவிதைகளும் சேர்ந்த இப்படைப்பாளிகளின் நூல்கள் இவரின் கவனத்தில் இடம்பெற்றுள்ளன.

'ஹைக்கூ' 'அய்க்கூ' எனப் பலவிதமாக உச்சரிக்கும் சூழலில் ஜப்பானி உச்சரிப்பான 'ஹைக்கூ' என உச்சரிக்கக் கவிஞர் கட்டாயப்படுத்துகிறார். அயல்மொழி கலவாமல் 'ஐக்கூ' என ஆராய்ச்சியாளர் பேரா. இரா. தமிழரசி எழுதுகிறார். இந்தக் கவிதைகளை இன்று பேரியக்கமாக ஆக்கி வரும் மு. முருகேஷின் 'நிலா முத்தம்' தொகுப்பில் "தமிழ் ஹைக்கூ கவிதைகளை எடைபோட ஜப்பானிய அளவு கோலோடு வருவது அர்த்தமற்றது" என்பது ஒருவிதத்தில் சரியே. ஒரு மொழியில் பிறவகைக் கவிதைகளை கையாளும்போது அதன் கரு மற்றும் உள்ளடக்கங்கள் ஒன்றாய் இருந்தாலும் அவ்வந்த மொழியின் வெளிப்பாட்டுத் திறன் வெவ்வேறாய் இருக்கத்தான் செய்யும்.

பாரதிமோகன், ஆலா, வானவன், ஆரிசன், பல்லவி குமார், சோலை இசைக்குயில், வண்ணை சிவா, இராம. பிரபு, வதிலை பிரபா, பாரதி ஜிப்ரான், இரா. இரவி, தமிழ்ராஜ் ஆகியோரின் ஹைக்கூ நூல்களும், வலம்புரி லேனா மற்றும் நிலா கிருஷ்ணமூர்த்தி, விடியல் விரும்பி ஆகியோர் தொகுத்த ஹைக்கூ நூல்களும் இந்த நூலில் படிக்கையில் விதவித அனுபவங்கள் தோன்றி மனசுக்குள் ஏராளமான வண்ணத்துப் பூச்சிகளை நமக்குள் பறக்கடிக்கச் செய்கின்றன. பொதுவாக ஹைக்கூ என்றால் நிலவு, வண்ணத்துப் பூச்சி, வானம், மேகம், மழை, பூ... இவற்றைக்கொண்டுதான் அதிகம் இருக்கும். ஆனால் கவிஞரின் பார்வையில் பல்வேறு கவிதைகள் சமூகத்தையும் அவற்றில் புரையோடிப் போயிருக்கிற சீர்கேடுகளையும் ஹைக்கூ வாயிலாக சுருக்கென தைக்க வைப்பதை இந்நூலில் அலசுகிறார். அவற்றில் சில கவிதைகள் சுட்டிக் காட்டப்பட வேண்டும்.

'உறங்கிவிட்டால்/எரிமலைக்கூட/புற்றீசல் பூமியாகும்' (கோ. பாரதிமோகன்)

'சிட்டுக் குருவி/இளைப்பாறியது/யானை முதுகு' (வானவன்)

'சிப்பிக்குள்/அலைந்து கொண்டேயிருக்கிறது/ அலையின் உயிர்' (மு. முருகேஷ்)

'தேச இருட்டில் கருகிய/வெண்மணி பிணங்கள்/ தொடரும் சுதந்திர தாகம்' ((ஆரிசன்)

'மகளின் கல்வி/மார்வாடி கடைக்குப் போன/தாயின் தாலி' (பல்லவி குமார்)

'சரியாய்த்தான் எழுதினான்/மாணவன்/பாழாறு' (இராம. பிரபு)

'அழகான மரம்/இரசிக்க முடியவில்லை/கோடாரி' (பாரதி ஜிப்ரான்)

'திருவிழா, இழவு வீடு/தீண்டாமை பார்ப்பதில்லை/ பறையொலி' (வலம்புரி லேனா)

'எரிந்து முடிந்தன வீடுகள்/அணையவில்லை/சாதீ' (விழி. பா. இதயவேந்தன்)

இப்படி பல்வேறு ஹைக்கூக்கள் கவிஞர் வாசித்து எழுதிய அனுபவத்தில நம்மையும் சேர்த்து சிந்தனைக் களத்தில் சேர்த்துப் போராட வைக்கிறது.

நூல்களை விமர்சிக்கும் வேளையில் ஹைக்கூவின் இன்னொரு 'சென்றியு' வகைக் கவிதைகளையும் ஆங்காங்கே அடையாளப்படுத்துகிறார். தவறான அணுகுமுறைகளை சுட்டிக்காட்டியும் சில கவிதைகளை மாற்றியும் காண்பித்திருப்பது படைப்பாளியையும் படிப்போரையும் கவனிக்க வைக்கிறது. ஈரோடு தமிழன்பன், சுஜாதா, அப்துல் ரகுமான், மித்ரா, அறிவுமதி, அமுதபாரதி, நிர்மலா சுரேஷ், தமிழ்நாடன் என ஹைக்கூவில் ஆளுமை செலுத்திய கவிஞர்களில் கோட்பாடுகளையும் அளவுகோலாக வைத்து இளைய கவிஞர்களின் பார்வையை வெளிப்படுத்துகிறது. தமிழ்ப் படைப்புலகத்தில் கவிதைக் குழந்தையாய் வலம் வரும் ஹைக்கூக் கவிதைகளின் இவ்வனுபவ நூலை 'கும்பகோணப் பள்ளியில் கருகிய மலர்களுக்கு' அர்ப்பணித்திருப்பது காலத்தின் மனசாட்சியாய் இருக்கும் அவரது குழந்தை உள்ளத்தை, கவிஞர் பொன். குமாரை இன்னாரென்று அடையாளப் படுத்த வைக்கிறது. மு. முருகேஷைத் தொடாந்து பொன். குமார் தீவிர ஹைக்கூவாதியாகத் தன்னைப் பிரகடனப் படுத்திக்கொள்ள வைப்பதற்கு அவரது 'பிற' நூல்களைப் போன்று 'ஹைக்கூ அனுபவங்கள்' என்னும் இந்த நூலை சொல்வதற்கு சிறப்பாக வெளியிட்டுள்ள பா. உதயக் கண்ணனை (அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம்) குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். வாசிக்கிற உங்கள் ஒவ்வொருவருக்கும் இவ்வனுபவங்கள் பலவாகக்கூடும். இன்னும் பலமாகக்கூடும். ◆

# தொலைத்துவிட்டேனா நண்பனை

ராஜா

தொலைத்து விட்டேன் நண்பனை. மீண்டும் கிடைப்பானா அவன் எனக்கு?

நண்பன். ஆம். அவன் என் நண்பன். அலுவலகத்தில் சக ஊழியனாய் அறிமுகமாகி, நெருக்கம் மிகுந்து, நண்பனாக மாறியவன். குணாதிசயங்களில் என் எதிர் துருவமாய் இருந்தபோதிலும், உணர்ச்சிப் பங்கீட்டில் என்னையொத்தவன். எனக்காக எதையும் செய்யக் கூடியவன்.

என்னைவிட பத்து வயது பெரியவன் அவன். ஆனாலும் நான் அவனை ஒருமையில்தான் அழைப்பேன். ஆணவம் அல்ல அதற்குக் காரணம். ஒருமையில்தான் உரிமை அதிகரிக்கும் என்ற எண்ணம்.

அவனும் அதைப்பற்றி கவலைப்பட மாட்டான். ஏனென்றால் அவன் ஒரு ஞானி. சுகமும் துக்கமும் ஒன்றே அவனுக்கு. அளவுக்கதிகமாக சந்தோஷமும் படமாட்டான். ஆழிப்பேரலை சூழ்ந்து வந்தாலும் அதிர்ந்தும் போக மாட்டான்.

வார்த்தைகள் 'தான்' 'தனது' 'தன்னால்' என தன்மயப்பட்டிருக்கும். திமிர் அல்ல இதற்குக் காரணம். நம்பிக்கை.. தன் நம்பிக்கை.. தன்னால் எதுவும் முடியும் என்னும் அபார நம்பிக்கை. 'முடியாதது என்பது முட்டாள்களின் அகராதியில்' என்ற நெப்போலியனின் மறுபிறவி இவன். ஆனால் தோற்றுப் போனவன். தன் வார்த்தைகளால், செய்கைகளால் தன் வாழ்க்கையையே தொலைத்துப் போட்டவன். தொலைத்ததற்காக ஒப்பாரி வைத்துக் கொண்டிராமல், இன்றும் நாளையை எதிர்நோக்கியிருப்பவன்.

கருமி அவன். ஐநூறு ரூபாய்க்கு குடிப்பான். ஐந்து ரூபாய் டிப்ஸ் வைக்க மாட்டான். இருநூறு ரூபாய்க்கு சாப்பிடுவான். இரண்டு ரூபாய் டிப்ஸ் கொடுக்க யோசிப்பான். ஆனாலும் சென்றவிடமெல்லாம் ராஜமரியாதை அவனுக்கு. பல தருணங்களில் ஆச்சரியப்பட்டிருக்கிறேன் நான். டிப்சை வாரியிறைக்கும் என்னைவிட அவனையே அனைவரும் விரும்புவர். அப்படியொரு முகராசி அவனுக்கு.

கருமி இல்லை அவன். கஷ்டப்படுவோருக்கு உடன் உதவுவான். ஆனால் என்னைப் போன்று ஏமாந்தவன் இல்லை. நான் உதவியவரெல்லாம் இறுதியில் எனக்கு எதிரியாகிப் போவர். அவன் பாத்திரமறிந்து பிச்சையிடுபவன். பிச்சையிடுதலின் சூட்சுமத்தை அறிந்தவன்.

அவனுக்கும் எனக்கும் ஏழாம் பொருத்தம். ஏழாம் பொருத்தம் என்னவென்பது எனக்குத் தெரியாது. அது பொருந்தாத பொருத்தம் என்று கேள்வி. எங்களுக்குள் உள்ள பொருத்தமும் பொருந்தாத பொருத்தம்தான். ஆங்கிலத்தில் லியோ என்று சொல்லப்படும் சிம்ம ராசி அவன். நான் ஏரீஸ் என்றழைக்கப்படும் மேஷ ராசி. ஆதிக்கக் குணம் கொண்ட லியோ ஆணையிடும். முதலாவது, முக்கியமானது என பெருமை கொள்ளும் ஏரீஸ் அதை எதிர்க்கும். கட்டளையிடுவது அவன் வேலை. அதை நிறைவேற்றாமலிருப்பது என் வேலை. ஆனாலும் நாங்கள் நண்பர்கள். உயிர் நண்பர்கள்.

ஆங்கிலேய அரசு காலத்திலேயே உயர் பதவி வகித்த பண்பாளருக்கு, ஐந்து பெண் குழந்தைகளுக்குப் பின்னால் ஆறாவது மகனாகப் பிறந்தவன் அவன். பணக்கார வீட்டுப் பிள்ளை - ஒரே ஆண் பிள்ளை - அதுவும் கடைக்குட்டிப் பிள்ளை என்பதால் செல்லம். செல்லப் பிள்ளை செல்லாப் பிள்ளையாக வளர்வதற்கு இதுவே காரணமாயிற்று. கேட்டதெல்லாம் கிடைத்தது அவனுக்கு. கேட்டது கிடைத்ததால் தேவையின் அருமை அவனுக்கு புரியாமல் போயிற்று.

கல்லூரிக் காலத்திலேயே குடி அவனிடம் குடி புகுந்து விட்டது. குடிகாரன் என்ற பெயரும் இலவச இணைப்பாக ஒட்டிக்கொண்டது. இத்தனைக்கும் அவனால் யாருக்கும் எந்த தொந்தரவும் இல்லை. குடித்து விட்டு பேச மாட்டான், பிதற்ற மாட்டான், சண்டையிட மாட்டான். வாடையினாலேயன்றி செய்கைகளினால் அவன் குடித்திருப்பதை கண்டுணர முடியாது.

சூதாடுவான். பணத்திற்காக அல்ல. வெற்றி தரும் களிப்பிற்காக. சூதில் தோல்வி என்பது அவன் கேட்டறியா ஒன்று. அவன் ரம்மியில் உட்கார்ந்து விட்டாலே உடன் ஆடுவோருக்கு வயிற்றில் புளி கரைத்து விடும்.

அவன் ஒரு ஹீரோ - ஆண்களுக்கும், பெண்களுக்கும். அவன் ஆங்கிலம் ஆங்கிலேயர்களையும் வெ[illegible]ப் பட வைக்கும். அதில் இலக்கணப் பிழை[illegible]பதென் பதரிது. பாவனைகள் ஒரு சாயலில் சிவா[illegible]யையும், மறு சாயலில் கமலையும் அறிமுகப்படுத்தும். அது பெண்களை வசியப்படுத்தும்.

மகனின் போக்குகளைக் கூர்ந்து கவனித்து வந்தார் தந்தை. மகன் தடம் புரண்டு வருவதை உணர்ந்தார். ஆனாலும் அவனிடம் இதைப்பற்றி விவாதிப்பதில்லை. அவர்களுக்கிடையே இருந்த உறவு தகப்பன்-மகன் உறவு இல்லை, அவர்களிருவரும் நண்பர்கள். வாரமொருமுறை இருவரும் அமர்ந்து மணிக்கணக்கில் உரையாடுவர். உரையாடல்களின் கரு உலக விவகாரங்களாக இருக்குமேயொழிய, சொந்த விஷயங்களைப் பற்றி தர்க்கித்துக் கொள்வதில்லை. இருவரும் கனவான்களைப்போல நடந்து கொள்வர். தந்தை மகனுக்கு ஒரு நாளும் அறிவுரை கூறியதில்லை. "நீ விவரம் தெரிந்தவன்; உனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதை தைரியமாகச் செய்." அதோடு நிறுத்திக் கொள்வார் அவர்.

அவனும் தனக்கு சரியென்று தோன்றியவற்றை செய்வதில் தயக்கம் காட்டுவதில்லை. விளைவுகள் நல்லதாகவும் இருந்தன; கெட்டதாகவும் இருந்தன. ஆனால் கெட்டவைகளை விட நல்லவைகள் அதிகமாக இருந்ததினால் அவனும் நல்லவனாகவே இருந்தான்.

கெட்ட விளைவுகள் தந்ததில் முக்கியமானது அவனது திருமணம். தந்தை ஒரு பெண்ணை தேர்வு செய்து, அவளை மணம் செய்துகொள்கிறாயா என்று கேட்ட பொழுது 'சரி' என்று கூறியது அவனுக்கு 'சரி'யென்று தோன்றிய தவறு. சராசரி பெண்ணால் தன்னுடன் வாழ்க்கை நடத்துவது இயலாத காரியம் என்பதை அவன் உணர்ந்திருக்கவில்லை.

தந்தை தேர்வு செய்த பெண் அவனது உறவுக்காரப் பெண்தான். அவனை சிறு வயது முதலே அறிந்தவள், அவனது ஒவ்வொரு அசைவையும், அசைவுகள் உணர்த்தும் அர்த்தங்களையும் உணரக் கூடியவள். அதனால் தான் சம்மதித்தாளோ என்னவோ.

திருமணமும் முடிந்தது. மணம் முடிந்தவுடன் மாறி விடுவான் அவன் என எதிர்பார்த்தார்கள் உறவினர்களும் நண்பர்களும். ஆனால் அவன் அவனாகவே இருந்தான். அவனில் எந்த மாற்றமும் இல்லை. மாற்றம் தேவையில்லை என்பது அவன் கருத்து.

மனைவிக்கு நல்ல கணவனாகவும் இருந்தான் அவன். ஆனால் அந்த 'நல்ல கணவன்' இருவருக்குமிடையே வேறு விதத்தில் பொருள் கண்டது. அவனைப் பற்றி முற்றிலும் அறிந்தே மணம் செய்துகொண்ட அவள், திருமணத்திற்குப் பின் சராசரிப் பெண்ணாக மாறிவிட்டாள். சராசரிக்கும், அ-சராசரிக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. விளைவு... பிரிவில் முடிந்தது.

விவாகரத்து வாங்கிச் சென்றாள் மனைவி. பிரிந்து சென்றவள், சொத்துக்களை மட்டும் மொத்தமாக எடுத்துச் சென்று விட்டாள். மகன் சொத்துக்களை எல்லாம் அழித்து பிற்காலத்தில் கஷ்டப்படக்கூடும் என்று நினைத்த தந்தை, திருமணம் முடிந்தவுடன் சொத்துக்களையெல்லாம் மனைவியின் பெயரில் எழுதி வைத்தார். மகன்தான் பற்றற்ற ஞானியாயிற்றே. அப்போது அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. ஆனால் அவனைப் புரிந்தே மணம் புரிந்த மனைவிக்கு அவனைவிட அவனின் ஆஸ்திகளின் மேலிருந்த ஆசையினால் அவனை மட்டும் தனியே விட்டுவிட்டுச் சென்று விட்டாள்.

காலச் சக்கரம் சுழன்றது. அலுவலகத்தில் நண்பன் ஒருவனைக் காப்பாற்றப்போக அவன் செய்த தவறுக்காக இவன் வேலை இழந்தான். செல்ல மகனின் மேல் விதி நிகழ்த்தும் கொடூர விளையாட்டுக்களைப் பார்த்து வந்த தந்தை ஒருநாள் மாரடைப்பால் காலமானார். அனாதையானான் என் நண்பன்.

அனாதை என்று கூறுவது தவறுதான். அவனை கண்ணின் மணி போல் வைத்துக் காப்பாற்ற அவனின் சகோதரிகளும், சகோதரிகளின் கணவர்களும் தயாராக இருந்தார்கள். ஆனால் இவன்தான தன்மானம் மிக்கவனாயிற்றே. என்றும் சொந்தக் காலில் நின்று பழகிய அவன் இன்றும் அதற்குத் தயாரானான். வீட்டைவிட்டு வெளியே வந்தான். அங்கு இங்கு என்று பணி புரிந்து, படிப்படியாக முன்னேறி, இறுதியாக சிறிய அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து தனியாகத் தொழில் செய்ய ஆரம்பித்தான். அவனின் தேவைகளை மட்டும் நிறைவேற்றிக் கொள்ளுமளவிற்கு வருமானம் வந்தது. விதி இங்குதான் என்னுடன் விளையாட ஆரம்பித்தது.

அவனிருந்து கட்டிடத்தை அடுக்குமாடியாக மாற்றும் திட்டம் வெகுநாளாக இருந்து வந்தது. ஆனால் திடீரென்று ஒரு நாள் கட்டிடத்தை இடிப்பதாக அறிவிப்பு வந்தவுடன் இடிந்து போனான் நண்பன். ஏனெனில் அலுவலகத்தையே தங்கும் அறையாகவும் உபயோகித்து வந்தான் அவன். வசதிகள் எதுவும் இல்லா விட்டாலும் இரவு தங்குவதற்கு என்று ஓர் இடம் இருந்தது. அதுவும் போய்விட்டால் எங்கு தங்குவது. உடனடியாக மாற்றிடம் பார்ப்பதற்கும் வசதி இல்லை. குழம்பிப் போனான் நண்பன். ஏற்கனவே இளகிய மனம் படைத்த என்னால் உயிர் நண்பன் துயருருவதை பாாத்துக்கொண்டு வெறுமனே இருக்க இயலவில்லை. எந்தவித யோசிப்பும் இல்லாமல் அவனிடம் சொன்னேன் நான் "மாற்று ஏற்பாடு செய்யும் வரை எங்கள் வீட்டில் வந்து தங்கிக்கொள்" என்று.

என் வீடோ மிகச் சிறியது. கூடுதல் நபர் தங்குவதில் அசௌகரியங்கள் நிரம்ப உள்ளன. இருப்பினும் அவை அப்போது பெரிதாகப்படவில்லை எனக்கு. என் மனைவி, குழந்தைகளிடம இதைச் சொன்னபோது அவர்களும் முழுமனதாக ஒத்துக்கொண்டார்கள். ஏனெனில் அவனை எங்கள் வீட்டில் எல்லோருக்கும் பிடிக்கும். நண்பனும் ஒத்துக் கொண்டான் - எங்கள் வீடு என்பதால்.

தினமும் இரவு அவனை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து பைக்கில் நான் வீட்டிற்கு அழைத்து வர வேண்டும். காலையில் ஏதாவது ஒரு பஸ் நிறுத்தத்தில் கொண்டுபோய் விடவேண்டும். மற்றப்படி அவனால் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை.

நாட்கள் வாரங்களாக மாற ஆரம்பித்தது. தினமும் இரவு மட்டும் வீட்டில் தங்கி வந்தான். ஆனால் மாற்று ஏற்பாடுகள் எதுவும் பார்த்ததாகத் தெரியவில்லை. அவனுக்கு அது அவசரமாகப்படவில்லை. காரணம், எங்களுள் ஒருவனாக அவன் தன்னை இருத்திக் கொண்டான். நாங்களும் அவ்வாறே கருதினாலும், சிறு சிறு அசௌகரியங்கள் தோன்ற ஆரம்பித்தன.

எனது மகன் பள்ளி இறுதித் தேர்வுக்கு தன்னை தயார்படுத்திக்கொண்டிருந்தான். மகளோ கடினமான கணினித் தேர்வு ஒன்றை எழுத வேண்டியிருந்தது. நாங்கள் நால்வர் மட்டும் இருக்கையில் அவர்கள் சுதந்திரமாக இருந்தார்கள். அவர்கள் படித்துக்கொண்டிருக்கையில், நானும் மனைவியும் பேசிக்கொள்ள மாட்டோம். தொலைக்காட்சி பார்க்க மாட்டோம். அவர்கள் படிக்காத நேரங்களில் பேசி மகிழ்ந்தும், படிக்கும் நேரங்களில் அமைதி காத்தும் அவர்களின் தேவைக் கேற்ப எங்களை மாற்றிக் கொண்டிருந்தோம். நண்பனின் வருகையால் இப்பழக்கம் கடுமையாக பாதிக்கப்பட்டது. என்னதான் குடும்பத்தில் ஒருவனாகக் கருதப்பட்டாலும், விருந்தினரை முறையாகக் கவனிக்க வேண்டுமே. சூழல் மாறுபட்டது. இருக்கும் ஒன்றரை அறைகளில் ஒரு அறை நண்பனுக்காக ஒதுக்கப்பட்டதால், இருந்து படிப்பதற்கு இடப் பற்றாக்குறை ஏற்பட்டது. குடும்ப விஷயங்களை நண்பனின் எதிரில் பேசுவதற்கு மனைவி தயக்கப்பட்டாள். பேச்சுச் சுதந்திரம் தடைப்பட்டது. அவனால் நேரடிப் பிரச்சினை எதுவும் இல்லா விட்டாலும், அவனின் இருப்பு பிரச்சினையாகிப் போனது.

ஆனாலும் மற்ற மூவரும் இந்தக் குறைகளை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. நண்பனின் மேலுள்ள அன்பினாலும், அவனுடைய சூழ்நிலையின் தாக்கத்தினாலும் சிறிது நாட்களுக்கு தங்கள் கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்ள தயாராக இருந்தார்கள். குடும்பத் தலைவன் என்ற முறையில் என்னால் மட்டும் இதை முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை. குடும்பம் என்று வந்தபொழுது, நட்பு பின்னுக்குப் போனது. மனைவி மக்களின் சிறிய சிறிய பிரச்சினைகள் எனக்கு பூதாகரமாகத் தோற்றமளித்தன. இறுதியாக அவனை வெளியே அனுப்பத் தயாரானேன்.

தீர்மானத்தை செயல்படுத்துவது ஒன்றும் அவ்வளவு எளிதாக இல்லை. அவன் என் வீட்டில் தங்குவதாகக் கூறவில்லை. நானாக வலிய அவனை என் வீட்டிற்கு அழைத்தேன். மேலும் அவனால் எந்தப் பிரச்சினையும் இல்லை. இவ்வாறிருக்கையில் எப்படி 'வேறு இடம் பார்த்துக் கொள்' என்று அவனிடம் கூறுவது.

இரண்டு நாட்கள் பல்வேறு சமயங்களில் முயற்சித்தும் வார்த்தைகள் வெளிவரவில்லை. அவன் முகம் பார்த்து இதைச் சொல்வது என்னால் முடியாத காரியமாயிற்று. மூன்றாம் நாள். பஸ் நிறுத்தத்தில் அவனை இறக்கி விட்டேன் பையில் தயாராக வைத்திருந்த காகிதத்தை அவன் கைகளில் திணித்துவிட்டு பறந்து விட்டேன் அவ்விடத்தை விட்டு. அந்த காகிதத்தில் "தயவு செய்து தங்குவதற்கு மாற்று இடம் பார்த்துக் கொள்" என்று எழுதியிருந்தேன்.

அன்று முழுவதும் எனக்கு எந்த வேலையும் ஓடவில்லை. எங்கு திரும்பினாலும காலைக் காட்சியே மனதில் திரும்பத் திரும்ப வலம் வந்தது. கடிதத்தைப் படித்ததும் நண்பனின் மனநிலை என்னவாயிருந்திருக்கும்? என்னைத் திட்டுவது பற்றிக் கவலையில்லை. தன்னிலை கண்டு மனவருத்தம் கொண்டிருந்தால்.... நினைக்க நினைக்க எனக்கு அழுகையே வந்தது.

ஒரு நாளைக்கு ஒரு முறையாவது என்னுடன் தொலைபேசியில் பேசி விடுவான். ஆனால் அன்று முழுவதும் அவனிடமிருந்து எந்தவித அழைப்பும் வரவில்லை. இரவு வீட்டிற்கும் வரவில்லை. ஆயிற்று இன்றோடு மூன்று நாட்கள். அவனுடனான தொடர்பு அறவே அறுந்து விட்டது. நானே அழைத்துப் பேசுவதற்கு எனக்குள் தைரியமில்லை. என் நெஞ்சு முழுவதும் குற்ற உணர்வு நிறைந்திருந்தது.

தொலைத்து விட்டேனா என் நண்பனை? மீண்டும் கிடைப்பானா அவன் எனக்கு? ◆

# கற்பின் கசிவு

புதிய மாதவி

கற்பின் கசிவு
புதிய மாதவி

எழுதியப் பக்கங்களில்
வாசிக்க முடியாத
உன் இதயம்
உன்
வெற்றுக் காகிதத்தில்
வெற்றிடமில்லாமல்
நிரம்பி வழிகிறது.

அந்தக் கசிவில்
கற்பின் அரண்
உடைந்துச் சிதறி
ஊருக்குள் வெள்ளமாய்...
மீண்டும் மீண்டும்
கடல் கொள்கிறது
என் காலடிகளை.
இனி...
புதையுண்டுப் போகட்டும்
நம் புனிதங்கள்.

◆

## திருவள்ளுவர் செந்தமிழ்ப் பேரவையின் தொடர் அமர்வுகள்

திருவள்ளுவர் செந்தமிழ்ப்
பேரவையும்,
பாலம் அமைப்பும்
இணைந்து
'மண்ணுரிமை விடுதலை நோக்கிய
பயணத்தில் பெண்ணடிமை ஒழிப்பு'
என்ற பொதுத் தலைப்பின் கீழ்
தொடர் ஆய்வரங்கத்தின் மூன்றாம்
அமர்வினை 12-6-2005 அன்று சென்னை
பாந்தியன் சாலையில் அமைந்துள்ள இக்சா
மய்யத்தில் நடத்தியது.

**தற்போது வெளிவந்துவிட்டது.**

**ஆதித்தமிழன்**

(தலித் மாத இதழ்)

ஆசிரியர்
**எழில். இளங்கோவன்**

**விலை**
**ரூ. 10**

# முகத்தில் முகம்

உலக வரலாற்றை சற்றே புரட்டிப் பார்த்தால் எல்லா அரசுகளுமே ஒரு புரட்சியின் விளைவாகத்தான் அமைந்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

புரட்சி என்றால் வன்முறை மட்டும்தான் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. அகிம்சை வழியிலும் புரட்சி செய்யலாம். இதற்கு புத்தரின் கொள்கைப்படி 'தேவைப் பட்டால் கொல்' என்ற வழியில் நாம் புரட்சி செய்ய வேண்டும்.

தென் ஆப்பிரிக்க நெல்சன் மண்டேலாவின் தலைமையில் இனவெறிக்கு எதிராக செய்யப்பட்ட புரட்சியானது ஆப்பிரிக்காவின் எல்லாப் பகுதியிலும் சீராகவே இருந்தது. அவர்களுக்கு தங்களின் பிரச்சினை என்னவென்றும், போராட்டத்தின் நோக்கமும் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் இங்கு தலித் மக்களுக்கு எதிராக செய்யப்படும் வன்கொடுமையோ இடத்துக்கு இடம், மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது. வெவ்வேறு மாநிலங்களிலும் வெவ்வேறு தலைவர்கள் இம்மக்களுக்காக போராடுகிறார்கள். ஆனால் இவர்களுக்கிடையே எந்தவித கொள்கை மற்றும் கருத்துப் பரிமாற்றம் இல்லாமல் இருக்கிறது. இதில் கொடுமை என்னவென்றால் இதில் பல தலித் தலைவர்களுக்கு மற்ற மாநிலங்களில் உள்ள தலித் கட்சிகள் எது எது என்று கூட சரியாகத் தெரிவதில்லை.

அம்பேத்கருக்குப் பின் இதுவரை நமக்கு ஒரு உன்னத தேசிய தலைவர் கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். மாநிலங்களின் அளவில் தலித் கட்சிகள் சக்தி வாய்ந்ததாக இருந்தாலும் தேசிய அளவில் அவைகள் இல்லை என்பதே உண்மை.

தலித் கட்சித் தலைவர்கள் அனைவரும் தேசிய அளவில் ஒரு கூட்டத்தைக் கூட்டி தலித் மக்கள் எதிர்கொள்ள வேண்டிய பொதுவான பிரச்சினைகளை வரையறை செய்ய வேண்டும். பின்பு அனைவரும் தேசிய அளவில் ஒரு மாபெரும் புரட்சியை தோற்றுவிக்க வேண்டும். தலித் கட்சிகள் தங்களின் மொழி, மாநிலம் என்ற எல்லையை மீறி ஒன்றிணைந்து இந்த நாட்டின் பூர்வ குடிகளான தலித் மக்களுக்காக போராட வேண்டும்.

நாம் சிறு சிறு கட்சிகளாக பிரிந்து இருக்கும் வரை எதிரிகள் எளிதில் பிரித்தாளும் சூழ்ச்சியை நிறைவேற்றிக் கொள்வார்கள். தேசிய அளவில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்த தலித் பத்திரிகைகள் ஒரு பாலமாக அமைய வேண்டும். புரட்சியால் மட்டுமே இம்மக்களுக்கு விடுதலை கிடைக்கும்.

- உ. ரம்யா, சென்னை-31.

வேண்டா வெறுப்பாக தமிழக அரசு சிவகாமி அவர்களுக்கும், கிருத்துதாசு காந்தி அவர்களுக்கும் பணி உத்தரவை வழங்கியுள்ளது. இதை நியாயமான ஒரு போராட்டத்திற்குக் கிடைத்த சிறிய வெற்றியாகக் கொள்ளலாம். இருப்பினும், தலித்துகள் அரசியல் அதிகாரம் பெறும்போதுதான் எல்லா மட்டத்திலும் உள்ள தலித்துகளுக்கு உண்மையான பாதுகாப்பும், அங்கீகாரமும் கிடைக்கும். அதை நோக்கிய நமது பணிகள் தொடரட்டும்.

தலித்துகளுக்கு எதிராக இயங்கிவரும் ஊடகங்களின் பங்கு பற்றி நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். நமது எண்ணங்களைப் பிரதிபலிக்கும் 'தலித் நாளிதழ்' வரும் நாள் எப்போது?

- முனைவர் பி. மோகன் லாரீர், முதல்வர், தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை.

புதிய கோடாங்கியின் மே மாத இதழ் நண்பர் ஒருவர் மூலம் கிடைத்தது. மெத்த மகிழ்வு அடைந்தேன். காரணம் சமுதாய சூழ்நிலைகளைத் தாங்கி வெளிவரும்ஒரு நல்ல இதழை கண்டதற்கு என் நண்பருக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன்.

அந்த இதழில் மக்கள் அறியாத அம்பேத்கர் என்ற தலைப்பில் குடியரசன் அவர்கள் எழுதிய கட்டுரை மிகவும் நன்றாக இருந்தது. ஆனால் சில கருத்துக்கள் மீண்டும் மீண்டும் வந்து குழப்புவதுபோல் உள்ளது. இந்த ஆசிரியரை அணுக விலாசம் இருந்தால் அனுப்பவும்.

- கலைச்செல்வன், அண்ணாமலை நகர்.

**பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கமும், புதிய கோடாங்கியும் இணைந்து நடத்தும் கருத்தரங்கம்**

## பழங்குடி இருளர்களின் நிலவுரிமை

**நாள் : 24-7-2005**
**இடம் : தொட்டித்தோப்பு**
(கடலூரிலிருந்து 8 கி.மீ.)

தொடர்புக்கு
**A. ஆறுமுகம்**
இருளர் பாதுகாப்பு சங்க மாநில செயலாளர்
தொலைபேசி: 98421-91158

வாழ்வில் வந்து போவது இன்பமும், துன்பமும்! வந்தால் போகாது எச்.ஐ.வி/எய்ட்ஸ்!! யாரையும் தாக்கலாம், இந்த எச்.ஐ.வி. கிருமி எவரும் தப்பலாம் எளிதாக,

வேண்டியதெல்லாம்...


- மனக்கட்டுப்பாடு
- முறையான மணவாழ்க்கை
- பாதுகாப்பிற்கு ஆணுறை

எச்.ஐ.வி தொற்று உள்ளதா என்பதை அறியவும், எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டிருந்தால்,

- உங்கள் மூலம் வாழ்க்கைத் துணைக்குத் தொற்றுப் பரவாமல் இருக்கவும்
- தாய் மூலம் குழந்தைக்குப் பரவாமல் இருக்கவும்
- குழந்தைக்குத் தொற்று இல்லாத பட்சத்தில் மேலும் தொற்று ஏற்படாமல் இருக்கவும்
- நீங்கள் மன அமைதியோடு நலமாக வாழவும்

ஆலோசனை பெறுங்கள். பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

**எச்.ஐ.வி உள்ள கர்ப்பிணிப் பெண் எச்.ஐ.வி இல்லாத குழந்தையைப் பெற முடியும்.**








ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் அனைத்து அரசு தலைமை மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் செயல்பட்டு வருகிறது. ரூ.10/- மட்டுமே செலுத்தி பரிசோதனையும், இலவச ஆலோசனையும் பெறுங்கள்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்த சேவை இலவசமாக அளிக்கப்படுகிறது.


**ஒவ்வொரு முறையும் உடலுறவில் ஈடுபடும்போது ஆணுறையைப் பயன்படுத்துங்கள்**

# தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

# TNPL COPIER

## FOR HASSLE-FREE COPYING

ISO 9001-2000 ISO 14001




**TNPL VALUEPACK - OFFERS TRUE VALUE FOR MONEY**

- High brightness and opacity
- Dimensional stability and stiffness
- Enhanced electrostatic properties
- Reel cut & packaged using world's best technology
- Indispensable for clear & fast copies
- Offers you absolute copying freedom

Now improved in a new pack



***India's largest paper mill providing the most viable solution for the future generation***

TNPL

**Tamil Nadu Newsprint and Papers Limited**

(A Govt. of Tamil Nadu Enterprise)

67, Mount Road, Guindy, Chennai- 600 032, India Off : 2230 1094 97, 2235 4415 16

Fax : 2235 4614, 2235 0834 Web: tnpl.co.in, E- mail : response@tnpl.co.in